M. L. A. Debates

Official Report

1965 - August

VOL. 31, NO. 6

©

D
V211, 31 'N65
N65 . 31 . 6
64920

1. K 295/55/10

*Issued* 30—11—1965]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## TUESDAY, 10TH AUGUST 1965

### VOLUME XXXI—No. 6

231

*CONTENTS*


| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 553-576<br>700-710 |
| II | Adjournment motion *re.* allotment of sugar quota to family card merchants in Madras City .. .. .. .. .. .. | 576-578 |
| III | Calling attention to adverse seasonal conditions in Tirunelveli district .. .. .. .. .. .. .. .. | 578 580 |
| IV | Presentation of Reports—<br>Reports of the Committee on Estimates on—<br>(i) Collegiate Education .. .. .. .. .. ..<br>(ii) State Transport Department .. .. .. .. | 580 |
| V | Draft Outline of the Fourth Five-Year Plan—Discussion—*cont.* | 580-648 |
| VI | Government Motion—Change in the Order of Business .. .. | 648, 668 |


[P.T.O.

©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*...orge, Madras-9*

211, 31 N65

PRICE 50

N65.32.6

64920

## *CONTENTS*—cont.


| | PAGES |
|---|---|
| VII Government Bills— | |
| (1) The Madras Appropriation (No. 4) Bill, 1965 (L. A. Bill No. 21 of 1965) .. .. .. .. .. .. | 649 |
| (2) The Madras Buildings (Lease and Rent Control) (Amendment) Bill, 1965 (L. A. Bill No. 23 of 1965) .. .. | 649–654 |
| (3) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965 (L.A. Bill No. 20 of 1965) .. .. .. .. | 654–667 |
| (4) The Madras Land Encroachment (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 12 of 1955) .. .. .. .. .. | 668–686 |
| (5) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965 .. .. .. .. .. .. .. .. | 687–688 |
| (6) The Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1965 .. .. .. .. .. | 689 |
| (7) The Madras Medical Practitioners Bill, 1965 (L. A. Bill No. 22 of 1955) .. .. .. .. .. .. | 690–698 |
| VIII Announcements— | |
| (1) The Madras Buildings (Lease and Rent Control) (Amendment) Bill, 1965 (L. A. Bill No. 23 of 1965) .. . | 649 |
| (2) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965 .. .. .. .. .. .. .. .. | 687 |
| (3) The Madras Medical Practitioners Bill, 1965 .. .. .. | 690 |
| IX Papers laid on the table of the House .. .. . .. | 698–699 |


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 10th August 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Retrenchment of Textile Workers in Coimbatore*

* 156 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any memorandum has been received recently from the Textile Workers' Union in Coimbatore regarding retrenchment of workers consequent on the cancellation of one shift duty in the textile mills at Coimbatore, and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The representation was examined by the Government in consultation with the Commissioner of Labour. It was reported that no large scale retrenchment has resulted. It is further reported that there are already resumptions of third shift in some mills. The situation is being watched.

*மதுரை ஹார்வி மில்லில் வேலை நிறுத்தம்*

* 157 கேள்வி.—திரு கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மதுரை ஹார்வி மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 4-ந் தேதி ஜுன் மாதம் 1965-ம் வருடம் அன்று வேலை நிறுத்தம் செய்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

64920

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes. There was a stay-in-strike by 88 workers belonging to the Industrial Product Mill Department of Madura Mills Company, Limited, Madurai. Subsequently, workers in the other shifts also struck work. The stay-in-strike was staged as a protest against the action of the management in introducing running shifts during Sundays and in compulsorily sending out 4 workers on 4th June 1965 (substituted holiday) to enable them to work on Sunday 6th June 1965. The workers refused to go on leave and attempted to attend duty in spite of the management's order. This resulted in the ... stay-in-strike

திரு. மரு. [illegible] : [illegible] அங்குள்ள தொழிலாளர்கள் அதிக நேரம் வேலை செய்யவேண்டுமென்று சொன்னதின் காரணமாக அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பது குறித்து கனம் அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் தகவல் வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை.

திரு. வை. சங்கரன் : ஞாயிற்றுக் கிழமைகளில் லீவ் இருந்ததை மாற்றி வாரத்தில் வேறு வேறு நாட்கள் லீவ் விடுவதனால் நடைமுறையில் கஷ்டங்கள் வருகின்றன என்று இது விஷயமாக தொழிலாளர்களிடமிருந்து ஏதேனும் மனு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக வேறு வேறு நாட்களில் விடுமுறை விடுவது பாக்டரி சட்டப்படி முரண்பாடானது அல்ல. ஆகையால், அதை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது.

### பீடி தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ மனைகள்

* 158 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாளொன்றுக்கு 20 லட்சம் பீடிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கென இலவச மருத்துவ மனைகள் நடத்த வேண்டும் என உத்தரவிடும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

### சிறப்புப் பாடமாக ஹிந்தி படிக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்

* 159 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசாங்கத்தின் கீழ் உள்ள கல்லூரிகளில் ஹிந்தி மொழியை சிறப்புப்பாடமாக எடுத்துக் கொண்டுள்ள மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு இம்மாநில அரசாங்கத்திற்கு உத்திரவு பிறப்பித்திருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.





### *October S.S.L.C. Examination*

* 160 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the total number of students registered for taking the S.S.L.C. Examination held in October 1964;

(b) the number of students who appeared for the examination; and

(c) the number who came out successful?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 34,595.

(b) 33,205.

(c) 7,932.

### *University Text Books in the Regional Language*

* 161 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any scheme before the Government for preparation, translation and publication of standard works in the Regional Language, for higher education at University level; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government have constituted the Bureau of Tamil Publications for publishing books and the Bureau has so far brought out 72 books both originals and translations on various subjects of humanities and sciences.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிற புஸ்தகங்களில் பல்கலைக்கழகத்தில் உள்ள மேற்படிப்பிற்கான டெக்ஸ்ட் புக்குகள்—டிரான்ஸ்லேஷனாகவோ அல்லது தனியாகவோ—சைன்ஸ், ஹியூமானிடீஸ் போன்ற சப்ஜெக்ட்டுகளில் வெளியிடப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கிற 72 நூல்களிலே கல்லூரிப் படிப்பிற்காக வைக்கப்பட்டுள்ள பாடப் புஸ்தகங்களும் உள்ளன.

திரு. சா. கணேசன் : அரசாங்கமே நேரடியாக நடத்தி வருகின்ற கழகத்தின் நூல்கள் துணைப் பாடப்புஸ்தகங்களாக வைக்கத் தக்கவையாகவே அமைக்கப்படுகின்றன என்பதை மனத்தில் கொண்டு அந்தந்தத் துறைக்கான பாடப் புஸ்தகங்களையும் வெளியிடும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிக்குப் பயன்படக்கூடிய புஸ்தகங்களை வெளியிடவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். இந்தக் கழகத்தின் நோக்கமும் அதுதான். கனம் அங்கத்தினருக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உயர்படிப்பிற்கு நிர்ணயிக்கவேண்டிய புஸ்தகங்களைப் பொறுத்த மட்டில் பல புஸ்தகங்கள் அவர்கள் படிக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கல்லூரிகளுக்கான வெளியிடப்படு புஸ்தகங்கள் வெளியிடப்படுகின்றனவா? ஆங்கிலத்தில் என்றால் [illegible] வெளியிடப்படுகின்றனவோ? ஆங்கிலத்தில் என்றால் அதற்கு சர்க்கார் ஏதாவது எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சுதந்திர [illegible] பற்றிய நிகழ்ச்சிகளைப் பற்றிய புஸ்தகங்களை வெளியிடுவதற்கு அரசாங்கம் ஆதரவு அளித்துக்கொண்டு வருகிறது. இந்தக் கழகம் மாணவர் [illegible] வெளியிடுகிறது.

திரு. செ. மாதவன் : [illegible] நூல்கள் இந்தப் பிரிவில் வெளியிடப்படுகின்றனவா? மொழிபெயர்ப்பு செய்யும்போது [illegible] இந்திய அடிப்படையிலே மொழி பெயர்ப்பு செய்யப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே விடை அளித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் கேட்பது வேறு கேள்வி. அதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ராஜ்யத்திலே தமிழை மீடியமாக இன்ஸ்டிடூத்தை பகுதியிருப்பதனால் [illegible] விஞ்ஞானப் புத்தகங்கள் அதிகமாக எழுதியிருக்கிற காரணங்களினால், அரசாங்கம் மட்டுமல்லாமல் வேறு தனிப்பட்டவர்கள் இந்தப் புஸ்தகங்களை வெளியிட சர்க்கார் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிகளுக்கான புஸ்தகங்கள் வெளியிட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் முக்கியமான நோக்கம். அது தவிர வேறு விதமான புஸ்தகங்களும் தேவையாக இருக்கின்றன. ஆகையால், இரண்டு விதமான புஸ்தகங்களையும் வெளியிடுகின்றது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கல்லூரிகளுக்காக வெளியிடப்படும் புஸ்தகங்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடப்பதால் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கழகம் வெளியிடும் நூல்களை அரசாங்க நூலகங்களிலும் கல்லூரி நூலகங்களிலும் வாங்கி வைத்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தக் கழகத்திற்கு இதனால் நஷ்டம் வராது என்று நினைக்கிறேன்.



### காரம்பக்குடி உயர்நிலைப்பள்ளியில் பைபர்கேட் கோர்ஸ்

* 162 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காரம்பக்குடியில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 'பைபர் கேட் கோர்ஸ்' ஆரம்பிக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானம் அரசாங்கத்திற்குக் கிடைத்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No such resolution was passed at the meeting of the District Development Council, Tiruchirappalli (South).

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : இந்த மாவட்ட வளர்ச்சி கூட்டத்திலே நிறைவேற்றும் தீர்மானத்தை சர்க்காருக்கு அனுப்பி வைக்கிறோம் என்று கலெக்டர் சொல்லியிருக்கிறார். ஆனால், கனம் அமைச்சர் அவர்கள் வந்து சேரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகையால் அந்தத் தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து கவுன்சில் கூட்டத்திலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்ற தகவல் வைத்துத்தான் பதில் தெரிவிக்கப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : பிளானிங் கமிஷன் பைபர்கேட் கோர்ஸ் சரிவர நடைபெறவில்லை என்று சொல்லுகிறார்கள். 64 சதவிகிதம் வீணாகப் போகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தத் துறையை எடுத்துப் படித்த மாணவர்கள் தொடர்ந்து படிப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அரசாங்கம் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில பள்ளிகளில் அது அமுலில் இருக்கிறது. நிரந்தரமாக வேறு பாட முறைகளை நிர்ணயிப்பது என்பது தொடர்ந்து அரசாங்கத்தினுடைய, நிபுணர்களுடைய பரிசீலனையில் இருந்து வருகிற விஷயம்.

### அகில இந்திய கல்வி மகாநாடுகள்

* 163 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் பெங்களூரில் கூடிய அகில இந்திய கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் செய்யப்பட்ட முக்கியமான முடிவுகள் என்ன?

(இ) அதன் மீது நமது ராஜ்யத்தின் கல்வி திட்டத்தில் ஏதேனும் மாறுதல் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (b) A statement* is placed on the table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பெங்களூரில் கூடிய மாநாட்டில் ஒருமைப்பாடு பற்றிய சபதம் எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எடுக்கப்பட வேண்டும் என்பது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று. அத்தகைய திட்டம் ஆரம்பப் பள்ளிகளிலே இருந்து கல்லூரிகள் வரையிலும் அமுலில் உள்ளனவா? அமுலில் இருப்பதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றனவா? அமுலில் இருப்பதை அரசாங்கம் எப்படித் தெரிந்துகொள்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : [illegible] பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் அமுலில் இருந்து வருகிறது. அமுல் நடத்தப்பட்டு வருவது சரியாக அமுல் நடத்தப்படுகிறதா என்பதைப்பற்றி மேற்பார்வை பார்க்கின்ற அதிகாரிகள் கவனித்துக்கொள்வார்கள். கல்லூரிகளிலே அதை அமுல் நடத்துவதாக இல்லை. ஏனென்றால் கல்லூரிகளுக்கு மாணவர்கள் ஒரே நேரத்தில் போவதில்லை. கல்லூரிகளில் வகுப்புகளின் நேரங்கள் மாறி இருப்பதால் இந்தப் பிரதிக்ஞை நிறைவேற்ற முடியாததாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தோன்றுவதால் கல்லூரிகளிலே அமுலுக்குக் கொண்டுவரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டு முதல் நடத்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு சிலேட், புத்தகங்களும், உடைகளும் வழங்க அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடுத்த ஆண்டு என்ன செய்யக்கூடும் என்பதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. து. ப. அழகமுத்து : இவற்றில் கல்விக் கார்ப்பரேஷன் அமைப்பது என்பது ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அமைப்பதானால் அதனுடைய நோக்கங்கள் என்னவாக இருக்கும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : இவற்றில் "கல்வி நிலையங்களில் லஞ்சப் பழக்கத்தை ஒழித்தல். கல்வி நிலையங்களில் குறிப்புக்கள், உதவிப் புத்தகங்கள் [illegible] ஆகியவற்றைப் பயன்படுத்துதலைத் தடை செய்தல்" என்ற கருத்து குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? கல்வி நிலையங்களில் லஞ்சப் பழக்கம் என்பது என்ன?

* Printed as Appendix I on pages 700-702.



கனம் திரு. எம். பக்தவத்சலம் : பங்களூரில் கூடிய அனைத் திந்தியக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் முடிவு என்ன என்று கேட்கப்பட்டதற்கு அந்த முடிவுகளைக் கொடுத்திருக்கிறேன். அவை தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : செய்யப்பட்ட முடிவுகளில் கல்வியின் தரத்தை உயர்த்த ஏற்பாடு செய்வது ஒன்று. அதன்படி நன்கு படிக்காதவர்களுக்கு அபராதம் விதிப்பது என்பது இந்த ஆண்டில் இருந்தே பள்ளிக்கூடத் தேர்வுகளை ஒட்டி அமுலாக்கப்படுமா? அப்படி அமுலாக்கப்படுகிறபோது பரீட்சையின் தரம் பள்ளிக்குப் பள்ளி வித்தியாசப்படுவதை நினைவில் கொண்டு எல்லாவற்றுக்கும் பொதுவான வகையில் அபராதத்தைச் சீராக விதிக்க முடியும் என்று அரசாங்கம் நம்புகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. தரத்தை உயர்த்துவது பொதுவான விஷயம். பல கோணங்களில் இருந்து இது கவனிக்கப்பட்டு வருகிற விஷயம்.

* 164 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் காஷ்மீரில் நடைபெற்ற அகில இந்திய கல்வி மாநாட்டில் கல்வி முறையை 'மாற்றி அமைப்பது குறித்து ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

*Part-time Degree Course in Engineering*

* 165 Q.—SRI S. MADHAVAN : } Will the Hon. the Minister
SRI A. THIAGARAJAN : } for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start part-time Degree Course in Engineering; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) Two centres for part-time B.E. (or A.M.I.E.) course for Diploma holders will be organised, one at the College of Engineering, Guindy and the other at the Government College of Technology, Coimbatore, each with an annual in take of about 90 students, subject to the concurrence of the Madras University.

[10th August 1965

திரு. செ. மாதவன் : இந்தப் படிப்பு எத்தனை ஆண்டுகளுக்கு இருக்கின்றது? இதன் தரம் என்ஜினியரிங் படிப்புக்குக் குறைவானதாக இருக்குமா? அதிகமானதாக இருக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த வருஷம்தான் இந்த ஸ்கீமை ஆரம்பித்திருக்கிறோம். எல். எம். இ., எல்.வி.இ. போன்ற டிப்ளமா ஹோல்டர்கள் பார்ட்-டைமில் படித்து பி.இ., டிகிரி வாங்குவதற்காக இதை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. செ. மாதவன் : இப்போது டிப்ளமா கோர்ஸ் படித்தவர்கள் ஏ. எம். ஐ. இ., படிப்பு படிக்கிறார்களே, அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏ.எம்.ஐ.இ., சர்டிபிகேட் கோர்ஸ். இது பி. இ., டிகிரி வாங்க வசதி செய்கிறது.

திரு. சா. கணேசன் : இந்தப் பகுதி நேரப் பட்டப் படிப்பைத் துவக்கும் முன்னே இதற்கு எத்தனை ஆண்டுகள் என்பது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த ஆண்டுகளுக்குள் பாஸ் செய்யாவிட்டால் பிற படிப்பைப் போல அடுத்து அடுத்துச் சென்று தேர்வு அடையவோ, பார்ட் பார்ட்டாகத் தேர்வு அடையவோ வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : இங்கே பார்ட்-டைம் கோர்ஸ் என்று குறிப்பிட்டிருக்கிறபடியால் டிப்ளமா ஹோல்டர்கள் வேலையில் இருந்து கொண்டே படிக்க வாய்ப்பு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் நோக்கம்.

### *Ex-servicemen Co-operative Motor Transport Societies*

*166 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Ex-servicemen Co-operative Motor Transport Societies in the State;

(b) the number of stage carriage permits owned by them, district-wise; and

(c) the net income of those societies for the year 1964-65?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Seven (7).



10th August 1965]

(b) The particulars are furnished below :—

| District. | Number of stage carriage permits. |
|---|---|
| North Arcot .. .. .. .. | 10 |
| South Arcot .. .. .. .. | 11 |
| Madurai .. .. .. .. .. | 1 |
| Coimbatore .. .. .. .. .. | 16 |
| Salem .. .. .. .. .. | 9 |
| Tiruchirappalli .. .. .. .. | 9 |
| Tirunelveli .. .. .. .. .. | 6 |
| Total .. | 62 |

(c) Rupees four lakhs twenty-seven thousand four hundred and eighty (Rs. 4,27,480).

திரு. எம். எஸ். மணி : திருச்சி மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கத்தில் 1964-65 இல் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 26,732 ரூபாய்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, மதுரையில் இந்தச் சங்கம் ஒன்றுதான் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். மதுரையில் ஏன் அவ்வளவு குறைவாக இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மனுக்கள் வந்திருக்காது. அல்லது அவர்களுக்குத் தகுதி இல்லாமல் இருந்திருக்கலாம்.

திரு. து. ப. அழகமுத்து : திருச்சி மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கத்திற்கு 26 ஆயிரம் சொச்சம் நஷ்டம் வந்திருக்கிறது என்று கூறினார்கள். அப்படி நஷ்டம் வந்ததற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : Inefficient management.

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் உள்ள மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு சங்கம் யார் தலைமையில் நடைபெறுகிறதென்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னிடம் இல்லை; தனிக் கேள்வி போடலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்தும் யார் தலைமையில் நடைபெறுகிறது என்கிற விவரம் நம்மிடம் இல்லை என அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இன்னுமா இந்த மாதிரி முறைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கூட்டுறவு சங்கத்தின் விதிகளும், அமைப்புகளும் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இருந்தால்தான் அரசாங்கத்திற்கு அதன் விபரம் வரும். இல்லாவிட்டால் தனியாகக் கேட்டுத்தான் பெறவேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** திருச்சி மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு மோட்டார் சங்கத்தின் தலைவராக கலெக்டருடைய உதவியாளர்தான் இருந்து கொண்டு பணியாற்றி வருகிறார்கள். அவருடைய மிஸ் மானேஜ்மெண்டின்கீழ்தான் இத்தனை ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் கருதுகிறாரா?

THE HON. SRI R. VENKATARAMAN : This is not a question, but an insinuation.

**திரு. எஸ். முருகையன் :** இனியாவது இதுபோன்ற நஷ்டம் ஏற்படாமல் இருக்க சர்க்கார் ஆலோசனை செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதுபற்றி அந்த கோவாப்ரேடிவ் சொசைடியில் ஜெனரல் பாடி கவனம் செலுத்த வேண்டும். பணம் போட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துத் திருத்திக் கொள்ளவேண்டும்.

**திரு. எம். எஸ். மணி :** மோட்டார் தொழில் இன்னதென்றே தெரியாதவர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தில் இருப்பதால்தான் நிர்வாகம் சரிவர நடக்கவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நிர்வாகக் குழுவை சங்க உறுப்பினர்கள் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். அரசாங்கம் தேர்ந்தெடுப்பதில்லை. இதற்கு அரசாங்கம் தேர்ந்தெடுத்ததா, அல்லது உறுப்பினர்களே தேர்ந்தெடுத்துக் கொண்டார்களா என்கிற விவரம் தான் தனியாகக் கேள்வி போட்டால் விசாரித்துச் சொல்கிறேன் என்று சொன்னேன்.

*Rehabilitation of Ex-servicemen*

*167 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken so far and the details of further proposals for the rehabilitation and resettlement of ex-servicemen in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

**திரு. வை. சங்கரன் :** மதுரை மாவட்டத்தில் இருந்து தங்களுக்கு விவசாயத்திற்கும், குடியிருப்புக்கும் நிலம் வேண்டுமென்று கேட்ட விஷயம் கவனிக்கப்படவில்லை என்று சொல்லப்படுவது வாஸ்தவமா? அதை மறுபரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

[a] Printed as Appendix II on pages 703–708.



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பொதுவான கேள்வி. மதுரை சம்பந்தமாக வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** பொதுவாக நிலக் குடியேற்ற காலனிகளில் நில உரிமை அந்த மெம்பர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ராணுவத்தினர்களுக்கு உரிமையாக்கப்படாத காரணத்தினால் சில விடங்களில் அவை பயன்படுத்தாத நிலைமை ஏற்படுகிறது. சர்க்கார் அதற்கு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதில் பலவிதமான அமைப்புகள் இருக்கின்றன. சில இடத்திலே நிலத்தை சொஸைடிக்குக் கொடுத்திருக்கிறார்கள். சில இடத்திலே நிலத்தை மாஜி ராணுவத்தினருக்குக் கொடுத்திருக்கிறார்கள். எந்த எந்த இடத்தில் எந்தவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு தனித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

*Electricity Sub-Division Office at Vedasandur*

*168 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to open a Sub-Divisional Office of the Madras State Electricity Board at Vedasandur to facilitate better operation and maintenance and construction works?

THE HON. SRI R. VENKATARAMAN : A proposal to form an additional construction sub-division at Vedasandur for the execution of the electricity Schemes in that area is under the consideration of the Madras State Electricity Board.

*Mettur Tunnel Hydro-Electricity Scheme*

*169 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the progress made in the Mettur Tunnel Hydro-Electricity Scheme; and

(b) when the scheme will be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The first generating unit of 50 M.W. is proposed to be commissioned in August 1965. The other three units of 50 M.W. each are expected to be commissioned one by one at intervals of three months from August 1965.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மேட்டூர் டன்னல் திட்டத்தில் பென் ஸ்டாக்குகளை அமைப்பதில் நீர்க்கசிவு ஏற்பட்டு அதனாலே 600 ஹார்ஸ் பவர் உள்ள இயந்திரங்களை வைத்து நீர் இறைக்கப்பட்டதும், தூத்துக்குடியிலிருந்து

[10th August 1965

டைவர்ஸ் சொவனைக்கு தண்ணீர் இறைக்கப்பட்டதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நீண்ட பென்ஸ்டாக் அங்கே கிடையாது. டன்னலிலிருந்து நேராக வருவதுதான். நான் இதைப்பற்றி எலக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் விவாதத்தின்போதே சொன்னேன். இந்த டன்னல் 45 அடி டயமீட்டர் உள்ள, உலகத்திலேயே இரண்டாவதாக உள்ள பெரிய டன்னல். இவ்வளவு பெரிய டன்னலிலே நீர்க்கசிவு ஏற்படுவது சாதாரணமான விஷயந்தான். பெரிதல்ல, புதியதல்ல.

**திரு. வை. சங்கரன் :** இதிலே கிடைக்கும் சக்தியானது சீஸனல் பவராக இருக்குமாதலால், கனெக்ஷனும், சீஸனல் கனெக்ஷனுகக் கொடுப்பதற்கு உத்தேசமிருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இவையெல்லாம் பொது கிரிட்டிலே சேர்க்கப்படுகிறது. டிஸ்ட்ரிபியூஷன் கிரிட்டிலே சேர்க்கப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மோட்டர் அணை உடைந்துவிடும் என்ற பொதுவான உணர்ச்சி இருந்துவருகிறது. இதற்குக் காரணமாக இருந்த 30, 40 அதிகாரிகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தார்களே, அப்படியிருக்கும்பொழுது இது சாதாரண விஷயம் என்று அமைச்சர் அவர்கள் எப்படி சமாதானம் கூறுவார்கள்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வெகு சாதாரண விஷயம். டெக்னிகாலிட்டிஸ் தெரிந்தவர்களுக்கு இது நன்முகப் புரியும். பெரிய டன்னலிலே நீர்க்கசிவு ஏற்படுகிறது வழக்கம். இதற்காக மறுபடியும் க்ரௌட்டிங் செய்து கொள்ளலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இது சம்பந்தமாக படேல் கம்பெனியார் காண்ட்ராக்ட் எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் செய்த வேலைகள் குறைபாடுகள் இல்லாமல் சரியாக இருக்கின்றன. ஆனால் மற்றவர்களிடம் கொடுத்த காண்ட்ராக்ட் வேலைகள்தான் சரியாக செய்யப்படவில்லை, குறைகள் இருப்பதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் சொல்வது தவறு. இரண்டு காண்ட்ராக்டர்களிடம் விடப்பட்டது, ஒன்று படேல் கம்பெனி, மற்றொன்று சுப்பிரமணியம் கம்பெனி. இவர்கள் செய்த இரண்டு வேலைகளிலும் நீர்க்கசிவு ஏற்பட்டிருந்தது. அவைகளுக்கு க்ரௌட்டிங் செய்தார்கள்.

*Supply of Electricity in Nallur, Vriddhachalam Taluk*

* 170 Q.—SRI K. NARAYANASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of villages to which supply of electricity has **been provided in Nallur Constituency of Vriddhachalam taluk; and**



10th August 1965]

(*b*) the number yet to be provided?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 15.

(*b*) 109.

*1964-ல் தஞ்சை மாவட்ட கிராமங்களுக்கு மின்சார வசதி*

* 174 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1964-ம் ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : The extension of electricity to villages is undertaken by the Madras State Electricity Board and Licencees in their respective areas. During the calendar year 1964, 36 villages and hamlets in the Board's area and **51** villages and hamlets in the licencees areas in the Thanjavur District were electrified.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தலைவரவர்களே, ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு லைன் போடுவது, எஸ்.எம்.இ. கார்ப்பரேஷனுடைய லைனுக்குப் பக்கத்திலே வருகிறது. அந்தக் கார்ப்பரேஷனுடைய லைனிலிருந்து கரண்ட் எடுத்துக்கொண்டால் அது சிரமமாக இருக்காதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப்பற்றி நான் எலக்ட்ரிசிடி பட்ஜெட் விவாதத்தின்போதே சொன்னேன். சீக்கிரமாக இந்த லைசென்ஸீஸ் ஏரியாக்களை எடுத்துக்கொண்டால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடுமென்று நினைக்கிறேன்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** அப்படி எடுத்துக்கொள்கிற வரையிலும் இரண்டு லைன்கள் போடவேண்டியிருக்கிறது. ஆகவே, கார்பொரேஷனின் கரண்டுக்காகத் தனி மீட்டர் வைத்து கணக்கெடுத்தால் சுலபமாக இருக்காதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது தவிர்க்கமுடியாதது.

***கோடம்பாக்கம்—புதூர் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்கான ஈட்டுத்தொகை.***

* **172 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை வீட்டு வசதி யூனிட்டின் கோடம்பாக்கம்-புதூர் (Part I) ஸ்கீமின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்திற்கான ஈட்டுத் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன?

(உ) அதனுல் அதிகப்படியாகக் கொடுக்கப்பட்ட வட்டித் தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) & (*c*) Do not arise.

*Tenements under Subsidised Industrial Housing Scheme*

* 173 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of tenements available for allotment under the Subsidised Industrial Housing Scheme during the years 1962-63 and 1963-64;

(*b*) the number allotted; and

(*c*) the number among them occupied?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 1962-63—1,774, 1963-64—1,914.

(*b*) 1962-63—1,680; 1963-64—1,789.

(*c*) 1962-63—1,679; 1963-64—1,787.

**பீடித்தொழிலை தேசியமயமாக்குதல்**

* *174* **கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல்** : **கனம் கைத்தொழில்** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் நடத்தப்பட்டுவரும் பீடித்தொழிற்சாலைகளை தேசியமயமாக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

**சேலம் மாவட்டம், ஈச்சம்பட்டியில் புதிய ஏரி கட்டுதல்**

* *175* கேள்வி.—**திரு. நா. ப.** செங்கோட்டுவேலு : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஈச்சம்பட்டி கிராமத்தில் கொல்லிமலை அடிவாரத்தில் புதிதாக ஏரி கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையிலுள்ளது?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.



**சேலம் மாவட்டம், குருவாலாவில் ஏரி கட்டுதல்**

* *176* கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த குருவாலா என்னுமிடத்தில் ஏரி கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

*Anicut across Nari Odai*

* 177 Q.—SRI K. NARAYANASWAMY PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to construct a masonry anicut across Nari Odai for feeding Maduravalli tank in Vridhachalam taluk?

THE HON. SRI P. KAKKAN : The answer is in the affirmative.

**இறும் கிராமங்களிலுள்ள கண்மாய்களுக்கு மராமத்து**

* *178* **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இறும் கிராமங்களிலுள்ள கண்மாய்கள் மராமத்துச் செய்யப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) மேற்படி கிராமங்களிலுள்ள விவசாயிகள் இது பற்றி அரசாங்கத்திற்கு ஏதேனும் முறையீடு தந்துள்ளனரா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The answer is in the affirmative.

**திரு. செ. மாதவன்** : இந்த வேலை எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று சர்க்கார் உத்தேசித்திருக்கிறது? ஏற்கெனவே இதற்காகச் சட்டங்கள் போடப்பட்டுவிட்டன, விதிகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, உடனடியாக கண்மாய்களை ரிப்பேர் செய்வதற்கு சர்க்கார் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** உடனடியாக ஏக காலத்தில் எல்லாக் கண்மாய்களையும் எடுத்துக்கொள்ள முடியாது. எவ்வாறு திட்டமிட்டு எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வாறு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[10th August 1965

*Distribution of Ammonium Sulphate in North Arcot District*

* 179 *Q.*—SRI S. J. RAMASAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of ammonium sulphate distributed in North Arcot District, taluk-wise during the period between November 1964 and March 1965?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இப்பொழுது அமோனியம் சல்பேட் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலமாக வழங்கப்படுகிறதா அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாக வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது சில ஜில்லாக்களில் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது.

**திரு. எஸ். முருகையன் :** மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால் செங்கம் தாலுகாவுக்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? அங்கே இருப்பவர்கள் அதை விரும்பவில்லையா? அல்லது அங்கு போதுமான அளவுக்கு சப்ளை செய்யப்படவில்லையா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கேட்டவர்கள் குறைவாகக் கேட்டார்களோ என்னவோ தெரியவில்லை. மேற்கொண்டு தகவல்கள் இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அமோனியம் சல்பேட் சரிவர விநியோகிக்கப்படவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சரிவர கொடுக்கப்படவில்லை என்ற குறை இல்லை. உரம் ஜாஸ்தி வேண்டுமென்று விவசாயப் பெரு மக்கள் கேட்பதால் தேவைக்குத் தக்கபடி வெகு சீக்கிரம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இப்பொழுது விவசாயிகள் இந்த சூப்பர்பாஸ்பேட்டு உரத்தை அதிகமாக உபயோகப்படுத்துவதால் அது அதிகமாகத் தேவைப்படுகிறது. இதைத் தயாரிக்கின்ற கம்பெனிகள் ரா மெட்டீரியல்ஸ் கிடைக்காத காரணத்தால் அதிகமாகத் தயாரிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் ரா மெட்டீரியல்ஸ் சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

---

a Printed as Appendix III on page 700.



10th August 1965]

**ரசாயன உரம்**

* 180 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத்திய அரசிடம் இம்மாநில அரசாங்கம் 1965-66-ம் ஆண்டிற்கு எவ்வளவு டன் ரசாயன உரம் ஒதுக்க விண்ணப்பித்துள்ளது, அதில் இதுவரை ஒதுக்கப்பட்ட அளவு எவ்வளவு?

**கனம் திரு. பூ. கக்கன் :** 5,20,000 (ஐந்து இலட்சத்து இருபதாயிரம்) டன் அம்மோனியம் சல்பேட்டுக்குச் சமமான இரசாயன உரம்.

2,41,668 (இரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டு) டன் அம்மோனியம் சல்பேட்டிற்கு சமமான இரசாயன உரம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், மத்திய அரசிடம், நமது மாநில அரசாங்கம் ரசாயனம் உரம் எவ்வளவு கேட்டது? மத்திய அரசு எவ்வளவு கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்? அதில் இது வரையில் எத்தனை டன் வந்திருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** 1965—66-லே கேட்கும்பொழுது அம்மோனியம் சல்பேட் 2,72,000 டன், யூரியா 1 லட்சம் டன், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட் 10,000 டன், கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் 10,000 டன் கேட்டோம். மொத்தம் 5,20,000 டன் கேட்டோம். அவர்கள் கொடுத்தது—

| | TONS. |
|---|---|
| Allocation made by the Government of India during the quarter during 30th June 1965 .. | 112,943 |
| Allocation for the quarter ending 30th September 1965 .. .. .. .. .. .. | 128,725 |
| Total allocation made by the Government of India for half year ending 30th September 1965 .. | 241,668 |

**திரு. ஜே. மாதா கவுடர் :** நம்முடைய மாநிலத்தின் தேவையை 9-00
பூர்த்தி செய்யும் அளவில் ரசாயன உரம் உற்பத்தி செய்யக்கூடிய a.m.
தொழிற்சாலைகளை நம்முடைய மாநிலத்தில் நிறுவ அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது தனிப்பட்டவர்கள் சிறிய அளவிலே உரத் தொழிற்சாலைகளை நடத்த லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலையாக இந்த மாநிலத்தில் வைப்பதற்கில்லை. குறிப்பாக நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி கலப்பு உரம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும். மத்திய சர்க்காரிலிருந்து அதிகமான உரம் கிடைக்கும்போது அதை வாங்கி விநியோகிக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

[10th August 1965

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த அம்மோனியம் சல்போட் டுக்லியவசியமாக ஒதுக்கப்படுவதில் எந்த அடிப்படையை அரசாங்கம் கைக்கொண்டிருக்கிறது? ஜனத்தொகை அடிப் படையா, அல்லது விவசாய நிலங்களின் அடிப்படையா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆங்காங்கே இருக்கிற நிலப்பாப்புக்குத் தக்கபடி, வேண்டுகோளுக்குத் தக்கபடி, ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிற அளவுகளுக்குத் தக்கபடி, விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

*Agricultural Research Stations in Thanjavur District*

* 181 Q.—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government are aware of the fact that the Agricultural Research Station at Aduthurai, Thanjavur district is not able to conduct soil testing, commensurate with the demand made by agriculturists; and

(b) whether there is any proposal to set up more research stations for soil testing at each taluk headquarters in Thanjavur district?

THE HON. SRI P. KAKKAN : (a) The Soil Testing Laboratory at Aduthurai which has been strengthened and fully equipped with the aid of the Ford Foundation, will be able to meet the demands of the Agriculturists in Thanjavur District.

(b) The answer is in the negative.

**பூமி வெடிப்புக்கள்**

* 182 கேள்வி.—**திரு. சி. கோதண்டராம பாகவதர் :**
திரு. கோ. சி. மணி: } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் தஞ்சை மாவட்டத்தில், சில பகுதிகளில் பூமி வெடிப்பு ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில்?

(உ) அரசாங்கம் இது குறித்து மேற்கொண்டுள்ள நடவடிக் கைகள் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) Vannarapettai Village.

(c) The State Geologist, Guindy, who inspected the site is of the view that the fissures and cracks could be attributed to local subsidence and that they are of a local nature. He is also of the opinion that the evidence does not indicate any possibility of major structural disturbance which could cause land-slide, earthquake or any other catastrophic movements. As there is no major calamity in the village, no relief measures have been undertaken.



10th August 1965]

* 183 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965-ம் ஆண்டு, எப்ரல் திங்களில் சென்னை வண்ணாரப் பேட்டையில் பூமிக்குள் திடீரென வெடிப்பு ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான விசாரணைகள் ஏதேனும் நடத்தப் பட்டனவா?

(உ) அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) Yes.

(c) The fissures and cracks are only of a local nature and they appear to have been caused by local subsidence in underground strata composed of thin alternating layers of sand and clay of recent origin. The evidence does not indicate any possibility of major structural disturbance which could cause land-slide, earthquake or any other catastrophic movements.

**திரு. எம். எஸ். மணி :** இந்த பூமி வெடிப்பின் காரணமாக ஏதேனும் பொதுமக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கம் நிவாரணம் கொடுக்கக் கூடிய அளவுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பூமி வெடிப்பு ஏற்பட்ட இடத்தைச் சுற்றிக் குடியிருக்கும் மக்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அது போன்று ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை.

**திருச்சி அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள ரஸ்தா பாலத்தை அகலப்படுத்துதல்**

* 184 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி-ஸ்ரீரங்கம் சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ரஸ்தா பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HO. SRI V. RAMAIAH : (a) There is a proposal.

(b) The existing bridge has 18 feet wide roadway with 3 feet 6 inches foot-paths on either side. It is proposed to redeck the bridge and also widen the roadway from 18 feet to 36 feet with

[10th August 1965

5 feet foot-paths on either side. But in view of the limited funds for "Roads" in the Third Plan, the work will have to be considered only during Fourth Plan period.

### ஈரோடு சர்வே இலாகா அலுவலர்களுக்கு சம்பளமில்லா விடுமுறை

* 185 *கேள்வி*.—**திரு. எம். எஸ். மணி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் மறைவையொட்டி அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட விடுமுறை அன்று அலுவலகத்திற்கு வரவில்லை என்று குற்றம் சாட்டி ஈரோடு சர்வே இலாகாவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் பிடிக்கப்பட்டது அரசினருக்கு தெரியுமா?

THE HON. SRI V. RAMAIAH : The allegation is baseless.

### தஞ்சை மாவட்டத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வரும் உபரி நிலம்

* 186 *கேள்வி*.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ், தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய தாலுகாக்களில் எத்தனை எக்கர் நிலங்கள் உபரியாக எடுத்துக் கொள்ளப்பட்டன ?

(இ) அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) The process of taking over of surplus lands from persons holding lands in excess of the ceiling area is in various stages. In Mannargudi and Tiruthuraipoondi taluks of the Thanjavur district, no case has reached the stage of taking over of surplus lands by the Government.

(b) Does not arise.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இப்போது இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசரிடமிருந்து ரெண்ட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த ஆக்டைப் பரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பு, நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசருக்குத்தான் இருக்க முடியும். அதை ஆதரைஸ்டு ஆபீசரிடமிருந்து மாற்றி வேறு ஒருவருக்குக் கொடுக்க முடியாது.

**திரு. சா. கணேசன் :** அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் இருந்து அந்த இரு தாலுகாக்களிலும் உச்ச வரம்புக்கு அப்பாற்பட்டு நிலங்கள் இருந்து அவை கைக்கொள்ளப் பெறவில்லை என்ற பதில் கிடைக்கிறது. அப்படியானால், இந்த உச்ச வரம்புக்குள் அகப்பட்க்கூடாது என்பதற்காக முன்னதாகவே அந்த நிலங்களில்



10th August 1965]

சிலர் அல்லது பலர் பங்குபெறும்படி துண்டுகளாகப் போட்டு விட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்திருக்கிறார்களா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

**கனம் திரு. வெ. ராமையா :** நான் குறிப்பிட்ட பதிலிலேயே இந்த லாண்ட் சீலிங் சட்டத்தை அமல் நடத்துவதில் பல கட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னேன். அந்தக் கட்டங்கள் பூர்த்தியான பிறகுதான் எவ்வளவு நிலம் கிடைக்குமென்று தெரியும். அதிலே வேரியஸ் ஸ்டேஜஸ் இருக்கின்றன. இதையெல்லாம் ஆதரைஸ்டு ஆபீசர் பரிசீலனை செய்து முடிவு செய்த பிறகுதான் நிலம் எவ்வளவு இருக்கிறது என்பது தெரியும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** ஐந்து எக்கருக்கு மேல் இருக்கிற நிலத்தை ஆதரைஸ்டு ஆபீசர் நோட்டீஸ் கொடுத்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் யார் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் பொசஷனை விடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்தி அதை எடுத்துக் கொள்வதற்கு ஆதரைஸ்டு ஆபீசருக்கு அதிகாரம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினருடைய கேள்வி இந்தச் சட்ட சம்பந்தமான கேள்வியாக இருக்கும் பட்சத்தில் ஆதரைஸ்டு ஆபீசர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலே பல கட்டங்கள் இருக்கின்றன. ஐந்து எக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களை அப்புறப்படுத்துவது என்பது இந்தச் சட்டத்தில் வராது. அது எவிக்ஷன் சட்டத்தின் கீழ் வரும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அதிகாரியினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தப் பரிசீலனை எத்தனை ஆண்டுகளில் முற்றுப் பெறும்? எப்போது அந்த நிலங்கள் எடுத்துக் கொள்ளப்படும் ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்தப் பரிசீலனை துரிதமாக முடிய வேண்டுமென்பதற்காகத்தான் ரெவின்யு போர்டும், அரசாங்கமும் கலந்து ஒரு காலவரையறையை நிர்ணயித்திருக்கிறது. குறிப்பாக, இந்த மாநிலத்திலே ஆதரைஸ்டு ஆபீசர் எந்தெந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்குப் பல பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறோம். அதை நான் படிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| Stage I | Completion of preliminary enquiry and publication of draft statement. | Group I | Authorised Officers, Saidapet, Vellore, Cuddalore, Madurai, Ramanathapuram and Tirunelveli. 28th February 1965. |

That is, they should have completed it by now.

| | | | |
|---|---|---|---|
| | | Group II | Authorised Officers, Thanjavur, Mayuram, Nagapattinam, Tiruchirappalli and Coimbatore. 30th June 1965. |

This stage would have been over now.

---

[10th August 1965

| | | | |
|---|---|---|---|
| Stage II | Preparation and publication of final statements. | Group I<br>Group II | 31st August 1965.<br>31st December 1965. |
| Stage III | Publication of notification under section 18 and taking possession of surplus lands. | Group I<br>Group II | 31st December 1965.<br>31st March 1966. |

So, all these stages will be over sometime in the middle of next year.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** நில உச்சவரம்புச் சட்டம் 1959-ல் நிறைவேற்றப்பட்டது என்று நினைக்கிறேன். ஆனால் அதை அறிமுகப்படுத்தியது 1959-க்கு முன்பு. நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வருவதாக முன்பே அறிமுகப்படுத்திய காரணத்தினால் எல்லா நிலங்களையும் உச்ச வரம்பிற்கு இடைஞ்சலாக இருந்ததைப் பல பிரிவுகளாக பிரித்துக் கொண்டார்கள். ஆகவே, அறிமுகப்படுத்திய தேதியில் இருந்து இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா அல்லது சட்டம் உருவான பிறகு இருந்துதான் எடுத்துக் கொள்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** எப்படிப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி இந்தச் சபை பரிசீலனை செய்து முடிவு செய்து சட்டமாக்கியிருக்கிறது. அந்த விவரங்களைப் பார்த்தால் எல்லாம் தெரியும்.

**திரு. ம. கமலநாதன் :** நமது மாநிலத்தில் உச்சவரம்புச் சட்டத்தினால் மிச்ச நிலம் எவ்வளவு வரும் என்பதற்கு ஏதாவது இலக்கு இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** சற்று முன்பு அளித்த பதிலைப் பார்த்தால் தெரியும் பல கட்டங்கள் முடிந்த பிறகுதான் தெரியும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ப்ரிலிமினரி நோட்டிபிகேஷன் முடித்து விட்ட பகுதிகளில் மட்டும் எவ்வளவு எக்கர் நிலம் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

### மதுரையில் உள்ள அரசாங்க அலுவலகங்கள்

* 187 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் வெவ்வேறு இடங்களில் உள்ள அலுவலகங்களை ஒரே இடத்தில் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



10th August 1965]

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் கவனத்தில் உள்ளது.

**திரு. வை. சங்கரன் :** குறிப்பாக கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபீஸ்கள் ஏழெட்டு சர்க்கிள்களில் பல பகுதிகளில் அமைந்திருப்பதால் வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அதனால் துன்பம் ஏற்படுவதால் உடனடியாக கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபீஸ்களை சென்ட்ரல் இன்கம் டாக்ஸ் ஆபீசை அமைத்திருப்பதுபோல் ஒரே கட்டடத்தில் அமைக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்த நகரில் உள்ள பொதுவான நிலைக்கு விவரம் சொன்னேன். இந்தக் குறிப்பிட்ட கேள்விக்கு விவரம் வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள்

* 188 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் நமது மாநிலத்தில் வைசூரி (பெரியம்மை) நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

(இ) எத்தனை பேர்களுக்கு தடுப்பு முறை கையாளப்பட்டது, மாவட்டவாரியாக ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பாதிக்கப்பட்டவர்கள் என்ற இடத்தில் கூறப்பட்டிருப்பது அம்மை நோய் கண்டவர்கள் என்றுதான் அர்த்தமா ? அல்லது இறந்தவர்கள் என்று அர்த்தமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அம்மை நோய் கண்டவர்கள் என்றுதான் அர்த்தம்.

### *Division of the State into two Health Zones*

* 189 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to divide the State into two Health Zones for the purpose of transfer of staff in the offices of District Health Officers?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இல்லை.

---

[a] 710-ம் பக்கத்தில் IV-ஆம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[10th August 1965

### திருச்சிராப்பள்ளியில் காலரா நோய்

* 190 கேள்வி—திரு. எம். எஸ். மணி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு மே மாதத்தில் திருச்சிராப்பள்ளியில் காலரா நோய் பரவியதை அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் காரணமாக அரசாங்க ஆஸ்பத்திரி களில் அனுமதிக்கப்பட்டவர்கள், இறந்தவர்கள் முறையே எத்தனை பேர் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம்.

(இ) சந்தேகமான காலரா கேசுகள் மூன்றில் ஒருவர் இறந்தார்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

### II.—ADJOURNMENT MOTION *RE* ALLOTMENT OF SUGAR QUOTA TO FAMILY CARD MERCHANTS IN MADRAS CITY.

SRI K. A. MATHIALAGAN : I have given notice of the following adjournment motion under Rule 42 of the Madras Legislative Assembly Rules, namely :—

" That the House do stand adjourned to discuss the following urgent matter of public importance, viz.,—

" Discriminate allotment of sugar quota to particular family card merchants and also to several non-family card merchants leaving hundreds of family card merchants who are authorised to distribute essential articles of food like Rice, Wheat, Gram and Bengal Gram in Madras City and the consequent acute scarcity in several localities of Madras City predominently inhabited by lower middle people and poor slum-dwellers due to faulty, discriminate irregular arrangement of allotment of sugar quota.' "

இந்தப் பிரேரபணையை நான் இந்த மன்றத்தின் முன் விவாதிப்பதற்காக இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டும் என்று சொல்லக் காரணம், நம் சட்டமன்ற விதிகளின்படி நம் சர்க்காரின் பொறுப்பு இதிலே மிகத் தெளிவாக சம்பந்தப்பட்டிருக்கிறது. இன்று சர்க்கரையை எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய 'ரெஸ்பான்ஸிபிலிட்டி.' இந்த விதிகளின்படி எப்படி வருகிறது என்பதை மட்டும் சொல்கிறேன். தெளிவாக இருக்கிறது என் தீர்மானம்.

**கனம் சபாநாயகர் :** எல்லாம் சரிதான். How does it come as an adjournment motion? விதியை மட்டும் சொல்லுங்கள்.

SRI K. A. MATHIALAGAN : On page 13 of our Assembly Rules, in Rule 50, sub-clause (*x*), it is stated as follows :—

" The motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved ".



10th August 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

அன்றாட நிர்வாகத்தில் சர்க்கரைக் கார்டு கொடுப்பதில்லை. சர்க்கரை ஏழை எளியவர்களுக்கெல்லாம் கிடைக்காத நிலையில் கள்ள வியாபாரத்திற்கு சர்க்கரைக் கிடைப்பதற்கு பெரு வாய்ப்பாக இருக்கிறது. சர்க்கரைக் கார்ட்ஸ் குடும்பக் கார்ட் வியாபாரிகளுக்கு எல்லாம் கொடுக்கப்படவில்லை. குடும்பக்கார்ட் வியாபாரிகள் சிலருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, சிலருக்கு கொடுக்கப்படவில்லை. சிலர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூல்மேட்டில் இருக்கிற கடைக்குக் கார்டை எடுத்துக் கொண்டு யாரும் போவதில்லை. இதனால் அந்தச் சர்க்கரையை அவர்கள் கள்ள மார்க்கட்டில் விற்கிறார்கள். ஏற்கனவே குடும்பக் கார்ட் வியாபாரிகள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள். சர்க்கரைக் கிடைக்காமல் ஏழை மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இது முக்கியமான சமாச்சாரம். இது ரெக்கரிங் அக்கான்சாக இருக்கிறது. வெளியிடங்களில் சர்க்கரைக் கிடைக்கிறது. செங்கல்பட்டு ஜில்லாவில் கிடைக்கிறது. ஏற்கெனவே சர்க்கார், வியாபாரிகளுக்கு குடும்பக் கார்ட்ஸ் கொடுத்திருக்கிறபோது இதில் மட்டும் ஏன் பாரபட்சம்? இம்மாதிரி முறைகேடாக இருப்பதை நிவர்த்திக்கத்தான் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதன் காரணமாக குடும்பக் கார்ட் வியாபாரிகளில் சர்க்கரை இருக்கிற ஜாதி, சர்க்கரை இல்லாத ஜாதி என்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால் கெடுதல் தான் ஏற்படும் என்று கூறி இதை விவாதிக்க சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று பேசிய கனம் சுதந்திரா கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் ஏன் கரும்பு சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பின்னால் விடை அளிக்கு முன்பு எனக்குப் பக்கபலமாக விடை அளிக்கும் வகையில் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் இப்பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள். சர்க்கரைப் பற்றாக்குறை இருக்கிறது. ஆகையால்தான் இதை எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் கன்ட்ரோல் என்றாலே சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பிடிக்காது. ஆனால் இதை அவசரப் பிரேரேணையாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். பப்ளிக் இம்பார்ட்டனஸ் என்பது வாஸ்தவந்தான். எல்லோருக்கும் சர்க்கரை வேண்டியதுதான். கூழுக்கு உப்பு இல்லை என்பதும் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்போருக்கும் ஒரே காரணந்தான். கனம் அங்கத்தினர் அவர்கள் எழுப்பியிருக்கும் பிரச்னையில் சர்க்கரைக் கிடைக்கவில்லை. பாலுக்கும் காப்பிக்கும் சர்க்கரைக் கிடைக்கவில்லை, சர்க்கரை வியாபாரம் செய்பவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு எல்லாம் கார்ட்ஸ் கிடைக்கவில்லை என்பதும் முக்கியமான பிரச்னைதான். அரிசி எல்லோருக்கும் கொடுக்கிறோம். அதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. அரிசியை அரசாங்கமே நேரடியாக விற்கிறது. அது வேறு ஏற்பாடு. அரிசி கொடுப்பவர்களுக்கெல்லாம் சர்க்கரை கொடுக்க வேண்டுமென்று சொல்வது சாத்தியமல்ல. எப்படி

கொண்டு வருகிருர்கள். இப்போது கனம் அங்கத்தினர் எழுப்பியிருக்கும் பிரச்னே, பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் இருந்தால் போதாது—இருக்கிறது என்று அவர்கள் சொல்லலாம். அதை மறுக்கவில்லை. சர்க்கரை எல்லோருக்கும் வேண்டும். வியாபாரம் செய்கிறவர்கள் எல்லோருக்கும் இது கிடைக்கா விட்டால் அதுவும் பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் என்று கனம் அங்கத்தினர் கருதலாம். Definite matter of urgent public importance என்றிருக்கிறது விதியில். ஏதாவது 'லிஸ்டு' போட்டு இன்னருக்குக் கிடைக்கவில்லை, அதற்காக அவசரப் பிரேரணை என்று சொன்னலும் விடை அளிக்கலாம். சர்க்கரை விநியோகிக்க ஒரு முறை இருக்கிறது. அதைக் கண்டிக்க வேண்டுமென்ருல் வேறு சந்தர்ப்பத்தில் கண்டிக்கலாம். ஆனல், இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion and hence, I withhold my consent to it.

## III.—CALLING ATTENTION TO ADVERSE SEASONAL CONDITIONS IN TIRUNELVELI DISTRICT.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லாவில் கடந்த ஆண்டிலிருந்து கால மழையும் கோடை மழையுமாகிய பருவ மழைகள் தொடர்ந்து தவறியதின் காரணமாக ஜில்லா முழுமையும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டு பெரும்பாலான கிணறுகளில் தண்ணீர் அறவே இல்லாமல் குடி தண்ணீருக்குக்கூட கஷ்டமேற்பட்டிருக்கிறது. சக்தியுள்ள மிஷின்களைக் கொண்டு ஆழமாகக் குழாய்கள் போட்டு தண்ணீர் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மானவாரிக் குளங்களொன்றும் பெருகாததால் அக்குளத்தை நம்பியுள்ள நஞ்சை புஞ்சைப் பயிர்கள் செய்யப்படவில்லை. செய்த பயிர்கள் தீய்ந்து போயிற்று. ஆற்றுப்பாய்மான, கால்வாய்ப் பாய்மானப் பகுதிகளிலும் சில இடங்களில் தவிர, பெரும்பாலான பகுதிகளில் தண்ணீர் சப்ளை இல்லாமல் காலப்பயிர், கோடைப் பயிர்கள் செய்யப்படாமலே இருக்கிறது. சில இடங்களில் செய்த பயிர்கள் தீய்ந்தும் போயிருக்கின்றன. மிகக் குறைந்த மகசூல் கண்டுமுதலாகியுமிருக்கிறது. அணைகளில் தண்ணீர் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் தற்போது பயிர் இருக்கும் சிறு பகுதியிலும் விளைவு நிச்சயமாக இல்லை. ஆகவே. . .

MR. SPEAKER : I think all these matters have been consolidated into a small statement.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நான் கொடுத்த லெட்டரில் என்ன இருக்கிறதோ, அதைத்தான் வாசிக்கிறேன் . . . .

**கனம் சபாநாயகர் :** இதை அட்மிட் செய்து ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்திருப்பார்களே, அதில் இருப்பதை மட்டும், வாசித்தால் போதும்.

SRI M. S. SELVARAJAN : As I understood the Hon. Speaker, you wanted me to raise the matter and to state the reasons therefor.





MR. SPEAKER : There is an edited matter, which has been admitted, and a copy of it has been sent to the hon. Member. Has not the hon. Member received the copy?

SRI M. S. SELVARAJAN : Yes, Sir, I have received it.

MR. SPEAKER : In that case, the hon. Member can read that statement.

SRI M. S. SELVARAJAN : Sir, I call the attention of the Hon. Minister for Food to an urgent matter of public importance, viz., the adverse seasonal conditions in Tirunelveli district and the necessity to declare Tirunelveli district as famine affected area and the relief measures to be taken thereof.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I wish to make the following statement :

The North-East-Monsoon which gives the bulk of the rainfall in Tirunelveli district, was a complete failure in the last fasli (Fasli 1374) and consequently most of the rainfed tanks had not received adequate supply and a few tanks did not receive any supply at all. The Commissioner of Land Revenue inspected the drought affected areas in Tirunelveli district from 9th to 11th February 1965 in the company of the Collector, the District Revenue Officer, etc., discussed the matter with the District and Divisional Officers and sent his notes of inspection to the Board which made certain recommendations. The Government have examined them and passed the following orders regarding remission of land revenue, postponement and loan collections, etc. :—

(1) Wet remission or remission of the difference between the wet assessment and the dry assessment has been granted in respect of the lands commanded by the Manimuthar Irrigation system in Tiruchendur, Srivaikuntam, Nanguneri, Ambasamudram and Tirunelveli taluks, where the lands were left waste for want of water in the irrigation channels and where the crops have yielded an outturn of 25 paise and less.

(2) All the lands fed by the rainfed tanks in Sathankulam sub-taluk and Nanguneri taluk and the lands fed by rainfed tanks and Chittar Irrigation scheme in Tirunelveli taluk have been granted wet remission.

(3) All the lands fed by rainfed tanks in the taluks of Tiruchendur, Srivaikuntam, Ambasamudram and Sankarankoil and all the lands in Tenkasi taluk have been granted remission of wet minus dry.

(4) All the dry lands in Sathankulam sub-taluk and Nanguneri taluk have been granted dry remission.

(5) The collection of land revenue, cesses and loan instalments in Sathankulam sub-taluk and Nanguneri, Kovilpatti and Sankarankoil taluks has been postponed to fasli 1375.

[Sri V. Ramaiah] [10th August 1965

2. For providing employment to labour and for increasing irrigation facilities, the following schemes have been sanctioned :—

(1) It has been ordered that as many wells as are needed should be sunk in Nanguneri and Kovilpatti taluks under the New Well Subsidy scheme and the Board of Revenue should allot suitable amount for this purpose. The collector has applied for an allotment of Rs. 2 lakhs from the provision for takkavi loans for deepening existing irrigation wells. The matter is under-consideration of the Government.

(2) An allotment of Rs. 5 lakhs has been sanctioned for Minor Irrigation works in this district in addition to the amount provided in the Schematic Budget and Rural Manpower scheme of the Panchayat Unions.

(3) For the deepening of the drinking water wells in the three divisions of Kovilpatti, Cheranmahadevi and Tuticorin an allotment of Rs. 2 lakhs has been sanctioned. The Collector has now applied for an additional allotment of Rs. 3 lakhs. The matter is under consideration of the Government.

**(4)** A sum of Rs. 2 lakhs has been sanctioned for repairing and metalling roads.

(5) A special staff consisting of one Assistant Engineer, four Junior Engineers, one Draftsmen, one Upper Division clerk, One lower division clerk and six peons has been sanctioned for investigation, preparation of estimates, etc., for the above works.

3. At present, rice is being distributed in the district on family cards in 9 Municipal Towns and 28 Panchayats. The Collector of Tirunelveli has arranged for the distribution of rice to the villages on an *ad hoc* basis through retail run by the Co-operative societies. The average weekly off-take of rice in the district is in the order of 2,100 tonnes. Against this an average of 1,225 tonnes is being distributed in the Municipal Towns and Panchayats and the remaining 875 tonnes in other rural areas.

## IV.—PRESENTATION OF REPORTS.

### REPORTS OF THE COMMITTEE ON ESTIMATES ON

(i) *Collegiate Education;* (ii) *State Transport Department.*

SRI K. S. SUBRAMANIA GOUNDER : Mr. Speaker, Sir, I rise to present the reports of the Committee on Estimates on (i) Collegiate Education and (ii) State Transport Department.

## V.—DRAFT OUTLINE OF THE FOURTH FIVE-YEAR PLAN DISCUSSION—*cont.*

***திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களால் சபை முன் வைக்கப்பட்டுள்ள நான்காவது ஐந்தாண்டுத்திட்ட முதற் குறிப்பை வர



10th August 1965] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

வேற்று ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த முதற் குறிப்பில் கண்டுள்ள விஷயங்களில் உள்ளே நுழைந்து அதிலுள்ள சாதக பாதகங்களையோ அல்லது குறைகளையோ அல்லது நன்மைகளையோ நான் கூற விரும்பவில்லை. நான் நூற்றுக்கு நூறு ஒரு பட்டிக்காட்டான் என்ற நிலையிலேயே ஐம்பது ஆண்டுகளாக எனக்கு இருக்கின்ற அனுபவத்தைக் கொண்டு பல விஷயங்கள் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. கழிந்த 50 ஆண்டுகளில் இந்த நாடு அடைந்துள்ள மாறுதல்கள் என் கண் முன்னே வருகின்றன. நான் சாதாரண ஒரு விவசாய குடும்பத்தில் 10 கிணறுகள், 40 ஏக்கர் தோட்டம், 40 ஏக்கர் மானவாரி நிலங்கள் உடைய எங்கள் ஊரில்—ஆலையில்லா ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை—என்று சொல்வார்களே அதே போல், பெரியநாயக்கர் குடும்பத்திலுள்ள ஒரு வீட்டில் பிறந்து வளர்ந்தேன். அந்த காலத்தில் நாங்கள் நாலைந்து சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, காலணா, அரையணா சேர்த்து இரவு நேரத்தில் ஒளிந்திருந்து கொண்டு கால்படி ரவை, எண்ணெய், சர்க்கரை—அப்போது சர்க்கரை கிடையாது—கருப்புக்கட்டி வெல்லம்தான் கிடைக்கும்—இவைகளை வாங்கி உப்புமா பண்ணி சாப்பிட்டோம். இந்த விவரம் எங்கள் பெரியவர்களுக்குத் தெரிந்தது. அப்போது அவர்கள் சொன்னார்கள், இம் மாதிரி சாப்பாடு எல்லாம் நம்மைப்போன்ற சம்சாரிக்கு உதவாது, இந்த மாதிரி உண்டிகளை கிராம விவசாயிகள் சாப்பிட்டுவிட்டால் கட்டாது, நிச்சயம் கெட்டுவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஊண் மிச்சம் உழவில் இல்லை என்று சொல்வார்கள். அவ்வளவு கஷ்டங்கள் விவசாயத்தில் அந்தக் காலத்தில் இருந்தன. இப்போது இருக்கின்ற போஷாக்குகள் எல்லாம் அந்தக் காலத்தில் விவசாய குடும்பத்தில் கிடையாது. மூன்று ஏக்கர் நிலத்தில் வாழையைப் போட்டு, அதைக் குத்தகைக்கு விட்டால், குத்தகைக்கு எடுத்தவர் ஆறு மைல் தூரத்திலுள்ள நகரில் இருப்பார். அவரிடம் பணம் கேட்டு வாங்கிவர எங்கள் பெரியவர்கள் அனுப்புவார்கள். காலையில் போனால் மாலை மூன்று மணிக்குத்தான் பணத்தைக் கொடுப்பார்கள். ஒவ்வொரு காசாக சேர்த்து, கொடுப்பார்கள். ஹோட்டலில் சென்று சாப்பிடுவதற்குக்கூட ஐந்து அணா தருவதற்கு பல மணி நேரம் ஆகும். குத்தகை எடுத்தவர்கள் பணம் கொடுப்பதற்கு இவ்வளவு கஷ்டம் இருக்கும். இந்த நிலைமையில் அப்போது பணச் செழிப்பு இருந்தது. இதையெல்லாம் மனத்தில் நினைத்துக் கொண்டுபார்த்தால், விவசாயிகளின் அந்தக் கால நிலை என்ன, கிராமங்களின் தற்போதைய நிலை என்ன என்பதையும் பார்த்து விட்டு, பழைய நினைவுகள் வருகின்றன. ஆரம்பப்பள்ளியின் நான்கு வகுப்புக்களை மூன்று கல்விக்கூடங்களில் கழித்த எனக்கு, இன்றைய தினம் அதே ஊரில் 350 மாணவர்கள் படிக்கின்ற நிலையில் ஒரு ஹைஸ்கூல் இருந்து வருவதையும் அதில் படித்து வெளி வந்த மாணவர்கள் அமெரிக்காவுக்கும், ஜெர்மனிக்கும் போய்க் கொண்டிருக்கின்ற நிலையும் இதன் மூலமாக பல பட்டதாரிகள் இன்றைய தினம் வெளியே வந்து கொண்டிருக்கின்ற நிலையும்—இதுபோன்ற பல அம்சங்கள் என்னுடைய ஞாபகத்திற்கு வந்து

கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் வாழ்வோடு உழன்று போராடியவன் நான். 30 n. அந்த நாட்களெல்லாம் கூட எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. இந்த மன்றத்திலே, மூன்றரைக் கோடி மக்களுக்கு உரிய ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனை செய்யும் நிலையில் அவர்களுக்கு மத்தியில் உட்காரும் மனிதனாக ஆகியிருக்கிறேன் என்பதை எண்ணிப் பார்க்கும் போது பரவசம் ஏற்படுகிறது. இந்த நிலை இந்த நாட்டிலே ஏற்படுமா என்று கனவிலேகூட கண்டதில்லை. எனது சகோதர அங்கத்தினர் திரு. சிமைச்சாமி அவர்களுடைய வீட்டு வாசல் வழியாக ஒரு ரோடு போகும். அவருடைய தந்தை என்னுடன் ஒரு ஜில்லா போர்டு அங்கத்தினர். அந்த ரோடு வழியாக ஒரு பஸ் போகும் சிவகங்கையிலிருந்து மதுரைக்கு. அவருடைய வீட்டு வாசலில் 10 நிமிஷம் நின்றுகொண்டு கண்டக்டர் 'சிவகங்கை', 'மதுரை' என்று சப்தம் போட்டுக்கொண்டிருப்பது வழக்கம். அந்தப் பஸ் போகும்போது பின்னாலே யாராவது போனால் முக்காடு போட்டுக்கொண்டு போகவேண்டும் அல்லது அடுத்தபடியாக கிணற்றில் குளிக்கவேண்டும். அந்த அளவுக்கு புழுதியை வாரிப்போட்டுக்கொண்டு போகும். இப்போது இருக்கக் கூடிய தார் ரோடு பரம்பரையாக இருந்ததாக எனக்கு நினைவில்லை. ஒருவேளை அவருக்குத் தெரிந்து இருக்கலாம். நாட்டில் ஏற்பட்டுள்ள, கிராமங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பற்றிப் பேசிக்கொண்டு போனால் எவ்வளவோ பேசிக்கொண்டே போகலாம். இதை யெல்லாம் மனத்திலே கொண்டு, சிந்தனையிலே கொண்டு பொறுப்பு உணர்ச்சியோடு எண்ணிப் பார்த்தால், நாட்டிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்ன என்று சரிவரப்புரிந்து கொள்ள முடியும். அவ்வளவு கஷ்டங்கள் அந்தக் காலத்தில் இருந்து வந்திருக்கின்றன. இன்றைக்கு எத்தனையோ மாறுதல்கள் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. ஐந்தாண்டுத் திட்டங்கள் பல நடத்தியும்கூட சமுதாயத்தின் அடித் தளத்தில் இருப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள், நடுத்தர வகுப்பினரும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அபிப்பிராய பேதமின்றி அனைவரும் ஒப்புக்கொள்வோம். அதற்குக் காரணம் அரசாங்கம் மட்டுமல்ல. சமுதாயத்தின் தொன்றுதொட்டு இருக்கக்கூடிய பழக்க வழக்கம்தான் அதற்குக் காரணம். ஜாதி, மதம் என்ற பிரச்னைதான் காரணம். எனது கிராமத்தில் எடுத்துக் கொண்டால் 30 அருந்ததியார்கள் வீடுகள் இருக்கின்றன. நாம் அவர்களுக்கு என்ன செய்திருக்கிறோம். முப்பது வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் நிலைமை அப்படியே இருக்கிறது. எனக்கு வேண்டியவன், சொந்தக்காரன், அவனை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கைகள் நீள்கின்றன. அவர்களை அந்தந்த ஜாதியிலே உள்ளவர்கள், சொந்தக்காரர்கள், அல்லது ஏழை எளியவர்களைத்தான் வாழவைக்க வழிகாட்டுகிறார்கள். இதெல்லாம் சம்பிரதாயமாகப் போய்விட்டது. தாங்கள் முன்னேறவேண்டும் என்ற சுயநல எண்ணங்கள் இன்று ஏற்பட்டது அல்ல. ஒரு சாராரிடத்தில் மட்டும் குறை காண்பது நியாயம் அல்ல. தொன்றுதொட்டு இதே சம்பிரதாயம், இதே சிந்தனை, நாட்டிலே வளர்ந்து வந்திருக்



கின்றது. தார்மீக எண்ணங்களும், சிந்தனைகளும் அந்த அளவிலே வேர் ஊன்றிப்போயிருக்கிறது. மனித குலத்திலே மனிதாபிமானத்தைக் கொள்ள வேண்டிய எண்ணங்கள் குறுகிய அளவில் நின்றுவிட்டன. பரந்த அளவில் எண்ணங்கள் வளருவதற்கான எண்ணங்கள் பரவலாக ஏற்படவில்லை. இனிமேல்தான் தார்மீக எண்ணங்களும், சிந்தனைகளும், செயல்களும் பரந்த அளவில் ஏற்படவேண்டும். திட்டங்கள் மட்டுமல்ல, சமுதாயத்தில் இருப்பவர்களைப் பற்றி பாரதியார் அவர்கள்—

> உற்றவர் நாட்டவர் ஊரார்—இவர்க்கு
> உண்மைகள் கூறி இனியன செய்தல்
> நற்றவமாவது கண்டோம்—இதில்
> நல்ல பெருந்தவம் யாதொன்றுமில்லை

என்று சொன்னது போல நாட்டில் உள்ளவர்களுக்கு நல்ல வழிகாட்டி, நல்ல வழிகளைச் சொல்லி, நல்லபடி முன்னேற்றுவதற்கான வழிகளைச் சொல்லுபவர்களாக இல்லை. நமது முதலமைச்சர் அவர்களுடைய உரையிலே "நமது திட்டங்களின் மற்றொரு சிறப்பான அம்சம் என்னவென்றால் அவை பொருளாதார முன்னேற்றம், சமுதாய நீதி என்ற இந்த இரண்டு முக்கிய குறிக்கோள்களையும் ஜனநாயகக் கட்டுக் கோப்பிற்குள்ளேயே எய்துவதற்கு வழிவகை செய்வதே ஆகும். வேறுசில நாடுகளின் திட்டத்தின் வெற்றிக்காக, மக்களின் வாழ்க்கை முறையைக் கட்டுப்படுத்துவதிலோ அல்லது உற்பத்தியை உயர்த்துவதிலோ கையாளப்படுகிற கெடுபிடி முறையை நாம் கையாள்வதில்லை. நமது ஜனநாயக அரசியலமைப்பின் கட்டுக்கோப்பிற்குள் நாம் அவ்வாறு கையாளவும் முடியாது. நம் மக்களுக்குத் திட்டத்தில் ஆர்வமூட்டி அவர்களுக்கு நல்லுரைகள் வழங்கி அவர்களுடைய ஒத்துழைப்பின் மூலமாகவே நிறைவேற்ற வேண்டியுள்ளது. இம் மன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் மக்களிடையே அத்தகைய ஒரு மனப்பான்மையை உருவாக்கித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு அவர்களது திறனையும் ஆர்வத்தையும் வளர்க்கும் வகையில் அமையும் என்று நான் திண்ணமாக நம்புகிறேன்" என்று சொல்லிவிட்டார்கள். இந்த மன்றத்திலே நடைபெறும் விவாதத்திலே, நான்காவது திட்டம் சம்பந்தமாகக் கூறக் கூடிய வார்த்தைகளும் பேச்சுக்களும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இசைவாக இருக்கிறது என்று சொல்ல இயலவில்லை. அங்ஙனம் இங்கே பேசுகிறோம். இதிலே வியப்பு ஒன்றும் இல்லை. இருந்தாலும் 'திட்டங்கள் சரிவரப் பலன் அளிக்கவில்லை, எதிர்பார்த்தபடி அபிவிருத்தி இல்லை, திட்டம் தோல்வி அடைந்து விட்டது' என்று இப்படியே பேசிக்கொண்டு போனால், பொது மக்கள் என்ன நினைப்பார்கள்? வளர்ந்து வரும் சமுதாயம் என்ன நினைக்கும்? படித்தவர்கள் பேசுகிறார்கள், சட்ட மன்ற அங்கத்தினர்கள் பேசுகிறார்கள், பொது மேடைகளில் பேசுகிறார்கள், திறமையாகப் பேசுகிறார்கள், அதெல்லாம் உண்மைதானோ என்று சந்தேகம் கொள்கிறார்கள். இத்தகைய சூழ்நிலை நாட்டிலே இன்றைக்குப் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. 'விவசாய உற்பத்தி சம்பந்தமாகப் போதிய

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [10th August 1965

அளவு, நினைத்த இலட்சிய இலக்கை அடையவில்லை, தலை குனிய வேண்டும், வெட்கப்படவேண்டும்' என்று இப்படி எத்தனையோ வார்த்தைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. வாஸ்தவம் தான். இதற்கு யார் பொறுப்பு? இதில் குறை என்ன? அடிப்படையாக உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டதில் குறை இருக்கிறதா? 'பஞ்சாயத்து அளவிலே, கிராம அளவிலே, விவசாய உற்பத்தியைப் பெருக்க நல்ல பொறுக்கு விதைகள் வேண்டும், உரங்கள் வேண்டும், தழை உரங்கள் வேண்டும், இதற்கு என்னென்ன செய்யலாம், கிராம அளவில், பஞ்சாயத்து அளவில் என்ன செய்யவேண்டுமென்று, எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன, என்னென்ன தானிய வகைகள் சாகுபடி ஆகின்றன, ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு உரங்கள் வேண்டியிருக்கின்றன, தழை உரத்தையும், மற்ற உரங்களையும் உற்பத்தி செய்ய விவசாயிகள் என்ன செய்யவேண்டும், அவர்களுக்கு என்ன ஏற்பாடுகள் செய்து கொடுக்கவேண்டும், என்ன வசதிகள் கொடுக்கவேண்டும், பொறுக்கு விதைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சகாயக்குகள் எவ்வளவு பேர் எவ்வளவு விதைகளைக் கொடுத்து உதவவேண்டும்'—இதெல்லாம் திட்டத்தில் இருக்கிறதல்லவா? திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக கடன் வசதி செய்யப்பட்டிருக்கிறது. கடன் வசதி செய்திருப்பதில் குறை இல்லை. யார் திட்டத்தை நிறைவேற்றுவது? மந்திரிகளோ, சட்டசபை அங்கத்தினர்களோ மட்டும் திட்டத்தை நிறைவேற்ற இயலாது. அங்கே உள்ள, இந்த வேலைகளை நிறைவேற்றி வைக்கக் கூடிய மக்கள், விவசாயிகள், உழைப்பாளிகள், தங்களுடைய நிலைமையை அறிந்து அவ்வாறு செயல்படும்படி செய்யவேண்டும். ஏதோ ஒரு முறையில் செயல்பட்ட விவசாயிகளைத் திருந்திய முறையில் செயல்பட அவர்களைத் திருப்ப முடியவில்லை. அதே பழைய வழியில் அவர்கள் செல்லுகிறார்கள். அவர்களை மாற்றுவது கஷ்டம். இந்தத் திட்டம் நாட்டிலே உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட திட்டம் என்று வைத்துக் கொள்ளவேண்டும். திட்டமிட்ட பொருளாதாரம் இந்த நாட்டிலே இருக்கவேண்டுமென்று கனவு கண்டு வந்திருக்கிறோம். இந்த நாட்டிலே இப்போது புதிய சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுகிறோம். நமது மூன்றாவது திட்டத்தில் விவசாய உற்பத்தி நாம் நினைத்த அளவுக்கு அடைய முடியவில்லை, நினைத்த அளவுக்கு உற்பத்தி ஆகவில்லை—17 லட்சம் டன் அளவுக்கு அதிக உற்பத்தியை எதிர்பார்த்தோம், அந்த அளவு அடைய முடியவில்லை. 12 லட்சம் டன் அளவுக்குத்தான் உற்பத்தி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். நம் முயற்சியோடு, இயற்கையும் நம்மோடு ஒத்துப் போகவேண்டும். அந்த அளவிலே மழை பூர்ணமாகப் பொய்க்கிறதா? திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களைப் பொறுத்த வரையில் நண்பர் செல்வராஜ் அவர்கள் சற்று முன்பு குறிப்பிட்ட அதே நிலைமை இப்போது காணப்படுகிறது. இன்றைக்கு அவ்வளவு கஷ்டங்கள் காணப்படுகின்றன. கிராமங்களில் நாம் சென்றால் நேரிலும் பார்க்கலாம். குடத்தை எடுத்துக்கொண்டு எந்தக் காட்டுக்கிணற்றிலே தண்ணீர் இருக்கும் என்று பெண்கள் அலைவதைப் பார்க்கலாம். அந்த நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் [illegible]



10th August 1965] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

சிரித்துக்கொள்கிறார்கள்; சிலர் சந்தோஷப்படுகிறார்கள்; இன்னும் சிலர் 'ஆண்டவனே, மழை இப்படியே பெய்யாமல் போய்விட வேண்டும், சர்க்கார் பேரில் மக்களுக்கு, வெறுப்பு ஏற்படவேண்டும்' என்ற நினைப்போடு கூட நாட்டிலே இருக்கிறார்கள். இதையெல்லாம் நினைக்கிறபொழுது, நம்முடைய விருப்பம்தான் அம்மாதிரி நிலைமை உண்டுபண்ணியதோ என்று கூட நினைக்கவேண்டியிருக்கிறது.

"வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை
நீதி மன்னர் நெறியினருக்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே.
அரிசி விற்றிடும் அந்தணர்க்கோர் மழை
வரிசை தப்பிய மன்னருக்கோர் மழை
புருஷனைக் கொன்ற பூவையர்க்கோர் மழை
வருஷம் மூன்று மழையெனப் பெய்யுமே"

என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வரிசை தப்பிய மன்னருக்கே இடமில்லை. நாம்தான் மன்னர்கள். பொது மக்கள்—நம்மைச் சார்ந்தவர்கள்தான்—மன்னர்கள். அரசரைச் சார்ந்தவரல்ல. சமுதாயத்தில் எப்படிப்பட்ட மனித தர்மம் அனுஷ்டிக்கப்படுகிறதோ, எத்தகைய உணர்ச்சி நிலவி வருகிறதோ, அதைத்தான் நாம் பார்க்கவேண்டும். அம்மாதிரியாக இப்பொழுது சமுதாயத்தில் இருக்கக்கூடிய குறைகள் நிறைய இருக்கின்றன. அரசர்களையோ, தனிப்பட்ட மனிதர்களையோ, பணக்காரர்களையோ இப்படி தனித்தனியாக பிரித்துக் கூட நாம் பார்க்கவேண்டிய அவசியமில்லை. தொன்றுதொட்டு இந்த நாட்டில் பலவிதமான சம்பிரதாயங்கள், நிலைமைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு அந்த எண்ணங்களை நாம் மாற்ற வேண்டும். நம்முடைய சிந்தனைகள் அந்த வகையில் செயல்பட வேண்டும். ஒரு மாற்றம், திருப்பத்தை உண்டுபண்ணக்கூடிய காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டு வருகிறோம். அத்தகைய மாற்றங்கள் ஏற்படுவதற்கு நாம் எல்லோரும் இணக்கமாகச் செயல்பட்டால்தான் இந்தத் திட்டம் சரிவர நிறைவேற முடியும். அத்தகைய எண்ணங்களை மனதில் கொண்டு நாம் இன்னும் எத்தனையோ வேலைகளைச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். மழை இல்லை என்று சொன்னால் யார் மீது பழி சுமத்துவது? இந்தக் கஷ்டமான தருணத்தில் பல சோதனைகள் இந்த நாட்டில் ஏற்படுகின்றன. பாதுகாப்பிற்காக நாம் ஒரு ஆண்டுக்கு ரூ. 1,000 கோடி செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்வது வியர்த்தம் என்று தெரிகிறது. ஆனால், நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை எப்படி வியர்த்தம் என்று சொல்வது? அந்த வகையில் செலவுகள் ஆகிக்கொண்டிருக்கின்றன. இம்மாதிரி பல சோதனைகள் நமக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் பொறுப்பு உணர்ச்சியோடு நாம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டால்தான் அது பொருத்தமாக இருக்கும்.

நமது நாட்டில் பரவலாகத் தொழில்கள் விருத்தி அடைந்து கொண்டு வருகின்றன. எந்தெந்த துறைகளில் எவ்வளவு எவ்வளவு விருத்தி அடைந்திருக்கிறது என்பது திட்டங்களை நிறைவேற்றியிருப்பதன் மூலம் நமக்கு நன்கு தெரியும். அப்படி திட்டங்கள் போடும்பொழுது நாட்டு மக்கள் அவைகளை மனதார ஏற்கக்கூடிய வகையில் நாம் இணக்கமாகக் காரியங்களைச் செய்ய முற்படவேண்டும். நாட்டில் நல்ல எதிர்க்கட்சி தேவை. அதுவும் ஜனநாயக நாட்டிலே முக்கியமாக தேவை. 1952-ல் திரு. ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபொழுது, இப்பொழுது இடது சாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் அப்பொழுது சட்டசபையில் கூறினார். சட்டசபை நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும்:

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற்போலுமே
கல்லாதான் கற்ற கவி."

என்று கூறியிருக்கிறார். மேலை நாடுகளிலே, முற்போக்கு உள்ள நாடுகளிலே, ரஷ்யா போன்ற நாடுகளிலே ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். வான்கோழி போன்று நம்முடைய சர்க்காரும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற முற்படுகிறது என்று அவர்கள் அப்பொழுது ஏளனமாக இந்தச் சபையிலே பேசினார்கள். ஐந்தாண்டுத் திட்டங்கள் எப்பொழுது வந்திருக்கின்றன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் உரையிலேகூட சொல்லப்பட்டிருக்கிறது, 'ஜனநாயக நாட்டிலே திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் கையாளக்கூடிய முறைகள் வேறாக இருக்கின்றன, ரஷ்யாவில் வேறு முறைகள் இருக்கின்றன என்று. ரஷ்யாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்பொழுது அவர்களுக்குள் ஒரே மாதிரியான எண்ணம் இல்லை, ஒருமித்த எண்ணம் இல்லை. மூன்று விதமான எண்ணங்கள் இருந்தன. பொது மக்களைக் கட்டுப்படுத்தி அந்தத் திட்டங்களை நிறைவேற்றும் வகையிலே ஒரு உத்வேகத்தை உண்டு பண்ணினார்கள். சர்வாதிகார நாட்டில் அந்த வகையிலே சகாக்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. ஸ்டாலின் இருந்தார். டிராட்ஸ்கி என்று ஒருவர் இருந்தார். புல்கானினைப் போன்ற நிதானவாதிகள் இருந்தார்கள். அகில உலகப் பாட்டாளி மக்களுடைய புரட்சியை உதவியாகக் கொண்டு நடத்தவேண்டும் என்று சொன்னார் ஒருவர். இன்னொருவர் வேறுவிதமாகச் சொன்னார். அவர்களெல்லாம் கொஞ்ச காலத்தில் மறைந்துபோனார்கள். எப்படிப் போனார்கள்? சகாக்கள் போன இடம் தெரியவில்லை. அப்படிப்பட்ட சர்வாதிகார நிலைமையிலே திட்டத்தை வேகமாக நடத்தவேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள். நம்முடைய ஜனநாயக நாட்டிலே நாட்டு பொது மக்களுடைய ஒத்துழைப்பைக் கொண்டு தான், நம்முடைய திட்டங்களைச் சரிவர நிறைவேற்றுவதற்காக ஏற்பாடு செய்யவேண்டும். திட்டங்களை நிறைவேற்றுவதில் பல குறைகள் ஏற்படுகின்றன. அந்தப் பணியில் நாம் எவ்வாறு ஈடுபடவேண்டும், திட்டங்களை நிறைவேற்றுவ-



-தில் ஸ்தல மக்களோடு, ஸ்தலத்திலேயே பொது மக்களோடு தொடர்பு கொண்டு திட்டத்தைச் சரிவர நிறைவேற்றுவதற்கு, பணியில் எவ்வாறு செயல்படவேண்டும் என்று அவர்களுக்கு நாம் கூறவேண்டும். அந்த யோசனைகள் மிகக்குறைவாக இருக்கின்றன. எத்தனையோ வகையில் அரசாங்கம் செலவிட்டாலும் கூட, செலவழிக்கின்ற பணம் நல்ல வகையில் பயன்படுகிறதா என்பதை நாம் யோசித்துப்பார்க்கவேண்டும். வாங்கிய பணம் எதற்காக வாங்கப்பட்டதோ அந்தக் காரியத்திற்காகச் செலவிடப்பட்டதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒருவர் பரம்பரையாக ஒரு ஏகர் நிலம் வைத்திருந்தால், அவர் அதிலே கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,000, 3,000 கொடுத்து உதவி செய்கிறோம். அந்தத் திட்டம் நல்ல திட்டம். அந்தத் தொகை வேறுவிதமான வகையில் செலவிடப்படுகிறது என்ற புகார்கள் சொல்லப்படுகின்றன. சமுதாயத்தில் இம்மாதிரி தீமைகள் இருந்தால், திட்டம் நல்ல முறையில் நடக்காது. பொது மக்களிடையே ஏதோ ஊழல்கள் இருக்கின்றன, குறைகள் இருக்கின்றன என்று நாம் பெரிதாகப் பேசுகிறோம். அவர்கள் எல்லாம் வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல, இந்த நாட்டிலுள்ள சமுதாயத்தைச் சேர்ந்த பொது மக்களே தவிர, வேறு யாருமில்லை. பொது மக்கள் என்றால் யார்? திட்ட அதிகாரிகள் என்றால் யார்? எனக்குச் சொந்தக்காரர், இன்னொருவருக்குச் சொந்தக்காரர், அல்லது அயல்வீட்டுக்காரர், அப்படி ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள்தான். நாட்டிலுள்ளவர்களுடைய பிள்ளைகள், அவர்களுடைய சொந்தக்காரர்கள், திட்டத்தை நடத்திவைக்கக்கூடிய அதிகாரிகள். சமுதாயத்தில் தீமை இருக்கிறது, அந்தச் சாயம் அங்கே ஏறி இருக்கிறது. நாம் எல்லாம் அரிச்சந்திரர்களா? சமுதாயத்திலுள்ளவர்கள் அரிச்சந்திரர்களாயிருந்தால் உத்தியோகத்திலிருப்பவர்கள் அரிச்சந்திரக் குஞ்சுகளாகயிருப்பார்கள். நாட்டில், சமுதாயத்தில் இருக்கும் தீமை என்ன, அதைக் களைவதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். இப்படியெல்லாம் குறைகள் காணப்படுகின்றன என்றால் அவைகளைத் திருத்திக்கொள்ளவேண்டும். நம்மை நாமே திருத்திக்கொண்டால் சமுதாயம் திருந்தும் என்ற எண்ணத்தை நாம் மேற்கொள்ளவேண்டும். நாட்டில் உள்ளவர்கள், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் விஷயங்களை ஆராய்ந்து அறிந்து பொறுப்பு உணர்ச்சியோடு புதுத் திட்டங்களைக் கொடுக்கிறார்கள், மாற்று யோசனையைக் கொடுக்கிறார்கள், அத்தனை அலுவலக உத்தியோகஸ்தர்களுடைய நிர்வாக ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்ற எண்ணங்கள் அவர்களுக்கு இருக்கின்றன, அப்படி ஒரு எதிர்க்கட்சி உருவாகியிருக்கிறது, நாம் இருந்தால் என்ன, அவர்கள் இருந்தால் என்ன, அந்த வகையில் அவர்கள் உருவாகி வருகிறார்கள் என்ற நம்பிக்கை ஆளும் கட்சிக்கு ஏற்படவேண்டும். பொது மக்களுக்கும் அந்த நம்பிக்கை ஏற்படவேண்டும். பொது மக்களிடத்திலே அந்த எண்ணம் உருவாகும் வகையில் எதிர்க்கட்சி அமையவேண்டும். நான் ஒரு கிராம வாசி; கிராம வாசியாக இருந்தாலும், நான் எனக்குத் தோன்றியதை இங்கே சொல்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பு உணர்ச்சி வேண்டும்; நியாய உணர்ச்சி வேண்டும். அந்த வகையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனைவர்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும்; பொது மக்களிடையே அம்மாதிரி ஒரு நல்ல எண்ணத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்கவேண்டும். அப்பொழுதுதான் திட்டம் சரிவர நிறைவேறும். அந்த வகையில் நிறைவேற்றி வைப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூறிக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 'நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகல், அவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்' என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்திற்கு நான் கொடுத்துள்ள திருத்தத் தீர்மானத்தை ஒட்டி சில கருத்துக்களை வழங்க நான் முற்படுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் கட்டத்திற்கு வந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் எடுத்துக் கொள்கின்ற நிலையில் இருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி இந்த அவையிலே பரிமாறப்படுகின்ற கருத்துக்கள் எதிர்காலத்தில் இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் செம்மையான முறையில் உருவாக்கப்பட பயன்படும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இப்பொழுது இந்த மன்றத்தின் ஆய்வுக்கு இந்த நகல் குறிப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதை நான் உணர்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னால், திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் பலரால் ஆராயப்பட்டது. திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் மூலமாகத்தான் இப்பொழுது நாட்டினுடைய நல்வாழ்வைப் பெருக்குவதற்கு வழிவகைகள் காணவேண்டும் என்ற கருத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தாருக்குக் கருத்து வேறுபாடு இல்லை. திட்டமிட்டு செயல்படுகின்ற செயல்களிலே பல குறைபாடுகள் இருக்கின்றன, திட்டமானது எதிர்பார்க்கின்ற அளவுக்கு நிறைவேற்றப் படாமல், நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வழி செய்யப்படாமல் இருக்கிறது என்ற குறைகளைச் சொல்லுகிறபொழுது, திட்டமே இல்லாமல் இருந்தால், திட்டமிடப்படாமல் இருந்தால், இதைவிட இன்னும் மோசமான நிலை ஏற்படும் என்ற கருத்தைப் பலரும் உணர்ந்திருக்கிறார்கள். திட்டமே கூடாது என்று யாரும் எடுத்துச் சொல்லவில்லை. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் கூட திட்டம் வேண்டாம் என்று தாங்கள் சொல்ல வரவில்லை, ஆனால் திட்டத்தில் இருக்கிற குறைபாடுகள் நீக்கப்படவேண்டும், இந்த முறையிலே அமைக்கக் கூடாது, இப்படி அமைக்க வேண்டும் என்று விளக்கங்கள் தருகிறோம் என்று அவர்கள் எடுத்துக் கூறினார்கள். திட்டம் வேண்டுமா, வேண்டாமா அல்லது திட்டத்தை ஒத்தி வைக்கலாமா என்ற கருத்துக்கள் நாட்டிலே பரிமாறிக்கொள்ளப்படுகின்றன.



எதிர்க்கட்சியினரிடத்திலிருந்தும், மற்றவர்களிடத்திலிருந்தும் மட்டும் இம்மாதிரி கருத்துக்கள் வருகின்றன என்பது அல்ல. இந்திய அமைச்சர் அவையைச் சார்ந்த அமைச்சர் திரு. எஸ். கே. பட்டீல் அவர்கள் திட்டத்திற்கு ஓய்வு தரலாம், திட்டத்தைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் கருத்துத் தர, அதே மத்திய அரசாங்க அமைச்சர் அவையைச் சார்ந்த அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திரு. பட்டீல் அவர்கள் சொல்லுகிறபடி திட்டத்தை ஒத்திவைக்கக்கூடாது, அதனால் கேடுகள் ஏற்படும், எனவே திட்டத்தை ஒழுங்காக நடைமுறைப் படுத்தவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், திட்டத்தை ஒத்திப் போடலாமா, நிறுத்தி வைக்கலாமா என்ற அத்தகைய கருத்து வேறுபாடுகள் பலருக்கு இருந்தாலும், இந்த மன்ற உறுப்பினர்களுடைய அத்தனை பேர்களுடைய கருத்தையும் ஒன்று திரட்டிப் பார்ப்போமானால், திட்டமிட்ட பொருளாதாரத்தின் மூலம் நாம் மக்களை முன்னேற்ற வழிவகைகள் காணவேண்டும் என்ற அடிப்படை எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறோம். இப்போது தீட்டப்படுகிற திட்டம் இருக்கிற வசதிகளை எந்த எந்த வகையில் பெருக்கலாம் என்பதற்கு வழிவகைகளைக் கண்டு, அந்த வசதிகள் எல்லாம் பொதுமக்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் அமைந்ததாக வேண்டும். நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்திற்கு அடிப்படையான நோக்கமே இன்று நாட்டில் உள்ள மக்களுடைய தேவை என்ன என்பதை உணர்ந்து, அந்தத் தேவையை நிறைவேற்றுகின்ற வகையில் நாம் அமைக்கின்ற திட்டம் அமைய வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில் தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதைத்தான் டாக்டர் நடராசன் அவர்களும் சொன்னார்கள். திட்டங்கள் அமைக்கும்போது இரண்டு வகையில் அமைக்கலாம். இருக்கிற வசதிகளைப் பெருக்குவதற்கான வழிவகைகளைக் கண்டு அவை பொதுமக்களிடத்தில் போய்ச் சேருகின்றனவா என்பதைப் பார்த்துக்கொள்ளும் வகையில் திட்டம் அமைத்துச் செயல்படுத்தலாம். பொது மக்களுடைய தேவை இன்ன இன்ன என்பதை முதலிலேயே கண்டு, அதற்குத் தகுந்தாற்போலத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினால் நாம் போடுகிற திட்டங்களினால் மக்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இது ஒரு வகை. இந்த வகையில் நமது நான்காவது திட்டம் அமைக்கப்படவேண்டும் என்பது தான் நான் கொடுத்திருக்கிற திருத்தத்தின் நோக்கமே. நாட்டு மக்களுடைய தேவையை உணர்ந்து நம்முடைய திட்டத்தைத் தேவைக்குத் தகுந்தாற்போல அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தையே வலியுறுத்தியிருக்கிறேன். இப்போது அரசாங்கம் தீட்டியிருக்கிற திட்டத்தின் இறுதி நோக்கம் அதுவாக இருந்தாலும் கூட முறை மாறுபடுகிறது. இந்த அடிப்படைக் கொள்கையில் செய்யப்பட வேண்டிய மாறுதல் எளிதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று என்று நான் கருதவில்லை. டாக்டர் நடராசன் அவர்கள் குறிப்பிட்டதுபோல இதனால் அடிப்படை அமைப்பே மாறுகிறது. இதை ஏற்றால் உடனடியாகத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாமல் காலத்தாழ்வு ஏற்படும். கடுமையான நடவடிக்கைகள்

மூலம் கடுமையான ஒத்துழைப்பின் மூலம் தான் இதை நிறைவேற்ற முடியும் என்று சொன்னார்கள். கடுமையான ஒன்று எளிதில் வராது என்று நினைக்கிறேன். மக்களுடைய தேவையை அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் திட்டம் தீட்டப்பட வேண்டும் என்பதைப் பலரும் உணர்கிறார்கள். நாம் போடுகிற திட்டத்தின் பலன் பொதுமக்களிடத்தில் போய்ச் சேருகின்ற அளவு இருக்கவேண்டும் என்பது பலராலும் கூட இந்த மன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிய பின்னரும் கூட அவற்றின் பலாபலன்கள் இன்னமும் மக்களை வளப்படுத்துவதற்கு, வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படவில்லை என்பது உணரப்பட்டு வருகிறது. இப்போது தானே திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், இன்னும் பத்தாண்டு கழித்து, இருபதாண்டு கழித்து பெரும்பாலான மக்களுடைய தேவையை இந்தத் திட்டங்களே ஈடுசெய்கின்றனவாக இருக்கும் என்று சொல்லி விடலாம். இன்றைக்குள்ள நிலைமை என்ன, நம்முடைய மூன்று திட்டங்களினால் மக்கள் எதிர்பார்த்த பலன் கிட்டியிருக்கிறதா? அவர்களுடைய இன்றியமையாத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கீழ் மட்டத்தில் உள்ள பெரும்பாலோர்களை அணுக முடிந்திருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை. சாதாரண மக்கள் இன்றைய தினம் எதிர்பார்ப்பது—பெரிய ஆடம்பர வள வாழ்வு இல்லை. அவர்களுக்குத் தேவை வயிற்றுக்குச் சோறு—மூன்று வேளைச் சோறு, அதுவும் முழு அளவுச் சோறு. இன்றைக்கு மக்கள் விரும்புவது வயிற்றுக்கு முழு அளவு உணவு வேண்டும், உடுக்க உடை வேண்டும், இருக்க நிழல் வேண்டும் என்பது தான். இந்த அடிப்படை தேவைகளையாவது பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நம்முடைய திட்டம் அமையுமா என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அண்மையில் நாட்டின் நிலைமையை நன்கு ஆராய்ந்து பார்த்து டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் வெளியிட்டிருக்கிற அறிக்கையிலே ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக இன்றைக்கு அடி மட்டத்தில் இருக்கக்கூடிய சாதாரண கிராம ஜனங்களின் சராசரி வருமானம் ஒரு நாளைக்கு 68 காசு தான் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகையால் நாம் போட்டிருக்கிற திட்டங்களின் பலன் இன்னமும் பெரும்பாலான மக்களுக்குக் கிட்டவில்லை என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் எடுத்துச் சொல்வார், 'நாம் போட்டிருக்கக்கூடிய திட்டத்தின் பலனை உடனடியாக இப்போதே காணமுடியாது. பத்து ஆண்டு, பதினைந்து ஆண்டு கழித்தே காணமுடியும்' என்று சொல்லக்கூடும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிற கட்டத்தில் நாம் இருக்கிறபோது சராசரி ஒரு தனி நபர் வருமானம் 68 காசு தான் என்று எடுத்துக் காட்டப்படுகிறபோது நான்காவது திட்டத்தை நாம் எந்தவகையில் அமைக்க வேண்டும் என்பதை உணரவேண்டும். சராசரி ஒரு தனி நபர் வருமானம் 68 காசு என்கிறபோது அடி மட்டத்தில் இருக்கிற ஒரு கோடி





மக்களின் வருமானம் 27 காசுதான். அதற்கு அடுத்த மட்டத்தில் இருக்கக்கூடிய ஐந்து கோடி மக்களின் வருமானம் 32 காசுதான். அதற்கு அடுத்த மட்டத்தில் இருக்கக்கூடிய 5 கோடி மக்களின் சராசரி வருமானம் 42 காசுதான் என்பதை எல்லாம் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது எல்லாம் 'நாம் போடுகிற திட்டங்கள் நம்முடைய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியவையாக இருக்கவேண்டும். பெரும்பாலான சாதாரண கோடானுகோடி மக்களும் பயன்பெறத் தக்கனவாக அமையவேண்டும், என்பதுதான் பல பொருளாதார நிபுணர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பண்டித நேரு அவர்களே இந்தக் கருத்தை எடுத்துச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். நாம் போட்டிருக்கிற திட்டங்கள் மூலம் யார் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகப் பயன்பட்டிருக்கிறதே தவிர ஏழைகள் இன்னும் சில இடங்களில் ஏழைகளாகவே ஆகின்ற அளவு மேலும் மோசமாகக் கூடிய சூழ்நிலையைத் தான் தோற்றுவித்திருக்கிறது, என்பதைப் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் கூட அதைப்பற்றி டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் எடுத்துச் சொல்கிறபோது—

'A low level of *per capita* income and a high degree of dependence on agriculture continues to be the dominating feature of the rural economy of India'.

'இந்தியாவில் வேளாண்மைத்துறை மூலம் வருகிற பலாபலன்களைப் பொறுத்தே கிராம மக்களுடைய வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது. அவர்கள் நிலைமை இன்றைக்கும் தாழ்ந்த நிலையில் தான் இருக்கிறது' என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதுவும் அல்லாமல்—

'The ownership of tangible wealth in rural India is heavily concentrated in the hands of a few'.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால் கிராமப்பகுதிகளில் கூட செல்வம் ஒரு சிலரிடத்தில் குவிகின்ற நிலைமை இருக்கிறதே தவிர பரவலாக இருக்கின்ற சூழ்நிலை ஏற்படவில்லை என்ற கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் வற்புறுத்த விரும்புவது எல்லாம் நாம் போடுகிற 'திட்டங்களின் பலன் ஒரு சில இடத்தில் குவியாமல் நாட்டு மக்களிடையே பரவலாகப் போய்ச் சேருகின்ற வகையில் அமைக்கப்படவேண்டும் என்பதுதான். இதையே திரும்பத் திரும்ப வற்புறுத்திக்கூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக தனி நபர் வருமானம் உயர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட வருகிறபோது இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தனி நபர் வருமானம் 1965—66-இல் சராசரி ரூ. 391 ஆகக் கூடும் என்று புள்ளி விவரம் தரப்

படுகிறது. இப்போது போட்டிருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் தனி நபர் வருமானம் எந்த அளவுக்குப் போய் இருக்கும் என்ற கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

(திரு. என். நந்தகண்டராவ் தலைமை)

இப்போதுள்ள தனி நபர் வருமானத்தை எந்த அளவு உயர்த்திக் கொள்ள முடியும் என்பதற்கான விளக்கம் இதில் இருந்து பெற முடியவில்லை. ஆனாலும் அப்படிப் போடுகிற திட்டங்களின் பலன் சமுதாயத்தின் எல்லா மக்களுக்கும் போய்ச் சேருகின்ற அளவில் இருக்க வேண்டும். இப்போது அகில இந்திய அளவில் திட்டம் போட்டு, அதற்கடுத்த கட்டமாக மாநில அளவில் திட்டங்களைப் பரிசீலனை செய்து அமைக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த முறைகள் இருக்க வேண்டுமென்றாலும் கூட இன்னும் சில முறைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதலில் ஆங்காங்கு இருக்கிற மாவட்டத்தின் நிலைமையைக் கண்டு அறிந்து, அவற்றின் தேவைகளைக் கண்டு அறிந்து, டிஸ்ட்ரிக்ட் ப்ளான் என்ற அடிப்படையில் மாவட்ட அளவிலேயே திட்டங்கள் தீட்டப்படுகின்ற முறை ஏற்படுத்தப்பட்டு, அவை மாநில அளவில் பரிசீலனை செய்யப்பட்டு தொகுக்கப்பட்டு, அதற்கடுத்த கட்டமாக அகில இந்திய அமைப்புத்தான் என்று இல்லாமல் மண்டல அமைப்பு என்ற நிலைமையில் இருந்து, கடைசிக் கட்டமாக அகில இந்திய அளவில் திட்டம் தீட்டப்பட்டால் தான் அவை நேரிடையாக மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அமையும். இப்போது இரண்டே அமைப்புகள் தான் இருக்கின்றன. ஒன்று அகில இந்திய அமைப்பு, இரண்டாவது மாநில அமைப்பு. இந்த இரண்டு அமைப்புகள் மூலமாகத் திட்டம் தீட்டப்படுகிறது. அரசாங்கம் முயற்சி எடுத்தால் இதை மாவட்ட அளவிலேயே தயாரித்து பிறகு மாநில அளவிலும், பின்னால் மண்டல அளவிலும், கடைசியாக அகில இந்திய அளவிலும் உருவாக்க முடியும். இந்த அளவில் எடுக்கப்படுகிற முயற்சிகள் தான், இந்த அளவில் அமைக்கப்படுகிற திட்டங்கள் தான் மாவட்ட அளவிலேயே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு திட்டமாக அமையக்கூடும்.

10-00 a.m. நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் நாம் அதிகமாக வேளாண்மைத் துறையையே நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. இதைத் தொழில் மயமாக ஆக்க முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தாலும், வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால் இங்குள்ள நீர் ஆதாரங்கள் அதிக அளவு பயன்படுத்தப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இருந்தும், லட்சிய அளவை நம்மால் உற்பத்தி செய்ய முடியவில்லை. தீட்டப் படுகிற திட்டத்தின் மூலம் புதிய அளவு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியுமா என்றால் அதற்குப் போதுமான வாய்ப்பு இருப்பதாகவும் தெரியவில்லை. மிக்க முயன்று முயற்சி செய்தால் 1966-1970-ல் 11 லட்சம் ஏக்கரா தான் புதியதாகச் சாகுபடிக்குக்





கொண்டுவரலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதிகப்படியாகப் புதிய நிலங்களை நீர்ப்பாசனத்திற்குக் கொண்டுவந்து வேளாண்மையைப் பெருக்குவதற்கு வழி இல்லை என்று தெரிகிறது. தமிழக நீர்ப்பாசன நிலையைப் பொறுத்த வரையிலும், ஆற்று நீர்ப் பாசனத்தின் மூலமாக வேளாண்மையைப் பெருக்குவதற்கு வழி இல்லை. ஆற்று நீர்ப் பாசனம் அத்தனையும் நாம் பெற வேண்டிய அளவிற்குப் பெற முயற்சி எடுத்துவிட்டோம். சிறிய நீர்ப் பாசனங்கள் மூலமாகத்தான் இனி நீர்ப்பாசனம் பரவாத இடங்களில் கொண்டுபோய்ப் பரப்ப முடியும் என்ற கருத்து இருக்கிறது.

அடுத்தபடியாக, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், நீர்ப்பாசனத்திற்கு ஆற்று நீரைப் பெற முடியாத நிலையில் ஆற்றின் கீழே உள்ள ஊற்று நீரின் மூலமாகப் பெற முடியும். தென் மாநிலத்தைப் பொறுத்த வரையில், கீழே பாறை நிலமாக அமைந்திருக்கிற காரணத்தால் கீழ் நீரோட்டங்கள் பல இருக்கின்றன என்று நில நூல் வல்லுநர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். கீழ் நீரோட்டங்களைக் கண்டுபிடித்து, ஊற்று நீரை வெளியே கொண்டு வந்து பயன்படுத்துகிற நிலையில், அதிலிருந்து வருகிற அளவு எவ்வளவு என்பது வந்த பிறகுதான் தெரியும். அதிலிருந்து வருகிற அளவைப் பொறுத்துத்தான் நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கு வழிவகை ஏற்படுத்த முடியும் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது.

இந்த ஐந்தாண்டுத் திட்ட நகல் குறிப்பிலே குறிப்பிடுகிறபோது, தென் மண்டலத்தைப் பொறுத்த வரையிலும், தென் மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு வழிவகை இல்லையே தவிர, தென் மண்டலத்தை ஒன்றாக வைத்துப் பார்க்கும்போது, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அந்த வழிவகைகளை நாம் பெறவேண்டுமானால், அண்டை மாநிலங்களோடு செய்துகொள்ளுகிற ஒப்பந்தத்தைப் பொறுத்துத்தான் அது அமைய முடியும் என்ற கருத்தும் இந்த நகல் குறிப்பிலே கூறப்படுகிறது. அந்த அளவிலே பார்க்கும் போது மண்டலத்தைப் பொறுத்த வரையில் சிலபல தன்மைகளில் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கக் கூறுபாடு இருக்கும் காரணத்தினால், மத்திய திட்ட அமைப்புக்கும் மாநிலத் திட்ட அமைப்புக்கும் இடையில் மண்டலத் திட்ட அமைப்பு ஒன்று இருக்குமானால் அதிக பலனை ஏற்படுத்த வழி ஏற்படும் என்ற கருத்தைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். இப்பொழுது மண்டலக் குழு என்ற வகையில், தென் மண்டலக் குழு, வட மண்டலக் குழு, மேற்கு மண்டலக் குழு, கிழக்கு மண்டலக் குழு, மத்திய மண்டலக் குழு என்று ஐந்து மண்டலக் குழுக்கள் இருக்கின்றன. இவைகள் சாதாரணமாக ஆலோசனை சொல்லி, அவரவர்கள் கருத்துக்களைப் பரிமாறி ஆலோசனை சொல்கிற அளவோடு மூன்று மாதங்களுக்கு

ஒரு முறை, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை, ஒரு நாள் அல்லது இரண்டு நாள் கூடிக் கலையும் ஆலோசனைக் குழுக்களாக இருக்கின்றன. அதைவிடக் கொஞ்சம் அதிகப்படியாகத் திட்டத்திலே அக்கறை செலுத்தி நிறைவேற்றுகிற சூழ்நிலையை மண்டலக் குழுக்கள் பெறுமானால் அதிக வசதிகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட முடியும். மாநிலங்கள் மொழியின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. மொழியின் அடிப்படையில் வளருகிற நாகரிகம், பண்பாடு அடிப்படையிலும், அதன் மூலம் தேசிய உணர்ச்சி அடிப்படையிலும் மாநிலங்கள் அமைந்து தீரவேண்டியனவாக அமைந்துவிட்டன. அந்த அடிப்படையிலே தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம், வங்காளம், குஜராத் போன்ற பல்வேறு மாநிலங்கள் உருவாகியிருக்கின்றன. எனவே, மொழி அடிப்படை காரணமாக, மொழி மூலமாக நாகரிகமும், பண்பாடும், அதன் மூலம் ஏற்படும் தேசிய உணர்ச்சி வரலாறும், பாரம்பரைத் தன்மையும், உள்ள உணர்ச்சியும் சேர்ந்து மாநிலங்கள் சிலபல நடவடிக்கைகளை ஏற்று நடத்த வேண்டும், எங்களுடைய மாநிலத்தை நாங்கள் ஆளவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. அதற்கு மதிப்பு அளித்து மாநிலங்கள் அமைகின்றன. ஆனால், பொருளாதார வளர்ச்சி, மற்ற நிலைகளைப் பொறுத்த வரையிலும், கல்வி, வேறுபல நிலைமைகள், சுகாதார வசதிகள், அன்றாட நடவடிக்கைகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகம் மற்ற நிலைமைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை வளர்ச்சிக்குப் பயன்பட்டாலும் வீணாகும் பொருளாதாரத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், பயன்படாமலிருக்கும் இயற்கைச் செல்வங்கள், வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் மண்டலங்கள் உருவாகுமானால் அந்த மண்டலங்களினுடைய அடிப்படையில் நல்ல பலன்கள் ஏற்படுவதற்கு வழிவகை ஏற்பட முடியும். அந்த முறையிலே பொருளாதாரத்தைப் பொறுத்த வரையிலும், மின்சாரத்தைப் பொறுத்த வரையிலும் இணைப்பின் மூலமாக நான்கு தென் மாநிலங்களும் ஒரு மண்டலமாக அமைந்து ஒன்றோடொன்று இணைத்துக் கொள்வதன் மூலமாக, அதிகப்படியாக இருக்கும் இடத்திலிருந்து தேவையான இடங்களுக்கு மின்சார வசதி பெற்றுக்கொள்ளலாம். இந்த மன்றத்தில் அன்று தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியது போல், குறுகிய இடமாக இருக்கிற ஒரு எல்லைப் புறத்தில் மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு அந்த அளவு மின்சாரத்தை வேறொரு எல்லைப் புறத்தில் வாங்கிக் கொள்வதன் மூலம் சேதாரத்தைத் தவிர்க்க முடியும், அதற்கு இணைப்பு பயன்படும். அந்த இணைப்பின் அடிப்படையில் ஆற்று நீரைப் பொறுத்த வரையில், மேற்குத் தொடர்ச்சி மலையில் ஓடுகிற பல ஆறுகளின் தண்ணீர் இந்த நாட்டுக்குப் பயன்பட முடியும். அது கேரளத்திற்கோ மைசூர் மாநிலத்திற்கோ பயன்படாது. அந்தப் பயன்படாத நிலையில், மண்டல அளவில் நல்லதொரு திட்டம் தீட்டப்படாததால், இருந்து வருகிறது. விரும்பும் ஆசையும் இருந்தாலும், அதை நிறைவேற்ற முடியாமல் அண்டை மாநிலங்களில் உள்ள மலைகளில் பெய்கிற மழை நீர்





யாருக்கும் பயன்படாமல் வீணாகப் போகிறது. அந்த நிலைமையிலிருந்து மாற்றி, அந்த நீரைப் பயன்படுத்துவதற்கு இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் வழிவகை இருக்கிறது. அந்தந்த மாநிலத்திலுள்ள நீரைப் பொறுத்து, மின்சாரத்தைப் பொறுத்து வசதிகள் வாய்ப்புகளைப் பொறுத்து முழு உரிமை அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்ததாக இருந்தாலும் அங்கிருந்து எவ்வளவு தண்ணீர் வரவேண்டும், இந்த மாநிலம் அந்த மாநிலத்திற்கு எவ்வளவு பொருளைத் தரவேண்டும், இங்கிருந்து மின்சாரத்தைத் தரவேண்டிய அளவிற்கும், அந்த மாநிலத்திலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டிய அளவிற்கும், ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு மண்டலத் திட்டக் குழு அமைந்தால் மிகப் பயன்படும். பொருளாதார அடிப்படையில் நான்கு மாநிலங்களும் ஒன்றுபடுவதோடு, வர்த்தக அடிப்படையிலும் பண்டங்களைப் பரிமாறிக்கொண்டு, உற்பத்தியாகும் பண்டங்கள் போய்ச் சேரும் அளவிற்கும் ஒத்துழைக்க முடியும். நான்கு மாநிலங்களும் திட்டமிட்டு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டால் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாக அமைய முடியும். எனவே, அந்த மண்டலத் திட்டக் குழு ஒன்று அமைப்பதன் மூலமாக, அந்த அமைப்பின் காரணமாக, இந்தியத் திட்டக் குழு அல்லது மாநிலத் திட்டக் குழுவிற்கு முரண்பாடாக அமையும் என்று நாம் எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. முரண்பாடு இல்லாமல், வேறுபாடு இல்லாமல், ஒன்றுக்கொன்று ஆதரவு தரும் வகையில், மேலும் வற்புறுத்துகிற, வலியுறுத்துகிற வகையிலே மண்டலக் குழுக்கள் அமையலாம். அந்த அளவு கவனம் செலுத்த வேண்டும். கவனம் செலுத்தினால் நன்றாக அமையும்.

ஆற்று நீர்ப் பங்கீடு, வேறு பல பிரச்சினைகளை யோசிக்கும் போது, அதிகாரிகள், இன்ஜினீர்கள் உட்கார்ந்து பேசினார்கள்; ஒரு முடிவுக்கும் வரவில்லை என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட விஷயங்களிலே அதிகாரிகள் மட்டுமே பேசி ஒரு முடிவிற்கு வந்துவிடுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. அந்தந்த மாநிலத்தினுடைய இன்ஜினீர்கள் அந்த மாநிலத்தின் அமைச்சர்களும் அதிகாரிகளும் கூறுகிற கருத்தின் அடிப்படையிலேதான், பேச்சைத் துவக்கிப் பேச்சை முடிக்க முடியும் என்ற உணர்வின் அடிப்படையிலே தான் செயல்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் அதிகாரிகள் என்ற காரணத்தினால். கேரள அதிகாரிகளும் தமிழக அதிகாரிகளும் அல்லது ஆந்திர அதிகாரிகளும், தமிழக அதிகாரிகளும் அல்லது மைசூர் மாநில அதிகாரிகளும் தமிழக அதிகாரிகளும் உட்கார்ந்து பேசுகிறார்கள் என்றால், அவர்கள் ஒருமித்த முடிவிற்கு வந்துவிடுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது தவறு. எப்படி எப்படிப் பேசவேண்டும் என்று அந்தந்த மாநில அரசாங்கங்கள் சொல்லியனுப்பி அந்த அடிப்படையில்தான் அதிகாரிகள் பேசவேண்டியிருப்பதால், ஆரம்பத்தில் எந்தக் கட்டத்தில் ஆரம்பித்தார்களோ அதே கட்டத்தில் தான் முடிக்கும் அளவிற்கு வந்து சேர்வார்கள். ஆகவே, அதிகாரிகள் மட்டுமல்லாமல் அமைச்சர்கள் கூடி, மத்திய அமைச்சர் வேண்டுமானால் அவரும் உடன் இருந்து. தீர்த்துக்

கொள்ளும் வகையில், இயற்கைச் செல்வங்களை விரைக்காமல் ஒன்றுக்கொன்று பயன்படுத்திக்கொள்வதன் மூலமாக நாம் நிறைவேற்றும் திட்டங்கள் மேலும் வலுவடைவதற்குப் பயன்படமுடியும்.

மேலும், இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், திட்டங்களை அதிகமாக ஆக்க அத்தகைய முயற்சியில் போடப்பட்டிருக்கும் திட்டங்களில் 850 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் தருவதையும் சேர்ந்து மாநில அரசாங்கம் செலவிடும் தொகையையும் சேர்ந்து 850 கோடி ரூபாய் அளவிற்கு ஆகக்கூடும் என்று தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகிறது. இதிலே மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற அத்தகைய பங்கு எப்படியிருக்கும் என்பதைப் பற்றியும் தெளிவு நமக்கு அதிகமாக இல்லை. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நமக்குக் கிடைக்கும் அத்தகைய வகை போக, மத்திய சர்க்கார் தரும் உதவி நிதி போக, இந்த மாநிலம் எந்த எந்த வகையில் ஈடுகட்டப் போகிறது என்ற தெளிவு இந்த நகல் குறிப்பில் இல்லை. ஒருக்கால் இனிமேல் தீட்டப்படுகிற நகல் குறிப்பில் அத்தகைய வழிவகை தெளிவுபட எடுத்துச் சொல்லப்படுமோ என்னவோ. போடப்பட்டிருக்கிற நிதியை, போடப்படும் அத்தகைய மூலதனத்தை மத்திய சர்க்கார் கொடுப்பது போக இந்த மாநிலமே பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் அத்தகைய நிதியை இந்த அரசு எந்த எந்த வழியிலே பெறப்போகிறது என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வழிகள் தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை. அதைப்பற்றி எடுத்துச் சொல்லும்போது, கனம் உறுப்பினர் டாக்டர் நடராஜன் அவர்கள் கூட எடுத்துத் தெரிவித்தார்கள். இப்பொழுது இருக்கும் நிலைமையில் ரூபாய்க்கு நான்கணா அளவிற்கு வரி போடவேண்டிய கட்டம் வரும். அந்த அளவிற்கு வரி போட்டு எடுக்கப்போகிறார்களா? அல்லது, அதிகமாகத் தொகையை மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெறுவதன் மூலம் இந்த மாநிலத்திற்கு அதிக வரி விழாத அளவுக்குக் காப்பாற்றப் போகிறார்களா என்பதைப்பற்றி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த வழிவகையைப்பற்றி இதிலே எடுத்துச் சொல்லப்படவில்லை. அது மாத்திரமல்ல. மாநிலத்தினுடைய நிலையைப் பொறுத்துப் பார்க்கும்போது கூட, ஜனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்தில் சதுர மைலுக்கு 600 சில்லரை மக்கள் இருக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையில் இரண்டு மடங்கு இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. திட்டங்களை நிறைவேற்றும் அத்தகைய நிலைமையில் மக்கள் தொகை அடிப்படையைக் கருதி மத்திய அரசு தருகிற நிதியினுடைய அளவை அதிகப்படுத்துவதற்கான வகையில் முயற்சி செய்வது மிக மிக நல்லது என்ற அந்தக் கருத்தை இந்த மன்றத்தின் மூலம் எடுத்துத் தெரிவிக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.



தென் மண்டலத்தைப் பொறுத்த வரையில், மக்கள் எண்ணிக்கை அடிப்படையை வைத்துப் பார்த்தால், 25 சத விகிதத்தினர் அகில இந்திய அளவில் ஏறத்தாழ நாலில் ஒரு பங்கினர் தென் மண்டலத்திலுள்ள நான்கு மாநிலங்களிலும் சேர்ந்து இருக்கிறார்கள். தமிழகத்தில் 600 சில்லரையும், கேரளத்தில் 1,100 சில்லரையும், மற்ற இரு மாநிலங்களில் 300 சில்லரை, 300 சில்லரை மக்கள் ஒரு சதுர மைலில் இருக்கிறார்கள். தென் மண்டலத்தில் உள்ள நான்கு மாநிலங்களிலும் உள்ள மக்கட் தொகையைச் சேர்த்துப் பார்த்தால் 25 சத விகித மக்கள் இங்கே இருக்கிறார்கள். 25 சத விகித மக்கள் வாழும் இந்த பகுதியில், எந்த நன்மையும் மனிதனுக்குப் போய்ச்சேரவேண்டும் என்ற அடிப்படையில்தான் சொல்கிறோம். இடத்திற்குப் பெருமை தேடித் தாவோ புகழ் தேடித் தாவோ இதைக் குறிப்பிடவில்லை. திட்டத்தின் பலன் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற அந்த அளவில் பார்க்கும்போது நாலில் ஒரு பங்கு மக்கள் தென் மண்டலத்தில் வாழ்கிறார்கள். சென்ற திட்டங்களிலே நாம் கணக்கிடுகிறபோது கூட, சாதாரணமாக இந்தியப் பேரரசு தானே இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுவரையில் செலவழித்த தொகை ரூ. 14,678.31 கோடி. அதிலே தென் மண்டல அளவில் பார்க்கும்போது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் தென் மண்டலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிய வகையில் 1,827.6 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை நாம் பார்ப்போமானால், 12½ சத விதம் தான் வருகிறது. ஆனால், மக்கட்தொகை அடிப்படையில் 25 சத வித மக்கள் இங்கே இருக்கிறார்கள். எதற்காக இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், அதிகமான அளவு மக்கள் தொகை அடிப்படையில் பார்க்கும்போது ஏற்கனவே நடைபெற்ற திட்டங்களில் இந்தத் தென் மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தின் மூலம் 12½ சத விதம் தான் பெற்றிருக்கின்றன. 25 சதவித மக்கள் வாழும் தென் மண்டலப் பகுதியில் 12½ சத விதம்தான் மத்திய சர்க்காரிடமிருந்து தொகை பெற்றிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, தமிழகம் அதிகம் பெற வாய்ப்பு இருக்கிறது; நியாயம் இருக்கிறது. எனவே, ஒரு பகுதி ஏற்றம் பெறவும் மற்ற பகுதி தாழ்ந்து நிற்கும் நிலைமையும் இருக்கக்கூடாது என்று மத்திய அரசினருக்கு வற்புறுத்திக் கூறி, உரிய தொகையைப் பெற முயலுதல் வேண்டும். டாக்டர் பி. கே. நாராயணன் அவர்கள் தம்முடைய கட்டுரையில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"The Fourth Plan should take note of the fact that a number of Central Projects should he located in the South. A clear-cut resolve to impart equity, stability and continuity to the industrial-location policy is called for."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்படுகின்றபொழுது, இந்தக் கருத்தை இந்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வகையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அதிகமான அளவுக்குக் கேட்டுப் பெறுவதற்கான வழிவகைகளை நாம் செய்தல் வேண்டும்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th August 1965

நாம் கேட்டுப் பெறுகின்ற அளவுக்குத்தான் நம் மாநிலத் திட்டங்களிலே அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். சராசரி தனி நபர் வருமானத்தினுடைய அளவையும், மற்ற அளவுகளையும் நாம் பார்க்கும்பொழுது கூட, இந்த மாநிலத்தின் அளவு மிகவும் குறைந்த அளவாக இருப்பதை நாம் காணமுடிகிறது. அந்த அடிப்படையிலே பார்க்கின்றபொழுது, தனி நபர் சராசரி வருமானம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால், இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஏற்பட்டிருக்கக்கூடிய பலாபலன்களைப் பார்க்கும்பொழுது, சதவிகித அடிப்படையில் பார்க்கின்றபொழுது, அதில் இந்திய உயர்வு 40.39 சதவிகிதம்தான். மண்டலம் மண்டலமாக கணக்கெடுத்துப் பார்க்கின்ற பொழுது, மண்டலங்களின் இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் காண முடிகின்றது. வடக்கு மண்டலத்தைப் பொறுத்தவரையில் 65.59 சதவிகிதமாக இருக்கிறது. கிழக்கு மண்டலத்தைப் பொறுத்தவரையில் 59.95 சதவிகிதமாக இருக்கிறது. மேற்கு மண்டலத்தைப் பொறுத்தவரையிலே 42.51 சதவிகிதமாக அமைந்திருக்கிறது. மத்திய மண்டலத்தைப் பொறுத்தவரையில் 28.73 சதவிகிதம் இருக்கிறது. தென் மண்டலத்தைப் பொறுத்தவரையில் 27.02 சதவிகிதம்தான் இருக்கின்றது. ஆகவே, இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களையும் மொத்தமாகச் சேர்த்துக்கொண்டு பார்த்தாலுங்கூட தென் மண்டலம் பின்தங்கிய மண்டலமாகத்தான். பின்தங்கிய பகுதியாகத்தான் இருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே, அதிகமான அளவுக்குத் தொகையைக் கேட்டுப் பெறக்கூடிய அவசியத்தில் நாம் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, அந்த வகையிலே இந்த மாநிலத்திற்கு அதிகமான சுமையை உண்டாக்காமல், அதிகமான அளவுக்குக் கேட்டுப்பெறுவதற்கான முயற்சிகளைச் செய்து, திட்டம் தீட்டுகின்றபொழுது இதையும் வற்புறுத்தவேண்டுமென்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகளைப் பொறுத்தவரையில், திட்டங்கள் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன என்று சொல்லப்படுகின்றபொழுது—பொருளாதாரத்திலே உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்குப் பெருகி வருகிறது என்றால் அந்த அளவுக்கு விலைவாசிகளும் இறங்க வேண்டுமென்பது சாதாரண தத்துவம் ஆகும்—உற்பத்திகள் பெருகினாலுங்கூட விலைவாசிகள் இறங்கவில்லை. விலைவாசிகள் இறங்காத அளவில் கஷ்டமான நிலைமைதான் உயர்ந்துகொண்டே வருகின்றது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் விலைவாசிகளைக் குறைப்பதற்காக, அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை நாம் பார்க்கும்பொழுது அதிலே வெற்றிபெறவில்லை என்ற கருத்தைத்தான் நாம் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். உற்பத்தி பெருகியிருக்கின்றது, ஆனால் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன, கஷ்டங்கள் குறையவில்லை, இடையூறுகள் போக்கப்படவில்லை என்ற நிலைமைதான் இருந்துகொண்டு இருக்கிறது.



10th August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

விலைவாசிகள் குறையவில்லையென்றால், ஒருவன் மிச்சப்படுத்துவதற்கோ தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு, உல்லாச வாழ்க்கையை நடத்துவதற்கோ, தன்னுடைய செலவுகள் எல்லாம் போக மிச்சப்படுத்தக்கூடிய அளவுக்கு அவன் வாழ்க்கை நடத்திக் கொண்டு போவதற்கோ வழியேற்படாது. எவ்வளவு தான் வருமான உயர்வு வந்தாலும், அந்த உயர்வை ஈர்த்துக் கொள்ளுகின்ற அளவுக்கு விலைவாசிகள் இருக்குமானால், செலவுகள் ஏறிக்கொண்டே போகுமானால், வருமானம் வருகின்ற அளவுக்குச் செலவும் ஏறிக்கொண்டே போகுமானால், கஷ்டங்கள் போகாது, இடையூறுகள் போகாது. ஆகவே, இந்த விலைவாசிகளைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்வதிலே எந்த அளவுக்குச் சர்க்கார் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொண்டு, அதற்கேற்ற வகையில் இன்னும் அதிகமான அளவில் விலைவாசிகளைக் குறைப்பதற்கான வழிவகைகளைக் காணல் வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முக்கிய கவனம் செலுத்தப்படுவது வேளாண்மைக்குத்தான். இந்தத் திட்டத்திலே முக்கிய கவனம் வேளாண்மை, மின்சாரம், தொழில், வீட்டு வசதி போன்றவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல், வேளாண்மை இந்த மாநிலத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்மைத் துறை வளர்ச்சியை நோக்கும்பொழுது அகில இந்திய ரீதியில் பார்த்தால் ஒருவருக்கு 0.98 ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று தெரிகிறது. ஆனால் தமிழகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒருவருக்கு 0.61 ஏக்கருக்குக் குறைவாகத்தான் கிடைக்குமென்று தெரிகிறது. அது மட்டுமல்லாமல் உணவு உற்பத்தியைப் பார்க்கின்ற பொழுது 70 லட்சம் டன் எதிர் பார்த்ததாகச் சொல்லப்பட்டது. உண்மையில் 65 லட்சம் டன் தான் உணவுப் பொருள்கள் கிடைக்கிறதென்று சொல்லப் படுகிறது. ஆகவே, எதிர்பார்த்த அளவை விடக்குறைந்த அளவுதான் கிடைத்திருக்கின்றது. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய நோக்கத்தையும், தேவையையும் நிறைவேற்றக்கூடிய அளவுக்கு, திருப்திப்படக் கூடிய அளவுக்கு இருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையில் 82 லட்சம் டன் உற்பத்தியை உண்டாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம் என்ற கணக்கும் தரப்பட்டிருக்கிறது. வேளாண்மைக்கு அதிகமான அளவுக்குத் தொகையும், ஒதுக்கப்பட்டுச் சலுகையும் தரப்பட்டு இருக்கிறது. வேளாண்மைத் துறையின் வளர்ச்சியைப் பொறுத்துத்தான் மற்றத் தொழில்களின் வளர்ச்சி அமைந்திருக்கிறது என்ற காரணத்தால் அதிகமான தொகை ஒதுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த வகையில் பார்க்கும்பொழுது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வேளாண்மைக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்டது 13.2 சதவீதம் என்றால், இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, அதிகமான அளவுக்கு

முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லப்படுகிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வேளாண்மைக்காக ஒதுக்கியிருப்பது 10.8 சதவிகிதம் தான். சதவிகித அடிப்படையில் பார்க்கும்பொழுது குறைவான அளவுதான் வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய நீர்ப்பாசன வசதிகளின் மூலம், போதிய நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவருவதன் மூலம், தீவிரச் சாகுபடி முறைகளைக் கையாள்வதன் மூலமாக உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற குறிப்பும் தரப்பட்டிருக்கின்றது. இதைத் தவிர இருக்கின்ற நிலங்களிலே விளைவை அதிகப்படுத்துவதற்கும்; அதாவது 3,000 பவுண்டிலிருந்து 7,000, 8,000 பவுண்டு அளவில் உயர்த்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டால் தான் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகளைச் சமாளிப்பதற்கு முடியும் என்ற கருத்தையும் மத்திய உணவு அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் எங்கெங்கே நிலங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ அங்கங்கே நிலங்களைப் பயன்படுத்திக் கொண்டும், 3,000 பவுண்டிலிருந்து, 7,000, 8,000 பவுண்டுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன உரம் ஊட்டுதல், தீவிரச் சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அல்லது நவீன இயந்திர முறைகளைக் கையாளுதல் இவைகளை மேற்கொள்ள வசதி செய்து தரல் வேண்டும். எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு ஏக்கரில் சராசரி மகசூல் அரிசியை எடுத்துக்கொண்டு பார்த்தால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் 1,016 பவுண்டுகளாக இருந்தது. அது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலே 1,213 பவுண்டுகளாக உயர்ந்தது. ஐந்து ஆண்டுகளில் 197 பவுண்டுகள் ஏக்கருக்கு உற்பத்தி உயர்ந்திருப்பதாகக் கணக்குச் சொல்லப்படுகிறது. அதேபோல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இடையில்—அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 1,261 பவுண்டுகளாக இருந்திருக்கிறது—மொத்தம் 48 பவுண்டுகள்தான் அதிகமாகியிருக்கிறது. முதல் திட்டத்தின் இறுதியில் 171 பவுண்டுகள் உயர்ந்தது, இரண்டாவது திட்டத்தின் இறுதியில் 48 பவுண்டுகள்தான் உயர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் எவ்வளவு பவுண்டுகள் உயர்ந்திருக்கின்றன என்பதற்கான புள்ளி விவரங்கள் இங்கே இல்லை. ஆகவே, முதல் திட்டத்தில் இருந்ததைக் காட்டிலும் உற்பத்தியின் உயர்வு இரண்டாவது திட்டத்தில் குறைந்திருக்கிறது. அதேபோல் சோளத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 536 பவுண்டாக இருந்தது இரண்டாவது திட்டத்தின் துவக்கத்திலே 574 பவுண்டாக உயர்ந்திருக்கிறது, அதாவது 38 பவுண்டுகள் உயர்ந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்திலே 574 பவுண்டாக இருந்தது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலே 154 பவுண்டுகள் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது. ஆகவே, அரிசியை எடுத்துக்



N65-31-6



கொண்டு பார்த்தால் முதலில் உற்பத்தியின் அளவு ஏறி, பின்பு குறைந்திருக்கிறது. ஆனால் சோளம் முதலில் குறைந்து பின்பு ஏறியிருக்கிறது. அதேபோல் கம்பை எடுத்துக்கொண்டு பார்த்தால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 பவுண்டுகளாக இருந்தது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 28 பவுண்டுகள் குறைந்திருக்கிறது. ராகியை எடுத்துக் கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 757 பவுண்டு; ஏறியது 112 பவுண்டு; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 20 பவுண்டுதான் ஏற்றம் காட்டப்படுகிறது. மக்காச் சோளத்தை எடுத்துக் கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 879 பவுண்டு; ஏறியது 85 பவுண்டு; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 16 பவுண்டுதான் ஏற்றம் காட்டப்பட்டிருக்கிறது. கோதுமையை எடுத்துக் கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது ஏறியது 58 பவுண்டு தான். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது உயர்ந்தது 7 பவுண்டுதான். இந்தப் புள்ளி விவரங்களை எல்லாம் வைத்துக் கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் எந்த அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கணக்கிட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் எதிர் காலத்திலே நான்காவது திட்ட காலத்திலே எந்த அளவுக்கு இது ஏறும் என்பதைக் கணக்கிட முடியாத அளவுக்கு இதிலே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

64920

மற்றும், வேளாண்மைத் துறை வருமானத்தைப் பெருக்கும் வகையில் கரும்பு, நெட்டிழைப் பருத்தி, நிலக்கடலை, பழங்கள், காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள், வாணிபப் பயிர்கள் போன்றவற்றின் மூலம் வருவாய் ஓரளவு ஈடுகட்டப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையின் அபிவிருத்தி நிலை இந்த மாநில மக்களின் எண்ணிக்கை பெருகி வரும் அளவுக்கும் சமாளிக்கத் தக்க அளவுக்கு இல்லை; நீர்ப்பாசன வசதிகள் இல்லை; இனி நீர்ப்பாசன வசதிகளைப் பெற வேண்டுமென்றால் அண்டை மாநிலங்களான ஆந்திர கேரள மாநிலங்களுடன் ஒப்பந்தம் செய்து அந்த நீரைக் கொண்டு வந்தால்தான் முடியும். கேரள மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்து அவர்கள் தருகிற தண்ணீரைக் கொண்டு வந்தால்தான் கோவை, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் பயன்பெற முடியும். இந்த மாநிலத்தில் விவசாய வளர்ச்சிக்குத் தக்க வகையில் மேலும் நீர்ப்பாசனத் திட்டங்கள் இல்லாமையினால், விரைவாகத் தொழில் வளர்ச்சியைச் செய்வதன் மூலம், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் அந்தக் குறைபாட்டைப் போக்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

மற்றும், அடிப்படைச் செயல்களாகக் கூறக் கூடிய வகையிலே மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலே கூடத் தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசிய

மாகிறது. அதற்கான முறையில் அதைப் பற்றிய அறிவைப் போதிப்பதின் மூலமும், ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாட்டுக்கான கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றியும் தொடர்ந்து பிரசாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். மேலும் பிச்சைக்காரர்களுடைய பிள்ளைகள் பிச்சை எடுக்கும் தொழிலிலேயே ஈடுபடுகின்ற நிலைமை இருப்பதால் பிச்சைக்காரர்களைப் பொறுத்தமட்டில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பலவந்தப்படுத்துவதன் மூலமாக, மேற்கொண்டு பிச்சை எடுப்பவர்களுடைய எண்ணிக்கை வளராத அளவுக்கு வழிவகைகள் ஏற்படும் என்று சொல்லப்படுகின்ற கருத்தையும் அரசு ஆராய வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றிக் கனம் சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் கூறும்போது மன வலிவு கொண்டவர்கள், மன வலிவு அற்றவர்கள் என்ற முறையிலே எடுத்துச் சொன்னார்கள். மனவலிவு அற்றவர்களுக்கும் வழி இருந்தாக வேண்டும். அந்த முறையில் ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் இடையே ஐந்தாண்டு காலமாவது இருக்க வேண்டுமென்ற அளவிலே அவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிய அறிவுப் போதனையை ஊட்டுவதன் மூலமாக, அதன் காரணமாக, அவர்கள் குழந்தை பெறுவதை நிறுத்திக் கொள்வதன் காரணமாக, அவர்கள் குடும்பத்திலே மகிழ்ச்சி பெற முடியும். பல குடும்பங்களிலே பெறுகின்ற மகிழ்ச்சி நாட்டினுடைய மகிழ்ச்சியாக முடியும். 1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 36 கோடி. 1961-ல் அந்த எண்ணிக்கை 41 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. 1971-ல் அந்த எண்ணிக்கை 53 கோடி அளவுக்கு உயரும் என்றும், 1981-ல் அது 63 கோடி அளவுக்குச் சென்றுவிடும் என்றும் அண்மையில் கணக்கிட்டிருக்கிறார்கள். 36 கோடி மக்களைக் காப்பாற்ற வேண்டிய இன்றியமையாத் தன்மையில் இருக்கின்ற நாம், இருக்கின்ற ஆற்று வசதியை வைத்துக் கொண்டு, இருக்கின்ற நிலப் பரப்பை வைத்துக் கொண்டு, இருக்கின்ற பருவக்காற்று மற்றவற்றையும் வைத்துக் கொண்டு 63 கோடி மக்களை 1981-ல் காப்பாற்றித் தீர வேண்டிய அறைகூவலாக எடுத்துக் கொள்ள வேண்டிய பிரச்சினை ஆகும். ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறப்பது தடுக்கப்படுகிறது என்றால் நாட்டினுடைய செலவில் பத்தாயிரத்திலிருந்து பதினைந்தாயிரம் வரை மிச்சப்படுகிறது. சாதாரணமாக, 60 ரூபாய், 70 ரூபாய் சம்பாதிக்கின்ற ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் இரண்டு குழந்தைகளைக் கொண்டவராக இருந்தாலும் அவருடைய குடும்பம் துன்பப்படுகிறது. இந்த மாதிரிப் பல குடும்பங்கள் துன்பப்படுகின்றபோது நாட்டிலே பற்றாக் குறை ஏற்படுகிறது. ஆகவே, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மிகத் தீவிரமாக அமல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துத் தீர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

தொழிற் துறையைப் பெருக்குவதற்கென மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையை விட அதிகமான தொகை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிற் துறை வளர்ச்சிக்காக ஈடுபடுத்தப்படுகிறது. வேளாண்மைக்



துறையைப் பெருக்குவதற்கு அதிகமான வாய்ப்புகள் இல்லாததன் காரணமாக, தொழிற் துறையை வளர்ப்பதன் மூலம் அந்தக் குறையை ஈடுகட்ட முடியும் என்ற வகையில் தொழிற் துறைக்கு அதிகமான தொகையை ஒதுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கும் 75 சதவிகிதம் மக்களைச் சிறிது சிறிதாக, மற்றப் பல தொழிற்சாலைகளை நிறுவும்போது அப்படிப்பட்ட மக்களை அந்தத் தொழிற்துறைக்கு ஈர்த்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு வழி செய்தால், அந்தத் துறையிலே மிச்சம் இருக்கிற மக்கள் முழு அளவுக்கு வேளாண்மைத் துறையினால் பலனை அனுபவிக்க முடியும். இந்த நோக்கம் வரவேற்கத்தக்கது தான். அதை நிறைவேற்றுகின்ற வகையில் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்துகிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். தொழிற் துறை வளர வேண்டுமென்றால் பரவலாக, எல்லா மாவட்டங்களிலும், இன்னின்ன கிராமங்களில், இன்னின்ன தொழிற்சாலைகளை உருவாக்கினால், இதற்கு வழி ஏற்படும் என்பதைக் கண்டறிந்து அந்த வகையில் தொழிற்சாலைகளை உருவாக்கி வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களைத் தொழிற் துறையிலே ஈடுபடுத்த வேண்டும்.

தொழிற் துறையை வளர்ச்சியடையச் செய்வதிலே, மத்திய அரசாங்கத் துறை, மாநில அரசாங்கத் துறை, தனியார் துறை என்ற அளவிலே தொழில்களை அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஜனநாயக சோஷலிசக் கொள்கையின் அடிப்படையில்தான் இந்த அரசு திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகிறது என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்க்கின்ற ஒன்று அல்ல. ஜனநாயக முறையை விரும்புகின்ற, சோஷலிசக் கொள்கையை விரும்புகின்ற, அவற்றை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திக் கொண்டு வருகின்ற கழகந்தான் முன்னேற்றக் கழகம். ஆனால் சோஷலிசத் திட்டங்கள் எந்த அளவுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம் பெற்றிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். நிதிநிலை அறிக்கை, மற்றைய அறிக்கைகளிலே கனம் முதலமைச்சர் அவர்கள் சோஷலிசத் திட்டத்தை எப்படி எப்படி நிறைவேற்றி இருக்கிறோம் என்று குறிப்பிடுவார்கள். ஆனால் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் ஒரு இடத்தில் கூட அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஜனநாயக சோஷலிசத்தை இன்ன முறையிலே நிறைவேற்றப் போகிறோம் என்று ஒரு இடத்திலே கூடத் தரப்படவில்லை. தொழில் வளர்ச்சியைப் பொறுத்து மாநில அரசாங்கம் பெரிய தொழில்கள் எதிலும் நேர்முகமாக ஈடுபடவில்லை. "மாநில அரசாங்கம் தொழில் துறையில், குறிப்பாக பெரும் தொழில்களில் கணிசமான அளவிற்கு முதலீடு செய்யவில்லை; தேவையான பொருளாதார வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் தனியார்த் துறையினை தொழில் முயற்சிகளில் மேலும் ஈடுபடுமாறு ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்துள்ளது" என்று திட்டவட்டமாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில தனியார்களுக்குத் தான் தொழில் துறையிலே வாய்ப்புகள், வசதிகளைச் செய்து

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th August 1965

தந்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். கணிசமான அளவுக்கு அரசாங்கத்தின் நேர்முகமாகப் பெரிய தொழில்கள் எதிலும் முதலீடு செய்யவில்லை என்று கூறுகிறார்கள். இதன் மூலம் சோஷலிசக் கொள்கையை நிறைவேற்ற வழிவகை இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை பெரும் தொழில்களை யெல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்த முன்வரவேண்டும். தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அந்தத் தொழில்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுடைய சொத்தாகவே இருக்கிறது. அரசாங்கமே இவற்றை ஏற்று நடத்தினால் அரசாங்கத்தின் வருவாய் பெருக வழி ஏற்படும். தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதன் காரணமாக அவர்கள் தங்கள் லாப நோக்கத்தைப் பெருக்க வேண்டுமென்ற முறையில் கணக்குகளைச் சரியாகக் காண்பிக்காது சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். பொதுத் துறையில் இவை மேற்கொள்ளப்பட்டால் செல்வம் ஒரு சிலரிடத்தில் போய்க் குவியக் கூடிய நிலைமை இராது. ஆகவே, நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கும் வகையில் பொதுத் துறையில் பெரும் தொழில்களை
10-30 a.m. ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையின் மூலம் தொழிற்சாலைகளைப் பரவலாக்கும் அந்த நோக்கத்தைப் பெற முயலுதல் வேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலம் தொழில்களைப் பெருக்கும் முயற்சியை மேற்கொள்ளலாம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நேர்முகமாகவே முதலீடு செய்கிற முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இதைக்கூட டாக்டர் நடராஜன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். பேஸிக் இன்டஸ்ட்ரீஸை தனியார் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ நடத்தமுடியாது என்று எண்ணி முழுத் தொகையையும் போட்டு சர்க்காரே ஏற்று நடத்தவேண்டுமா? அடிப்படைத் தொழில்களை சர்க்கார் ஏற்று நடத்துவதில் தவறு இல்லை. ஏற்படுத்தத்தான் வேண்டும். 'கீ இன்டஸ்ட்ரீஸையும்' அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்துவதில் தவறு இல்லை. "இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் மாநில அரசாங்கம் மேலும் முக்கியமான நேர்முகப் பங்கு கொள்ளும் வகையில் அந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசாங்கம், நடுத்தர அளவில் சில அடிப்படைத் தொழில்களை நிறுவி, தனியார்த் துறையில் உள்ள ஏனைய தொழில்கள் பயன்படுத்தக் கூடிய மூலப் பொருள்களையும் இடைநிலைப் பொருள்களையும் உற்பத்தி செய்து தருவதில் தனது கவனத்தைச் செலுத்தும். பொது மக்கள் அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய சில முக்கிய நுகர்ச்சிப் பொருள்களான (கன்ஸ்யூமர் குட்ஸ்) நூல், சர்க்கரை, சிமெண்ட், போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் அரசாங்கம் நேரடியாக ஈடுபடும்" என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு என்று எட்டு கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் வரிகளைப் போட்டு அரசாங்க வசதியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு, அத்தனையும் தனியாரிடம் குவிய இடம் கொடுக்காமலும், அரசாங்கமே முழுப் பொறுப்பை



10th August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

யும் ஏற்று நடத்தும் விதத்தில் இல்லாமலும், கூட்டுறவு முறையில் அவற்றை ஏற்படுத்தினால் பல பேர்களுக்கு இடம் கிடைக்கும், மக்களுக்கும் அதனால் பலன் ஏற்படும் விதத்தில் அவற்றை கூட்டுறவுத் துறையில் விட்டால் என்ன? நூல், சர்க்கரை, சிமெண்ட் ஆலை இவற்றை அரசாங்கமே ஏற்று எடுத்து நடத்த வேண்டுமென்ற அவசியம் என்ன இருக்கிறது? மற்ற துறைகளுக்கு பயன்படுகிற, மற்ற தொழில்களுக்கு அடிப்படையாக தேவைப்படுகிற அந்தத் தொழிற்சாலைகளில் மட்டும் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தி இந்த மாநிலத்தின் தேவைகளை நிறைவேற்ற அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏற்படுவதில் கவனம் செலுத்தி மற்ற வகைகளில் கூட்டுறவுத் துறை மூலம் பெருக்குவதால் நாட்டின் பொருளாதாரம் பெருகவும், அது பரவலாக எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் அமையவும் செய்யும். ஒரு தொழிற்சாலையில் அரசாங்கம் செலவிடுவதற்குப் பதிலாக கூட்டுறவு துறையில் அமையும் தொழிற்சாலைகள் 10, 20-க்கு அரசாங்கம் உதவி செய்யலாம். நூல் ஆலை, சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை இவற்றை சர்க்காரே ஏற்றெடுத்து நடத்தும், இப்பொருள்களை உற்பத்தி செய்வதில் அரசாங்கமே நேரடியாக ஈடுபடும் என்று கூறப்பட்டிருக்கிறது. இன்று தனியார் துறையில் விற்கப்படுவதைவிட பொதுத் துறையில் விற்பது அதிக அளவிற்கு விற்கிற ஒரு நிலைதான் இன்று இருக்கிறது. தனியார் துறையில் ஏற்படுகிற செலவை விட பொதுத் துறையில் செலவு அதிகமாகிறதால் நிர்ணயிக்கிற விலை தனிப்பட்டவர்கள் விலையை விட பொதுத் துறையில் அதிகமாக இருக்கிற ஒரு நிலை ஏற்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்? தனியார் துறையில் 1 ரூபாய்க்கு கொடுத்தால் பொதுத்துறையில் இருந்து 14 அணாவிற்கு கொடுத்தால்தான் தனியார் துறையிலிருந்தும் 14 அணாவிற்கு விற்கக் கூடிய ஒரு நிலை உருவாகும். ஆனால் தனியார் துறையில் ஒரு ரூபாய்க்கு விற்கும்போது பொதுத் துறையில் 1½ ரூபாய் என்றால் அது தனியார் துறைக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. ஆகவே தனியார் துறைக்கே முழுமையும் விடாமல், கூட்டுறவுத் துறைக்கு விட்டு உற்பத்தியைப் பெருக்கலாம். அதல்லாது நூல், சர்க்கரை, சிமெண்ட் இவற்றில் அரசாங்கமே நேரடியாக ஈடுபட என்ன அவசியம் இருக்கிறது? நூல் ஆலை, சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை இவற்றை பெருக்குவதினால் அன்னியச் செலாவணியைப் பெறலாம் என்று சொல்கிறார்கள். அன்னிய நாடுகளுக்கு நம் நாட்டுத் துணிகளையும், நூலையும் ஏற்றுமதி செய்யமுடியாமல் இருப்பதற்கும் காரணம் அங்கு உலக மார்க்கட்டில் நாம் கொடுப்பதைவிட விலை குறைவாக இருப்பதால் இவை அங்கே போய்ச் சேர முடியாமல் இருக்கிறது. நம் நாட்டில் சர்க்கரைக்கு விதிக்கிற விலையையும் உலக மார்க்கட்டில் உள்ள விலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் விலை அதிகமாகத்தான் இருக்கிறது. அன்னிய செலாவணி பெற வேண்டும் என்று ஒரே நோக்கோடு சப்சிடி தந்து சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்காக எட்டு

கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. எதிர்பார்க்கிற நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் கூட்டுறவுத் துறையின் மூலம் அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாதா? அரசாங்கமே ஒரு தொழிற்சாலை வைத்து நடத்துவதைவிட கூட்டுறவுத் துறையில் 10, 15 வேறுபட்ட தொழிற்சாலைகள் ஏற்படுத்த வழிவகை செய்யமுடியாதா என்பதை யோசிக்க வேண்டும். அந்த முறையில் ஒரு திட்டம் இட்டால் பலவிடங்களில் தொழில்கள் வளர வாய்ப்பு ஏற்படும். கிராமப் புறங்களில் இருப்பவர்களை தொழில் துறையில் சேர்க்கவேண்டுமென்றால் மாவட்டரீதியாக கணக்கு எடுத்து எல்லாவிடங்களிலும் பரவலாக தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால்தான் கிராமப்புறங்களில் தொழில்கள் பெருகவும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் வாய்ப்பு ஏற்படும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொழிற்சாலைகளை முடக்கிவிட்டால் அதைச் சுற்றி இருப்பவர்கள்தான் வாழ்க்கை வசதியைப் பெற முடியுமே தவிர மற்றவர்களால் முடியாது. ஒரு சில குறிப்பிட்ட மாவட்டங்களில் அல்லது மாநிலங்களில் தொழில்கள் வளர்ந்து வரும் நிலை ஏற்பட்டால் தொடர்ந்து அவை விரைவோடு வளர வழிவகை ஏற்பட்டு விடுகிறது. குறிப்பிட்ட தனி மனிதன் வசதி பெற வாய்ப்பிருந்தால் விரைவாக மேற்கொண்டு அவன் வளரவும் வாய்ப்பு ஏற்படுகிறது. குறிப்பிட்ட மனிதன் வசதிகளை அதிகம் பெற்றால் மேலும் மேலும் வசதிகளை ஓட்டிப் பெற வாய்ப்பு ஏற்படும். உதாரணமாக சொல்லவேண்டுமென்றால், கோவையில் தொழிற்சாலைகள் வளர்ந்திருக்கின்றன. ஒன்று மற்றொன்றுக்கு துணையாக நின்று ஒன்று மற்றொன்றுக்கு ஊக்கம் தந்து விரைவாக தொழில்கள் வளர வேகம் அதிகம் ஏற்படுகிறது. அதே நிலை மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவைகளும் வளர முடியும். சென்ற ஆண்டு மதிப்பிட்டுக்குழுவில் போலீஸ்காரர்கள் எடுப்பதைப் பற்றி கேட்டபோது கோவை மாவட்டத்தில் யாரும் போலீஸ்காரர் வேலைக்கு வருவதில்லை என்று சொல்லப்பட்டது. ஏனெனில் போலீஸ்காரராக வந்து பெறுகிற சம்பளத்தைவிட மில்களில் அதிகச் சம்பளமும், போனஸும் கிடைப்பதால் இங்கு ஆள்கள் வருவதில்லை. ஆகவே கோவை போலீஸ் பள்ளிக்கு ராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் இருந்துதான் ஆள்களை பொறுக்கி கோவையில் பயிற்சி கொடுக்கும் நிலைமை இருக்கிறது என்று எடுத்து சொன்னார்கள். அந்தளவு அதன் சுற்றுப்புறங்களில் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. மின்சாரத் திட்டத்தைப் பற்றி முன்பே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மின்சாரம் கிராமப்புறங்களுக்குச் சென்று பயன் அடையும் நிலை ஏற்பட்டிருப்பது எதிர்காலத்தில் தொழில்கள் வளரவும் வெள்ளாமை பெருகவும் வாய்ப்பை ஏற்படுத்தும். மின்சாரம் சென்று தங்கியிருப்பதால் சிறு சிறு தொழில்களை கிராமப்புறங்களில் அமைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதில் நாம் கவனம் செலுத்தியிருக்கிறோம். வேறு எந்தத் துறையையும்விட மின்சாரத் துறைக்குத்தான் அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்க ஒன்று என்று பல உறுப்பினர்க்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே





கிராமப்புறங்களில் தொழில்கள் உருவாவதற்குத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த மன்றத்தில் அடிக்கடி கூறப்பட்டு வந்திருக்கிறது, மின்சாரக் குழு நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்கள் மின்சாரத்தில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன. அங்கு தனியார்களிடம்தான் மின்சாரம் வழங்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவற்றை அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்த வேண்டுமென்று கூறப்பட்டு வருகிறது. அவற்றை அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்துவதற்குள்ள திட்டத்தை அரசு தீட்டியிருக்கிறது என்று கூறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தனியார் கையில் மின்சாரம் வழங்கும் உரிமை இருப்பதின் காரணமாக பிற மாவட்டங்களில் 1,000, 1,800 கிராமங்கள் என்ற அளவில் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றால் தஞ்சையில் 600 கிராமங்களுக்கே மின்சாரம் தரப்பட்டிருக்கிறது. அந்த குறைபாட்டைப் போக்க அரசாங்கமே அவற்றை ஏற்றெடுத்து நடத்தவேண்டும். நான்காவது திட்டத்திற்குள் எல்லா தனியார் மின்சார நிலையங்களும் அரசாங்கத்தின் கைக்கு வந்துவிடும் என்று கூறியிருப்பதை விரைவாக நிறைவேற்றத் தக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மீனளத் துறையில், உற்பத்தியைப் பொறுத்தமட்டில் 1965-66-ல் 2.9 லட்சம் டன் என்றிருப்பது, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 4.7 லட்சம் டன் அளவுக்கு அதிகரிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான அளவுக்குப் பலன் தரக் கூடிய வகையில் அரசாங்கம் ஈடுபடுவதற்கு முயற்சித்தல் வேண்டும். நமக்கு 620 மைல் நீளமுள்ள கடற்கரை அமைந்திருக்கிறது. ஆழ்கடலில் சென்று மீனை அரித்துக்கொண்டு வருவதின் மூலமாக நம்முடைய உணவுத் தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்து கொள்வதோடு அல்லாமல், நம்முடைய வருமானத்தையும் பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது. சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து விவசாயம் செய்து கிடைக்கின்ற வருவாயைவிட ஆழ்கடலில் சென்று மீன்களை அரித்துக்கொண்டு வந்து, அதை விற்கவோ அல்லது அதைப் பதனிட்டு விற்பனை செய்தின் மூலமாகவோ நமது வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியும். உலர்ந்த மீன் மூலமாக அன்னியச் செலாவணியைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானிலிருந்து மட்டும் கிழக்கு வங்கம் பகுதிக்கு ஆண்டு ஒன்றுக்கு 4 கோடி ரூபாய் அளவுக்கு மீன்களை வரவழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தென் மாநிலங்கள் தருமானால் அன்னியச் செலாவணி பெருகுவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று வங்க மாநில அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மீனளத் துறையை இன்னும் பெருக்கி, அதன் மூலமாக நம்முடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுதல் வேண்டும், இதற்கான நடவடிக்கைகளில் அரசினர் முயற்சித்தல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையில் ஏறத்தாழ 80 கோடி ரூபாய் அளவுக்கு நாம் திட்டங்களை வகுத்திருக்கின்றோம். நம்முடைய மாநிலத்தில் ஆரம்பக் கல்வியின் மூலம் உயர்நிலை கல்வியை அடையவும் அதன் மூலம் மேல்படிப்புக்கு வரவும் பலர் முற்படுகின்ற நிலைமையும் இருந்து கொண்டிருக்கின்றன. இதில் முக்கியமான ஒரு வரையறையை நாம் வகுத்துக் கொள்ளவேண்டும். உயர்நிலைப்பள்ளியில் படிக்கின்ற மாணவர்களில் எத்தனை பேர்கள் கல்லூரிப் படிப்புக்கு வருகிறார்கள், அவ்விதம் வருகின்றவர்கள் அத்தனை பேரையும் ஈர்த்துக்கொள்கின்ற வகையில் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு நாம் திட்டமிட்டுக்கொள்ளவேண்டும். அதே போன்று தான் கல்லூரிப்படிப்பு முடிந்த பின்னால் எத்தனை பேர்கள் வேலைக்குப் போகிறார்கள், எத்தனை பேர்கள் தொழில் துறை படிப்புக்காக முன் வருகிறார்கள், எத்தனை பேர்கள் வேலைகளுக்காகப் போய்விடுகிறார்கள் என்கின்ற விவரங்களை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலுள்ள கணக்குகளை வைத்துக்கொண்டு எடுத்து, 10-வது வரை எத்தனை பேர்கள் படிக்கின்றார்கள், அதில் தேறியவர்களில் எத்தனை பேர்கள் கல்லூரிப் படிப்புக்காக வருகிறார்கள், அவர்களையெல்லாம் ஈர்த்துக்கொள்வதற்கான வகையில் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா அல்லவா என்பதையும் கல்லூரியில் தேறின பின்னால் தொழிற்துறை கல்லூரிக்கு எத்தனை பேர்கள் செல்லுகின்றனர், மருத்துவத் துறை கல்லூரிக்கு எத்தனை பேர்கள் செல்லுகின்றனர், பொறியியற் கல்லூரிக்கு எத்தனை பேர்கள் செல்கின்றனர் என்பதற்கான கணக்கை எடுத்து, அதற்கு ஏற்றபடி பொறியியற் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும், மிருக வைத்திய கல்லூரிகளையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால், படிக்க வேண்டும் என்று வருகின்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஒரு வார காலமாக, இரண்டு வார காலமாக இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அறிவார்கள், பெற்றோர்களும் அறிவார்கள், கல்லூரிகளில் இடம் கிடைப்பதிலுள்ள இடையூறுகளைப்பற்றி, 310 மார்க் எடுத்த மாணவர்களுக்குக்கூட இடம் கிடைப்பதில்லை, 400 மார்க் வாங்கியிருக்க வேண்டும் என்று கூறி இடம் கொடுக்க மறுத்துவிடுகிறார்கள், இடம் குறைவாக இருப்பதின் காரணமாக. பி.எஸ்.ஸி. வகுப்புகளுக்கான இடங்கள் கொடுப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. 400 மார்க்குகள் வாங்கின மாணவர்கள் தாங்கள் மேலும் படிக்க வேண்டும் என்று முன் வரும்போது, அவர்கள் விருப்பம் நிறைவேறாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எத்தனை எத்தனை பேர்கள் வருகிறார்கள் என்கின்ற கணக்கு இருந்தால், அதற்கு தக்கவாறு கல்லூரிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு முடியும். ஆகவே, இத்தகைய முயற்சியில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேனாடுகளில் ஏற்பட்டிருப்பது போல், பெரிய பெரிய தொழில் நிறுவனங்கள், தங்கள் தொழிலில் ஈடுபடக்கூடிய அளவுக்கு இருக்கின்ற பயிற்சி கல்லூரிகளை, அவர்களுடைய தொழிலுக்கு ஏற்றவாறு உருவாக்கி, அதற்கான கல்லூரிகளை





நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளச் செய்தல் வேண்டும். அல்லது அவர்களது பொறுப்பிலேயே அரசாங்கமே அதை ஏற்றெடுத்து நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு ஏற்படுத்துவதின் மூலமாக அந்தந்த தொழிலில் ஈடுபடக்கூடியவர்களை பயிற்றுவிப்பதற்கும், அதன் மூலம் வேலை வாய்ப்புக்களை தேடித்தருவதற்கும், இம்மாதிரியான பயிற்சி நிலையங்கள் பயன்படக்கூடும். ஆகவே இப்பேர்ப்பட்ட நிலையங்கள் அதிகமான அளவில் ஏற்பட வேண்டும். இதன் மூலமாக அதிகமான பேர்கள் தொழில்துறையில் வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான முயற்சிகளில் அரசினர் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. அதை சமாளிப்பதற்கு அரசு எந்தவிதமான திட்டங்களைப் போட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். போட்டிருக்கின்ற திட்டங்களின் மூலமாக எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க முடியும் என்கின்ற விவரங்களையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

நாம் போடுகின்ற ஐந்தாண்டுத் திட்டங்களை எல்லாம் ஊராட்சி மன்றங்களின் மூலமாகவும், ஊராட்சி ஒன்றிப்புக்களின் மூலமாகவும் அதாவது கம்யூனிட்டி டெவலப்மென்ட்--மூலமாகவும். நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதில் சமுதாய நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இது எந்த அளவுக்கு எந்த நோக்கத்திற்காக இந்த திட்டத்தை போட்டோமோ, அந்த அளவுக்கு, திட்டம் தீட்டிய அளவுக்கு சமுதாயநலத் திட்டத்தின் மூலமாக நிறைவேறவில்லை என்கின்ற கருத்துக்களை இந்த மன்றத்தில் அத்தனை பேர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை எப்படிச் சீர்திருத்த முடியும் என்பதற்காக வழிவகைகளைக் காண வேண்டும். ஒவ்வொரு பிளாக்கிலும், ஈ.ஓ. இன்டஸ்ட்ரீஸ் என்று இருக்கிறார்கள். ஈ.ஓ கோவாப்பரேஷன் என்றிருக்கிறார்கள். தொழில்துறையைப் பெருக்குவதற்கும், கூட்டுறவுத்துறையைப் பெருக்குவதற்காகவும் இப்பேர்ப்பட்ட அதிகாரிகளை வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட அதிகாரிகளின் மூலமாகத் தொழில் வளர்ச்சி வளர்க்கப்பட்டிருக்கிறதா, வேளாண்மைத்துறை அதிகாரி மூலம் வேளாண்மைத்துறை வளர்க்கப்பட்டிருக்கிறதா, கூட்டுறவு அதிகாரி மூலமாக கூட்டுறவுத்துறை வளர்க்கப்பட்டிருக்கிறதா, எந்த அளவுக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்திலும் வளர்க்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு இவர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் செய்யக்கூடிய பணிகளினால் உண்மையிலேயே பலன் ஏற்படுகிறதா, இல்லையென்றால் அதிலிருக்கின்ற இடையூறுகள் என்னென்ன, அவற்றைத் தடுப்பதற்கு என்னென்ன முறைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் கண்டறிந்தால், வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் போட்டிருக்கின்ற திட்ட வேலைகளை எல்லாம் திறம்பட நிறைவேற்றுவதற்கு வழி காண முடியும். இது

மட்டுமல்ல. முடிந்தால், இதை ஓரளவுக்கு சீர்திருத்தி அமைப்பதற்கும் அரசினர் முயற்சி செய்தல் வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு இந்தத் துறையில் அதிகாரிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறதே தவிர, இதன் மூலம் ஏற்பட்டிருக்கின்ற பலனை நம்மால் மதிப்பிட முடியவில்லை. இவர்களால் மதிப்பிட்டு ஆங்காங்கு சொல்வதற்கும் முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அண்மையில் மதிப்பீட்டுக்குழு பல இடங்களுக்கும் சென்று பார்க்கின்ற நேரத்தில், மண்வள ஆராய்ச்சிக்காக (சாயில் கன்சர்வேஷன்) சாம்பிள்கள் எவ்வளவு அனுப்பியிருக்கிறீர்கள் என்று கேட்டால், 10 அல்லது 20 என்று தான் சொல்லப்படுகிறது. இதற்காக 100 சாம்பிள்கள் அனுப்பவேண்டும் என்று வகுக்கப்பட்டிருந்தும் 10, 20 என்கிற அளவிலும், சில இடங்களில் ஒன்று கூட அனுப்பாமல் இருக்கின்ற நிலைமையையும் நம்மால் பார்க்க முடிகிறது. இதில் இருக்கின்ற கோளாறுகள் என்ன என்பதை கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டால் இம்மாதிரியான குறைகளை சரிகட்ட முடியும் என்று நினைக்கிறேன். ஆகவே இப்பேர்ப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், வருவாய்த்துறையைப் பெருக்கிக்கொள்வதற்காக—தேசியமயமாக்கக்கூடிய திட்டங்களை—சோஷலிஸ அடிப்படையில்—எந்த ஒரு திட்டத்தையும் அரசு மேற்கொள்ளவில்லை. உடனடியாக பயன்தரத்தக்க வகையில், வருவாய்த்துறையைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய—வரியின் மூலமாக பெருக்காமல்—எப்படி மத்திய சர்க்கார் ரயில்வேயை வருவாயைப் பெருக்கிக்கொள்ளக் கூடிய வகையில் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ—அதே போன்று—உடனடியாக வருவாய் தரக்கூடிய போக்குவரத்துத் துறையை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். பஸ் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டில் உடனடியாக பலன் தரத்தக்கதொன்றாக இருந்து வருகிறது. அவ்விதம் இல்லாமல் நாம் பல்வேறு திட்டங்களைத் தீட்டினாலும், அதன் மூலம் பலன் கிடைக்க மூன்று ஆண்டுகள் ஆகலாம், அதற்கு மேல் அதிகமான பலனைப் பெறுவதற்கு மேலும் ஐந்து ஆண்டுகள் ஆகலாம். இவைகளை எல்லாம் விட உடனடியாக பயன்தரக்கூடியதொரு துறை பஸ் போக்குவரத்துத்துறை. அதன் மூலம் அதிகமான வருவாய் தனிப்பட்டவர்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அவ்விதம் தனிப்பட்டவர்களுக்கு போகும் வருவாயை அரசாங்கத்திற்கு கிடைக்கும்படியாக செய்வோமானால் இன்னும் அதிகமான அளவில் பல திட்டங்களைப்போட முடியும். நம்முடைய வருவாயையும் பெருக்கிக்கொள்ள முடியும். இதற்கான எந்தவிதமான முயற்சியும் அரசாங்கம் எடுத்திருப்பதாக தெரியவில்லை. இதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உச்சவரம்புச் சட்டம் வந்ததின் மூலம் முன்னால் விவசாயிகளுக்கு இருந்து வந்த உணர்ச்சி, அவர்களுக்கு இருந்த வருமானம் இவைகளில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்றால் எதுவுமே ஏற்படவில்லை. நில உச்சவரம்புச் சட்டம் வந்ததின்





காரணமாக, முழு உழைப்பையும் தந்து விளைவை பெருக்கி காட்ட முடியும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை, சட்டத்தின் மூலமாக எந்த அளவிற்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஆராய தவறியிருக்கிறது. இதற்கான நோக்கம் முற்றிலும் ஈடேறவில்லை. இதற்கான காரணங்களை கண்டறிய ஏன் இந்த அரசு தவறியது என்பதைப் பார்க்க வேண்டும். நல்ல நோக்கத்திற்காக சட்டம் போடப்பட்டிருக்கிறதே தவிர நோக்கம் உண்மையிலேயே நிறைவேறவில்லை. இந்தச்சட்டம் கொண்டுவந்ததின் காரணமாக மிச்சப்பட்ட நிலங்கள் இருக்கின்றனவா என்றால் இல்லை, எவ்வளவு நிலம் மிச்சப்பட்டது? இதன் காரணமாக சாதாரண விவசாயிகளுக்கு ஏதாவது நன்மை கிடைத்திருக்கின்றதா? இதன் மூலமாக அவர்களுக்கு உணர்ச்சியாவது ஏற்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஏற்கனவே இருந்த உணர்வோடு தான் இன்றும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு முன்னால் இருந்துவந்த ஆசை இதுவரை நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரியவில்லை. முன்பு ஒரு தஸ்தாவேஜாக இருந்தது, இப்போது நான்கு, ஏழு, எட்டு தஸ்தாவேஜாக ஏழெட்டு இடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதனுடைய நோக்கம் நிறைவேற்றப்படுமானால் விவசாயிகளுடைய நன்மையை நாம் பாதுகாக்க முடியும். ஆகவே இதற்கான முயற்சிகளில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

இன்னும் ஒரு கருத்தை நான் கடைசியாக குறிப்பிட விரும்புகிறேன். இருக்கின்ற பல கருத்துக்களை விரிவாக எடுத்துச் சொல்வதற்கு நேரமில்லாத காரணத்தால், பொதுவாக சொல்லலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சில காரியங்களை அரசினர் உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும். பயன்படக்கூடிய வளங்களை பயன்படுத்தாமல் இருந்து கொண்டிருக்கிறோம். இவைகளை பயன்படுத்துதல் வேண்டும். சோம்பேறித்தனமாக இருக்கும் மனித சக்தியை நல்ல முறையில் பயன்படுத்துதல் வேண்டும். தேக்கங்களிலுள்ள பாசனத்திற்கு பயன்படக்கூடிய நீரை முழு அளவுக்கு பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தல் வேண்டும். தொழில்துறையில் முழு சக்தியை பயன்படுத்தாமல் அரைகுறையாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இது தவிர்க்கப்படவேண்டும். மின்சக்தியை அரைகுறையாகவே பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதுவும் தவிர்க்கப்படவேண்டும். திட்டங்களை மெல்ல நிறைவேற்றுதல்—திட்டங்களின் மீது அதிகப்படியான செலவு செய்தல்—தேவைக்குமேல் மனித சக்தியையும் பொருள்களையும் விரயமாக்குதல்—இவற்றின் காரணமாக திட்டச் செலவுகள் அதிகமாகின்றன. இவற்றையெல்லாம் நீக்குவதற்கு அரசினர் முயற்சி செய்தல் வேண்டும். முறையில்லாத முறையில் திட்டங்களைத் தீட்டி அதன் மூலமாக சில பல இடங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய முறையில் ஏற்படும் நஷ்டங்களைத் தவிர்க்கவும், குறைக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவையற்ற

வகையில் முதலீடுதல் காரணமாகவும் அவ்வப்போது நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். காலா காலத்தில் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதன் மூலமாக, திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாத நிலையில் அதிக தொகை செலவழிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றன. அதையும் தவிர்க்க முயற்சிக்க வேண்டும். எதிர்பார்த்த அளவுக்குப் பலன் ஏற்படாத அளவுக்குப் பல இடங்களில் அணைக்கட்டுத் திட்டங்களில் கூட அத்தகைய நிலைமை ஏற்பட்டு, திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் பாசனத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அந்த அளவுக்கு நிலம் பாசனத்திற்கு வராத நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். முன் யோசனையற்ற தன்மையில் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றுவதாலும் நஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆரம்பகட்டத்திலேயே திட்டத்தின் முழு அளவையும் கணக்கிடாமல் இருந்து போகப் போகக் கணக்கிட்டு சர்க்காருடைய பணம் விரயம் ஆகும் நிலைமை சில இடங்களில் ஏற்படுகின்றன—எல்லா இடங்களிலும் என்று நான் சொல்லவில்லை, அப்படியே போகிறதால் சில இடங்களில் பொதுப் பணம் விரயம் ஆகின்றது. அவைகளையும் தடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். பொருள்களைச் சேமித்து வைக்கவும் பாதுகாக்கவும் இயலாமல் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதாலும், சில இடங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. இங்கே நேற்று கூட ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள், பயிருக்குப் போடும் விஷ மருந்தை ஆடுகளுக்குப் போட்டதால் 200 ஆடுகள் இறந்தன என்று. பொறுப்பற்ற முறையில் முறைப்படி பொருள்களை சேமித்து வைக்காத காரணத்தினால் பொருள்கள் வீணாகும் நிலைமைகள் பல இருக்கின்றன. இத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் தடுத்து நிறுத்தத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வேளாண்மை உற்பத்தியைப் பற்றி அறியாமல் நஷ்டத்திற்கு உள்ளாகும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. திறமையற்ற நிர்வாகம், நிர்வாக அமைப்பு காரணமாக போட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியாது பல குறைகள் இருக்கின்றன. இந்த நிலைமையிலே நாட்டில் நூற்றுக்கு 51 பேர்கள் பெண்களாக இருக்கக்கூடிய அந்தப் பெண்களின் முழு சக்தியைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு அவர்களுடைய சக்தி வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய வீட்டுக்கு வருவாய் தேடித்தர முடியாது இருக்கிறார்கள். பெண்களுடைய சக்தியைப் பயன்படுத்தும் அளவுக்குத் திட்டங்கள் போட்டு, சமூக நலத் திட்டங்களை அதிகமாக ஏற்படுத்துவதன் மூலமாக நாட்டுக்கும் பயன்பட்டு அவர்களுடைய வீட்டுக்கும் வருவாய் தேடிக்கொள்ளும் முறையில் ஏற்படுத்துதல் வேண்டும்.

பெரும் பெரும் விழாக்களில் பணம் வீண் விரயம் ஆகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். விழாவே வேண்டாம், ஊக்கம் தருகிற முறையே வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆயிரக் கணக்கில் பத்தாயிரக் கணக்கில் அரசாங்கப் பணம் விழாக்களுக்காகச் செலவு செய்து ஆடம்பரமாக நடத்துவதைத் தவிர்க்க வேண்டும்;





மன்றத்திலே எடுத்து வைத்த கருத்துக்களை மேற்கொள்ளுவதன் மூலமாக, அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகியவற்றுக்கு மக்கள் அரசாங்கத்தை நம்பி வாழ்கிறார்கள், அந்த நிலைமையை மனத்தில் கொண்டு இந்த திட்டங்களை நிறைவேற்றுகிற முறையில் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற முறையில், இங்கே எடுத்து வைத்த குறைகளையும், கருத்துக்களையும் பரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் சாத்தியமானதை ஏற்று, மாற்ற வேண்டியதை மாற்றி, அதிக நிதி பெற வழி செய்து, தென் மண்டலம், தமிழகம் பெற வேண்டிய நியாயமான நிதி நிலைகளைப் பெற நல்ல முறையில் முயற்சி செய்ய, விவாதத்திலே தரப்பட்டிருக்கிற கருத்துக்கள் மிக மிகப் பயன்படும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த நான்கு நாட்களாக, இந்த மன்றத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விவாதத்திலே கலந்துகொண்ட உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள்; குறைபாடுகளையும் தெரிவித்தார்கள். அவர்களுக்கெல்லாம் முதன் முதலாக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பே நான் தெரிவித்தது போல, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் இறுதியான ஒரு திட்டமாக இங்கே சமர்ப்பிக்கவில்லை. அந்த நிலை இன்னும் வரவில்லை என்று நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். மேலும் நிலைமையை ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்; மாநிலத்திலும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அகில இந்திய ரீதியிலும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஃபைனான்ஸ் கமிஷன் சிபாரிசுகள் 13-ம் தேதி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 13-ம் தேதி சிபாரிசுகள் வந்த பிறகு இந்த மாநிலத்திற்கு அதனால் என்ன சலுகைகள் கிடைக்கும், மத்திய அரசாங்கத்திற்கு என்ன சலுகைகள் கிடைக்கும் அல்லது மாநிலத்திற்குக் கிடைக்கும் சலுகைகளால் அவர்களுடைய வருவாயில் எத்தகைய பாதகம் ஏற்படும் என்பதெல்லாம் புலப்படும். மாநிலத்திற்கு வந்தாலும் சரி, மத்ய அரசாங்கத்திற்கு வந்தாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். மாநில அரசாங்கத்திற்குச் சலுகைகள் வருவதால் மத்திய அரசாங்கத்தின் வருவாய் பாதிக்கப்படுகிறது என்று யாரும் வருந்துவதற்கில்லை. அந்த நிலைமையை உணர்ந்து அதற்கேற்றபடி திட்டத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல. இந்தத் திட்டம் ஒரு டிராஃப்ட் ப்ளான் என்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, இந்த மாநிலத்தின் திட்டத்தைப் போடும்போது நம்முடைய நிலைமையை, நம்முடைய சக்தியை உணரவில்லை என்று கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். நம் சக்தியை ஆராய்ந்துதான், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், நன்றாக ஆராய்ந்துதான், எவ்வளவு சாதிக்க முடியும், நமக்கு எத்தகைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது, மக்களுக்கு வேண்டியது

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

என்ன, மக்கள் எவ்வாறு எதிர்பார்க்கிறார்கள், எதிர்பார்ப்பதற்கு ஏற்றவாறு எவ்வளவு நிறைவேற்ற முடியும், மக்களுடைய தேவைகளை எந்த அளவுக்குப் பூர்த்தி செய்ய முடியும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எந்த வகையால் முடியும், வாழ்க்கை வசதிகளை எவ்வாறு பெருக்க முடியும் என்பதை எல்லாம் ஆராய்ந்து தான் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு தான் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறோம். பெரிய திட்டமாக இருந்தால் அதை நிறைவேற்றுவதற்கு வழி என்ன என்று ஆராய வேண்டியிருக்கிறது. அவைகளை ஆராயாமல் திட்டத்தை மட்டும் உருவாக்கிவிட்டால் அது திட்டம் ஆகாது. திட்டமிட்ட முன்னேற்றம் என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு முறை. நாம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற போதே நமது ஒப்பற்ற தலைவரான நேரு அவர்கள் தீர்க்கதரிசனத்துடன் அப்போதே காங்கிரஸ் கமிட்டியில் ஒரு திட்டக் கமிஷனை அமைத்தார்கள். இப்போது மைசூரிலே கவர்னராக இருக்கிற திரு. கிரி அவர்கள் திட்டக் கமிஷனிலே ஈடுபட்டார்கள்; மற்றவர்களும் ஈடுபட்டார்கள். அப்போதே, நம் நாட்டின் தேவை என்ன எத்தகைய திட்டத்தை உருவாக்குவது என்பது எல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. ஆகவே, சுதந்திரம் அடைந்தவுடன் நாம் திட்டக் கமிஷன் ஒன்று அமைத்து, திட்டங்களை உருவாக்க முற்பட்டோம். இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. ஆகவே நாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த நிலையிலேதான் மன்றத்தின் கருத்துக்களை இப்போது தெரிந்துகொள்வோம், இறுதியாகத் திட்டம் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் உருவாகும்போது மன்றத்தில் சமர்ப்பித்து மன்றத்தின் கருத்துக்களைப் பெற வாய்ப்பு இருக்கும் என்று நான் முன்பே தெரிவித்திருக்கிறேன்.

திட்டத்தின் நோக்கமெல்லாம் என்ன? மக்களுடைய நிலையை உயர்த்தவும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மக்களுடைய வசதிகளைப் பெருக்கவும் நாம் வழி தேடுவதுதான். அது தான் திட்டம். திட்டத்தைப் பற்றி கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் விளக்கினார்கள். திட்டத்தை எதிர்க்கவில்லை, திட்டம் போடும் முறையைப் பற்றிக் குறை கூறுகிறேன் என்று சொன்னார்கள். திட்டமே கூடாது என்ற கருத்து முன்னே இருந்தது; உலகத்திலேயே இருந்தது. ஒரு சில கோட்பாடுகள் உடையவர்கள்தான், கொள்கை உடையவர்கள்தான் திட்டம் போடுவார்கள் என்ற தவறுதலான கருத்து இருந்தது. ஆனால், கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் எடுத்துக் காட்டியது போல உலகத்திலே இன்றைக்குத் திட்டமிடாத நாடு ஏதோ இல்லை என்று கூறலாம். திட்டமிட்டுத்தான் முன்னேற வேண்டும் என்று உணர்ந்து, இதற்கு முன் திட்டத்தைப் பற்றி கவனம் செலுத்தாத நாடுகளெல்லாம்கூட இப்போது திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் லட்சியம்—முக்கியமானது அதுதான், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்பெல்லாம் நாம் ஜனநாயக சோஷலிசத்தை அடைவது நான் லட்சியம் என்று குறிப்பிட்டிருந்ததே, இப்போது அதைப் பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கப்படவில்லையே என்று அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், நம் லட்சியத்தைப் பற்றி ஒரு முறை நாம் திட்டவட்டமாகத் தெரிவித்தோம் என்றால் திருப்பித் திருப்பி அதையே மூல மந்திரமாகக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. அந்த வகையிலே தான் 'ஜனநாயக சோஷலிசம்' என்ற சொற்கள் நான் சமர்ப்பித்த திட்ட அறிக்கையில் இல்லை. அந்த லட்சியத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் திட்டத்திற்கு எதிர்ப்பு இல்லை என்று கூறினார்கள். அது வரையிலே எனக்கு மகிழ்ச்சி. ஆனால், அவர்களைச் சார்ந்த கனம் உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள், இரண்டு ஆண்டுகள் இந்தத் திட்டத்தை நிறுத்தி வைக்கலாம் அல்லது தள்ளிப் போடலாம் என்று கூறினார்கள். அவர்களுக்குள்ளே எத்தகைய உடன்பாடோ எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) அவர்களும் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், தள்ளிப் போடலாம், திட்டத்தை எதிர்க்கவில்லை என்று. இரண்டு ஆண்டு என்று அவர் சொல்லவில்லை. தள்ளிப் போட்டால் என்ன என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று நாம் சோஷலிசக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். சோஷலிச லட்சியத்தை ஜனநாயக முறையில் அடைவோம் என்ற லட்சியத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நான் சோஷலிசத்தைப்பற்றி குறிப்பிடவில்லையே என்று கனம் எதிர்க் 11-00 p.m.
கட்சித் தலைவர் அவர்கள் அதைப்பற்றி பிரஸ்தாபித்தார்கள். ஜனநாயக முறையில் சோஷலிசத்தை அடைவது என்பதையும் எதிர்க்கிறவர்கள் யாரும் இருக்க முடியாது என்று நான் இப்பொழுதும் நினைக்கிறேன். ஆனால், கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் சோஷலிசத்திற்கு எதிர்ப்புதான் தெரிவிக்கிறார்கள். இதுவரையிலே நான் தெரிந்துகொண்டது, அவர்களுடைய மாபெரும் தலைவர் அவர்களுடைய பேச்சின் மூலமும், எழுத்தின் மூலமும் 'சோஷலிசம் கூடாது, சோஷலிசத்தை விட்டுவிட்டால் நான் காங்கிரசை ஆதரிக்கிறேன். சுதந்திரா கட்சியை நான் கலைத்துவிடுகிறேன்' என்று கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆகவே கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்களுக்கு சோஷலிசத்தில் ஈடுபாடே இல்லாமல் இருக்கலாம். நான் சோஷலிசத்தைப் பற்றி குறிப்பிடவில்லையே என்று குறைபாடாக கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மாத்திரம் அல்ல. இப்பொழுது இன்னும் அதிகமாக பொதுத் துறையிலே ஏன் தொழில்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுத் துறையிலே ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு கருத்து

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

வேற்றுமைகள் இருக்கின்றன. ஆனால், கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் சொல்லியது போல் சிறிய தொழில்களை ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும் பொதுத் துறையிலே என்றால், அது வேறு வகை. லட்சியத்திலே அல்லது கொள்கையிலே வேற்றுமை என்று அதைக்கூற முடியாது. அது ஒரு கருத்து. ஆனால், கொள்கையிலே வேற்றுமை ஏற்படக்கூடிய அளவிலே பொதுத் துறையா, தனியார் துறையா என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். பொதுத் துறையைப் பொறுத்த மட்டில், பொதுத் துறையிலே கன்ஸ்யூமர் இண்டஸ்ட்ரீஸ் பற்றி குறிப்பிட்டார்கள். பொதுத் துறையிலே மக்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து, அவர்களுக்கு நியாயமான விலைக்கு சுலபமாக கிடைக்கச் செய்யும் ஒரு நோக்கத்துடன் தான் அரசாங்கம் சில 'கன்ஸ்யூமர் இண்டஸ்ட்ரீஸை' எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. தனிப்பட்டவர்களும் நடத்தலாம். ஆனால் மக்களுக்கு இது ரொம்ப இன்றியமையாத தேவை, இன்றியமையாத தேவையை சுலபமாகக் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில்தான் பப்ளிக் செக்டாரில் எடுத்துக்கொள்கிறோம். பப்ளிக் செக்டாரில் போதிய அளவு எடுத்துக்கொள்ளவில்லையே என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பப்ளிக் செக்டாரில் மேலும் அதிகமாக எடுத்துக்கொள்ள முற்படுகிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் முதலீடு செய்து, பப்ளிக் செக்டாரில் நடத்துவதிலேகூட, இந்த மாநில அரசாங்கமும், தங்களுக்குள்ள வருவாயிலிருந்து, நிதியிலிருந்துகூட ஓரளவுக்கு பொதுத் துறைக்கு நிதி முதலீடு செய்து, பொதுத் துறை தொழில்களை இன்னும் அதிகமாக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம்.

கூட்டுறவுத் துறையும் பொதுத் துறைதான். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே இன்று சர்க்கரை ஆலை, மற்றவைகளெல்லாம் நடக்கின்றன, கூட்டுறவுத் துறையில் அதிகமாக வைத்துக்கொள்ளக்கூடாதா, நூற்பு ஆலைகள் ஏன் அமைக்கக்கூடாது, ஏன் அதைக்கூட பொதுத் துறையிலே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறினார்கள். நான் ஒன்று விளக்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை என்றாலும், அநேகமாக பொதுத் துறைதான். அரசாங்கம் உத்திரவாதம் செய்து, அரசாங்கம்தான் பெரிய முதலீட்டை போடச் செய்கிறார்கள். அதற்கு அரசாங்கம்தான் உத்திரவாதம் அளித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் பங்குதார்கள் கொடுப்பது ரொம்பக் குறைவு. ஐந்தில் ஒரு பங்குகூட இருக்காது. அதுதான் கூட்டுறவுத் துறை. இருந்தாலும், கூட்டுறவு இயக்கம் வளர வேண்டும், மக்களுக்கு அக்கறை ஏற்படவேண்டும், நாம் நேராக ஈடுபடுகிறோம் என்ற எண்ணம் ஏற்படவேண்டும். 'அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்' என்று ஒன்று இருக்கிறது. 'அக்ரோ இண்டஸ்ரீஸ் கார்ப்பரேஷன்' என்று இப்பொழுது வைப்பதாக உத்தேசம் இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற பொருள்களை வேறு



10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒருவருக்கு விற்று அவர்கள் லாபம் சம்பாதிக்க விடாமல், விவசாயிகளைக் கொண்டு கூட்டுறவு ஸ்தாபனம் அமைத்து, அவர்கள் உற்பத்தி செய்கிற கரும்பை அவர்களே சர்க்கரையாக ஆக்குவது, அதைக் கூட்டுறவு முறையில் செய்வது என்பது கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் நடந்துகொண்டு வருகின்றன. ஆனால், அதில் பெரும்பாலும் பப்ளிக் செக்டார்தான் இருக்கிறது. சிலவற்றை அரசாங்கமே நடத்தி நாம் அனுபவம் பெறவேண்டும், நடத்திக் காட்டவேண்டும் என்ற முறையில்தான் கூட்டுறவு முறையிலும் நடத்துகிறோம், பப்ளிக் செக்டாரிலும் நடத்துகிறோம்.

பிரைவேட் செக்டார் கூடாது என்பது கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களின் கருத்து. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சார்ந்த கட்சிக்கும் அதே கருத்துதான் என்று நினைக்கிறேன். திருஷ்டாந்தமாக ஒன்றைக் கூறினார். பாங்குகளை ஏன் நாஷனலைஸ் செய்யக்கூடாது என்று கம்யூனிஸ்டு தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உதாரணமாகக் குறிப்பிட்டார்கள். இதைச் செய்வது, அதைச் செய்யக்கூடாது என்பது அல்ல. எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கருத்து. அதுதான் அரசாங்கத்தின் கொள்கை. அவ்வாறு கொள்கை என்றால் தனியார் துறையிலே தொழில் நடத்துகிறார்கள், அவர்களிடத்திலே ஒரு விசேஷ அக்கறை இருக்கிறது என்று கொள்வது தவறுதான். ஆனால், தொழில் வளர்ச்சி வேண்டுமென்றால், எல்லோருடைய ஒத்துழைப்பும், ஈடுபாடும் நமக்கு வேண்டும். எல்லோருடைய முதலீடும் நமக்கு வேண்டியிருக்கிறது. எல்லோருடைய திறமையும் நமக்கு வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொண்டு நாட்டுச் செல்வத்தையும் வளத்தையும் நாம் பெருக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. பிரைவேட் செக்டாரில் இருந்தாலும் கூட, அவர்களுக்கு வரி போடப்படுகின்றது. எவ்வளவு தூரம் வரி போட முடியுமோ அரசாங்கத்திற்கும் அதனால் பலன் கிடைக்கக்கூடிய வகையில் வரி போடுகிறோம். கட்டு திட்டங்கள் இருக்கின்றன. கட்டு திட்டங்களுக்கு உட்பட்டுத் தான் பிரைவேட் செக்டார் நடைபெற்று வருகிறது. பிரைவேட் செக்டாரில் தொழில் வளர்ச்சியில் இன்னும் பங்கு ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள், ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். தொழில் வளர்ச்சியில் அவர்களும் தங்களுக்குரிய வகையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத் தான் நடக்கவேண்டும். தனிப்பட்ட துறையிலே தொழில் வளர்ச்சி நடத்திக்கொண்டு வருகிறார்கள். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி நாம் உயர்ந்த பண்பாட்டை கடைப்பிடிக்கவேண்டும் என்று கூறுவார்கள், உண்மையாக அதை மனதிலே உணர்ந்து கூறுவார்கள். அவ்வாறு அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். நேற்று அவர்கள் தன்னையும் அறியாமல், அவர்களுடைய மாபெரும் தலைவர் அவர்களுடைய பேரில் இருக்கும் விசுவாசம் காரணமாகவோ என்னவோ,

கொஞ்சம் தவறுதலாகக் குறிப்பிட்டார்கள். 'கண்ட்ரோல், லைசென்ஸ், பெர்மிட், கோட்டா' சதுர்வேதங்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களை இப்பொழுது சிந்தித்துப் பார்த்தால் அவ்வாறு சொல்லியது தவறு என்பதை அவர்கள் மனதிலேயாவது உணர்ந்து கொள்ளவேண்டும். இப்பொழுது எடுத்துச்சொல்லி அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டியதில்லை. சதுர்வேதங்கள் இருக்கின்றன. 'கண்ட்ரோல், லைசென்ஸ், பெர்மிட், கோட்டா' இதைப் பற்றி ஏளனமாகக் கூறுவதிலே என்ன பயன்? பத்திரிகையிலே எழுதுகிறார்கள். அதற்குச் சில பத்திரிகைகள் தாளம் போடுகின்றன. பத்திரிகைகள் சிப்பாக எழுதுகின்றன. இப்பொழுது தனியார் துறையிலே தொழில் நடத்துகிறார்கள் என்றால், அவர்களை நாம் ஏன் ஆதரிக்கிறோம். அவர்களாலும் தொழில் வளர்ச்சி ஏற்படட்டும் என்று ஆதரிக்கிறோம். மக்களுக்கு பயன் ஏற்படக்கூடாத வகையில் ஒருகாலும் நாம் ஆதரிக்க மாட்டோம். அவர்கள் நல்ல முறையில் இயங்கவேண்டுமென்றால், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத் தான் இயங்க வேண்டும். அரசாங்க நிலை இருக்கட்டும். தொழில் நடத்துகிறவர்கள் எவ்வளவு முதலீடு போடக் கூடியவர்களாக இருந்தாலும், எவ்வளவு ஆற்றல் மிகுந்தவர்களாக இருந்தாலும், எவ்வளவு செல்வாக்கு படைத்தவர்களாக இருந்தாலும், அவர்கள் அரசாங்கத்தினுடைய ஆதரவு இல்லாமல் தங்கள் தொழில்களை நடத்திவிடமுடியுமா? அம்பாசிடர் கார் உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். நல்ல ஆற்றலுள்ள முதலாளிகள் வருகிறார்கள், அல்லது நான்கு பேர்கள் சேருகிறார்கள், கம்பெனி வைக்கிறார்கள். அம்பாசிடர் கார் உற்பத்தியாகிறது. சரி, இவர்கள் அம்பாசிடர் கார் உற்பத்தி செய்கிறார்கள். இன்னொருவர் இன்னொரு கார் உற்பத்தி செய்கிறார். வெளி நாடுகளிலிருந்து கார்கள் வருகின்றன. இப்படியெல்லாம் இருந்தால் அம்பாசிடர் காரை யார் கேட்பார்கள்? அது விலையாகுமா? தொழில் நடக்குமா? கார் உற்பத்தி செய்யவேண்டுமென்றால், பெரிய தொழிற்சாலைகள் வேண்டுமென்றால்—நமக்கு இன்னும் பல தொழிற்சாலைகள் வேண்டும்—அதற்கு வேண்டிய இரும்பு வேண்டுமென்றால், அதற்கு கோட்டா இல்லாமல் எப்படி முடியும்? இரும்பை கடையிலே போய் வாங்குவார்களா? எங்கே வாங்குவது? அப்படி கடையிலே தாராளமாக விற்கிறதா, கள்ள மார்க்கெட்டில் விற்கும்; கள்ள மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கலாம். பற்றாக்குறை இருக்கிற வரையிலே ஒரு ரெகுலேஷன் இல்லாமல் போனால் எப்படி முடியும்? பெரிய தொழில் அதிபர்களாக இருந்தாலும், அவர்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைத்துவிடுமா? சரி, தொழிலாளர்கள் வருகிறார்கள். தொழிலாளர்களை எப்படி வேண்டுமானாலும் அவர்கள் சுரண்டலாம், எப்படி வேண்டுமானாலும் அவர்கள் தொழிலாளர்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நாம் பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா? எப்படியாவது போகட்டும் என்று விட்டுவிட்டால், தொழிலாளர்கள் வேலை செய்வார்களா? எங்கே தொழில் நடக்கும்? மேற்பார்வை வேண்டாமா? அதற்கு ஒரு



கண்ட்ரோல் வேண்டாமா? கண்ட்ரோல் இல்லாமல் எப்படி நடக்கும்? காரில் போகிறோம், சரி, எப்படியாவது போகட்டும் என்று விடுவதா? கண்ட்ரோல் இல்லை, போலீஸ்காரர் நிறுத்துவதில்லை, கையை காட்டுவதில்லை என்றால் என்ன நேரிடும்? என் டிரைவர், நான் போகிறேன், ரோடு என்னுடையது, யார் நிறுத்திவிடுவது என்று சொன்னால் என்ன ஆகும்? பெரிய காரியமாக இருந்தாலும், சிறிய காரியமாக இருந்தாலும் சரி, கண்ட்ரோல், கண்ட்ரோல் என்று ஏளனமாக பேசுவதில் என்ன பயன்? ஏதோ ஆசைப்பட்டு கண்ட்ரோலை வைத்திருக்கிறோம் என்பதல்ல, மக்களுக்காக, மக்களுடைய நன்மைக்காக, பாதுகாப்புக்காக, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வைத்திருக்கிறோம். ஒரு சின்ன தொழிலாக இருந்தாலும், அதை ஒரு வரம்பு இல்லாமல், யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்றால் எப்படி நடக்கும்? தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் எப்படிக் கிடைக்கும்? மூலப் பொருள்கள் வேண்டாமா? அல்லது யார் வேண்டுமானாலும் செய்யலாம், அரசாங்கத்தின் அனுமதி வேண்டாம் என்று சொன்னால், எவ்வளவு திறமை வாய்ந்தவர்களாக இருந்தாலும், செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும், பணம் இருந்தாலும், அவர்களே எல்லாவற்றையும் நடத்தமுடியுமா? இதையெல்லாம் கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏளனமாகச் சொல்லுவதால் என்ன பலன்? இதுதான் நாம் தெரிந்துகொண்ட 'சதுர் வேதங்கள்' என்றால், என்ன பலன்? கண்ட்ரோல், பர்மிட், லைசென்ஸ், கோட்டா என்றால், அவைகளும் வேண்டியவைதான். நான் ஒன்றும் 'அபாலஜெடிக்' ஆக இல்லை. வேண்டிய அளவுக்குத்தான் வைத்திருக்கிறோம். பிடிக்காதவர்கள் பரிகாசமாகப் பேசட்டும். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. மக்கள் கவலைப்பட மாட்டார்கள்.

திட்டத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் பல தெரிவிக்கப்பட்டன. மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், கனம் சுதந்தராக் கட்சி தலைவர் அவர்கள் கூறினார்கள், நாங்களெல்லாம் ஒன்று; நாங்களெல்லாம் ஏன் ஒன்றாக இருக்கக் கூடாது; ஏன் ஒன்றாகக் கூட்டு சேரக்கூடாது என்று கேட்டார்கள். அவர்களுக்குச் செய்ய உரிமை உண்டு. நான் அதற்காக வருந்தவில்லை, பொறாமைப்படவில்லை, கவலைப்படவில்லை. சாதாரணமாக ஆங்கிலத்தில் ஒன்று சொல்லுவார்கள் 'agree todiffer' என்று. அதுமாதிரி, வித்தியாசம் இருந்தாலும், அந்த வித்தியாசங்களை வைத்து, அதிலேயே ஒரு ஒற்றுமை. அவரவர்களுடைய கருத்து வேற்றுமை இருக்கட்டும். அது கூட இல்லை, வேறு ஒற்றுமையும் இருக்கலாம். இந்த திட்டத்தைச் சமர்ப்பித்த, இந்த அரசாங்கத்தை, இந்தக் கட்சியை ஒழிக்க வேண்டும் என்று இருக்கட்டும். மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், கனம் சுதந்தராக் கட்சித் தலைவர் அவர்கள் உணர்வார்கள், அவர்களே ஒப்புக் கொள்ளுவார்கள். இன்றைக்கு இந்த மூன்று நான்கு நாட்களிலே நடந்த விவாதத்திலே பலப்பட்டது.

இந்த ப்ளானுக்கு 'ஹாலிடே' வேண்டும் என்று சொல்லப்பட்டது. கனம் அங்கத்தினர் திரு. சின்னசாமி கூறினார்கள். கனம் சுதந்தராக் கட்சித் தலைவர் அதை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால், கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திருத்தமே அது பற்றித்தான். இங்கே பேசியதை வைத்துச் சொன்னால் நான் புரிந்து கொள்ள முடியும். ஆனால் எங்கோ யாரோ பேசினார்கள் என்று அதற்கு ஒரு திருத்தம் என்று கொடுப்பது? கனம் அங்கத்தினர் திரு. சின்னசாமி பேசிய பிறகு, கனம் சுதந்தராக் கட்சித் தலைவர் பேசிய பிறகு கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இதைக் கொடுத்திருந்தால் கூட புரிந்து கொள்ள முடியும். ஆனால் எங்கோ எதோ பேசினார்கள் என்று, இங்கே ப்ளான் 'ஹாலிடே' கூடாது என்று திருத்தம் கொடுப்பது எப்படி சரியாகும்? ப்ளானிங் கமிஷன் சொல்லியிருக்கிறதா? பிரதம மந்திரி சொன்னாரா? அல்லது மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் சொன்னாரா? அல்லது இந்த அரசாங்கம் தன் சிபாரிசாகச் சொல்லியிருக்கிறதா? நான் இங்கே கொடுத்த அறிக்கையில் அப்படிப்பட்ட கருத்து சொல்லப் பட்டிருக்கிறதா? இப்படி ஒரு திருத்தமா? நாம் இருப்பது ஜனநாயக உலகம்: அவரவர்கள் கருத்துக்களை அவரவர்கள் தாராளமாக வைத்துக் கொள்ளலாம், பேசலாம், வாதம் செய்யலாம். ஆனால், எதாவது முடிவு எற்பட்டால், ஈடு பட்டவர்கள், கட்டுப்பட்டவர்கள் செய்திருந்தால் இந்தத் திருத்தத்திற்கு நியாயம் உண்டு. எங்கோ சொன்னார்கள், பத்திரிகையில் அபிப்பிராயம் வந்திருந்தது என்பதை வைத்துக் கொண்டு திருத்தம் கொடுப்பது என்று வந்தால், அது இந்த மன்றத்தின் நடைமுறைக்கு உகந்ததல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. ஒரு திருத்தம் கடைசியாகப் பிரேரேபிக்கப்பட்டது. அந்தத் திருத்தம் எதோ ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை எற்றுக் கொள்ள வேண்டும் என்பது. திட்டங்கள் ஆராயப்படுகின்றன. எவ்வளவு தூரம் திட்டங்களைச் சேர்க்கலாம், எவ்வளவு தூரம் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்பதையெல்லாம் ஆராய்ந்து, முடிவு எடுத்துக் கொள்ளப் படுகிற விஷயம் அது. ஏதோ குறிப்பிட்ட திட்டத்தை இந்த நான்காவது திட்டத்திலே சேர்த்துக் கொள்ளுங்கள் என்றால், ஒவ்வொருவரும் அப்படி ஒவ்வொரு திட்டம் பற்றிச் சொல்லலாம். ஆகவே, திட்டம் பற்றி ஆராயாமல் அந்தத் திருத்தத்தை நான் எற்றுக் கொள்ள முடியாது. என்றாலும், இந்தக் கருத்து பொருத்த மட்டிலும், அக்கறை இருக்கிறது என்பதை உணராமல் இல்லை. ஆகவே, அந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் அவனாசிப் பிரதிநிதி கூறினார்கள், இந்த மேல் பவானி திட்டத்தைப் பற்றிய புள்ளிவிவரங்களிலே வித்தியாசம் இருக்கிறது என்று. திட்ட மதிப்பீடு 1,08,000 ஏக்கர்





என்றிருந்தாலும், 30,000 ஏக்கருக்கு மதிப்பீடு போடப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மொத்தம் கிடைக்கக் கூடிய தண்ணீரினால், விவசாயம் செய்யக் கூடிய நிலப் பரப்பு 1,08,000 ஏக்கர்கள். அதிலே உணவு தானியங்கள் சாகுபடி செய்யக் கூடியவை 30,000 ஏக்கர். உணவு தானியங்கள் சாகுபடி செய்யக் கூடியவையைப் போட்டு இருக்கிறது. அவ்வளவுதான்.

இன்னும் சில திட்டங்களைப் பற்றி பல உறுப்பினர்கள், தங்கள், தங்கள் தொகுதியில், தங்கள், தங்கள் மாவட்டத்தில் வேண்டியவைகளையெல்லாம், சேர்க்கப்படவேண்டியவைகள் என்று சொன்னார்கள். அவைகளெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பிரேரேபித்த திருத்தத்திலே சில திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சேலம் உருக்காலை, டீசல் என்ஜின் ஆலை, ஆயில் ரிஃபைனரி, இம்மாதிரித் திட்டங்களையெல்லாம் சேர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் நாங்கள் கேள்வி நேரங்களில் விளக்கங்கள் கூறியிருக்கிறோம். மீண்டும் கூற விரும்புகிறேன், சேலம் உருக்காலை வரும், அதில் ஐயம் வேண்டியதில்லை, அது வருகின்ற தருவாயில் இருக்கின்றது. இதற்காக சட்ட சபையிலே திருத்தமாகக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை. ஆயில் ரிஃபைனரிக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. அதோடு சேர்த்து ரசாயன உரத் தொழிற்சாலையும் இணைக்கப்பட்டுச் செய்ய வேண்டும் என்பது எற்பாடு. அது 'காம்ப்ளெக்ஸ்'. இரண்டும் சேர்ந்து சாங்ஷன் வரவேண்டும். அதிலேதான் தாமதம். அதே மாதிரித்தான் மரைன் டீசல் என்ஜின் பாக்டரியும். அதை எண்ணூரில் வைக்க வேண்டும் என்கிற உத்தேசம் இருந்தது. அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. அத்தகைய திட்டங்கள் வர, திருத்தங்கள் அவசியம் இல்லை, அது முறையல்ல என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிரேரேபித்த திருத்தத்திலே **structural changes** வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அதற்கு விளக்கமும் அவர்கள் பேசியபோது கூறினார்கள். மாவட்ட அடிப்படையில். அடித் தளத்திலிருந்து, திட்டம் தீட்டப் படவேண்டும்; அதற்கப்புறம் மாநிலத்திலே அதை மேற்கொண்டு ஆராயவேண்டும்; மாநில ரீதியில் ஆராய்ந்த பிறகு, அது மண்டல ரீதியில், அதாவது 'ஸோனல்' ரீதியில் ஆராயப்பட்டு, அதற்கப்புறம் அகில இந்திய ரீதியில் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதிலே வித்தியாசம் இல்லை. இன்றைக்கு அரசாங்கம் திட்டம் இடுவதில் மேற்கொண்டிருக்கும் வகைக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் இல்லை. நாம் திட்டம் அமைக்கும் போது, ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒரு 'ஒர்கிங் க்ரூப்' என்று போட்டு, மாவட்ட ரீதியில் எடுத்துச் செய்கிறோம். என்னென்ன தேவைகள் இருக்கின்றன, அவசியம் என்ன, என்று தெரிந்து கொள்கிறோம்; மக்கள் பிரதிநிதிகள் டெவலப்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

மென்ட் கவுன்சிலில் தெரிவித்திருக்கிறார்கள்; இதற்குமுன்னெல்லாம் வைத்திருந்தால், திட்டங்களைத் தனித்தனியாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். மண்டல ரீதியில், இந்த நாலு ஸ்டேட்டுகளும் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார்கள். இப்பொழுது, 'இன்பார்மலாக' தென் மண்டலத்தைச் சேர்ந்த நான்கு ஸ்டேட் முதல் அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவதும் உண்டு. எந்தெந்த அளவுக்குச் சிந்தித்து, அவரவர்களுடைய கருத்துக்களையும், அனுபவங்களையும், பரிமாறிக்கொண்டு, என்னென்ன வகைகளில் செய்யலாம் என்று கலந்து ஆலோசிக்கிறோம். அது சம்பிரதாய முறையில் இல்லை என்றாலும், இன்பார்மலாக செய்கிறோம். அப்படிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம் இது. ஆனாலும் பல கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இரண்டு மாநிலங்களாக இருந்தால், மின்சார, நீர்பாசன திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரை, அப்படிப்பட்ட திட்டங்கள் குறித்து இன்னும் துரிதமாக முடிவுகள் எடுக்கப் படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது வேண்டியதுதான். ஆனால், இதிலே அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல, மண்டல ரீதியில் முதல் அமைச்சர்கள் மத்திய சர்க்கார் அமைச்சரையும் கூட வைத்துக்கொண்டு பேசினாலும் கூட இந்த மாதிரியான விஷயங்கள் சுலபமாகத் தீருவதில்லை. நான் ஜனநாயகத்தை ஏதோ குறை சொல்கிறேன் என்று யாரும் நினைக்கக் கூடாது. ஜனநாயகத்தை ஒரு நாளும் நான் குறை சொல்ல மாட்டேன். ஆனால், ஜனநாயக வகையிலே ஏற்படுகிற நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையிலே தான் நான் குறிப்பிடுகிறேன். ஜனநாயகத்தை நாம் கையாளுகிறோம், ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியல் வருகிறது; கட்சிகள் இருக்கின்றன. நியாயம் என்று ஒரு மாநிலம் சொல்வதை மற்றொரு மாநிலத்தின் பொறுப்பில் இருக்கிறவர்கள் நியாயம் என்று ஏற்றுக் கொண்டால், மற்றவர்கள் அதைப்பற்றி எப்படி மக்களிடத்தில் எடுத்துச் சொல்வார்களோ, மக்கள் தவறுதலாக எடுத்துக்கொள்வார்களோ என்ற கவலை ஏற்படுகிறது. இதெல்லாம் ஜனநாயக முறையில் தவிர்க்கக்கூடாத நிலை தான் என்றாலும் அதையும் நாம் சமாளிக்க வேண்டித்தான் இருக்கிறது. அதற்காக, ஜனநாயகம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எதேச்சாதிகார நாடுகளில் மேலே இருக்கிறவர்கள், மத்திய அரசாங்கத்திலே இருக்கிறவர்கள் உத்தரவு போட்டு நிறைவேற்றிவிடலாம். ஆனால், ஜனநாயக அமைப்பில் நாம் அப்படிச் சொல்லமாட்டோம்; ஒருக்காலும் நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன். ஜனநாயகத்திலே இருக்கும் நிலையைத்தான் நான் எடுத்துச் சொல்கிறேன். அதை நாம் சமாளிக்கத்தான் வேண்டியிருக்கிறது. அது தான் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம்; ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் உள்ள தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதிலே அல்லது தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டு மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே உள்ள கஷ்டங்களை நான் எடுத்துக்



10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கூற விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு இந்த அமைப்பையே மாற்ற வேண்டும் என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதிற்கில்லை. இன்றைக்கு அதே முறைதான் இருக்கிறது. இதற்கு மேலே மாற்றுவது சரியல்ல, சம்பிரதாய முறையிலே மாற்றுவது சரியல்ல என்று தான் நான் கூற விரும்புகிறேன்.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். மற்றவர்களும் குறை கூறினார்கள். "மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், இதனால் என்ன விளைவு?" என்று கேட்டார்கள். கனம் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்களும் அவர்களுடைய திருத்தத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசினார்கள். மற்ற உறுப்பினர்களும் கூடப் பேசினார்கள். 'பணக்காரன் மேலும் பணக்காரனாகப் போகிறான்' என்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கூறினார்கள். 'பணக்காரன் பணக்காரனாகப் போகிறான், வேறொன்றையும் கண்டது இல்லை' என்று சொன்னதோடு நிற்கவில்லை. 'ஏழை ஏழையாகப் போகிறான்' என்றும் சொன்னார்கள். 'பணக்காரன் பணக்காரனாகப் போகிறான்' என்பது இருக்கட்டும். ஆனால், 'ஏழை ஏழையாகப் போகிறான்' என்று அவர்கள் சொன்னதை நான் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது. இன்றைக்கு எந்த தளத்திலே பார்த்தாலும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்குவதற்கு முன்பு இருந்த நிலைமைகளையும் இன்றுள்ள நிலைமையையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், எல்லாத் தளங்களிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எந்தக் கிராமத்திலும் மக்கள் அதை மறுக்க மாட்டார்கள். வாதத்திற்கு வேண்டுமானால் இங்கே சிலர், 'அரசாங்கம் சரியாக நடத்தவில்லை' என்று பேசலாம். ஆனால், மக்கள் உண்மை நிலையை உணர்கிறார்கள். அரசாங்கம் எல்லாவற்றையுமே செய்துவிட்டதா? என்றால் 'இல்லை' என்று தான் நானும் ஒப்புக்கொள்கிறேன். குடி தண்ணீர் திட்டம் இன்னும் பல இடங்களுக்குக் கிடைக்கவில்லை. சில இடங்களில் கேவலமான நிலைமை இருப்பது எனக்கு மிகுந்த கவலை அளிக்கிறது. ஆகவேதான் இதிலே ஒரு உறுதி கொண்டிருப்பதாக நான் தெரிவித்தேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு ஏற்பாடும் செய்திருக்கிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் எந்தக் கிராமத்திலும் போதிய அளவு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத நிலை இருக்கக்கூடாது என்ற உறுதியோடு இதை எப்படி நிறைவேற்றுவது என்பதிலே நாம் கவனம் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறோம்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, ரஷ்ய அரசாங்கத்தினால் அழைக்கப்பட்டு நானும் சில சகாக்களும் அங்கே விவசாய அபிவிருத்தியைக் காணவேண்டும் என்று போயிருந்தோம். எங்களுக்கு நல்ல உபசாரம் செய்தார்கள். 'ஹாஸ்பிடாலிடி' யில் அவர்கள் முதன்மையாக நிற்கிறார்கள். எங்களுக்கு வேண்டிய

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

வசதிகளெல்லாம் அளித்தார்கள். ஒரு நாள் கோதுமைப் பண்ணைகளையெல்லாம் பார்த்துவிட்டு அங்குள்ள Farm House இல் அன்று மாலை இறங்கினோம். அது ஒரு நல்ல 'கெஸ்ட் ஹவுஸ்'. அங்கே தான் நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு அறையில் நான்கு பேர் படுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அரசாங்க கெஸ்ட் ஹவுஸில் ஒரு அறையில் நான்கு பேர் படுத்துக் கொள்ள வேண்டியிருந்த நிலையில், 'பாத் ரூம் எங்கே இருக்கிறது?' என்று கேட்டோம்—இப்பொழுது நம் நாட்டில் உள்ள ட்ராவலர்ஸ் பங்களாக்களில் மிகவும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. முப்பது வருஷங்களுக்கு முன்பு எங்கோ போக வேண்டும்;—நாங்கள் ரஷ்யாவிற்குச் சென்றிருந்த போது அங்குள்ள நிலைமை இப்படித் தான் இருந்தது. சற்று தூரம் சென்று வருவோம் என்றாலும், தண்ணீர் உண்டா என்றால் இல்லை. போகிற பாதையோ கரடு முரடாக இருக்கிறது. இருட்டிப் போயிற்று. பூச்சிப் புழு இருக்குமோ என்ற பயம் இருந்தாலும், பூச்சி இருக்காது என்ற நம்பிக்கை இருந்தது. அது ஒருபுறம் இருக்கட்டும். நல்ல சாப்பாடு போட்டார்கள். குறையில்லாமல் சாப்பாடு போட்டார் கள். படுத்துக்கொண்டால் இரவில் தண்ணீர் வேண்டுமே என்றால், சிறிய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து வைத் தார்கள். 'இது போதாது' என்று நான் சொன்னேன். சொன்ன வுடனே, இன்னும் இரண்டு மூன்று பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து வைத்தார்கள். தூங்கியெழுந்ததும் காலைக் கடன் களை முடிக்கவேண்டும். எப்படியோ சமாளித்தோம். கொஞ்சம் அதிகமாகத் தண்ணீர் கொடுத்தார்கள்; சமாளித்தோம். அதற்குப் பிறகு குளிக்கவேண்டுமே. குளிப்பதற்கு ஒன்றும் இல்லை. 'நாங்களெல்லாம் கொஞ்சம் குளிக்கவேண்டும்' என்று சொன் னேன். அப்பொழுது இரண்டு மூன்று காரை வைத்து எங்களைக் குளிக்க அழைத்துச் சென்றார்கள். எங்களில் சில பேர் குளிக்கப் போனோம். மற்றவர்கள் 'பரவாயில்லை' என்று சொல்லி விட்டார்கள். எங்களை நான்கு மைல், ஐந்து மைல்களுக்கு அப்பால் அழைத்துக்கொண்டு சென்றார்கள். அந்த ரோடில் அந்தக் கார் தான் போகும். அங்கே தொழிலாளர்களுக்காகச் சில வசதிகளைச் செய்திருந்தார்கள். வெந்நீர் போட்டு வைத்திருந் தார்கள். நாங்கள் நான்கு பேர்களும் அங்கே துணி மணி எடுத்துக்கொண்டு போய்க் குளித்துவிட்டு வந்தோம். மைசூரி லிருந்து வந்த என்னுடைய சகா ஒருவர், காரை வழியில் நிறுத்தி, சற்று தூரம் சென்றுபோய்க் காலைக் கடனை முடித்துக்கொண்டு வந்து விட்டார். இதையெல்லாம் நான் சொல்கிறேன் என்றால் நான் ஏதோ அவர்களைக் குறை கூறுவதற்காகச் சொல்வதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் இன்றைக்கு அற்புதமான வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். மற்ற லோகங்களிலே கூட சஞ்சாரம் செய்கின்றார்கள். நம்முடைய நாட்டிலே வந்து பல தொழில்களை அமைப்பதற்கு நமக்குப் பேருதவியாக இருக் கிறார்கள். அவர்கள் சிறந்த வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள்.



10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இருந்தாலும், அவர்களுடைய நிலையை, நான் கண்டதை, சொல் கிறேன். அங்கே நான் சென்றிருந்த இடத்தில் குடி தண்ணீர் இல்லை. பக்கத்திலே ஏதோ ஒரு குட்டை இருக்கிறது. அதில் சுத்தமான தண்ணீர் இல்லை. நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் நிலைமை அப்படி இருக்கிறது அந்த நாட்டில் "மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும் விவசாய உற்பத்தி என்ன ஆயிற்று?" என்று இங்கே கேட்கிறார் கள்—அங்கே உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களைப் பார்த்தேன். பருத்தி, கோதுமை, உருளைக்கிழங்கு, ஆப்பிள் போன்ற பழ தினுசுகள் போன்ற பலவற்றிற்கும் தனித்தனியே ஆராய்ச்சி நிலையங்கள் அங்கே இருக்கின்றன. சிறந்த விவசாயக் கல்லூரி களும் இருக்கின்றன. அரிசியை எடுத்துக்கொண்டால் பல ஆயிரக் கணக்கான ஸ்ட்ரெயின்களை அவர்கள் காட்டுகிறார்கள். ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலுள்ள அரிசி வகையையும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டின் 'ஸ்ட்ரெயின்'னை எடுத்து அவர்கள் காட்டுகிறார்கள். அங்கே இப்படியெல்லாம் இருக்கிறது என்றாலும், பல ஐந்தாண்டுத் திட்டங்களை அவர்கள் நிறைவேற்றி இருந்தாலும், எவ்வளவோ விஞ்ஞான அறிவை அவர்கள் பெற்றிருந்தபோதிலும், அதிக நிலம் உள்ளவர்களாக இருந்தபோதிலும்—நம் நாட்டில் அவ்வளவு நிலம் இல்லை—அவ்வளவு நிலம் இருந்தும், அவர்கள் விவசாய அபிவிருத்தி யிலே இன்னும் வெற்றி காணவில்லை. நாம் அடைந்த சாதனையை அவர்கள் அடையவில்லை என்றும் நான் சொன்னேன். ரஷ்யா போன்ற ஒரு நாட்டை நான் குறை கூறும் வகையில் ஒருக்காலும் சொல்ல மாட்டேன். ஆனால், இருக்கிற நிலைமையை நான் சொல் கிறேன். கோதுமைப் பயிரைக் காட்டினார்கள். நெற்பயிரை 11-00 a.m.
எடுத்துக்கொண்டால் போதிய அபிவிருத்தி அங்கே ஏற்படவில்லை. அடிக்கடி அங்கே இருக்கிறவர்கள் கவலைப்படுகிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் பத்திரிகையிலே பார்த்திருப்பார்கள். ரஷ்யாவில் பண்ணவில்லையே, நாம் எதற்காகப் பண்ணவேண்டும்? என்று நான் அதை ஒரு சாக்காகச் சொல்லவில்லை. நாம் அற்புத மான சாதனையைச் செய்திருக்கிறோம் என்பதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்பு நான் தெரிவித்தது போல, முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் ஒருவித பஞ்ச நிலை இருந்தது என்பது கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகத்தில் இருக்கும். நாம் இந்த ஆட்சியை ஏற்றுக்கொண்டபோது அந்த நிலை இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் துவக்கிய போது தமிழ்நாட்டில் 38 லட்சம் டன் அரிசி உற்பத்தி இருந்தது. ஆனால், இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிறபோது 65 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று நாம் திட்டம் போட்டிருக் கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இது 11-30 a.m.
53 லட்சம் மெட்ரிக் டன்னை அதிகரித்தது. மூன்றாவது திட்டத்தின் இறுதியில்—நடப்புத் திட்டத்தின் இறுதியில் 65 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியாக இருக்கிறது என்று சொன்னேன். இது போதும் என்று சொல்லவில்லை. இருக்கிறதை உள்ளபடியே

சொல்லியிருக்கிறோம். நானே ஒப்புக்கொண்டிருக்கிறேன். நாம் போட்டிருக்கிற திட்டங்களினால் பலனே ஏற்படவில்லை என்றே சொல்லவில்லை. நாம் இன்னும் அதிகமாக எதிர்பார்த்தோம். அந்த அளவுக்குப் பலன் ஏற்படவில்லை என்று சொல்லியிருக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. தமிழ்நாட்டு விவசாயிகள் நவீன விஞ்ஞான முறைப்படி சாகுபடி செய்வதில் அதிக ஊக்கம் காட்டி வருகிறார்கள். அவர்கள் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டுதான் வருகிறார்கள். இருந்தாலும் இது போதாது. ஓரளவு இன்றைக்கு நம் மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவு உற்பத்தி செய்கிறார்கள். நமக்கு எவ்வளவு அரிசி வேண்டுமோ அதற்கு மேலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. முன்பு அப்படி இல்லை. இப்போது கேரளாவிற்கு விற்கக்கூடிய அளவிற்கும் கூட உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு திட்டத்திற்கும் இன்னொரு திட்டத்திற்கும் உற்பத்தி அளவில் ஏற்றத்தாழ்வு இருக்கிறதே என்று சொன்னார்கள். கம்பு, சோளம் போன்றவற்றைக் குறிப்பிட்டார்கள். ஒன்று, சிற்சில பருவங்களில் மழை தவறுகிறது. அல்லது, வேறு கோளாறு ஏற்படுகிறது. உள்ள நிலைமையை நாங்கள் சொல்லியிருக்கிறோம். மொத்தத்தில் சராசரியாகத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு, முதல் திட்டத்தைவிடக் குறைந்திருக்கலாம். ஆனால், நெல் விளைச்சலை எடுத்துக்கொண்டு பார்த்தால் திட்டத்திற்குத் திட்டம் அதிகமாகிக்கொண்டே வந்திருக்கிறது. தமிழ்நாடே இன்றைக்கு இந்தியாவில் முதன்மையாக இருக்கிறது. ஜப்பான் முதலிய மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ரொம்பக் குறைவுதான். இதற்கும் மேலேயே உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான் நம் நோக்கம். எப்போதும் சாசுரேஷன் பாயின்ட்--எடுத்துப் பார்த்தால்—கிராபில் முதல் இரண்டாண்டுகளில் திடீரென்று உயர்வு இருப்பது தெரியும். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் போகும். முதலில் வேகமாக இருந்திருக்கும் உற்பத்தி. அப்புறம் மெள்ள மெள்ளத்தான் போகும். அதனால் தான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லையே என்பது போலத் தோன்றும். இதனால் ஒரு காம்ப்ளசென்சி வேண்டாம். இப்போது புதிய விதை ரகங்களை எல்லாம் கையாள்கிறோம். ஜப்பானிகா இண்டிகா இன்னும் பல ஸ்ட்ரெயின்ஸ், ஹைப்ரிட் சோளம்---எல்லாவற்றிலும் இன்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப வகையில் சாதனை சாதிக்கப்பட்டிருக்கிறது, பலன் ஏற்பட்டு வருகிறது. இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அது போதாது. நான்காவது திட்டத்தில் இன்னும் அதிகமாக நம் கவனம் வேளாண்மைத் துறையில் செலுத்தப்பட வேண்டும் என்பதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். மூன்றாவது திட்டத்தைப் பொறுத்த வரையில் லட்சிய இலக்கை ஏன் அடைய முடியவில்லை என்றால் கனம் அங்கத்தினர்களுக்குத்



தெரியும். பருவ மழைக் கோளாறு, பூச்சித் தொல்லை நல்ல விதைகள் தயாரிப்பதில் உள்ள சிரமம், போதுமான ரசாயன உரம், பசுந்தாள் உரம், குப்பை உரம் கிடைப்பதில் உள்ள சங்கடம்---எல்லாம் தான் நம்முடைய உற்பத்தித் திறனைக் குறைத்திருக்கிறது. ரசாயன உரம் இன்று கைமேல் பலன் கொடுக்கிறது. இதை விவசாயிகளே ஒத்துக்கொள்கிறார்கள். முன்னால் எல்லாம் ஏற்கவில்லை. இதையே தான் ஆந்திர முதல் அமைச்சர் அவர்களும் கூடச் சொன்னார்கள். இன்றைக்கு ஆந்திராவைப் போலத் தமிழ்நாட்டிலும் அதிக அளவு ரசாயன உரம் பயன்படுத்தப்படவேண்டும் என்ற ஆர்வம் விவசாயிகளிடத்திலே ஏற்பட்டு வருகிறது. அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க நாட்டிலே உரத் தொழிற்சாலைகள் வைக்கப்படுகின்றன. புதிய தொழிற்சாலைகளை அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் போதவில்லை. இதற்கு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் போதுமான அந்நியச்செலாவணி வசதி செய்து தரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். மத்திய அரசாங்கமும் இதன் அவசியத்தை உணராமல் இல்லை. மேல்நாடுகளில் இருந்து வரவழைக்கத் தாராளமாகச் செலாவணி கொடுக்கிறார்கள் என்றாலும், அது போதவில்லை. போதுமான உரத்தை உற்பத்தி செய்யவும், மேல்நாடுகளில் இருந்து வரவழைக்கவும் ஏற்பாடு செய்து வருகிறோம். நிச்சயமாக நான்காவது திட்டத்தில் நம் லட்சியம் ஈடேறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில் மட்டும் தீவிர சாகுபடித் திட்டம் இருக்கிறது. அதை வேறு நான்கு மாவட்டங்களுக்கும் விஸ்தரித்து இருக்கிறோம். அதாவது சுலபமாகத் தண்ணீர் கிடைக்கக்கூடிய மாவட்டங்கள் ஆகிய மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கல்பட்டு—ஆகிய இந்த நான்கு மாவட்டங்களிலும்கூட தீவிர சாகுபடித் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது கனம் உள்துறை அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் மிகவும் உற்சாகமான முறையில் இதில் ஈடுபடுவதைக் கண்டோம். இதை வேறு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்று நாங்கள் யோசிக்கிறோம். இன்றைக்கு விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நவீன விஞ்ஞானக் கருவிகளை வழங்குதல், விதை, உரம் போன்றவற்றை வழங்குதல், இன்னும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க கடன் வசதிகளைப் பெருக்குதல், ஆகிய எல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இன்னும் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் நன்றாக ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்து இன்னும் வேகமாக திறம்பட நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இம்மாதம் 27, 28, 29-ஆம் தேதிகளில் தஞ்சை ஜில்லாவில் ஒரு கருத்தரங்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்க உணவு அமைச்சர் அவர்களும் வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். டெல்லியில் இருந்து நிபுணர்களையும் அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கேயே உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தஞ்சை

மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், அதோடு மற்ற நான்கு மாவட்ட விவசாயிகள், கலெக்டர்கள் ஆகியோர் கலந்து பரிசீலனை செய்து, நன்றாக ஆராய்ந்து, தனித்தனிக் குழுக்கள் அமைத்து ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதிலே விவசாயிகள் ஊக்கம் காட்டவில்லை என்று சொல்வது சரியல்ல.

அடுத்து, உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோதே, அதைத் தயாரித்தபோதே, இதனால் அதிக நிலம் மொத்தமாக வராது என்று சொல்லியிருக்கிறேன். உச்ச வரம்பு என்பது ஒரு லட்சியம், ஒரு கொள்கையைப் பற்றியது. ஒருவர் நூறு ஏக்கர், ஆயிரம் ஏக்கர், ஐநூறு ஏக்கர் என்று வைத்திருப்பது தவறு. இதற்கு ஒரு வரம்பு வேண்டும். காரணம் நிலம் மனிதன் உற்பத்தி செய்தது அல்ல, இயற்கை தந்துள்ளது. இதற்கு உச்சவரம்பு வேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்போது மற்றதற்கும் உச்சவரம்பு வேண்டும் என்று சொல்கிறார்கள். நிலத்தைப் பொறுத்தவரையில் அதற்கு ஒரு உச்ச வரம்பு வேண்டும். நாட்டின் செல்வ நிலையை உயர்த்துவதற்கு, உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு இது அவசியம் என்று கருதப்பட்டது. ஆகவே, நிலத்தின் உற்பத்தி பாதிக்கப்படாத அளவில் ஏற்பாடு செய்தோம். அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டு வருகிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவ்வாறு செய்வதில் எங்கெங்கே நிலம் மிச்சமாகிறதோ அது நிலம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும். இன்னும் குத்தகைக்கு நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் பாதிக்கப்படாத வகையிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இவ்வளவு தூரம் உற்பத்தி பெருகி இருக்கிறதென்றாலும் விலைவாசி குறையவில்லையே என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். விலைவாசி குறைவதற்கு உற்பத்தி பெருகுவது மட்டும் காரணமாக இருக்க முடியாது. மற்ற நாடுகளிலும் இதைக் காண்கிறோம். விலைவாசி வேறு காரணங்களால் ஏறிக் கொண்டே இருக்கிறது. திட்டங்களை நாம் நிறைவேற்றுகிற போது மக்களிடையே வாங்கும் சக்தி அதிகமாகிறது. பணம் ஒரு சிலரிடம் குவிந்து கிடக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். பணம் பலரிடம் பரவுகிறது. பணப்புழக்கம் ஏற்படுவதால்தான் வாங்கும் சக்தி அதிகமாகிறது. நான் சொல்வதையே கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் தம் கருத்துக்குத் தகுந்த காரணங்களாக எடுத்துக்கொண்டு—திட்டம் வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள். திட்டத்தையே நிறுத்தி வையுங்கள் என்று சொல்லலாம்—திட்டத்தை நிறுத்தி வை என்பதற்கும் விலைவாசி உயர்வுக்கும் உள்ள நிலையைச் சொல்கிறேன். இதற்குப் பணப் புழக்கம் ஒரு காரணம். பர்ச்சேசிங் பவர் வந்து விட்டதே என்று நான் வருத்தப்படவில்லை. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் போதிய அளவு பர்ச்சேசிங் பவர் வரவில்லை என்றுதான் சொல்வேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'சராசரி வரு





மானம் 68 பைசா' என்று சொன்னார்கள். உண்மைதான். இன்னும் சில இடங்களில் அதற்கும் குறைவாக இருக்கிறது என்பதைப்பற்றியும் சொன்னார்கள். சராசரி வருமானம் 68 பைசா என்றால் என்ன அர்த்தம்? பல பேர்களுக்கு வேலையில்லை. கிராமங்களிலேயெல்லாம் விவசாயிகள் ஆள் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் டிராக்டர் போன்ற இயந்திரங்களைக் கேட்கிறார்கள். அவர்களுக்கு ஆள் கிடைக்கவில்லையென்பது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. தொழில்கள் பரவவில்லையென்று சொன்னார்கள்; எங்கே பார்த்தாலும் தொழில்கள் பரவியிருக்கின்றன. ஆகவே, வேலைக்கு வருபவர்கள் தொழில்களிலே ஈடுபடுகிறார்கள், ஆனால் கஷ்டப்பட்டு நிலத்திலே செய்யக்கூடிய விவசாய வேலைக்கு வருவதற்கு யாரும் தயாராக இல்லை. தொழிலாளர்களைப்பற்றிச் சொல்லும்பொழுது, டில்லியிலே நடந்த கருத்தரங்கில் கூடச் சொல்லப்பட்டது. தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டு வருகிறது, அவர்களுடைய விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அவர்களுக்கு வீட்டு வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இவை எல்லாம் ஒருபுறம் இருக்க அவர்கள் சுலபமாகக் கிடைப்பதில்லை. மேன்பவர் இருக்கிறது என்று நினைக்கிறோம். ஒரு பக்கத்தில் நாம் அதைப் பயன்படுத்திக் கொள்கிறோம். மற்றொரு பக்கத்தில் பார்த்தால் கிராமங்களில் 'மேன்பவர்' கிடைக்கவில்லை. சராசரியில் பார்த்தால் பல பேர்களுக்கு வேலையில்லை. விவசாயிகளுக்கும் வருஷம் பூராவும் வேலையில்லை. ஆகவே, இதற்கெல்லாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பெரிதும் இடம் கொடுத்திருக்கிறோம். ஆகவே, எப்படியும் விலைவாசி உயருகின்றது என்று சொல்லுகின்றபொழுது, அந்த விலைவாசி உயர்வை உணவு தானியங்களைப் பொறுத்தமட்டிலாவது நாம் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்குத்தான் கண்ட்ரோல் வந்திருக்கிறது. கண்ட்ரோலே வேண்டாமென்று கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் சொன்னால், எப்படியாவது விலைவாசி ஏறட்டும் என்றுதான் சொல்கிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி:** சர்க்கார் நெல்லை விவசாயிகளிடமிருந்து 23 ரூபாய், 27 ரூபாய் என்ற அளவிலே வாங்குகிறது. ஆனால், மார்க்கட்டு விலை 40 ரூபாயாக இருக்கிறது. ஆகவே, இதில் விவசாயிகளுக்கு 15 ரூபாய் வரையிலும் நஷ்டம் ஏற்படுகிறது. அரசாங்கம் அவர்களுக்கு, அமோனியம் சல்பேட், கலப்பை இவைகள் வாங்கிக் கொடுத்து வசதி செய்வதும் கிடையாது. ஆகவே, மற்ற தொழில்களைச் செய்பவர்கள் எல்லாம் ஏகபோக லாபம் அடிக்கிறபோது, இந்த விவசாயிகள் மட்டும் ஏன் கஷ்டப்பட வேண்டும்? இப்படி விவசாயிகளிடமிருந்து நெல்லைக் குறைந்த விலைக்கு வாங்குவது மறைமுக வரியாகாதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ரொம்ப மகிழ்ச்சி வேறு தொழில்களிலே இருப்பவர்கள் லாபம் அடைவதாகச் சொல்வதைப் பற்றி நான் ரொம்ப மகிழ்ச்சியடைகிறேன். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும் இதை ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன். ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில்

தொழில் துறையிலே ஏகபோக வியாபாரத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதற்கு என்ன என்ன வழிகளில் கன்ட்ரோல், விலைகளைப் போட வேண்டுமோ அவைகளைப் போட்டுக் கொண்டு தான் இருக்கிறோம். நெல்லுக்கு மட்டும் ஏன் இந்தக் கன்ட்ரோல் என்று கேட்டார்கள். ஏனென்றால் நாம் அரிசி தான் சாப்பிடு கிறோம். அரிசிதான் ஸ்டேபிள் ஃபுட் ஆக இருக்கிறது. அரிசியை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுடைய தொகையைக் காட்டிலும், வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களுடைய தொகைதான் அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில்தான் கன்ட்ரோல் வைத்திருக்கிறோம். அதே சமயத்தில் விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு 'சப்போர்ட் பிரைஸ்' வைத்திருக்கிறோம். முன்பெல்லாம், அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் குறைந்த விலையில்தான் ப்ரொக்யூர் செய்தோம். ஆனால், இப்பொழுது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையில் விலையை நிர்ணயம் செய்திருக்கிறோம். குறைந்த பட்ச விலையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதேதான் சப்போர்ட் பிரைஸ். அதிக பட்ச விலையையும் வைக்க வேண்டும். அதிக பட்ச விலையை வைக்கவில்லையென்றால் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நலனைப் பாதுகாக்க முடியாது. ஒரு பக்கத்தில் மினிமம் பிரைஸ், மற்றொரு பக்கத்திலே மாக்சிமம் பிரைஸ் வைத்திருக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் கொள்முதல் செய்வதால், கடன் கொடுத்தாலும் அவர்களால் பம்பு செட்டுகள் வைக்க, கிணறுகள் வெட்ட முடியவில்லை. விவசாயிகளில் 100-க்கு 60 பேர்கள் 50 சென்டிலிருந்து 3½ ஏகர் நிலம் வரை தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அரசாங்கம் என்ன வசதி செய்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியத்தை அவர்கள் ஓரளவு விற்பதற்கு அவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையைத்தான் நிர்ணயித்திருக்கிறோம். ஆகவே, என்ன வசதி செய்தார்கள், என்ன கடன் கொடுத்தார்கள் என்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் நாம் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே செய்து கொடுக்கிறோம். இந்த விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று கண்ட்ரோல் போடுகிறோம். மக்களைப் பாதுகாப்பதற்காகக் கன்ட்ரோல் அவசியமாக இருக்கிறது. கன்ட்ரோல் போட்டு தொந்தரவு செய்யவில்லை. 'மார்க்கட்டபிள் சர்பிளசை', விலைக்கு எடுத்துக்கொள்கிறோம். விவசாயிகளிடம் தங்களுக்குப் போக, தங்களைச் சார்ந்தவர்களுக்குப் போக, தங்களைச் சேர்ந்த பண்ணையாட்களுக்குப் போக மிச்சம் இருக்கிறது. அதை விற்கும்பொழுது இந்த விலைக்கு விற்பனை செய்யுங்கள் என்று சொல்கிறோம். கன்ட்ரோல் என்றால் மார்க்கட்டபிள் சர்ப்பளஸ் எவ்வளவு ப்ரொக்யூர் செய்ய முடியுமோ அவ்வளவு அரசாங்கம் செய்கிறது. இப்படிச் செய்வதால் வியாபாரத்தில் அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதில் அரசாங்கம் லாபம் எடுக்கிறது என்று சொன்னார்கள். அது





அல்ல. நியாயமாக மக்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் அரசாங்கம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படியில்லையென்றால் சென்ற செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஏற்பட்ட நிலைமையை மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்—நிலைமை மாறிவிடும். சென்ற செப்டம்பரிலே அக்டோபரிலே பார்த்தோம். க்யூ நின்றதைப் பார்த்தோம். வியாபாரிகளையும் விவசாயிகளையும் நம்பித்தான் அவர்களிடம் இதை விட்டிருந்தோம். ஆனால் வியாபாரிகள் நியாயமான அளவுக்கு விற்பார்கள் என்று நினைத்தோம். அது தவறி விட்டது. ஆகவேதான் கொள்முதலை நேரடியாக அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்தது. அரசாங்கம் எடுத்துக்கொள்கிறார்கள் என்றால், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் எடுத்துக்கொள்வது, அல்லது அவர்கள் நியமித்த லைசென்ஸ்டு டீலர்ஸ் இவர்கள் மூலமாக சர்க்காருடைய ஏஜெண்டுகளாக உள்ள இவர்கள் மூலமாக கொள்முதல் செய்கிறார்கள். இப்படிக் கொள்முதல் செய்வதைச் சேர்த்து வைக்கிறோம். இதற்காகப் பெரிய கோடவுன்கள் எல்லாம் கட்டியிருக்கிறோம். சேர்த்து வைத்துக்கொண்டு, அவ்வப்பொழுது மக்களுக்குக் கொடுக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாகச் சொல்கிறார்களே, அப்படியானால் இந்தப் பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் ஒன்று சொல்லிக்கொண்டு இருக்கிறேன். இன்னொன்று கேட்டால் எப்படிச் சொல்வேன்?

MR. SPEAKER : The hon. Member cannot refer to such subjects. He can seek only clarification on the point the Hon. Chief Minister is referring to . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் எவ்வளவுதான் செயினை விடாமல் பேசிக்கொண்டிருந்தாலும் இப்படிக் கேட்பதால் என்னால் முடியவில்லை. அதற்கும் ஒரு வரம்பு உண்டு.

MR. SPEAKER : The hon. Member cannot refer to all the subjects that come to his mind.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாம் அவ்வாறு கொள்முதல் செய்து அதை மக்களுக்கு விநியோகிக்கிறோம். டில்லியிலே இதைப்பற்றி இன்னும் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அவற்றைப்பற்றியும் விளக்க விரும்புகிறேன். சென்னை நகரத்திலேயும், மற்றும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நகரப் பிராந்தியங்களிலும் 'இன்ஃபார்மல் ரேஷனிங்' என்று வைத்து கார்டு கொடுத்து 8 அவுன்ஸ் அரிசியும், 4 அவுன்ஸ் கோதுமையும் மொத்தம் 12 அவுன்ஸ் வழங்குகிறோம். அதற்காக நாம் ஸ்டாக் வைத்திருக்கிறோம். அதோடு கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களிலே, பரிபூரணமாக ஜில்லா பூராவும், நகரப் பகுதிகள், கிராமப்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

பகுதிகள் எல்லாவற்றிற்கும் இந்த 'இன்பார்மல் ரேஷனிங்' 12 அவுன்ஸ் என்ற அளவில் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம்.

இப்போது திருநெல்வேலி மாவட்டத்திலே மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டு விட்டது. கோவையிலும் பற்றுக்குறை இருக்கிறது. இராமநாதபுரத்திலும் பற்றுக்குறை இருக்கிறது. ஆகவே, இந்த மூன்று பெரிய மாவட்டங்களிலும் பரிபூரணமாக ஜில்லா பூராவும் கிராமப் பகுதி, நகரப் பகுதி பூராவும் நாம் ரேஷனிங் கொண்டு வந்திருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் 8 அவுன்ஸ் அரிசியும் 4 அவுன்ஸ் கோதுமையும் கொடுக்கிறோம். கோதுமை வாங்காவிட்டால் நிர்ப்பந்தம் இல்லை. சில பேர் கோதுமை வாங்குவதில்லை. இந்த மாதிரி விநியோகம் செய்வதன் மூலமாக அரிசியைப் பொறுத்தமட்டில் நமக்கு ஒரு மாதத்திற்கு 70,000 டன் செலவாகிறது. ஆந்திரத்திலிருந்து நம்முடைய ராஜ்யத்திற்கு ஒரு லட்சம் டன் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. நாம் கேரளாவுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திரத்திலிருந்து வர வேண்டிய லட்சம் டன்னில் 37,000 டன்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. இப்போது சென்னை நகரத்தில் மக்களுக்கு நம்முடைய அரிசியை கொடுக்கிறோம். அதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். நம்முடைய தமிழ் நாட்டு அரிசி லாயக்கு இல்லை என்ற எண்ணம் இப்போது மாறிக்கொண்டு வருகிறது. நாம் கேரளாவுக்கு 2 லட்சம் டன் அரிசி கொடுப்பதாக ஒப்புக்கொண்டோம். அதற்குப் பதிலாக ஆந்திராவிலிருந்து 1 லட்சம் டன் அரிசி நமக்கு வர வேண்டும். சம்பா அறுவடையில் 50,000 டன் கொடுப்பது, அதற்கு மேலே குறுவை சாகுபடியில் 1½ லட்சம் டன் கொடுப்பது என்று ஏற்பாடு, ஐம்பதாயிரம் டன் ஏற்கனவே கொடுத்து விட்டோம். இன்னும் வேண்டுமென்று கேட்டார்கள். மேலும் 30,000 டன் கொடுத்தோம். மேலும் 20,000 டன் வேண்டுமென்று கேட்டார்கள். பத்தாயிரம் டன் இப்போது கொடுக்கிறோம், மீதியைப் பின்னால் கொடுக்கிறோம் என்று சொன்னேன். மொத்தத்தில் பார்த்தால் கேரளாவுக்கு நாம் ஏறக்குறைய ஒரு லட்சம் டன் கொடுத்திருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் மாதத்திற்கு 70,000 டன் விநியோகம் செய்கிறோம். நாங்கள் கொள்முதல் செய்துகொண்டு வருகிறோம். கொள்முதல் செய்வதிலே நிர்ப்பந்தப்படுத்துவது இல்லை. இன்றைக்குப் பெரிதும் விவசாகளைப் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். விவசாயிகளைப் பற்றி இந்த மன்றத்தில் என்ன சொன்னாலும் அந்த விவசாயிகள் நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள். தாங்கள் விற்கக் கூடியதைக் கொடுக்கிறார்கள். ஏதோ ஓரளவு உயர்ந்த ரக அரிசி வாங்குகிறவர்கள் படி இரண்டு ரூபாய் விற்கிறது என்று சொல்லலாம். சாதாரணமாக, இந்த ரக அரிசியின் விலை குறைந்திருக்கிறது. விலை குறைந்ததோ இல்லையோ மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எட்டு அவுன்ஸ் அரிசி, 4 அவுன்ஸ் கோதுமை கொடுக்கிறோம். எழுபதாயிரம் டன் மாதந்தோறும் கொடுக்கிறோம்.

ஆனால் அ



10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

சென்ற ஆண்டிலே ஏற்பட்ட நிலைமை மறுபடியும் வராத அளவுக்குச் சமாளித்துக் கொண்டு வருகிறோம். 'The proof of the fudding is in the eating' என்று சொல்வார்கள். மன்றத்திலே கனம் அங்கத்தினர்கள் ஒன்றும் விளையவில்லை' என்று சொன்னார்கள். ஒன்றும் விளையாமல் நாங்கள் எப்படிச் சமாளிக்கிறோம். வெளியே இருந்து ஒன்றும் வரவில்லை. நாம் கேரளாவுக்கு கொடுக்கிறோம்; நகரங்களிலும் கிராமங்களிலும் கொடுக்கிறோம். ஜில்லா பூராவும் கொடுக்கிறோம். விளையாமல் எப்படிக் கொடுக்க முடியும். ஒன்றுமே விளையவில்லை என்று இந்தச் சபையில் பேசுவது சரியல்ல. சென்ற ஆண்டு நம்முடைய மாநிலத்திலிருந்து கொஞ்சம் அதிகமாகக் கேரளாவுக்குப் போயிற்று. இருந்தாலும் அப்போது எப்படியோ நிலைமையைச் சமாளித்தோம். இப்போது நிலைமை சீர்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் உணருவார்கள். உற்பத்தி பெருகிக் கொண்டு வருகிறது என்பதை உணருவார்கள் என்று நம்புகிறேன். இதெல்லாம் கண்ட்ரோல் இல்லாவிட்டால் முடியுமா? கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் வேறு வழி சொல்லட்டும். எனக்கு வேறு ஒன்றும் தெரியவில்லை. சென்ற அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட நிலைமையை நாம் பார்த்தோம். திட்டத்தை எதிர்க்கவில்லை; திட்டத்தின் முறையைத்தான் எதிர்க்கிறோம் என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். எந்த நாடாக இருந்தாலும் இன்று திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறது. திட்டத்தை நிறைவேற்றுகிறபோது கண்ட்ரோல்டு எகானமி மிக முக்கியம். ஆனால் அதே சமயத்தில் அனாவசியமாக கண்ட்ரோல் வைத்துக் கொள்ளமாட்டோம். அனாவசியமாக மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் வகையில் ஒன்றும் செய்ய மாட்டோம். ஆனால் மக்களுடைய நலன் முழுதும் பாதுகாக்கப்படக் கூடிய அளவிலேதான் நாம் இந்தக் கட்டுப்பாடுகள், திட்டங்களை வைத்துக் கொண்டு நடத்துகிறோமே தவிர வேறு வகையிலே அல்ல. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய திருத்தத்தில் 'ஸ்ட்ரக்சுரல் சேஞ்சஸ்' என்று கூறியிருக்கிறார்கள். இப்போது இருக்கிற நடைமுறையை விட வேறு ஸ்ட்ரக்சுரல் சேஞ்சஸ் ஒன்றும் அவசியமில்லை என்று சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டே வருகிறது; உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இது போதாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணம். அந்த வகையிலேதான் நாம் கவனம் செலுத்த வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

கல்வியைப் பற்றிக் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். கல்வி வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டுதான் வருகிறது. மக்களிடம் இன்று புதிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு திட்டமிட்டாக வேண்டுமென்று கூறினார்கள். இதற்காக நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, உயர்ந்த கல்வி என்று திட்டம் இருக்கிறது. ஆனால் குறைந்தபட்சப் படிப்பை எல்லோரும் பெறவேண்டும். அந்த வகையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக் குறைந்த பட்சப் படிப்பாகக் கொண்டிருக்கிறவர்

களுக்குச் சம்பளம் கூட இல்லாமல் கல்வி பெற வழி செய்திருக்கிறோம். அப்படி உயர் நிலைப் பள்ளிப் படிப்புப் படிக்கிறவர்களுக்கெல்லாம் கல்லூரியிலே இடம் கொடுக்க வேண்டுமென்றால் அது சரியல்ல. இதைப் பற்றி நான் முன்பே விளக்கி இருக்கிறேன். எந்த நாட்டிலும் நூற்றுக்கு 60 பேருக்கு மேல் கல்லூரிப் படிப்பு படிக்க முடியாது. குறைந்தபட்சக் கல்வியாக உயர் நிலைப் பள்ளிப் படிப்பைப் பரிபூரணமாக அளித்து விடுகிறோம். அதற்கு மேல் கல்லூரிகள் இருப்பதோடு, பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன; மற்ற வகையான பல தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. மற்றொரு விஷயமும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. கல்லூரியிலே இடம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு கல்லூரியிலே, குறிப்பிட்ட ஒரு பாடத்தைப் படிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அது எவ்வாறு முடியும்? இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாக 'நாங்கள் ஹ்யூமானிடிஸ் படிக்கிறோம்; அதற்காக ஒரு செக்ஷன் அனுமதியுங்கள்' என்று கேட்டார்கள். முந்திய தினம் நான் கடலூருக்குப் போயிருந்தபோது கேட்டார்கள், கோயம்புத்தூரிலும் கேட்கிறார்கள். அதைக் கேட்கலாம். அது பற்றிப் பல்கலைக் கழகத்தோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி ஸ்தானங்களை அதிகப்படுத்த வேண்டுமென்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்தானங்களை சென்ற ஆண்டில் இருந்ததை விட இந்த ஆண்டு உயர்த்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

'இந்தத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோமே, இதைப் பற்றி ஆராய்வதில்லையா? இது எவ்வளவு தூரம் திட்டமிட்டப்படி நடந்திருக்கிறது? கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே என்னென்ன, எந்தெந்த முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?' என்பதைப் பார்ப்பதற்காகத் திட்டத்தை ஓராண்டுக் காலமோ, இரண்டாண்டுக் காலமோ, மூன்றாண்டுக் காலமோ நிறுத்தி வையுங்கள் என்று கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். எதுவும் சென்று கொண்டிருக்கும்போதே நின்று விட்டால் வேகம் குறைந்து விடும். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் மோட்டாரில் செல்வார்களோ, நடப்பார்களோ! ரயிலை ஒரு ஸ்டேஷனில் நிறுத்தி விட்டு—அது இரண்டு நிமிஷமாக இருந்தாலும்—மறுபடியும் வேகம் எடுப்பதற்குப் 10 அல்லது 15 நிமிஷங்கள் ஆகும். அவர்கள், நின்று ஷெட் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி உட்கார்ந்து விட்டால் திரும்பவும் ஆரம்பிக்க ரொம்ப நாட்கள் ஆகும். அப்படி நின்று விட்டால் திட்டம் என்பதே இல்லாமலும் போய்விடும். திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்வதற்காகத் திட்டத்தை நிறுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது அதைப் பற்றி ஆராயாமல் இல்லை. அதற்காகத் திட்டத்தை நிறுத்தித்தான் ஆக வேண்டுமென்ற அவசியமில்லை. திட்டங்களை நிறைவேற்றுவதிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆராய ஸ்டேட் டெவலப்மெண்ட் கமிட்டி இருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் அளவிலே ஒரு கமிட்டி இருக்கிறது. அவர்கள் மூன்று



மாதத்திற்கு ஒரு முறை ஆராய்கிறார்கள். எல்லா இலாகாக்களையும் சேர்த்து வைத்து ஆராய்கிறார்கள். அமைச்சர்கள் அளவிலே ஸ்டேட் டெவலப்மெண்ட் கமிட்டி இருக்கிறது. அதிலே எல்லா அமைச்சர்களும், இலாகா காரியதரிசிகளும் இருந்து திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதைப் பற்றிய விவரங்களை எல்லாம் சேகரித்து ஒவ்வொரு இனத்திலும், ஒவ்வொரு இலாகாவிலும் என்னென்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது, 'ஷார்ட்ஃபால்' என்ன, ஏன் 'ஷார்ட்ஃபால்' ஏற்பட்டது, அதை வேறு என்ன திட்டத்திற்கு உபயோகப்படுத்தலாம் என்றெல்லாம் யோசித்து இதிலே இல்லாத திட்டங்கள் கூட நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிற விஷயம்.

அது நல்லமுறையில் இங்கு வொர்க்கிங் க்ரூப் வைத்துத் திட்டம் 12-00 noon.
தயாரிக்கிறார்களே அதுமாதிரி அப்போதைக்கப்போது நல்ல முறையில் ஆராயப்பட்டு வருகிறது என்று கூற விரும்புகிறேன். நம் ரூபாயின் மதிப்பு குறைந்து போய் விட்டது என்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கூறினார்கள் என்று நினைக்கிறேன். நாம் உள்ளுக்குள்ளே பேசிக் கொள்ளலாம். இந்த மன்றத்தில் பேசினால் உலகத்திற்குப் பேசலாம். அதுதான் இந்த மன்றத்தின் பெருமை. அவர்கள் கட்சிக்காக பேசலாம். அப்படி கட்சிக்காகப் பேசினால் நம் நாட்டைப் பற்றி, நம் நாட்டு நிலைமை பற்றி, நம் வளர்ச்சி பற்றி, நம் அபிவிருத்தி பற்றி இப்படி மன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள் என்றால்—எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி—அதைப் பத்திரிகைகளில் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள். இந்த நாடு சீர்கேடான நிலையை அடைந்து விட்டது என்று தானே நினைப்பார்கள். அதற்கு இடம் கொடுக்கலாமா என்று நான் அவர்களைக் கேட்கிறேன். இப்போது ரூபாய்க்கு 17 பைசாதான் மதிப்பு என்று சொன்னார்கள். ஏதோ ஒரு பத்திரிகையில் வந்தது, யாரோ சொன்னார்கள் என்றால். எங்கே பார்த்தார்கள் அதை? ஒரு ரூபாய்க்கு 17 பைசாதான் மதிப்பு இருக்கிறதா? மதிப்பு குறைந்து கொண்டிருக்கிறது, எந்த நாட்டில் குறையவில்லை?

**திரு. கே. ஏ. மதியழகன் :** பாகிஸ்தான் போன்ற நாடுகளை விட நம் ரூபாய் மதிப்பு குறைந்து விட்டது என்று வெளிநாட்டு நிறுவனங்கள் கூட சமீபத்தில் வெளியிட்டன.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சில பேர்கள் இருக்கிறார்கள், எனக்குத் தெரியும், சிறு வயதில் பார்த்திருக்கிறேன், இரும்புப் பெட்டியில் நோட்டு நோட்டாக இருக்கும் அதை பாங்கில் போட மாட்டார்கள், அந்த அறையைக் கூடப் பெருக்க மாட்டார்கள். சுத்தம் செய்தால் லட்சுமி போய் விடுவாள் என்று சொல்வார்கள். இரும்புப் பெட்டி வைத்திருக்கிற அறை இருட்டாக இருக்கும், ப்ரோ நோட் வாங்கிக் கொண்டு 5,000 ரூபாய் கொடுப்பார்கள், அறுவடை கழிந்தவுடன் திருப்பிக் கொடுத்து விடுவார்கள் வாங்கியவர். நான் கூடப் போய் பார்த்திருக்கிறேன். பணம் அப்படியே இருக்கும், இப்போது நாம் எவ்வளவு திட்டங்கள் நிறை

வேற்றுகிறோம்? எவ்வளவு இன்வெஸ்ட்மெண்ட் இருக்கிறது? இப்படியிருக்க பாகிஸ்தானோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அதை விட என்ன குறைந்து போய் விட்டது? இப்போது அவர்கள் சொல்லட்டும். என்னை விட படித்தவர்கள், இந்த விஷயத்தில் புள்ளிவிவரங்கள் எல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு இல்லை. ஆகவே இதைப் பார்த்து சொல்ல வேண்டியிருக்கிறது. நான் கேட்கிறேன், "அவர்கள் உறுதியாகச் சொல்ல முடியுமா ரூபாய்க்கு 17 பைசாதான் மதிப்பு இருக்கிறது என்று?" யாரோ ஒரு பத்திரிகையில் சொல்வதை, எவரோ சொல்கிறதை வைத்து இந்த மன்றத்தில் பேசுவதா?

**திரு. கே. ஏ. மதியழகன் :** அலகாபாத் யூனிவர்சிட்டியிலுள்ள அகர்வால்-என்ற பொருளாதார பேராசிரியர் சொல்லி இது விவாதிக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் அவர்கள் எல்லாம் கூட இதை மறுக்கவில்லை.

**கனம் சபாநாயகர் :** பேராசிரியர்கள் சொல்வதை எல்லாம் ஒத்துக்கொள்வதற்கில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மன்றத்திலேயே பொருளாதார நிபுணர்கள் இருக்கிறார்கள். இங்குள்ள பொருளாதார நிபுணர் தவறுதலாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒருவருக்கொருவர் கருத்து வேற்றுமை இருக்கிறது, எதையாவது ஒன்றைச் சொல்கிறார்கள். அவர்கள், தாங்கள் எது வேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைக்கிறார்கள் நிபுணர்களாக இருப்பதால் எதைவேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைக்கிறார்கள். ஒரு நிபுணர் தஞ்சைக்கு சென்று பார்த்து விட்டு ஒன்றுமேயில்லை என்று சொல்லிவிட்டு வந்தார்கள், ஆனால் அமெரிக்காவில் இருந்து வந்த ஒரு நிபுணர் தஞ்சாவூரில் பாக்கேஜ் ஸ்கீம் சிறந்த முறையில் நன்கு நடக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ரூபாய் மதிப்பு குறைந்த நிலை பற்றி பத்திரிக்கைகளில் வரும் செய்திகளை வைத்துத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இதை நன்கு ஆராய்ந்து டாக்டர் நடராஜன் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று தெரிவித்தால் நல்லது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். பின்னால் நிபுணர்களைக் கேட்டுக் கொள்ளலாம். இது, First National City Bank, Monthly News Letter, நியூயார்க்கில் பிரசுரமாகிறது. எல்லாப் பிரதேசங்கள் பற்றியும் ஆராய்கிறார்கள். மற்ற நாடுகளைப் பற்றியெல்லாம் ஆராய்கிறார்கள். யு.எஸ்.ஏ. யில் 1954-ல், 100 ஆக இருந்தது 1963-ல் 88, 1964-ல் 87, ஆகிவிட்டது. யு.எஸ்.ஏ. யிலேயே இப்படி ஆகியிருக்கிறது. கானடாவை எடுத்துக் கொண்டால் 1954-ல் 100-ஆக இருந்தது 1963-ல் 87 ஆகி, 1964-ல் 86 ஆகியிருக்கிறது, சுவிட்சர்லாந்து நாடு சிறிய நாடு, அழகான நாடு, நல்ல வாழ்க்கை வசதியுள்ள நாடு. அங்கு 100-ஆக இருந்தது 85 அப்புறம் 82 ஆகியிருக்கிறது. குறைந்து கொண்டே போகிறது. நல்ல வளர்ச்சியுள்ள



நாடு ஜெர்மனி. அங்கு 83 அப்புறம் 81. டென்மார்க்கில் 72 அப்புறம் 69, மெக்ஸிகோவை எடுத்துக் கொண்டால், மெக்ஸிகன் எக்ஸிபிஷனைப் பார்த்திருப்பார்கள், கனம் அங்கத்தினர்களை போய் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ராஜாஜி ஹாலில் இருக்கிறது. நல்ல நோக்கங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கு 62 ஆகியிருக்கிறது. இஸ்ரேல் வளர்ச்சி அடையும் நாடு. அதைப் போய் பார்க்க வேண்டும். நம் நண்பர்கள் போய் விட்டு வந்தார்கள். அங்கு 63 அப்புறம் 60 என்றிருக்கிறது. பிரான்ஸை எடுத்துக்கொண்டால் 66, 64 என்றிருக்கிறது. சைனாவைப் பற்றி சொல்லவேண்டாம். குறைவாக சொல்கிறேன் என்று நினைத்துக் கொள்ளலாம். இந்தியாவில் 74-ல் இருந்து 65 என்று ஸ்டீப் ஃபால் வந்திருக்கிறது. ஆகவே, ரூபாயின் மதிப்பு 17 பைசாதான் இருக்கிறது என்று சொல்வது, இது ஒரு அபவாதம் என்று தான் சொல்ல முடியும். இனியாவது அதைத் திருப்பிச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் ரிஸோர்ஸஸ் என்ன என்பது முக்கிய பிரச்னை அதை பல விதத்தில் தேட வேண்டியிருக்கிறது. முதலில் திட்டம் எத்தகைய அளவில் உள்ள திட்டமாக இருக்க வேண்டு மென்பதில் பொதுவாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் இதை குறைக்கக் கூடாது என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதே அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் உருப்படியாக இந்தத் திட்டத்தை குறைத்து விடுங்கள் என்று சொல்லவில்லை. நம் தேவை எந்தளவிற்கு குவிந்து கிடக்கிறது, அதை எந்தளவிற்கு நிறைவேற்ற வேண்டியிருக்கிறது, எப்படி பரவலான முறையில் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று பார்க்க வேண்டியிருக்கிறது. ஒரு சிலருக்கு மட்டும் சௌகரியப்படுத்துவது என்றால் அதற்குத் திட்டமே வேண்டியதில்லை, அதற்கு திட்டமே தீட்ட வேண்டியதில்லை. வெள்ளைக்காரர் ஆட்சியில்கூட ஒரு சிலரிடம் பணம் குவிந்து இருந்தது. இப்போது மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காகவே திட்டங்கள் தீட்டுகிறோம். வறுமையைப் போக்கவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்கவேண்டும். எல்லோருக்கும் ஊதிய வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டிருக்கிறோம். இப்போது 750 கோடி ரூபாய் என்று போட்டிருக்கிறோம். பின்னால் ஆராய்ந்து எந்த அளவு என்பதை சொல்ல முடியும். இப்போது சொல்ல முடியாது. திரு. சுப்ரமண்ய கவுண்டர் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தம் இந்த டிராப்ட் ப்ளானை இந்த சபை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பின்னால் இது உருவாகும் போது 750 கோடி என்பது 700 கோடியாகி விட்டதே என்று சொல்லக் கூடாது என்பதற்காக சொல்கிறேன். இது ப்ரொவிஷனலாக, டென்டேடிவாக போடுவது. இதற்கு ரிசோர்ஸஸ் எப்படி? வரி போட்டு விடுவார்கள் என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லட்டும், கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லட்டு

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

டும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லட்டும். எதிலாவது ஒரு சாமான்ய பாயிண்ட் வேண்டுமல்லவா? எல்லோரும் சேர்ந்து அரசாங்கத்தைக் குறை கூறவேண்டும். வரியே கூடாது என்பது. இது ஒரு காச். எங்களுக்கெல்லாம் நோ டாக்ஸ் காம்பெயின் தெரியும். இப்போது நோ டாக்ஸ் லெவி என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து தெரிவிக்கிற கோஷம். சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. நல்லசிவம் அவர்களும் சேர்ந்து தெரிவிக்கிற கோஷம். இதில் காச் இருக்கிறது. வரி வேண்டாம் என்று சொன்னால் எல்லோருக்கும் நல்லதுதானே. வரி போடுகிற கொள்கைபற்றிச் சொல்ல விரும்புகிறேன். வரி எதற்காகப் போடுகிறோம்? நம் தேவைக்கு மட்டுமல்ல. யார் கொடுக்கக் கூடியவர்களோ யார் சுமாரான நிலையில் இருக்கிறார்களோ அதைச் சற்று மட்டுப் படுத்தத்தான் போடுகிறோம். இந்த வரிக் கொள்கையைவிட சோஷலிச கொள்கையில் வேறு ஒன்றுமேயில்லை என்று கூறுவேன். இதுதான் சிறந்த வழி, யார் தாங்கக் கூடுமோ யார் கொடுக்க முடியுமோ அவர்கள் மீதுதான் வரி போடுகிறோம். பொதுவாக, வரியே வேண்டாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? தாங்கக் கூடியவர்களிடம்கூட கேட்கக் கூடாது என்பதுதானே அர்த்தம்? என்னென்ன வரியை யோசிக்கிறோம் என்று கூடச் சொல்வதற்கில்லை. எனக்கு நம்பிக்கையிருக்கிறது, மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று. யாரும் ஆட்சேபிக்க இடம் இருக்காது என்று நம்புகிறேன். மக்களின் உயர்ந்த நோக்கங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும். எல்லாவற்றையும் வரியாகப் பெறவேண்டும் என்பதல்ல. வேறு வழிகளையும் தேடுகிறோம். இன்னும் சுலபமான முறையில் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான முயற்சிகளில், அதற்கான வழிகளில் வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சிறு சேமிப்புத் திட்டத்தை மக்கள் உற்சாகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றியும் இங்கு குறை கூறப்பட்டது. நேற்று முன்தினம் கடலூரிலிருந்து ஐந்தாறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் என்னை அழைத்திருந்தார்கள். அந்த இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஒவ்வொரு வீட்டிலும், சிறு சேமிப்பு இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய், பத்து ரூபாய் என்று செக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். அந்தக் கிராமம் பூராவும் இதை நல்ல முறையில் ஊக்குவிக்கிறார்கள். இவ்விதம் வாங்கினவர்களுக்கான சர்டிபிகேட்டுகளை வழங்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். மிக்க மகிழ்ச்சியுடன் வழங்கினேன். இந்தத் திட்டத்தைப்பற்றி மக்கள் நன்றாக உணருகின்றார்கள். சேமிப்பு வழக்கம் எல்லோருக்கும் இருக்கவேண்டும். குறிப்பாக, வறுமை இருக்கின்ற இடத்தில் இந்தப் பழக்கம் இருக்கவேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு வருமானம் பெருகுகின்றது. இப்படி பல துறைகளில் வருவாய் கிடைக்கின்றது.



10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வரி போடவேண்டும் என்று சொல்லும்போது, உடனடியாக எல்லோருக்கும் வரி போட்டுவிடுவதில்லை. எவ்வளவு தூரம் போட முடியும் என்பதைப் பார்த்துத்தான் வரி போடுகிறோம். தாங்க முடியாத அளவுக்கு வரிச்சுமையை சுமத்துவதில்லை. எந்த அளவுக்கு மக்கள் தாங்குவார்களோ அந்த அளவுக்கு—அதிலும் அதற்கு அவசியமிருந்தால் வரி போடுகிறோம். வரி எந்தவிதத்திலும் போட்டால்தான் திட்டங்களை நடத்த முடியும் என்பது ஒன்று. திட்டங்கள் எதற்கு என்று சொன்னால் அது வேறு விஷயம். திட்டம் வேண்டும் என்று சொல்லும்போது, திட்டத்திற்கு எந்த அளவுக்கு அவசியம் இருக்கிறது, யார் வரியைத் தாங்குவார்கள் என்கின்ற இரண்டையும் வைத்துக்கொண்டு தான் வரி போட முன் வருகிறோமே தவிர வேறுவகையில் இல்லை. அப்படி இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தூரம் இன்னும் ஃபைனான்ஸ் கமிஷனில் உதவிக்கு சிபாரிசு செய்யப் போகிறார்கள், இதில் நமக்கு என்ன கிடைக்கும் என்பதையெல்லாம் பார்க்கிறோம். இதையெல்லாம் பரிசீலித்துத்தான் வரியை நிர்ணயிருக்கிறோம். வரி போட்டுத்தான் ஆகவேண்டும் என்று இப்போதே இறுதியாகச் சொல்வதற்கில்லை. இந்தத் திட்டத்தின் அளவைப் பற்றிமுடிவான உருவாக இப்போது சொல்வதற்கில்லை என்றிருந்தாலும், "Care of the Plan" என்கிற அளவில், இதில் போடப்பட்டிருக்கின்ற அடிப்படையான திட்டங்களில் எதிலும் மாறுதல் இராது. இதில் என்னென்ன கூறப்பட்டிருக்கிறதோ அவைகளில் அடிப்படையில் ஒன்றும் மாறாது. இன்னும் அதிகமாகும் என்று சொல்ல முடியாது, தேவைப்பட்டால் சிறிதளவு குறையலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, மாநிலத்தின் தேவை என்ன, அதிலும் மாவட்டங்கள்வாரியாகத் தேவை என்ன என்பதை எல்லாம் கணக்கிட வேண்டும். மத்திய அரசாங்கத்தின் கீழும் பல திட்டங்கள் நடத்தப்படும். It must be a National Plan இவைகள் எல்லாம் ஒன்றாக இணைந்த திட்டம், மத்திய அரசாங்கம் நடத்துகிற திட்டம் வேறு நம்முடைய அரசாங்கம் நடத்துகிற திட்டம் வேறு என்றல்ல. அப்படி நாம் நினைக்கவும் கூடாது. மத்திய அரசாங்கம் சில திட்டங்களை நிறைவேற்றக்கூடும், மத்திய அரசாங்கத்தின் உதவியோடு சில திட்டங்களை மாநில அரசாங்கம் நடத்தும். மத்திய அரசாங்கம் நேரடியாகச் சில திட்டங்களை நடத்திக்கொண்டு இருக்கும். அதை நாம் மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் தானே என்று பிரிக்க முடியாது. நாம் தயாரிக்கின்ற திட்டங்கள் எல்லாம் தேசிய திட்டத்தின் அடிப்படையில்தான் விளங்குகின்றன என்பதைக் கனம் அங்கத்தினர்கள் நன்றாக உணருவார்கள். அதே நேரத்தில் நம்முடைய சக்திக்குத் தகுந்தவாறு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று இங்கே எடுத்து கூறப்பட்டது. நம்முடைய சக்திக்கு ஏற்றவாறுதான் நாம் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். 2,000 கோடிக்கு வேண்டும் என்றோ அல்லது 10 ஆயிரம் கோடிக்கு இருக்கவேண்டும் என்றோ நாம் திட்டத்தைப் போடவில்லை. நம்முடைய சக்திக்கு தக்கவாறுதான் திட்டம் போட்டிருக்கிறோம். அந்த நேரத்தில் வரி போடாமல் இருப்பது நல்லதுதான். ஆனால் வரி போடாமல், வருவாயைப் பெருக்கிக் கொள்ளாமல் திட்டத்-

தைப் போடவும் முடியாது. அப்படியிருப்பதை மக்கள் ஒப்புக் கொள்வார்களா? இப்படிச் சொல்லி மக்களுக்குத் திருப்தி அளிக்க முடியுமா? இந்த அரசாங்கம் என்னென்ன செய்கிறது என்பதைப் பற்றி மக்களிடத்தில் சென்று தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சொல்லி வருகிறார்கள் என்று இங்கு குறை சொல்லப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதை எடுத்தாலும் உடனே தேர்தல்தான் ஞாபகத்திற்கு வருகிறது. தேர்தல்தான் உடனே கண்முன்னால் வருகிறது. நாங்கள் என்ன செய்வது, அரசாங்கம் செய்கின்ற நன்மைகளைத்தான் மக்கள் முன்னால் சொல்கிறோம், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வதைப்போல்—மக்கள் வெறுக்கக்கூடியதைச் சொல்லுங்கள் என்று சொன்னால், அதை எப்படி மக்களிடத்தில் சொல்வது என்று தெரியவில்லை. பிளான் பப்ளிசிடியைப்பற்றிச் சொன்னார்கள். பிளான் பப்ளிசிடி என்பது ஜனநாயகத்தில் மிக முக்கியமானது. மக்களுடைய நன்மைக்காக, மக்களால் நடத்தப்படுகின்ற திட்டத்தைப்பற்றிச் சொல்லி விளக்கினால் உடனே இதெல்லாம் காங்கிரஸ் பிரச்சாரம் என்று சொல்லி விடுகிறார்கள். .. காங்கிரஸ்தான் இதை ஏற்றுக்கொள்கிறது என்று சொன்னால் அது எப்படி தவறாகும்? காங்கிரஸ் லட்சியம் இப்பேர்ப்பட்ட திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்பதுதான். காங்கிரசுக்கு இதைத் தவிர வேறு இலட்சியமில்லை. இதுதான் எங்களுடைய திட்டம் என்று மற்றவர்களும் சொல்லிக் கொள்ள வேண்டுமென்றால் சொல்லிக்கொள்ளட்டும். ஆகவே இதில் அரசியல் வந்துவிடுகிறது என்று சொல்வதில் சிறிதும் பொருள் இல்லை என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் வேறு பாதையில் செல்லுகின்றோம் என்று கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் போகின்ற பாதையில் அவர்களால் வர முடியவில்லை என்றால் அதற்கு நாங்கள் என்ன செய்வது? நாங்கள் செல்லுகின்ற பாதை முன்னேற்றப் பாதை. திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுகின்ற பாதையல்ல. ஏதோ ஒரு பிரமுகர் சொல்லி விட்டார் என்பதற்காக அதன்படி சென்று கொண்டிருக்கிறோம் என்றல்ல. நாங்கள் போய்க்கொண்டிருக்கிற பாதை அவர்களுக்கு பிடிக்காத பாதையாக இருக்கலாம். அதற்கு நாங்கள் என்ன செய்வது? இந்தப் பாதையில் செல்வது சிறிது கடினமாக இருக்கலாம், கொஞ்சம் முள் நிறைந்ததாக இருக்கலாம், இதுதான் முன்னேற்றப் பாதை என்று நாங்கள் கருதுவதால் நாங்கள் அதில் போய்க் கொண்டிருக்கிறோம்.

மற்றொன்று இங்கு சொல்லப்பட்டது, எல்லாவற்றிலும் ஊழல் நிரம்பியிருக்கிறது என்பது. ஊழல் நிரம்பியிருக்கிறது, நிரம்பி யிருக்கிறது என்று சொல்வது நம்மையே நாம் சிறுமைப்படுத்திக் கொள்வதாகும். ஊழல்கள் இருக்கின்றன என்று சொல்லப் படுவதை நான் அடியோடு புறக்கணிக்கவில்லை. தவறுதல் இருக் கலாம். குறைகள் இருக்கலாம். அப்படி குறைகள் தவறுகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிற நேரத்தில், அவ்வப்போது பரிசீலனை செய்து தவறு செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும்,





அதன் பேரில் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்கின்றோம். அங்கொன்று, இங்கொன்று என்று ஒன்றிரண்டு தவறுகள் இருக் கலாம். அறவே இராது என்று நான் சொல்ல முன் வரவில்லை. பெரிய கல்யாண வீடுகளில், நாம் பார்க்கின்றோம்—10 ஆயிரம் பேர்கள் சாப்பிடுவார்கள், நல்லமுறையில்தான் எல்லாம் நடை பெறும், அதிலும் ஏதாவது குற்றம் சொல்லிவிடுவார்கள் சிலர். சாப்பிட வருகின்றவர்களில் சிலருக்கு இதுவே வேலை. ஏதாவது ஒரு குறையை சொல்லிவிட்டு அவர்கள் பேசாமல் போய்க் கொண்டிருப்பார்கள். ஆகவே, எங்கு பார்த்தாலும் ஊழல்கள் தான் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்வது சரியல்ல. ஊழல் என்றிருப்பது கூடாதுதான்.

நாம் அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம் என்றும் இங்கு எடுத்துச்சொல்லப்பட்டது. கடன் வாங்கவேண்டிய நிமித்தம் நமக்கு ஏற்படுகிறது. நம்மால் அதை தவிர்க்க முடியாது. இன்றைக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களை போட்டு நடத்து கின்ற தொழில்கள் எல்லாம் கடன் வாங்காமலா நடத்தப் படுகின்றன? பெரிய தொழில் நடத்துகின்றவர்கள் எல்லாம் கூட கடன் வாங்குகின்றார்கள். யாரும் கடன் வாங்காமல் பெரிய தொழில்களை ஆரம்பித்துவிட முடியாது. உலக நாடுகளை எடுத்துக் கொண்டால்கூட, பல நாடுகள் கடன் வாங்கியிருக்கின்றன. யுத்தத்திற்குப் பிறகு மார்ஷல் பிளான் வந்தபோது எத்தனையோ நாடுகள் கடன் வாங்கின. மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் எல்லாம் கடன் வாங்கின. இங்கிலாந்து கடன் வாங்கவில்லையா? யுத்தத்தின் போது நம்மிடம் அவர்கள் கடன் வாங்கினார்கள். பின்னால் அமெரிக்காவில் வாங்கினார்கள். கடன் வாங்கி நாம் முழுகிப் போய்விடுவது ஒன்றுமில்லை. எப்படி ஒரு தொழில் நடத்துவதற்கு கடன் வாங்குகிறார்களோ, அதே போன்று மக்க ளுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதற்காக—அவர் களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக—கடன் வாங்குவதில் எந்த தவறும் இல்லை. திருப்பிக்கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோமா இல்லையா என்பது ஒரு பிரச்னை. மத்திய அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால் பெரிய பெரிய இன்வெஸ்ட்மென்ட்கள் எல்லாம் இருக்கின்றன. எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்துத்தான் வாங்குகிறார்கள். அதே போன்று தான் மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கும் கடன்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் பெரிய தவறு ஒன்றும் இல்லை என்பதை நாம் புள்ளிவிவரங்களிலிருந்து அறிந்து கொள்ள முடியும். இந்த வருடம் மார்ச் வரை 333 கோடி நாம் கொடுக்கவேண்டிய கடன் தொகை. இதற்கு நம்மிடம் இருக்கின்ற 'காப்பிட்டல் அவுட்லே' என்னவென்று பார்த்தால் 431 கோடி 30 லட்சம். அதாவது நம்முடைய முதலீடு—நம்முடைய ஆஸ்தி—431 கோடிக்கு இருக்கிறது. கடன் 333 கோடி. 100 கோடிக்கு ஆஸ்தி அதிகமாக இருக்கிறது. எந்த அளவுக்கு நாம் கடன் வாங்கலாமோ, அந்த அளவுக்குத்தான் நாம் கடன் வாங்குகிறோம்.

தவறுகள் பல இடங்களிலும் நடக்கின்றன என்று பலர் குறிப்பிட்டார்கள். முக்கியமாக சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் மாதவரம் பால் பண்ணையைப்பற்றி குறிப்பிட்டார்கள். பால் பண்ணை நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதிலுள்ள அடிப்படை நோக்கத்தை நான் விளக்க விரும்புகிறேன். இங்கே ஒரு காலனி அமைத்து—ஆரம்பத்தில் நியூஸிலாண்ட்—அரசாங்கத்தின் உதவி யோடு பாலை உற்பத்தி செய்து, நல்லமுறையில் பாலை விநியோகிக்க வேண்டும் என்று திட்டமிட்டு இது ஆரம்பிக்கப்பட்டது. பால் உற்பத்தியை பெருக்குவதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக பால் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதில் இன்றையதினம் எல்லா நாடுகளும் கவனம் செலுத்தி வருகின்றன. முன்னேற்றமடைந்திருக்கும் ரஷ்யா போன்ற நாடுகளில்கூட இன்னும் இது சரியாகவில்லை என்று அவர்களே சொல்லுகிறார்கள். அமெரிக்காவைவிட நாங்கள் பல வழிகளிலும் முன்னேறி விட்டோம் என்று சொன்னாலும் பால் உற்பத்தி செய்கின்ற விஷயத்தில் அவர்களுடைய லட்சியத்தை போன்று நாங்கள் இன்னும் அடையவில்லை, நிரம்ப தூரத்தில்தான் இன்னும் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம் என்று ரஷ்யர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், நல்ல மாடுகள் வளர்ப்பது, பால் உற்பத்தி யைப்பெருக்குவது, பால் சிறந்த உணவுப் பொருள் என்ற முறையில் அதை கிடைக்கச் செய்வது என்பதில் எல்லா நாடுகளும் நேரடியாக அக்கறை எடுத்துக்கொள்ளுகின்றன. அதே மாதிரித்தான் சென்னை நகரத்தில் கிடைக்கிற வரையில் கிடைக் கட்டும் என்று இல்லாமல் இந்தக் காலனியை அமைத்தோம், இந்த ப்ராஜெக்டை ஆரம்பித்தோம், யந்திரங்களைக் கொண்டு வந்தோம். பால் உற்பத்தி வேண்டுமென்று தான் கொண்டு வந்தோம். அதுவும் இதை வாலண்டரியாக வைத்தோம். இந்தக் காலனிக்கு வருவதற்குப் பலர் முன் வந்தார்கள். சட்டம் இல்லாமல், வருகிற வர்கள் வரலாம் என்று வைத்தோம். 4,000 பசுக்களுக்கும் எருமைகளுக்கும் இடம் ஏற்படுத்தினோம். அதில் அவர்கள் வந்தார்கள். இதோடு போதாது என்று ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்களை வைத்து பால் உற்பத்தியை அதிகப்படுத்தி, செங்கற் பட்டு, வட ஆற்காடு, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து பால் பெறுவதற்காக அங்கெல்லாம் கடன் கொடுத்து, மாடுகள் கொடுத்து, அவர்களிடமிருந்து பாலைப் பெற்று இங்கே கொண்டு வந்து விநியோகிக்க வேண்டும் என்பது திட்டம். திட்டம் பூர்த்தி யாகி விட்டது. திட்டம் பூர்த்தி ஆகிவிட்டாலும் 70,000 லிட்டருக்கு 20,000 லிட்டர் தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள். மேலும் மேலும் இது வளர்ச்சி அடையவேண்டும். ஆனால், பால் கொடுப்பதில் முதலில் விலையைக் குறைத்துத் தான் கொடுத்தோம். பசும் பால் 88 பைசா ஒரு லிட்டர், எருமைப்பால் 106 பைசா ஒரு லிட்டர் என்று கொடுத்தோம். மார்க்கெட் விலையை விடக் குறைவு அது. அரசாங்கம் கொடுக்கிறது என்று குறைத்துத் தான் கொடுத்தோம். ஆனால், பால் வாங்குகிறோமே, உற்பத்தி செய்து கொடுக்கிறார்களே,





அவர்களுக்குக் கட்டுபடியாகும் விலை கொடுக்கவேண்டும், அவர்களை ஊக்குவிக்கவேண்டும், மேலும் நல்ல முறையில் அவர்கள் மாடுகளை வைத்து நடத்தவேண்டும் என்று அவர்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்கி குறைந்த விலைக்குக் கொடுத்து வந்தோம். அது ஒரு காரணம் நஷ்டத்திற்கு. மற்றொன்று வியாதி வந்து மாடுகளெல்லாம் போய்விட்டன. இன்னொன்று கணக்கு வைக்கிற முறை. மொத்தம் காலனிச் செலவு, மில்க் கமிஷனர் நிர்வாகச் செலவு எல்லாவற்றையும் சேர்த்து முதலீடாக வைத்து அதிலே கணக்குப் பார்க்கிறோம். ஆனால், இப்போது கணக்குப் பரிசோதனை செய்கிற அதிகாரிகள் ஒப்புக்கொள்ளுவது என்ன என்றால், கணக்கை மாற்றி அமைக்க வேண்டும், எல்லாவற்றையும் சேர்த்து அதற்கு முதலீடாக வைத்துப் போடுவது சரியல்ல என்பது. அதை மாற்றி அமைக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. இன்றைக்கு விற்கின்ற விலையையும் அதிகப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. நேரடியாக அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. என்னென்ன வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்போதைக்கப்போது கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. இப்போது வட்டி போடுகிறோம். நியூஸிலந்திலிருந்து கொடுத்தாலும் வட்டி போடுகிறோம். அவர்கள் இனமாகக் கொடுத்தார்கள். ஆனால் நாம் வட்டி போடுகிறோம், டெப்ரிஸியேஷன் போடுகிறோம். செலவுக் கணக்கைப் போடும்போது எல்லாவற்றையும் சேர்த்துப் போட்டுத்தான் பார்க்க வேண்டும். முன்பு நஷ்டம் இருந்தது என்று சொன்னார்களே, அது இப்போது குறைந்திருக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். முன்னே யாரோ ஒரு அதிகாரி போட்டார்கள், அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார்கள், பிறகு போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். உண்மை தான். அவர் நல்ல அதிகாரி தான். வெளி நாட்டுக்குப் போய் பயிற்சி பெற்று வந்தார். பயிற்சி பெற்று வந்து அவர் தான் இதை அமைத்தார். அவர் வேலையை முடித்து விட்டார். இப்போது அவர் நெய்வேலியில் இருக்கிறார். அங்கு கூட ஒரு பெரிய டெய்ரி இருக்கிறது. அவருடைய யோசனைகள் அறிவு எல்லாம் அதற்குப் பயன்படுகிறது. அதிகாரிகளைப் போட்டால், பயிற்சி பெற்று வந்தார் என்றால், வேறு இடத்திற்குப் போகக் கூடாது என்று கூறுவது தவறு. அவர் கற்று வந்ததைப் பயன்படுத்தி விட்டுத் தான் போனார். அந்த வகையில் மேலும் அரசாங்கம் நேரடியாக கவனம் செலுத்தி—இல்லை, இருக்கட்டும் என்று சொல்லவில்லை—கவனம் செலுத்தி, சீர்படுத்துவது எவ்வாறு; பால் உற்பத்யைப் பெருக்குவது எவ்வாறு. நகரத்தின் தேவை ஏராளமாக இருக்கிறது, மக்களுக்கு அப்போதைக்கப் போது ஏமாற்றம் இருக்கக் கூடாது, நியாயமான விலைக்கு சுக்கமான பால் கிடைக்கும் வகையில் இந்தத் திட்டத்தை சீர்படுத்துவது எப்படி என்று மேலும், மேலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி சர்க்கார் நடத்துகிற மோட்டார் டிரான்ஸ்போர்ட். அதிலும் நஷ்டம் வந்தது என்று சொன்னார்கள். நஷ்டம் வந்தது. கனம் அங்கத்தினர் சொன்ன நஷ்டம் மட்டுமல்ல. சாதாரணமாக, ரெம்யூனரேட்டிவ் ரூட், நான்-ரெம்யூனரேட்டிவ் ரூட் என்று இருக்கின்றன. குறுகிய ரூட்டாக இருந்தால் லாபம் வருவதில்லை. ஆனால் மக்கள் கேட்கிறார்கள். சேவை வியாபார நிலையில் கட்டுபடியாகவில்லை என்று நிறைவேற்றாமல் இருப்பதற்கில்லை. மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம். ஆகவே, இந்த மாதிரி கட்டுபடியாகாத இடங்களுக்கும் பஸ் போடுகிறோம். அதோடு சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட கலவரங்களிலும் எவ்வளவு நஷ்டம்? வெளியே செல்லும் மோட்டார் டிரான்ஸ்போர்ட்டை ஒன்றரை மாதங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது. வெளியே பஸ்களைக் கண்டால் கொளுத்துகிறார்கள், கல்லை எடுத்துப் போடுகிறார்கள் என்று நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது. அதனால் சேதம் ஏற்பட்டது. 1½ மாதம் நிறுத்தியதால் ஏற்பட்ட சேதம் மட்டும் 8 லட்சம் ரூபாய். அந்த இடத்தில் வருவதை அப்படியே போடுகிறோம். புதிதாக விஸ்தரிக்கத் தான் அரசாங்கத்தில் கடன் கொடுக்கிறோம். அதற்கு வட்டி கொடுத்து விடுகிறார்கள். எவ்வளவு முதலீடு இருக்கிறதோ அதற்கு வட்டி கொடுத்து விடுகிறார்கள். அவ்வாறு கொடுத்து விட்டு, எல்லாவற்றையும் போட்டுத்தான் நிகரமான லாபம் கணக்கிடப்படுகிறது. நம்முடைய மோட்டார் டிரான்ஸ்போர்ட் நல்ல முறையில் நடக்கிறது என்பதை நேராகப் போய் காண்கிறவர்கள் உணர்வார்கள்; பிரயாணம் செய்கிறவர்கள் ஒப்புக்கொள்வார்கள். எந்த விதத்திலும் தவறுதலாக இயங்கக் கூடாது என்பது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. தவறுதலாக இயங்கக் கூடாது என்பது மட்டுமல்ல, தவறுதலாக நடக்கவில்லை, சரியான முறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதே மாதிரி மற்ற குறைபாடுகளைப் பற்றிச் சொன்னதற்கும் நான் விவரமாக நிலைமையை விளக்க முடியும். அவ்வாறு விளக்க அவகாசம் இல்லை என்றுதான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தவறுதலான கொள்கை என்று கூறி கொள்கையிலே மாறுதல் வேண்டுமென்று கூறினார்கள். என்ன தவறுதலான கொள்கை என்று புரியவில்லை. மக்களுக்கு உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை கொடுக்கவேண்டும், அவர்கள் நல்வாழ்வு வாழ அறிவுச் சாலைகளும், நோயற்ற வாழ்வு வாழ மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டுமென்றும் கவனம் செலுத்துகிறோம். திட்டம் பணக்காரர்களுக்கு மட்டும் தானா பலன் அளிக்கிறது? ஒரு சில பணக்காரர்கள் பலன் அடையலாம் பெரும்பாலும் ஏழைகள் நலனுக்காகத்தான் செய்கிறோம். அவர்களுடைய நல்வாழ்வுக்காகத்





தான் திட்டம் வகுத்து நிறைவேற்றுகிறோம். இது தான் லட்சியம். அந்த லட்சியத்தை வைத்துக் கொண்டுதான், இதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் நேற்று கூறினார்கள், உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே போதிய பலன் அடையாததற்குக் காரணம் நெல் பயிருக்கு பதில் வேறு பயிர்கள் பயிரிடுவதுதான், வேறு எந்தப் பயிரும் போடக் கூடாது என்று. இன்று காலையிலே சர்க்கரைப் பற்றாக்குறை பற்றி கனம் உறுப்பினர் திரு. மணியன் அவர்கள் ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார்கள். மக்களுக்கு சர்க்கரையும் வேண்டும். சர்க்கரையும் உணவுப் பொருள்தான். ஏற்றுமதி ஆவதால் நஷ்டம் அடைகிறோம் என்று கூறினார்கள். எந்தத் தொழிலாக இருந்தாலும், ஏற்றுமதியாக இருந்தாலும் சொல்லுகிறேன், கனம் அங்கத்தினருக்கு அனுபவம் இல்லாமல் இல்லை, ஆரம்பத்தில் நஷ்டம் தான் வரும். நல்ல காரியம் ஆரம்பிப்பதாக இருந்தாலும் ஆரம்பத்தில் நஷ்டம் தான் ஏற்படும். எப்படி பில்ட்-அப் பண்ணுவது? நாட்டிலே சிறந்த பொருளாதார நிலையை ஏற்படுத்த ஏற்றுமதி மிக மிக அவசியம். சர்க்கரையைப் பொறுத்த வரையில் உலகத்தில் பற்றாக்குறை இருக்கிறது. இப்போது புதிதாகக் கூட சர்க்கரை ஆலைகள் வைக்கப் போகிறோம். கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்—அவர்களுக்குத் தெரியாதது அல்ல—விவசாயி பல பொருள்களை மாற்றி மாற்றி பயிரிட்டால்தான் லாபம் பெற முடியும். நெல்லைத் தவிர வேறு எந்தப் பயிரும் கூடாது என்று போட்டால் என்ன பயன்? நமக்குக் கரும்பு வேண்டியிருக்கிறது. நமக்கு எண்ணெய் வித்துக்கள் வேண்டியிருக்கின்றன. நமக்குப் பருத்தி வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிலும் நிறைவு காண வேண்டியிருக்கிறது. பல பயிர்களைப் பயிரிட்டால்தான் விவசாயத்தில் கட்டுப்படி ஆகும். அந்த முறையில்தான் விவசாயத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று கூறிக்கொள்கிறேன்.

இதற்கு மேல் தங்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இது வரையிலே நான் விளக்கியதற்கு பொறுமையோடு செவி சாய்த்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுகிற இந்தப் பிரேரணையை மன்றம் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மற்றத் திருத்தங்களை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

12-30 p.m.

**திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, 'ஆன் ஏ பாயிண்டு ஆப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்'. முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது அடிக்கடி குறுக்கிடவேண்டாம், முடிந்த பிறகு என்னுடைய உரையின் மீது அவர்கள் செய்த விமர்சனத்திற்கு விடை கூறலாம் என்ற நிலையிலே இப்பொழுது நிற்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 'பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்' தான் கொடுக்கவேண்டுமே தவிர, முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு விடை கொடுப்பதற்கு அங்கத்தினர் அவர்களுக்கு அதிகாரம் இல்லை, விதியின்படி.

**திரு. சா. கணேசன் :** இப்பொழுது இவர்கள் என்னைப் பற்றிச் சொன்னது தவறு என்று சொல்லுவதும் விடைதான். அது 'பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷனும்' தான்.

MR. SPEAKER : All right. Let the hon. Member please be brief.

* **திரு. சா. கணேசன் :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது நான் ஏதோ கிண்டல் செய்ததாகக் குறிப்பிட்டார். மனமாற நான் யாரையும் கிண்டல் செய்ய மாட்டேன். சதுர்வேதம் என்று சொன்னேன். அது எப்படி கிண்டல் ஆகும்? வேதம் என்பது விதிப்பது. அதைப்பின்பற்றி நடப்பதே நெறி. கண்ட்ரோல், பெர்மிட், லைசென்ஸ், கோட்டா என்ற இந்த நான்கையும் அவர்கள் வேத நெறியாகக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

திரு. ராஜாஜியைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான் இதைச் சொன்னேன் என்று குறிப்பிட்டார்கள். நான் படிக்கிறபொழுதே சொன்னேன். காந்தியடிகளின் 'கொட்டேஷன்' என்று தெளிவாகவும் சொன்னேன்.

'Control gives rise to fraud, suppression of truth, intensification of the black market and artificial scarcity. Above, all it unman's the people and deprives them of initiative, it undoes the reaching of self-help they have been **learning** for a generation'.

இதைத்தான் சொன்னேனே தவிர, மகாத்மா காந்தியடிகள் சொன்னதைத்தான் சொன்னேனே தவிர, ராஜாஜி அவர்கள் சொல்லுவதற்காக அதைச் சொல்லவில்லை. கண்ட்ரோல் பற்றி சொல்லுகிறபொழுது இப்படி காந்திஜி சொன்னார் என்றுதான் கூறினேன். அதைப் பின்பற்றப்படாது, அல்லது அதைப் பின்பற்ற வேண்டும் என்பது வேறு விஷயம். அந்தக் கருத்தைக் கூட தெரிவிக்கக் கூடாதா? அதைத் தெரிவிப்பதுகூடக் கிண்டலாகுமா? முதல் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது என்னைப் பார்த்து "காரில் போகிறாரா? நடந்துபோகிறாரா" என்று தெரியவில்லை எனச் சொன்னார். அதைக் கிண்டல் என்று நானும் திருப்பிச் சொல்லலாம். நின்று போவதா ஓடியாகப் போவதா? என்றெல்லாம் கேட்டு ரயிலை உதாரணமாகச் சொன்னார். புறப்பட்ட ரயில் அப்படியே நிற்காமல் போய்க் கொண்டிருந்தால் ரயில் என்ன ஆகும். கவிழ்ந்துவிடுமே? உதாரணத்திற்காக ரயில் வண்டியை எடுத்துக்கொண்டதால் நானும் அதையே எடுத்துக்கொண்டு சொல்லுகிறேன். நின்று தண்ணீர் ஊற்றி, என் ஆள் கூட மாற்றவேண்டியிருக்கிறது. ரயில் ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டுமென்றால், அந்தக்





கணக்கில் பார்த்தால் ஆளுவோரைக்கூட மாற்றவேண்டும் என்று சொல்லுவதற்கு எனக்கு உரிமை உண்டு. சர்க்கார் உத்யோகஸ்தர்களைக்கூட மூன்று வருஷத்திற்கு ஒரு முறை மாற்றுவது என்று எதற்காக ஒரு வரம்பு வைத்திருக்கிறோம் என்றால் தவறு, பிழைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து முறை செய்யவும், மேலும் தவறுகள் நடைபெறாமல் தடை செய்யவும் என்றுதான் அவ்வரம்பு இருக்கிறது. இம்மாதிரி எதையும் நான் கிண்டல் செய்வதற்காகச் சொல்லவில்லை. வேறுவிதமாக குறும்புத்தனமான முறையில் அல்லாமல் உள்ளதை உள்ளம் உணர்ந்தபடி ஒழுங்கு முறையுடன்தான் கூறினேன் என்பதைச் சொல்லி அமைகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முக்கியமாக ஒரு விஷயத்தை பற்றி குறிப்பிட நான் மறந்துவிட்டேன். கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் கூறியது இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி ரொம்ப பலமாகக் கண்டித்தார்கள். அதற்குப் பதில் சொல்லாமல் இருந்துவிட்டால் ஒருவேளை அதற்கு இணங்குகிறோம் என்று எடுத்துக்கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே அதற்கு விடை அளித்து விட்டார்கள். ஒரு செகண்டுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன. இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்ன ஆவது? அதற்கு காந்திஜியை மேற்கோளாக எடுத்துக் கூறுகிறார். எனக்கு மகிழ்ச்சி. காங்கிரஸ் தலைவர் காமராஜ் இப்படி கூறினார்கள், காரியக் கமிட்டி கூறியது, காந்தியடிகள் சொன்னார்கள் என்றெல்லாம் குறிப்பிடுவதை வரவேற்கிறேன். ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி. ஆனால் காந்தியடிகள் என்ன சொன்னார், எப்பொழுது சொன்னார், எந்த நிலையில் சொன்னார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஜனங்கள் எப்படியாவது போகட்டும், கண்ட்ரோல் வேண்டாம் என்று சொன்னார்களா? இப்பொழுது குடும்பக் கட்டுப்பாடு எப்படி அமல் நடத்தப் படுகிறது? 'கிராஷ் ப்ரோகிராம்' நடத்தினாலும், அதை வாலண்டரியாக நடத்தவேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். இதற்கெல்லாம் ஆட்சேபிப்பது நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I think we may have to sit in the afternoon also at 3-30 p.m. and sit for one or two hours. Otherwise, we cannot finish all the Bills by to-morrow.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலுக்கு நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. து. ப. அழகமுத்து அவர்களும் திருத்தத் தீர்மானங்களைத் தந்திருக்கிறோம். நகல் திட்டமாக இருக்கிற காரணத்தினாலும், முடிவுபெற்ற நிலையாக இல்லாமல் இருக்கிற காரணத்தினாலும், இதில் பல மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய காரணத்தினாலும், இந்தக் கருத்துக்களை உள்ளடக்கி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th August 1965

[illegible]

The amendments of Sri T. P. Alagamuthu and Sri V. R. Nedunchezhiyan were, by leave, withdrawn.

The amendment of Sri M. Kalyanasundaram was, deemed to have been withdrawn, as the Member was not in his seat.

MR. SPEAKER : The question is—

" *Add* at the end the following :—

' and on such consideration this House approves the draft outline of the Fourth Five-Year Plan '. "

The amendment was put and carried.

MR. SPEAKER : Now, I will put the Government Motion as amended, to the vote of the House. The question is—

' That the draft outline of the Fourth Five-Year Plan be taken into consideration and on such consideration this House approves the draft outline of the Fourth Five-Year Plan. '

The motion, as amended, was put and carried.

## VI.—GOVERNMENT MOTION.

### CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

' That under Rule 21 (3) of the Assembly Rules items 8 and 9 in the Agenda under ' Government Bills ' viz., ' The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965 ' and ' The Holdings (Stay of Execution Proceedings), (Madras Amendment) Bill, 1965 ', be taken after item 3, viz., ' The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965 ' under ' Government Bills '. '

The motion was put and carried.



10th August 1965]

## VII.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1965 (L.A. BILL NO. 21 OF 1965)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

' That the Madras Appropriation (No. 4) Bill ª1965 (L.A. Bill No. 21 of 1965) be taken into consideration '.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

' That the Madras Appropriation (No. 4) Bill, 1965 (L.A. Bill No. 21 of 1965) be passed '.

The motion was put and carried and the Bill was passed.

## VIII.—ANNOUNCEMENTS.

### (1) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) (AMENDMENT) BILL, 1965.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965.

## VII.—GOVERNMENT BILLS—*cont.*

### (2) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 23 OF 1965).

* THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker Sir, I move—

' That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965 * (L.A. Bill No. 23 of 1965) be taken into consideration '.

Mr. SpeKER : Sir, in moving this Bill I wish to say that this is a simple measure seeking extension of the life of the present enactment for a further period of five years. The Madras Buildings (Lease and Rent Control) Act of 1960, as amended by Act XV of 1963, will be in force for a further period of five years. The life of the present enactment will expire on 30th September 1965. At the Bill stage of the principal enactment of 1960 it was provided that the operation of the enactment should be for a period of five years but on the recommendation

ª Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd August 1965.

* Published in the *Fort St. George Gazettee* Extraordinary, dated 7th August 1965.

of the Joint Select Committee it was decided to dispel the fear that it would take a permanent place in the Statute Book and it was enacted that it would be in force for a period of three years. It has been the desire of Government to have minimum possible interference in the matter relating to accommodation and rent of buildings. But the housing position has not improved satisfactorily still. Since there is still acute shortage of accommodation, Government feels that it would be in the interests of the public to extend the life of the present enactment for a further period of five years. Apart from that, there is difficulty now in construction of new buildings, due to the difficult position in getting cement and other construction materials. In view of that it is therefore considered necessary to extend the life of the present enactment. Hence I trust that this House will accept this Bill.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965 (L.A. Bill No. 23 of 1965) be taken into consideration".

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்ற திருத்தம் மிக, மிக அவசியமானது. சென்னை போன்ற நகரங்களிலே இன்னும் வீடு கிடைக்கச் சிரமங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தச் சட்டத்தில் இன்னும் பல திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. முன்பு சட்டத்தில் ரூ. 250-க்கு மேற்பட்ட வாடகையுள்ள ரெஸிடென்ஷியல் பில்டிங்குகளும், ரூ. 400-க்கு மேற்பட்ட வாடகையுள்ள நான்-ரெஸிடென்ஷியல் பில்டிங்குகளும் சட்டத்திற்கு அப்பாற்பட்டது என்று ஏற்படுத்தியது மிக்க வசதியாகப் போய்விட்டது. இன்னும் இதையெல்லாம் தவிர்க்க திருத்தங்கள் சர்க்கார் கொண்டு வந்தால், அவற்றை மனப்பூர்வமாக ஆதரித்து நிறைவேற்றலாம். அவற்றில் ஒன்று 'ஃபிக்சேஷன் ஆப் ஃபேர் ரெண்ட்'. அதை எடுக்கும்போது காம்ப்ளிகேடட் ப்ரொஸீஜராக இருக்கிறது. 20, 30 ரூபாய் வாடகைஉள்ள ஒரு வீட்டிற்கு சொந்தக்காரர் ஃபேர் ரெண்ட் அப்ளிகேஷன் போட்டால், அதை நான்கு மடங்கு, ஐந்து மடங்கு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. கேரளா, பாம்பே சட்டங்களிலே, ஃபிக்சேஷன் ஆப் ஃபேர் ரெண்டுக்கு ப்ரொவிஷன் இருக்கிறது. அதிலே 15 சதவிகிதத்திற்கு மேலே, பழைய வாடகையின் அளவில், ஒரு முறையில் ஏற்றக் கூடாது என்கிற ப்ரொவிஷன் இருக்கிறது. அதைத்தான் நான் ஒரு நான்-அபிஷியல் திருத்தமாகக் கொடுத்திருந்தேன். ஆனால், நேரத்திலே வராத காரணத்தினால், அன்றைக்கு அதை எடுத்துக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைக் கவனித்து உடனடியாகப் பரிகாரம் தேடக் கூடிய முறை



யில், கனம் அமைச்சர் அவர்கள் ஒரு திருத்த மசோதா கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால், அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளுவேன் என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. சே. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த ரெண்ட் கண்ட்ரோல் ஆக்டிலே, முக்கியமாக, இரண்டு கொள்கைகள் இருக்கின்றன. ஒன்று 'அகாமடேஷன் கண்ட்ரோல்', இன்னொன்று 'ரெண்ட் கண்ட்ரோல்'. ரெண்ட் கண்ட்ரோலைப் பொறுத்த அளவுக்கு, இந்தச் சட்டத்தை நீடித்துக் கொண்டு போவதை விட, இதை நிரந்தரமாகச் செய்யவேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு டவுன் பஞ்சாயத்து, நகராட்சி இருக்கக்கூடிய இடங்களிலே, இந்தச் சட்டம் ஓரளவுக்கு பயன் படுத்தப் படுகிறது. அங்கே யெல்லாம், குடியிருப்பவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்க இது உதவியாக இருக்கிறது. ஆகவே, ரெண்ட் கண்ட்ரோல் பொறுத்த மட்டில் இந்தச் சட்டத்தை நிரந்தரமாக்கலாம். இன்னொன்று அகாமடேஷன் கண்ட்ரோல். நகராட்சி இருக்கும் இடங்களில், முக்கியமாக சென்னை போன்ற நகரங்களில் இது இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த போதே, அதன் பொறுப்பை வகித்த கனம் அமைச்சர், ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியிலும், இங்கே மன்றத்திலும் ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு ஒரு முறை இதைப் பரிசீலிப்போம், அப்படிப் பரிசீலித்து எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ, அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகாரத்தைத் தவிர்ப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சம்மந்தமாக இருக்கும் ப்ரொவிஷன், செக்ஷன் 3. அரசாங்கம் அந்த உறுதியை 1960-ல் கொடுத்தாலும், இன்றைக்கு ஐந்தாண்டுக்குப் பிறகும், அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலைமைதான் இருக்கிறது.

ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் செய்வதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது செக்ஷன் 4-ன் கீழே வருகிறது. செக்ஷன் 4 விவாதம் செய்யப்பட்ட போதே குழப்பமான சூழ்நிலை தான் இருந்தது. சமீபத்திலே உயர்நீதி மன்றத்திலே, ஒரு வழக்கு வந்தது. தாத்பரியத்தைப் பார்க்கும்போது, இந்த செக்ஷன் 4-க்கும், செக்ஷன் 4-ன் கீழே விதிக்கப்பட்ட விதிகளுக்கும் முரண்பாடு இருக்கிறதா என்று பரிசீலிக்கப்பட்டது. செக்ஷன் 4-க்கும், அதன்கீழ் போடப்பட்ட விதிகளுக்கும் முரண்பாடு இல்லை என்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. ஆனாலும், செக்ஷன் 4-ன் அமைப்பு எப்படி இருக்கிறது என்பது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் செய்வதற்கு முன்பாக சில விஷயங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்று, காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன். இதிலே தான் குழப்பம் ஏற்படுகிறது. காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன் என்றால், ஒரு கட்டடம் கட்டி 50, 60 ஆண்டு ஆகியிருக்கும். அந்தக் கட்டடத்திற்கு இன்றைக்கு காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன் நிர்ணயிக்கும்போது, சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? 1960-ம் ஆண்டில்

மெடீரியல்ஸுக்கு என்ன விலை இருந்ததோ அதை வைத்து, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் அல்லது ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் கொடுத்திருக்கிற ப்ரிஸ்க்ரிப்ஷன் படி, கணக்கிட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பொருத்தமானதுதானா என்று பரிசீலிக்க வேண்டும். எவ்வளவு ஆயிற்று என்னென்ன சங்கடங்கள் என்று உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். சென்னையிலே ஒரு கட்டடத்திற்கு இன்றைக்கு வாடகை ரூ. 375 மாதத்திற்கு என்று இருந்தால், சட்டத்தின் 4-வது செக்ஷனில் அதற்குக் கிடைக்கக் கூடிய வாடகை இன்றைக்கு ரூ. 2,854 சொச்சம். அதே மாதிரித்தான் கோயம்புத்தூரிலும் இதே கேஸில் சேர்ந்தது. இப்பொழுது கிடைக்கும் வாடகை ரூ. 287.50 என்றால் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய வாடகை ரூ. 1,200. இந்தக் கட்டடம் 1941-ல் கட்டப்பட்டது. ஆகவே, நம்முடைய விதிகள் காரணமாக, இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். செக்ஷன் 4-ஐ மாற்றியமைக்க வேண்டும். அல்லது செக்ஷன் 4-ன் அடிப்படையில் போடப்பட்ட விதிகளில் 'காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன்' என்பதற்கு விளக்கம் கொடுத்துவிட்டால், பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடையூறுகள் ஏற்படாமல் இருக்கும் என்கிற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டமானது, மூன்றுவித ப்ரொடெக்ஷன் கொடுக்கிறது—கண்ட்ரோல் எகென்ஸ்ட் எவிக்ஷன், அதே மாதிரி கண்ட்ரோல் எகென்ஸ்ட் இன்க்ரீஸ் ஆப் ரெண்ட், பிறகு கண்ட்ரோல் ஆப் அகாமொடேஷன், ஆக மூன்றுவித ப்ரொடெக்ஷன் இருக்கிறது. முன்னே இந்த அகாமொடேஷன் சம்மந்தமாக கொஞ்சம் கொஞ்சமாகப் பரிசீலித்து, கண்ட்ரோலை எடுக்க முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, அந்த முறையில் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது, இப்பொழுது உள்ள நிலையில், கண்ட்ரோல் எகென்ஸ்ட் எவிக்ஷன் வேண்டும். இவ்வளவு இருந்தும், மதுரை போன்ற நகரங்களில் குறிப்பாக, மிடில் கிளாஸ், லோயர் மிடில் கிளாஸ் மக்களை எடுத்துக் கொண்டால், ஸிடியில் பார்த்தால், வெளியேற்றம் அதிகமாகத்தான் இருக்கிறது. குறிப்பாக சாதாரண ஏழை மக்கள், பள்ளி ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், வீடு இல்லாமல் அவதிப்படும் நிலைமை இருக்கிறது. ரெஸிடென்ஷியல் கட்டடங்கள் நான்-ரெஸிடென்ஷியல் கட்டடங்களாக மாற்றுவதால், தொந்தரவுகளுக்கும், இம்சைகளுக்கும் உள்ளாகிறார்கள். எவ்வளவோ விதத்தில் அவர்களை வீட்டுக்காரர்கள் கஷ்டப்படுத்துகிறார்கள். லைட்டைக் கட் பண்ணிவிடுகிறார்கள். ஆகவே, குடியிருப்பவர்கள் வெளியேறவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. வீட்டைக் காலி பண்ணினால், சாதாரணமாக 150 ரூபாய் வருமானம் உள்ள நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்கு 20, 30 ரூபாயில் வீடு கிடைப்பது இல்லை. இந்த மாதிரிக் கஷ்டம். குறிப்பாக ரெஸிடென்ஷியல் ஏரியாவை மாற்றி நான் ரெஸிடென்ஷியல் கட்டடங்கள் கட்டுவதால் ஏற்படுகிறது. இது சம்மந்தமாக ஒரு சர்வே செய்து, மிடில்



கிளாஸ், லோயர் மிடில் கிளாஸ் மக்களுக்கு ஹார்ட்ஷிப் இல்லாத வகையில் சட்டத்தில் ப்ரொவிஷனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கான நடவடிக்கைகளைக் கண்டிப்பாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதே சமயத்திலே, ஆசிரியர்களுக்குத் தனியாக வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கூறி இருக்கிற யோசனையையும் பரிசீலிக்க வேண்டும். அதையும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரே ஒரு விஷயம்; ப்ரொஸீஜர் சம்மந்தமாக, ஒரு வார்த்தைச் சொல்லி முடிக்கிறேன். இந்த மசோதா 7-ம் தேதி இண்ட்ரொட்யூஸ் செய்யப்பட்டது. இன்றைக்கு 10-ம் தேதி விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு விட்டோம். மூன்று நாளில், வெய்வர் நோட்டீஸில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவசரமான சட்டம்தான், செப்டம்பர் மாதம் முடிவடைகிறது. கண்டிப்பாக வரவேண்டிய சட்டம்தான். இல்லாவிட்டால் நடுவிலே லேகுனா ஏற்பட்டுவிடும். ஆனாலும், ஹெல்த் டிபார்ட்மெண்ட் சரியாகச் செய்யவில்லை. அவர்களுக்குக் கண்டிப்பாகத் தெரியும் சட்டசபை கூடுகிறது என்று. ஒரு மாதத்திற்கு முன்பே தெரியும் இது 'இனுகுல்ஸ்' அமெண்ட்மெண்ட் தான். இது ஒன்றும் பெரிய பில் இல்லை, அதிகம் பரிசீலித்து, ஆராய்ந்து ஃப்ரேம் பண்ண வேண்டும் என்கிறது இல்லை. ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது. அவர்கள் லெஜிஸ்லேச்சரை இவ்வளவு லைட்டாக ஏன் ட்ரீட் பண்ண வேண்டும் என்றுதான் அறிய விரும்புகிறேன். இந்த மாதிரி கடைசி நிமிஷத்திலே, லெஜிஸ்லேச்சரை லேசாக நினைத்து, அவர்களுடைய டிபெண்டண்ட் பாடீஸ் மாதிரி நினைத்து, எப்படியும் பாஸ் பண்ணிக் கொள்ளலாம் என்று, அவ்வளவு கண்டெம்ப்டாக வைத்து ஏன் செய்கிறார்கள் என்றுதான் தெரியவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பே சட்டசபை கூடும் விஷயம் அவர்களுக்குத் தெரியும். ஐந்து நாள் நோட்டிஸ் கூட இல்லாமல் இப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் நல்ல ப்ரீஸிடெண்டுகளை ஏற்படுத்த வேண்டும். கனம் ஸ்பீக்கர் அவர்களும் கண்டிப்பாக இருந்து, வெய்வர் கொடுப்பதா வேண்டாமா என்று நன்றாக யோசிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இனிமேலாவது இந்தமாதிரிப் பண்ணக் கூடாது, இப்படிச் செய்வதற்கு சரியானபடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இது ஒரு சாதாரண மசோதா. இப்பொழுதுள்ள இந்தச் சட்டத்தின் காலத்தை மேலும் ஐந்து வருஷங்களுக்கு நீடிக்கவேண்டும். அதற்கு இந்தச் சட்டத்தில் 'ஐந்து வருஷங்கள்' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக 'பத்து வருஷங்கள்' என்று திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்குத்தான் இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்குக் கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்களுக்கு அவ்வளவு கோபம் வந்திருக்கவேண்டாம்.

**கனம் சபாநாயகர் :** இந்தச் சாதாரண மசோதாவிற்கு ஏன் முன்னதாகவே நோட்டீஸ் கொடுத்திருக்கக் கூடாது என்று தான் கனம் அங்கத்தினர் கேட்கிறார்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்போது வீடு கிடைப்பதில் கஷ்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, அரசாங்க ஊழியர்கள் படுகிற கஷ்டத்தையெல்லாம் கவனித்துத்தான், இதை இன்னும் ஐந்தாண்டுகளுக்கு 'எக்ஸ்டென்ட்' பண்ண வேண்டும் என்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் 'ஃபிக்ஸேஷன் ஆஃப் ஃபேர் ரென்ட்' பற்றிக் கூறினார்கள். வாடகை நிர்ணயம் செய்யும்போது, கட்டடங்கள் இருக்கக்கூடிய இடங்கள், கட்டடங்களின் வயது, சுற்று வட்டாரம் இவைகளையெல்லாம் ஆராய்ந்துதான் வாடகை நிர்ணயம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. 'ஃபிக்ஸேஷன் ஆஃப் ஃபேர் ரென்ட்' பற்றிக் கனம் அங்கத்தினர்கள் திருமதி அனந்தநாயகி அவர்களும், திரு. மாதவன் அவர்களும் கூறினார்கள். நான்காவது செக்ஷனில் உள்ள கஷ்டத்தைப்பற்றியும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதையும் அரசாங்கம் ஆராயும் என்று கூறிக்கொண்டு, இந்த மசோதாவை எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965 (L.A. Bill No. 23 of 1965) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965 (L.A. Bill No. 23 of 1965) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

## (3) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 20 OF 1965).

* THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965 * (L.A. Bill No. 20 of 1965) be referred to a Select Committee of the House consisting of the following Members:—

1. Sri R. Krishnaswamy Naidu.
2. Sri A. M. P. S. Balagangadharan.
3. Sri A. Senapathi Gounder.

*Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd August 1965.





4. Srimathi P. K. R. Lakshmikantham.
5. Sri T. P. Elumalai.
6. Sri M. S. Selvarajan.
7. Sri K. Narayanaswami Pillai.
8. Sri A. R. Ramasami.
9. Sri T. P. Alagamuthu.
10. Sri K. A. Mathialagan.
11. Sri V. Krishnamoorthy.
12. Sri Saw. Ganesan.
13. The Hon. Sri R. Venkataraman."

Hon. Members are aware that the need for amending the provisions of the Madras General Sales Tax Act, 1959, relating to the powers of the officers of the Commercial Taxes Department for inspection and search of business premises, etc., of dealers in the light of the ruling of the Madras High Court in R. S. Jhavar *v.* Commissioner of Commercial Taxes, Madras, was briefly discussed in the House on the 20th March 1965, while voting on the Sales Tax demand. In that connection, I had mentioned that the decision of the Madras High Court would be taken on appeal to the Supreme Court to obtain an authoritative ruling and that there was every possibility of success in the appeal. The Government have accordingly taken further action to take the matter on appeal to the Supreme Court. It may take some time for the Supreme Court to decide the appeal. In the meanwhile, the working of the Department should not be paralysed for lack of adequate powers. The Government have therefore decided to amend the relevant provisions of the Madras General Sales Tax Act, 1959, on the lines of the provisions in the Income-tax Act, 1961.

In the opinion of the High Court, the provision of sub-section (i) of the existing section 41 of the Madras General Sales Tax Act are valid. But the High Court has held the existing sub-sections (2) to (4) of section 41 of the said Act as unconstitutional. It also held that the power of inspection conferred by sub-section (2) of the said section, does not include the power of search. The High Court has observed that the power of search, even of goods, if included in section 41 of the said Act, would be competent and such a power would be plainly in aid of achieving the purposes of the Act and that the power of search of books, documents, etc., of a dealer maintained in the course of his business is clearly sustainable. But the High Court has held that the power of seizure and confiscation of goods if not ancillary or incidental to the power to levy tax on sale or purchase, of the goods, even from the standpoint of checking evasion or making evasion unprofitable. Consequently, it has held that sub-section (4) of section 41, in so far as it provides for such a power, is not within the ambit of entry 54 of List II in the Seventh Schedule to the Constitution. The

[Sri R. Venkataraman] [10th August 1965

High Court has also observed that the inter-position of a Magistrate or judicial discreation is not a *sine qua non* for a power of search to be a reasonable restriction and that it is not necessary that a search, to be valid, must necessarily be on a warrant. On a comparison of the provisions for search in the Income-tax Act 1961, with those under the Madras General Sales Tax Act, 1959, the High Court has held that the exigencies of the collection do not justify a general, unrestricted, and direct investiture of powers of search on the officials of the various departments in the lower level, not confined to the tax authorities alone, without a fairly higher official above them, having to examine in each case whether the interests of the State demand or the circumstances of tax collection require that the powers of search should be exercised in particular and specific cases. The High Court has also held sub-sections (2) to (4) of section 41 of the Act cannot be viewed as reasonable restrictions and thus offend Articles 19 (1) (*f*) and (*g*) of the Constitution. The High Court has, however, observed that the scope of Articles 19 (1) (*f*) and (*g*) in the present context, can only be finally settled by the Supreme Court.

Existing section 42 provides for seizure and confiscation of goods at checkposts or barriers. Though the validity of this section was not questioned before the High Court, the Government have examined the provisions of this section and consider that in the light of the ruling of the High Court, that section should also be suitably substituted. The present Bill accordingly seeks to substitute new sections 42 and 42-A in lieu of existing section 42.

The following are the main features of the amendments proposed in the Bill:—

(i) the power of search is treated separately from the power of inspection;

(ii) provision for seizure and confiscation of goods has been dispensed with;

(iii) the power to authorise search and seizure is conferred on the Deputy Commissioner;

(iv) only officers of the rank of Commercial Tax Officers should be authorised to search or seize accounts, etc.;

(v) the guiding principles for the exercise of the power of authorising search and seizure have been clearly set out in the new provisions proposed;

(vi) the Deputy Commissioner exercising the power of authorising search or seizure will have to record reasons in writing before he so authorises the Commercial Tax Officer;

(vii) against the orders of the Deputy Commissioner authorising search and seizure, a right of revision to the Board of Revenue is provided for;



10th August 1965] [Sri R. Venkataraman]

(viii) it has been made clear that search of a dealer's accounts can be made if they are suspected to be found in the premises of any other dealer or person;

(ix) it has been provided that every check-post or barrier should be in charge of an officer of the Commercial Taxes Department not below the rank of an Assistant Commercial Tax Officer;

(x) the power to stop vehicle or boat at any place other than a check-post or barrier is to be exercised by officers of the Commercial Taxes Department not below the rank of an Assistant Commercial Tax Officer;

(xi) specific provision has been made for the assessment and collection of advance tax in respect of sale or purchase of goods in transit. 1-00 p.m.

The provisions in the new section 41 relating to powers of inspection and new section 41-A relating to powers to enter, search and seize, as proposed are generally on the lines of the provisions in sections 133-A and 132 of the Income-Tax Act 1961 with modifications to suit local conditions.

In view of the decision to amend sections 41 and 42 of the Act, certain consequential amendments to sections 31, 45 and 83 of the Act are also proposed.

Under section 54 of the Act, the officers of the Department are empowered to summon witnesses and to cause production of documents. It has been found necessary to have a specific provision in the Act, empowering the officers of the Commercial Taxes Department to enforce the attendance of the parties summoned and the production of accounts, registers and other documents called for, by imposition of a penalty on the defaulter. The Government have accordingly decided to add a new sub-section to section 54 of the Act on the lines of sub-section (2) of section 131 of the Income-Tax Act.

Taking advantage of it a modification is proposed to be made in respect of a levy on aluminium ingots. Aluminium ingots are now being manufactured in this State. The Government have decided to subject aluminium ingots to 5 per cent single point tax at the point of first sale in the State with effect from the 1st July 1965. A notification in this regard, under section 59 (1) of the Act, has already been published on the 30th June 1965. Under section 59 (2) of the Act, the notification has to be replaced by an Act. Clause 7 of the Bill provides for this. I request the House, Sir, to accept the motion for referring the Bill to a Select Committee.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 20 of 1965) be referred to a Select Committee of the House consisting of the following Members:—

1. Sri R. Krishnaswamy Naidu.
2. Sri A. M. P. S. Balagangadharan.
3. Sri A. Senapathi Gounder.
4. Srimathi P. K. R. Lakshmikantham.
5. Sri T. P. Elumalai.
6. Sri M. S. Selvarajan.
7. Sri K. Narayanaswami Pillai.
8. Sri A. R. Ramasami.
9. Sri T. P. Alagamuthu.
10. Sri K. A. Mathialagan.
11. Sri V. Krishnamoorthy.
12. Sri Saw. Ganesan.
13. The Hon. Sri R. Venkataraman."

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தமிழ்நாடு பொது விற்பனை வரி மசோதா பொறுக்குக் குழுவிற்குப் போக இருக்கிறது . . .

SRI V. SANKARAN: On a point of order, Sir, is it not a convention in this House that ordinarily a member who is in the Select Committee of a Bill will not speak on the same when the motion to refer it to a Select Committee is taken into consideration?

MR. SPEAKER: The hon. Member himself says 'ordinarily'. The hon. Member Sri K. A. Mathialagan may speak now.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த மசோதாவை அவர்கள் கொண்டு வந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொறுக்குக் குழுவிற்கு விடுவதையும் நான் ஆதரிக்கிறேன். இதை அவர் கொண்டு வந்திருப்பதன் மூலம் ஒரு பெரிய ஆரோக்கியமான சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். விற்பனை வரி மசோதா சம்பந்தமாக நான் கடந்த மார்ச் 20-ஆம் தேதி அன்றையதினம் இந்த மன்றத்தில் ஒரு உரை நிகழ்த்தினேன். அந்த என் உரையின் அடிப்படையிலேயே இந்த மசோதா வந்துள்ளது. ஒருவகையில் இதை மதியழகன் மசோதா என்றே சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் மசோதா என்றே சொல்லலாம்.

அந்த உரிமையோடு இதைப் பாராட்டுவதோடு நமது அமைச்சர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டதை ஆதரிக்கிறேன், வரவேற்கின்றேன். இந்த ஒரு முக்கியமான காமதேனுவை நாம் சரியான முறையில் கண்காணித்து வந்தாலேயே நான்காவது ஐந்தாண்டுத்



திட்டத்திற்குத் தேவையான நிதி பூராவும் கிடைக்கும். பல இனங்கள் வரி விதிப்புக்காக வைத்துக்கொண்டு இருக்கிறோமே அவற்றை எல்லாம் கூட ரத்து செய்துவிடலாம். அன்றைக்கே நான் இதைத் தான் சொன்னேன். நான் சட்டத்தில் நிபுணன் இல்லை. ஞானசாகரன் என்று சொல்லிக் கொள்ளவில்லை.

இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவை வரவேற்கிறேன். வரியை ஏய்க்கிற சமூகத்துரோகிகள் ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்பட்டாலேயே நம்முடைய வருமானம் சரியான முறையில் இருக்கும். இதைத்தான் நான் அன்றைக்கே சொன்னேன். வருமான வரிச் சட்டத்தைப் போலக் கொண்டு வரலாம் என்று நான் சொன்னதற்கு கனம் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்பதை இங்கே படித்துக் காட்டினால் தான் புரியும். நாம் செய்து வந்த சோதனைகளை ஹைக்கோர்ட்டார் செல்லாது என்று தீர்ப்பளித்தபோது சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றால் நமக்குப் பல சாதகமான பாயின்ட்டுகள் இருக்கின்றன என்று சொன்னேன். வருமான வரிக் கமிஷனர் சோதனைக்கு உத்தரவு போடுவதுபோல விற்பனைவரிக் கமிஷனர் போடலாம் என்று அன்றைக்கே சொன்னேன். அதற்கு கனம் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள் "சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் இதே தீர்ப்புத் தான் வரும்" என்றார்கள். "நான் ஒரு வக்கீல் மெட்ராஸ் ஹைக்கோர்ட்டில் ப்ராக்டீஸ் பண்ணியவன். அதோடு சர்வதேச நாடுகளில் ஒரு நிர்வாகப் பொறுப்பிலே தீர்ப்புக் கொடுக்கக்கூடிய பொறுப்பு உள்ளவனாக இருக்கிறேன். நானும் பல நல்ல உயர்ந்த, சீனியர் அட்வகேட்களையெல்லாம் கலந்தாலோசித்து இருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், கனம் மதியழகன் சொன்ன அபிப்பிராயம் இன்றைக்கு சபை நிகழ்ச்சியில் ரிக்கார்ட் ஆகும். ஆகவே என்னுடைய அபிப்பிராயத்தையும் சொல்ல விரும்புகிறேன்—அப்பீல் வெற்றிபெற எல்லா வாய்ப்புகளும் இருக்கிறதுதான்" . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தாங்கள் அன்று சொன்னவற்றைப் படித்துவிடுகிறேன். "நான் அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் இன்றைக்கு 'shall be open to inspection' என்று சொன்னால் என்ன பொருள் என்பதைச் சாதாரணமாகப் பார்க்க வேண்டும். 'It shall be open to inspection' என்று சொன்னால் எந்தத் துறையிலும் போய்ப் பார்க்க முடியாது. 'It shall be open to inspection' என்று சொன்னால் அந்த முறையில் இன்ஸ்பெக்ஷன் செய்யலாம், அடுத்தாற்போல், எந்த ஒரு பண்டத்தையும் தேடி எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால் தேடாமல் எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு மேல், அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை" என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மேலும் நான் கூறியிருப்பதைப் பாருங்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பார்க்கிறேன், "சட்டம் என்னுடைய அபிப்பிராயத்தில் சரியாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு வாதாடிய அட்டார்னி ஜெனரல், நம் ராஜ்யத்தைச் அல்ல, இந்திய சர்க்கார் அட்டார்னி ஜெனரல். அவர்களுடைய அபிப்பிராயமும் அப்படித்தான் இருக்கிறது.

அடுத்தாற்போல் 'any officer' போய் இம்மாதிரிப் பிடிக்கலாமா என்பதைப் பற்றி ஹைகோர்ட் தீர்ப்பை எடுத்துக் காட்டினர்கள். ஏதோ நம்முடைய ராஜ்யத்தினுடைய எல்லையில் இருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு கடத்தல் நடக்கிறது என்றால் கடத்தல் நடக்கும்போது டெபுடி கமிஷனர் பர்மிஷன் வாங்கித்தான் செய்ய வேண்டும் என்றால் அது குதிரை ஓடிய பிறகு லாயத்தை பூட்டிய மாதிரி தான் ஆகும்."—நான் இன்றைக்குக் கேட்கவில்லை. குதிரை ஓடியபிறகு லாயத்தைப் பூட்டினீர்களா என்று—"ஒரு குற்றம் நடக்கப்போகிறது என்கிற நிலைமை இருக்கிறது. ஒரு ஹெட் கான்ஸ்டபிள் குற்றம் செய்ய இருப்பவரை அரெஸ்ட் செய்து விடலாம்; அவரிடத்தில் சொல்ல முடியாது. 'நீ சாதாரண ஹெட் கான்ஸ்டபிள் தானே, ஐ.ஜி. பர்மிஷன் வாங்கிக் கொண்டு வந்து என்னை அரெஸ்ட் செய்யும்' என்று. அப்படியென்றால் குற்றத்தைத் தடுக்க முடியாது. ஆகவே என்னுடைய அபிப்பிராயத்தில், சர்க்கார் அபிப்பிராயத்தில், அப்பீல் போடுவதற்கு நல்ல சூழ்நிலை இருக்கிறது என்று தான் முடிவு செய்து இருக்கிறோம்" என்று பேசியிருக்கிறார். மேலும் அவர் பேசுகிற போது "சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொன்னால், இப்பொழுது பெரிய அதிகாரி உத்தரவு வாங்கித்தான் எந்தவிதமான ஸர்ச், ஸீஷர், செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் பல கணக்குகள் கண்டு பிடிக்க முடியாமல் போய்விடும். இன்கம் டாக்ஸுக்கும், ஸேல்ஸ் டாக்ஸுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. இன்கம் டாக்ஸிலே, இன்றைக்கு கணக்குகள் வரவு செலவு செய்து, லாப நஷ்டம் பார்த்து, எஞ்சியிருக்கும் வருமானத்திற்கு வரி. ஆனால் ஸேல்ஸ் டாக்ஸில் அப்படியில்லை. எந்த ஒரு ட்ரான்ஸாக்ஷன் நடந்தாலும் அதற்கு வரி. அதனால் ஏதாவது ஒரு ட்ரான்ஸாக்ஷனை மறைக்க முற்பட்டால் அதை உடனே தடுக்காவிட்டால் நமக்கு நஷ்டம் வரும். சர்க்காருக்கு நஷ்டம் வரும். இன்கம் டாக்ஸ் அப்படியில்லை. ஒவ்வொரு ட்ரான்ஸாக்ஷனும் இல்லாமல், பொதுவாக கணக்குப்பூராவாக எழுதி, வருகிற வருமானங்களையும் செலவாகிற தொகைகளையும், கூட்டிக் கழித்து, பாக்கி இருக்கின்ற அளவுக்கு வரி போடுகிறோம். அது சம்பந்தமாக ஒரு பெரிய அதிகாரியிடம் சர்ச்சை செய்ய நேரம் அவகாசம் உண்டு. ஆனால், திடீர் திடீர் என்று டிரான்ஸாக்ஷன் நடப்பது, அடுத்த ராஜ்யத்திற்கு உடனே கணக்குகளை மாற்றுவது இப்படியெல்லாம் இந்த வருமான வரியில் இல்லை. ஆகவே, இந்த விற்பனை வரி சம்பந்தமாக யாரோ ஒருவரைப் பார்த்து, பர்மிஷன் வாங்கித்தான், அதன் பிறகு தான், போய் பிடிக்க வேண்டும்





என்றால் நான் முன்பு சொன்னதைப்போல், குதிரை திருட்டுப் போனபிறகு தொட்டையைப் பூட்டிக் கொண்டு இருக்கும் நிலை தான் உண்டாகும். அதைத்தான் பரிசீலனை செய்கிறோம். சர்க்கார் பரிசீலனை செய்வது எது என்றால் இம்மாதிரி நம் அதிகாரத்தை வருமான வரிச் சட்டத்திலே இருக்கும்படியான நிலைமைக்கு இதை மாற்றியமைப்பது சரியா, அப்படி மாற்றியமைத்தால் அதனால் ஏதாவது நன்மை ஏற்படுமா, நாம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் அதனால் வெற்றிகரமாக இருக்குமா என்பதைத்தான் நாம் பரிசீலனை செய்கின்றோம். "பிறர் சொன்னதையெல்லாம் நாம் செய்தால், கழுதையை தூக்கிக் கொண்டு போன கதையாகிவிடும். கழுதையை நாமே தூக்கிக்கொண்டு போகாத அந்த நிலையிலே சர்க்கார் இன்றைக்குப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இப்பொழுது கழுதையைத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறார் என்று சொல்லவில்லை. நாங்கள் இதைப்பற்றி அன்றைக்கு வற்புறுத்திச் சொன்ன போதெல்லாம், கோடிக்கணக்கான ரூபாய்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்று சொன்னபோதெல்லாம், தவறுக்குத் தவறு பரிகாரம் ஆகாது என்ற முறையிலே பதில் சொன்னார்கள். எதிர்க் கட்சி ஒரு கருத்தைச் சொல்லும்பொழுது அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் பாருங்கள், நாங்கள் கொடுத்ததைவிட ஒரு வரியாவது அதிகமாக இருக்கிறதா? ஏன் அதை அன்றைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது? எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இல்லையா? நான் இப்படிக் கூறுவதற்குக் காரணம் இருக்கிறது. நான் நேற்றுக்கூடப் பத்திரிகையிலே பார்த்தேன். பரமகுடிக்குப் பக்கத்திலே ஒரு சினிமாவில் 500 பேர்களுக்கு டிக்கட்டே கொடுக்கவில்லை. அதே போன்று கோயம்புத்தூரில் பவானியில் ஒரு சினிமாக் கொட்டகையில், 5,000 ரூபாய்க்கு இலவசமாகக் காட்டப்பட்டிருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டமான செங்கல்பட்டு மாவட்டத்தில் மாலுமதி என்ற இடத்தில் சினிமாக் காட்டப்படும் என்று போடப்பட்டு கடைசியில் சினிமா நடக்கவில்லை என்று எல்லாம் செய்திகள் வருகின்றன. ஆகவே கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இவ்வளவு காலமும் இதை ஏன் செய்யவில்லை? இப்படிப்பட்ட ஒரு மசோதாவை முன்பே கொண்டு வந்திருக்க வேண்டும். இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்குக் கொண்டு வந்து அங்கேயும் நல்லமுறையில் விவாதித்து இன்னும் நல்ல முறையில் செயல்படுவதற்கு நமது தொழில் அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விற்பனை வரி மசோதாவை வரவேற்று நான் முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி திருத்த மசோதாவைக் கொண்டுவரும் பொழுது ஒரு சில வார்த்தைகள் இதைப்பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்திலேயே கூறியிருக்கிறார்கள்,

மாற்றங்களை இந்தத் திருத்தம் கொண்டுவரவில்லை என்று. 'Sections 11 and 12 are unconstitutional' என்று கருதுவதாகத் தெரிவித்தார்கள். அந்த முறையில் பல தடவை கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். அவைகளில் கோர்ட்டிலே வெற்றி பெற்றுவிட்டார்கள் என்ற நம்பிக்கை தமக்கிருக்கிறது. இந்த நோட்டீஸின் மூலம் அவசரமாகக் கொண்டு வரவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். வெற்றி பெற்றுவிடுவோம் என்பதற்காக அவசரப்பட இருக்கும்பொழுது நாம் கோர்ட்டினுடைய தீர்ப்பைப் பார்த்துக் கொண்டு அதற்குப் பின்னால் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவது நல்லது என்று நினைக்கிறேன். ஆற அமர யோசித்துச் செய்யவேண்டிய இதைச் செய்வது நல்லது என்று நினைக்கிறேன். அதற்கு திருத்தங்களைக் கொண்டுவருவதும், சட்டங்களைக் கொண்டு வருவதும் வியாபாரிகளுக்கு அவ்வளவு நல்லதல்ல. ஆகவே கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது இதை அவசரமாகக் கொண்டுவருவதற்கு காரணம் என்ன நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே, இதை மீண்டும் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இந்தத் திருத்தத்திலே நல்ல சில பாயிண்டுகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு பெரிய அதிகாரி செக்ஷனில் சென்று சோதனை போடுவதற்காக என்ற காரணத்தைச் சொல்லவேண்டும்; அதற்கப்புறம்தான் அவர் பார்க்கவேண்டும்.

'Only officers of the rank of the Commercial Tax Officer should be authorised to search'

என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பல பாதுகாப்புக்களை வியாபாரிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திருத்தம் வருவதால் சோதனைகள் செய்வார்களோ என்று வியாபாரிகளின் உலகம் பயப்படுகிறது. இதையெல்லாம் புரிந்துகொண்டு இந்தச் சோதனைகளுக்கு எல்லாம் இடம் கொடுக்காத அளவுக்கு வியாபாரிகள் தாங்களாகவே திருந்தி நடந்துகொள்வார்களானால், அவர்கள் வியாபார உலகத்திற்குப் பெருமை தேடித் தருபவர்கள் ஆவார்கள். சோதனை என்ற ஒன்று வந்து அதனால் வரும் விளைவுகளை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவர்களே அந்த அளவுக்கு இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்வது அவர்களுக்கும் நல்லது என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக 45-வது செக்ஷனுக்கு அமெண்ட்மெண்ட் கொண்டுவந்து இருக்கிறோம். 'whoever prevents or obstructs an officer' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அவர்களுக்கு சிறைத்தண்டனை அல்லது ஃபைன் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். பப்ளிக் சர்வண்ட்டை அவர்களுடைய வேலையைச் செய்வதிலிருந்து தடை செய்வது ஒரு குற்றம் என்று ஏற்கனவே இருக்கும்பொழுது, இதற்காக இன்னொரு சப்-புரொவிஷன் வேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும். காரணம், ஐ.பி.ஸி-யில் இப்படிச் செய்வது ஒரு குற்றம் என்று ஏற்கனவே இருக்கிறது. பொது வேலையைச் செய்பவர்களைத் தடுக்கக்கூடாது, அப்படித் தடுப்பது குற்றம் என்று இருக்கும்பொழுது மீண்டும் ஒரு



திருத்தம் கொண்டுவர வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வியாபாரிகளுக்குச் சிறைத் தண்டனை கொடுப்பதால் யாருக்கும் லாபம் கிடையாது. பெரிய குற்றவாளிகளைச் சிறையில் வைத்தால் அவர்களுக்குப் பயம் இருக்கும். ஆனால் இவர்களுக்கு எல்லாம் சிறைத்தண்டனை போட்டால் 'சிறை தானே, கொஞ்ச நாள் இருந்துவிட்டு வந்தால் போச்சு' என்ற அளவிலேதான் இருக்கும். ஆகவே எல்லாச் சட்டத்திலும் சிறை, சிறை என்று கொண்டு வந்தால், சிறைக்குச் சென்று வருவது ஒரு குவாலிஃபிகேஷன் என்ற நிலைமை வந்துவிடும். ஆகவே, இந்தச் சிறைத் தண்டனை என்பதை எடுத்துவிட்டு 5,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று அபராதம் போட்டால் அரசாங்கத்திற்கு வருமானமாவது இருக்கும்.

'On conviction be liable to simple imprisonment which may extend to six months or a fine . . . .'

என்று சொல்லியிருக்கிறார்கள். இம்பிரிசன்மெண்ட் என்பதை எடுத்துவிட்டு ஹெவி ஃபைன் போட்டால் நல்லதாக இருக்கும். அவர்களுக்கும் பணம் கட்ட வேண்டுமே என்ற பயம் இருக்கும்; அந்தப் பயத்தின் காரணமாகச் சட்டத்திற்குப் புறம்பாகப் போவதற்கு முடியாத சூழ்நிலை இருக்கமுடியும். இந்த 45-வது செக்ஷனுக்குத் திருத்தம் அவசியமா என்பதையும் யோசிக்க வேண்டும். சிறையை விட அபராதம் மிகச் சிறந்தது என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக எவிடென்ஸ், ரிஜிஸ்டர்ஸ், அக்கவுண்ட்ஸ் இவைகள் பரிசீலிக்கப்படுவதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 54-வது செக்ஷனில்

'Without prejudice to the provisions of any other law for the time being in force, where a person to whom a summons is issued either to attend to give evidence or produce accounts, registers, records or other documents at a certain place and time intentionally omits or fails to attend or produce accounts, registers, records or other documents at such place or time, the authority or officer mentioned in sub-section (1) may impose upon him by way of penalty a sum not exceeding five hundred rupees as it or he thinks fit and the penalty so levied may be recovered as an arrear of land revenue.'

என்று சொல்லியிருக்கிறார்கள். இதைக் கொண்டுவருவது அவசியம்தான். முக்கால்வாசிப் பேர்கள் விற்பனைவரிக் கணக்குகளை மூட்டை மூட்டையாகக் கட்டித் தூக்கிக்கொண்டுவந்து நாள் கணக்கில் காத்துக்கொண்டு இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த வியாபாரிகள் அங்கு வந்தால் அவர்கள் உட்காருவதற்குக் கூட இடம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே வியாபாரிகளுக்கு அதிகாரிகள் மதிப்புக்கொடுத்து அவர்களுடைய கணக்கை குறிப்பிட்ட நேரத்திலே பார்க்கவேண்டும். அவர்களை உட்காரச் சொல்லி கணக்குகளைப் பார்க்கவேண்டும். சட்டசபைக்கு அவர்கள்மேல் நல்ல எண்ணம் இருக்கிறது. இருந்தாலும் சட்டங்களை அமல் நடத்துகின்ற அதிகாரிகள் வியாபாரிகளைக் கேவலமாக நடத்துகிறார்கள். வியாபாரிகளுக்கு மரியாதை

கொடுத்துப் பேசவில்லை. என்ன இருந்தாலும் வியாபாரியும் ஒரு அங்கம்தான். ஆகவே, அவர்களைப் பார்த்து 'நீ காத்திருய்யா, நான் இஷ்டப்பட்ட பொழுது நான் பார்ப்பேன்' என்று சொல்கிறார்கள். இதை நானே பார்த்திருக்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகளிடம் வியாபாரிகளிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லவேண்டும். தவறி நடந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களிடம் கூறவேண்டும். நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ப்ளெஸென்ட் ஆகச் செய்ய வேண்டும். நாம் வரி வசூல் செய்வதைக் கூட ப்ளெஸென்ட் ஆகச் செய்தால் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு அவர்களும் ப்ளெஸென்ட் ஆகக் கொடுப்பார்கள்.

**செக் போஸ்டுகளில் லாரிகள் வந்தால் அட்வான்ஸ் அஸெஸ்மெண்ட் போடலாம் என்று இருக்கிறது.**

செலக்ட் கமிட்டியில் இதைப்பற்றியெல்லாம் கன்ஸிடர் பண்ண வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். லாரிகளில் சாமான்கள் வேறு ஸ்டேட்டுக்குப் போகும்போது செக்-போஸ்டுகளில் பல கஷ்டங்கள் வருகின்றன. லாரிகளை 'ஸீல்' பண்ணி வைத்து விடுவதன் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். செக் போஸ்டில் பல மாதங்கள் கூட லாரிகளைப் போட்டு விடுகிறார்கள். அதனால் உணவுப் பொருள்களும் மற்றப் பொருள்களும் கெட்டு விடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. செக் போஸ்டில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறான முறையில் பயன் படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அட்வான்ஸ் அசெஸ்மெண்ட் போட்டு உடனே எல்லாவற்றையும் கட்டு என்பதால் அவர்கள் பெருமளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள். அட்வான்ஸ் அசெஸ்மெண்டுக்குப் பதிலாகப் பின்னால் வாங்கிக் கொள்ளலாம் என்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வகையில் பல திருத்தங்களைச் செய்து நல்ல ஒரு சட்டமாக இதைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, விற்பனை வரி ஏய்ப்புச் செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காக இம்மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றுவதற்கு முன்பு நன்றாகச் சிந்தித்து நிறைவேற்ற வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். வரி ஏய்ப்பு நடை பெறுவதைத் தடுக்கக்கூடாது என்ற கருத்தில் நான் இதைக் கூறுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. வரி ஏய்ப்பு நடைபெறுகிறது; அது மாபெரும் குற்றந்தான். நில வரியைப் பொதுமக்களிடமிருந்து வசூலித்து அதைக் கஜானாவில் செலுத்தாமலே வைத்து விடுகிற கிராமாதிகாரி மீது என்ன கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோமோ அதே போல் பொதுமக்களிடமிருந்து வாங்கப்பட்ட விற்பனை வரியை அரசாங்கத்திடம் கொடுக்காமல் ஏய்ப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். நிச்சயமாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.



"நோய்நாடி நோய்முதல் நாடிஅது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கேற்ப இதிலே நடைபெறுகின்ற குற்றத்தை உணர வேண்டும். வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களை ஏமாற்றுகிறவர்களாக ஆக்கிய குற்றம் இந்தச் சர்க்காருடையதுதான். வியாபாரி உண்மையாகத் தங்களுடைய கணக்கைக் காட்டினாலும் அதிகாரிகள் எடுத்துக் கொள்கிற முறை வேறாக இருக்கிறது. ஒரு படி பால், ஒரு படி பாலில் இவ்வளவு காப்பி, இந்த அளவில் ஒரு நாளைக்கு இவ்வளவு வியாபாரம் ஆகியிருக்கும் என்று ஆகாத கணக்கைப் போட்டு அவர்களுக்கு அதிகாரிகள் வரிகளைப் போடுகிறார்கள். உண்மையான கணக்கைக் காட்டினால் கூட, இது போன்று கணக்குப் போட்டு வரி வசூலிக்கிற நிலைமை இருப்பதனால்தான் கள்ளக் கணக்கு எழுத வேண்டிய நிலைக்குச் செல்கிறார்கள். நில வரியை வசூலிக்கின்றபோது நிலத்தை நஞ்சை, புஞ்சை, ஒரு போக நஞ்சை, முப்போக நஞ்சை, மானாவாரி என்று வரி விதித்து, பிறகு அந்த நிலத்திலிருந்து வருகிற வருமானத்திற்கு வருமான வரி போடுவது போல் இந்தத் துறையிலும் போடவேண்டும். பெட்டிக் கடை, ஜவுளிக் கடை, மளிகைக் கடை, பெரிய கிடங்குகளில் சரக்கை வைத்து வியாபாரம் செய்யும் பெரும் முதலாளிகள் என்று பிரித்து ஒவ்வொருவரும் உயர்ந்த தொகையாக இவ்வளவு கட்ட வேண்டுமென்று போட்டு விட்டால் அவர்கள் அதைத் தாராளமாகக் கொடுத்து விடுவார்கள். நம்முடைய சர்க்காருக்கும் வருமானம் வந்து சேர்ந்து விடும்.

இந்த மசோதா சட்டமாகியவுடன் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிற நேரத்தில் எப்படிப்பட்ட கேடுபாடுகள் நிகழ இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பெரிய வியாபாரிகள் இதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். சிறிய வியாபாரிகள்தான் அகப்பட்டுக் கொண்டு விடுவார்கள். அந்த மாதிரி நிலைமைகளுக்கு வழி வகுக்காத வகையில் இந்தச் சட்டத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை விவாதத்திலே பலத்த ஆதரவு என்ற முறை ஒன்று உண்டு; கடுமையான எதிர்ப்பு என்ற மற்றொரு முறை உண்டு. கடுமையான ஆதரவைக் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கொடுத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பேசுகிறபோது இந்தச் சட்டத்தை எதிர்க்கிறாரோ என்று கேட்பவர்கள் நினைத்திருப்பார்கள். அவர் ஆதரித்துத்தான் பேசினார். அவ்வளவு பலமாக ஆதரவு கொடுத்தார்கள். அவர்கள் இரண்டு விஷயத்தைக் கொஞ்சம் மறந்து விட்டார்கள். நான் இதைப் பற்றி முதலில் பேசும்போதே சொன்னேன். அப்பீல் போட்டிருக்கிறோம்; மேற்கொண்டு இதைத் திருத்த வேண்டுமா என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்கிறோம் என்று சொன்னேன். என்னுடைய முதல் உரையிலேயே இது இருக்கிறது. 274-வது பக்கத்தில் இருப்பதை அவர்கள் பார்த்த

வேண்டும். இருந்து செலக்ட் கமிட்டி கோர்ட்டுக்கு அப்பீல் செய்வது என்று சர்க்கார் முடிவு செய்துள்ளது. அதன்பேரில் அப்பீல் செய்து கொள்ள சர்க்காரின் இருந்து அனுமதி பெற்றுவிட்டோம். இதற்கிடையில் சுப்ரீம்கோர்ட்டில் சொல்லியுள்ள அறிவுரைப்படி நம் முடைய சட்டத்தை சர்க்கார் சட்டத்தைத் திருத்த முடியுமா என்பதை சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது. இந்த அப்பீல் செல்லாது என்றார்கள். அவர்கள் வாயாலே என்னவோ தெரியாது. அதைச் சட்டசபையில் சொல்லமுடியாது என்ற நிலைமையில் நான் எதிர்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. சர்க்காரில் போடு கின்ற அப்பீல் ஜெயிக்காது என்று நினைத்துக் கொண்டு போட் டால் எதற்கு என்ன அவசியம்? நாங்கள் நன்றாகப் பரிசீலனை செய்துதான். ஜெயிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்துதான் சொன்னேன். அதனால் பத்திரமாகத்தான் இன்கம் டாக்ஸ் சட்டத் திலும், செல்ஸ் டாக்ஸ் சட்டத்திலும் இதே போல பெரிய மாறுதல் இருக்கிறது. செல்ஸ் டாக்ஸின் சட்டமும் போய் அப்போ தைக்கப்போது அந்த மாற்றங்களைப் பிறக்க முடியும். இன்கம் டாக்ஸைப் பொறுத்தவரையில் அமுலாக்கியிருந்து செலவைக் கழித்து நிகர வருமானத்தின் பேரில்தான் வரி போடப்படுகிறது. அதில் இருக்கக்கூடிய வார்த்தைகள் வேறுவிதமாக இருக்கலாம். ஆகவே, நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதைப் புதிதாகக் கொண்டு வந்து விட்டதாகச் சொல்ல முடியாது. திரு. மதியழகன் சொல்லி நான் கொண்டு வந்தேன் என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்கு அட்ஜெக்ஷனே கிடையாது. சட்டசபையிலே கனம் உறுப்பினர்கள் சொல்கிற அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு கிடையாது.

கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் 1959-ம் வருஷம் இந்தச் சட்டத்தைச் செய்தபோதே இந்த அபிப்பிராயங்களைச் சொல்லியிருந்தால் உண்மையாகவே பெருமையாக இருக்கும். ஹைகோர்ட்டில் தீர்ப்புக் கொடுத்த பிறகு இந்த அபிப்பிராயங் களைச் சொல்வது கோர்ட்டில் சொன்னதைத் திருப்பிச் சொல்வதா கத்தான் ஆகும். 1959-ல் செலக்ட் கமிட்டி போட்டோம். நிறைய நிபுணர்கள் எல்லாம் வந்தார்கள். இந்தச் சட்டம் கொண்டு வரு வது கான்ஸ்டிடியூஷனுக்கு விரோதமானது, பார்ட் நம்பர் போகிறதுகள் என்று சொல்லியிருந்தால் திருப்தியாக இருந்திருக்கும். அன்றைக்கு செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்தபோது நாங்கள் கொண்டு வந்த திருத்தம் இப்படித்தான் இருந்தது. ஆனால் செலக்ட் கமிட்டியில் இருந்தவர்கள்தான் 'அதிகாரியிடத்தில் பர்மிஷன் வாங்கிக் கொண்டு' என்பதற்குப் பதிலாக 'கோர்ட்டில் போய் பர்மிஷன் வாங்க வேண்டும்' என்று இருக்க வேண்டுமென்ற அபிப் பிராயம் கூறப்பட்டது. இன்று கோர்ட்டில் போய் பர்மிஷன் வாங்கினால் கூட 'சீசனபின் ரெண்டரிக்ஷன் ஆகாது' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் இது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. தொடர்ந்து சட்ட சம்பந்தமான ஆலோசனைகளைச் செய்வதற்காகத்தான் செலக்ட் கமிட்டிக்கு விடப் படுகிறது.



நாம் கொண்டு வந்திருக்கும் திருத்தம், இன்று இன்கம் டாக்ஸ் ஆக்டில் இருப்பதைத்தான் கொண்டு வந்திருக்கிறோம். இன்கம் டாக்ஸ் ஆக்டில் இருக்கிறபடி இருக்கும் திருத்தம், அது எவ்வளவு தூரம் கான்ஸ்டிடியூஷனுக்கு ஒப்பானதாக இருக்கும் என்ப தையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்காகத்தான் திருத்தம். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் சொல் வதை எப்போதுமே கேட்பதில்லை, இந்த ஒன்றைத்தான் கேட் டார்கள் என்ற காரணத்தை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்போது யார் என்ன நல்ல யோசனை சொன்னாலும் அவர் எந்த இடத்தில் உட்கார்ந்திருந்தாலும் அதைக் கேட்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். மற்ற விவகாரங்கள் எல்லாம் அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்தது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை என்று கூறி என்னுடைய பிரேரணையை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965 (L.A. Bill No. 20 of 1965) be referred to a Select Committee of the House consisting of the following Members:—

1. Sri R. Krishnaswamy Naidu.
2. Sri A. M. P. S. Balagangadharan.
3. Sri A. Senapathi Gounder.
4. Srimathi P. K. R. Lakshmikantham.
5. Sri T. P. Elumalai.
6. Sri M. S. Selvarajan.
7. Sri K. Narayanaswamy Pillai.
8. Sri A. R. Ramasami.
9. Sri T. P. Alagamuthu.
10. Sri K. A. Mathialagan.
11. Sri V. Krishnamoorthy.
12. Sri Saw. Ganesan.
13. The Hon. Sri R. Venkataraman."

The motion was put and carried.

MR. SPEAKER: I hereby nominate the mover of the Bill, the Hon. Sri R. Venkataraman, as the Chairman of the Committee.

The House will now rise for lunch and meet again at 3-30 p.m. in the afternoon.

The House then rose for lunch.

[After lunch—3-30 p.m.]

VI.—GOVERNMENT MOTION—*cont.*

CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I move that under Rule 21, sub-rule (3) of the Assembly Rules, items 7, 8, 9 and 10 in the Agenda, viz., the Madras Land Encroachment (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 12 of 1965), the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965, the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1965 and the Madras Medical Practitioners Bill, 1965 (L.A. Bill No. 22 of 1965) be taken up before item 4, viz., the Madras (Transferred Territory) Extension of Laws Bill, 1965.

The motion was put and carried.

VII—GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS LAND ENCROACHMENT (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 12 OF 1965).

THE HON. SRI V. RAMAIAH: Sir, I beg to move:—

"That the Madras Land Encroachment (Amendment) Bill, 1965 [a] (L.A. Bill No. 12 of 1965) be taken into consideration."

Sir, in moving the motion I wish to explain briefly the provisions of the Bill.

The Madras Land Encroachment Act, 1905 (Madras Act III of 1905) lays down the procedure for eviction of encroachments on lands belonging to the Government. This procedure has been found to cause considerable delay in actual practice. Further, the State Government have no powers to consider appeals and revisions under the Act. Therefore the question of amending the Act to expedite the process of eviction and simplify the procedure was examined by a Special Committee of officers appointed by the State Government. The Committee's recommendations were examined and it has been decided to amend the Act *inter alia* for the following purposes, namely—

(1) to empower Tahsildars, Deputy Tahsildars and any other officer authorized by the State Government in that behalf to take eviction proceedings; (Now the Collector can take such proceedings.)

(2) to empower the Revenue Inspector and officers of the Highways Department to issue initial notice in eviction proceedings;

(3) to dispense with initial notice in the case of repeated encroachments on the same land;

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th July 1965.



(4) to enable the State Government to make rules or orders in regard to certain matters;

(5) to confer powers of revision on the State Government; and

(6) to fix the period of limitation for appeals and revisions as thirty days.

The Government have also taken the opportunity to extend the principal Act as in force in the rest of this State and as amended by the proposed Amendment Act to the territories added to this State from the State of Andhra Pradesh by the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959) and to repeal the corresponding law in force in the said territories.

I request the House to accept the motion.

MR. SPEAKER: Motion moved.

"That the Madras Land Encroachment (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 12 of 1965) be taken into consideration."

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, while welcoming this Bill, I wish to say a few words. This measure will go a long way to restrict the encroachers from encroaching upon Government lands such as roads, channels and other community porambokes. In recent times the encroachers have found it rather easy to encroach upon any land. They never think that there is law and order preventing them from encroaching indiscriminately. There have been repeated encroachments and the authorities have found it difficult to evict them, though the lands encroached have been assigned for certain important works. Especially in the village parts, channel porambokes and road porambokes which have been earmarked from time immemorial for specific purposes have been indiscriminately encroached and the Revenue authorities have found it difficult to evict the encroachers. A provision has been made enabling the Deputy Tahsildar and Revenue Inspector to issue notice to them and evict them. There are different kinds of encroachments. We now see that encroachments are made by erecting some huts, some shops, etc. Even big landlords have encroached on important lands that have been earmarked for specific purposes. It is stated that there will be provision for appeal and a time-limit of 30 days has been fixed for appeals and revisions. There is inordinate delay in disposing of the appeals both at the Collectorate level and the Revenue Board level. So far as the Revenue Board is concerned, papers are pending there for months and years and they do not see the light of the day and the purpose for which the appeal is filed is defeated. Therefore, a time-limit should be fixed for disposing of the appeals.

As regards the roads in Panchayat Unions, many of the roads have not been sub-divided with the result that there are many encroachments. In such cases, the sub-division should be effected.

[Sri C. Chiranjeevulu Naidu] [10th August 1965

It is not stated whether powers are given to the Panchayats and Panchayat Unions for evicting the encroachers. Here it is specifically stated that it will apply only to Government lands on which there are encroachments. I request to be informed whether action could be taken by the Panchayat Unions for evicting the encroachers.

With these words, Sir, I conclude my speech.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உபசபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவை நான் வரவேற்கிறேன். குறிப்பாக அத்தியாவசியமான சில தொழில் நிறுவனங்களுக்காக நிலங்கள் தேவைப்படும்போது, சர்க்கார் நிலங்களில் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்பொழுது பல இடங்களில் இது போன்ற நிலங்கள் தேவைப்படுகிறது. சில இடங்களில், பெரிய தொழிற்சாலைகளை நிறுவும்போது, அங்கே வெறுமனே இருந்த புறம்போக்கு நிலங்களில் - யாதொரு உபயோகமும் இல்லாது இருக்கின்ற நிலங்களில்--பல ஏழைகள் பல ஆண்டுகளாக பயிர்செய்து அனுபவித்து வருவதைப் பல நிலைகளை நான் பார்க்கிறேன்--இதுபோன்ற நிலங்களை எடுப்பதற்காக ஆட்சியாளர் நடவடிக்கைகள் எடுக்கின்றபொழுது, தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த முன் வருகின்றவர்கள் கருணை உள்ளத்தோடு, அதிலிருந்து வருகின்ற ஏழை மக்களுக்கு ஏதாவது உதவி செய்ய முன் வருகிறார்கள். சர்க்காரைப் பொறுத்தமட்டில், அப்படிப்பட்ட நிலங்களில் ஏழை எளிய மக்கள் எத்தனை வருடங்கள் பயிர் செய்து வந்தாலும்--அவை புறம்போக்கு நிலங்கள் என்று நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வந்தாலும், தேவைப்படுகிற நேரத்தில் அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில், அரசாங்கத்தினிடத்தில் சட்டபூர்வமாக காப்பாற்றிக்கொள்ளும் உரிமையோடு பெற்றுக்கொள்வதற்கு இடமில்லை. என்றாலும் கூட பல இடங்களில் அந்த நிலங்களை யார் ஆக்கிரமித்திருக்கிறார்கள், எவ்வளவு காலம் இதை அனுபவித்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து எக்ஸ்கிரேஷியா கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல இடங்களில் ஏற்படும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் இதுபோன்ற நடவடிக்கை எடுக்கும்போது அரசாங்கம் கவனத்தோடும், கருணையோடும் கவனிக்கவேண்டும் என்பது எனது கோரிக்கை. அதோடு பல வருஷங்களுக்கு முன்பு உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்யவேண்டும்—'க்ரோ மோர் ஃபுட்'—என்று வலியுறுத்திச் சொன்னபோது, அந்த அளவுக்கு ஆக்கிரமிக்கிறோம் என்றுகூட நினைக்காத அளவுக்கு விவசாயத்தில் ஈடுபட்டு, ஏழை விவசாயிகள், குறிப்பாக ஹரிஜனங்கள் புறம்போக்கு நிலங்கள், கண்மாய் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, நீர்ப்பிடி நிலங்கள் ஆகிய இப்போர்ப்பட்ட நிலங்களில் கூட ஆக்கிரமிப்பு செய்திருப்பதைப் பார்க்கிறோம். அரசியல் தியாகிகளும் கூட இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி, இதுபோன்ற நிலங்களில் விவசாயம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பல வருஷ காலம் சிரத்தையோடு பயிர் செய்து, அபராதத் தீர்வையெல்லாம் கூட



10th August 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கொடுத்து 10 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் கூட அதிலேயே பயிர் செய்து தங்கள் ஜீவனத்தை நடத்திக்கொண்டிருப்பார்கள். என்னுடைய கோரிக்கை, இவற்றையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும் என்று நினைக்கும்போது, அரசாங்கம் கருணையோடு எக்ஸ் கிரேஷியா கொடுத்து வெளியேற்றுவதா, சட்ட பூர்வமாக என்க்ரோச்மெண்ட்டை வெளியேற்ற எவிக்ஷன் ப்ரொஸீடிங்ஸ் எடுத்தாலும் கூட, சில இடங்களில் தேவையானபோது அப்புறப்படுத்தவேண்டுமென்ற நிபந்தனையோடு அவர்களுக்குத் தற்காலிகப் பட்டா செய்து கொடுக்க வேண்டிய இடங்கள் கூட உண்டு. அப்படிப்பட்ட இடங்களை நிரந்தரமாக வைத்துக்கொள்ள முடியாது என்றாலும் கூட, தேவைப்படும்போது காலி செய்யவேண்டுமென்று நாமினல் குத்தகைக்கு அல்லது தாற்காலிக பட்டா கொடுக்கும் நிலைமைகூட உண்டு. இன்தயெல்லாம் கூட எவிக்ஷன் ப்ரொஸீடிங்ஸ் எடுக்கும்போது கவனத்தில் வைத்துக்கொள்ளுவது அவசியம். அத்தியாவசியமாக இருக்கும் இடங்களில், ரோடு புறம்போக்குகளை சில வருஷங்கள் வைத்திருக்கும் வசதி உள்ளவர்கள் கூட தங்கள் நிலத்தோடு புறம்போக்கு நிலத்தைச் சேர்த்துக் கொண்டு ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அப்பீல் அல்லது விவகாரம் ரெவின்யூ போர்டு வரையில் போகும் நிலைமை இருந்தாலும் கூட, அத்தியாவசியமாக, சமுதாய நலனுக்குத் தேவையான சொத்து அல்லது ஒரு பாதை அல்லது அது போன்ற அத்தியாவசியமான காரியங்களுக்கு மேற்கொண்டு கோர்ட்டுக்குச் செல்லவேண்டிய நிலைமை இல்லாமலேயே தடுக்க வேண்டும். கோர்ட்டுக்குச் சென்று பல காலம் நீடித்துக்கொண்டு போகும் சந்தர்ப்பங்கள் பல இடங்களில் ஏற்பட்டு விடும். நான் அறிந்த இடம் கூட ஒன்று உண்டு. மேல. திருச்செந்தூர் என்ற கிராமத்தில் ரோடு போட ஸாங்ஷன் செய்தார்கள். பத்து வருஷ காலம் அந்த இடத்தை வசதி உள்ளவர் வைத்துக்கொண்டிருந்தார். ரெவின்யூ டிவிஷனல் ஆஃபீஸர் போனார், எவிக்ஷன் செய்ய வேண்டுமென்று சொன்னார். அதற்கு மேல் ஜில்லா அதிகாரிக்கு அப்பீல் போட்டார், அவரும் எவிக்ஷன் செய்யவேண்டுமென்று சொன்னார். இந்த முறையில் போர்டுக்கு வருகிறது, கோர்ட்டுக்குப் போகிறது என்றால், இதிலேயே ஒரு தலைமுறை காலத்திற்கு நீண்டு போகும் சந்தர்ப்பம் ஏற்படும். சிலபகுதிகளில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்த்துத்தான் ஆகவேண்டுமென்று வருமானால் கோர்ட்டுக்குப் போய் வழக்காடும் சந்தர்ப்பத்தைக் குறைத்தே ஆகவேண்டும். இல்லாவிட்டால் அத்தியாவசியமான சமயங்களில் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதை துரிதமாக்கவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறாமல் போகலாம். சமுதாயத்திற்கு மிக அத்தியாவசியமான காரியம் என்பதற்கான மேற்கொண்டு நீடித்துப் போகாமல் காலத்தைக் குறைக்க, கோர்ட்டுக்குப் போகும் சந்தர்ப்பத்தைக் குறைக்க மேற்கொண்டு என்ன வழிவகை செய்யலாம் என்று ஆலோசனை செய்யவேண்டும் என்ற இந்த வார்த்தையோடு இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்**: கனம் அமைச்சர் அவர்களே, ஆர்.டி.ஓ. விடத்திலே இருக்கிற அதிகாரம் தாசில்தார் அவர்களுக்கு வரவேண்டும் என்பதற்கும், தாசில்தாரிடத்திலே இருக்கிற அதிகாரம் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு வரவேண்டும் என்பதற்கும் வந்திருக்கின்ற என்று நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிற நேரத்தில், அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் ஆகாத நிலை உண்டாகும், ஆனால் இத்திட்டத்தில் வருகிறபோது துஷ்பிரயோகம் அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக்களிடம் புறம்போக்குகள் ஒப்படைக்கப்பட்ட பிறகு அண்மையில் பஞ்சாயத்துத் தேர்தல் எப்படி நடந்தது என்று நாட்டு மக்கள் உணர்ந்துகொண்டிருக்கிற நேரத்தில், தங்கள் விருப்பு-வெறுப்புக்கு ஏற்ப பஞ்சாயத்திலே எந்த புறம்போக்கிலேயிருந்து வெளியேற்றவேண்டும் என்றும், இன்னாருக்கு புறம்போக்குகளை அடைமானம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் இயற்கைக்கு மாறான, முறைகேடான தீர்மானங்கள் நிறைவேற்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட காரணத்தினால் பல ஆண்டு காலமாக அனுபவித்து வந்த புறம்போக்குகளிலேகூட தேவையற்ற நிலையில் கூட, புறம்போக்குகளில் ஆக்கிரமித்திருக்கிறவர்களை அப்புறப்படுத்தும் சூழ்நிலை நாட்டிலே உண்டாகும். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டம் இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஹைவேஸ் புறம்போக்கில் பல காலமாக கேட்பார் இன்றி இருந்த காரணத்தினால் பாதையின் இரு பக்கங்களிலும் பெரிய பெரிய மாடிக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்பு என்று கூறி அகற்றுவது என்றால் கட்டடங்களைக் கூட இடிக்க வேண்டும். சென்னை நகரத்தில் ப்ராட்வே என்ற பெயரோடு கூடிய பாதை எவ்வளவு குறுகலாக இருக்கிறதோ, அந்தப் பாதையை அகலப்படுத்தவேண்டுமென்றால் எப்படி கட்டடங்களை இடிக்க வேண்டுமோ அப்படிப்பட்ட நிலை பல தாலுகா தலைநகரங்களில் இருக்கின்றது. கட்டடங்களை இடிப்பதா அல்லது வேறு பாதை அமைப்பதா என்பதில் வேறு பாதை அமைப்பதில் கருத்தைச் செலுத்திக்க வேண்டுமே தவிர, ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று கட்டடங்களை இடிக்கக் கூடிய நிலைக்கு விட்டு விடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பை அகற்றவேண்டுமென்ற நிலையில் இன்னென்று பஞ்சாயத்துக்களில் இருக்கக் கூடிய தீர்வை விதிக்காத புறம்போக்கு பற்றியது. அனுபவித்து வருகிறவர்கள் நீண்ட காலமாக அனுபவித்து வருகிறார்கள் என்று அவர்களுக்கு அடைமானம் செய்து கொடுக்க பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றினாலும், தீர்வை எடுத்துக்கொண்டு அடைமானம் செய்து கொடுக்க இயலவில்லை. அதற்கு பஞ்சாயத்துச் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று பல முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏழை எளியவர்





களுக்கு அந்த நிலம் கிடைக்கும் நிலையில் தனியாக ஒரு திருத்த மசோதாவைக் கொண்டுவரவேண்டும் என்று கூறி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி**: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா அவசியம் இல்லாதது என்றுதான் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப்போதைக்கு இருக்கிற சட்டமே போதுமானது. இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

என்க்ரோச்மெண்ட்ஸை காலி செய்வதிலே பல முறைகள் இருக்கின்றன. ஒரு ஏழை 10 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் கூட ஒரு புறம்போக்கிலே பயிரிட்டு வருகிறான் என்றால், இப்போது அவனை காலி செய்ய வேண்டிய நடவடிக்கைகளைச் சிலர் எடுக்கச் சொல்லுவார்கள். குறிப்பாகச் சொன்னால் எது அப்ஜெக்ஷனபிள் என்க்ரோச்மெண்ட், எது நான்-அப்ஜெக்ஷனபிள் என்க்ரோச்மெண்ட் என்று பாகுபாடு செய்து பார்க்கும் சமயத்தில் ஒரு பஞ்சாயத்தில் இருக்கிற தலைவரும், பஞ்சாயத்து உறுப்பினர்களும் சில குறிப்பிட்ட நிலத்தை மாம்பழச் செடி வைக்கவேண்டும், அல்லது தென்னங்கன்று நடவேண்டும் என்று சொல்லி 10 ஆண்டு, 15 ஆண்டு ஏழை அரிஜன மக்கள் பயிரிட்டு வந்ததை காலி செய்ய வேண்டுமென்று சொல்லி ஆட்சேபிக்கிறார்கள். உடனே அந்த ஆட்சேபணையை எடுத்துக்கொண்டு அந்த இடங்களிலிருந்து அகற்றுவதற்கு இப்போது நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இது ஒவ்வொரு கிராமத்திலும் இப்போது இருந்து வரக் கூடிய சூழ்நிலைதான். இப்போழுது ஆர்.டி.ஓ அவர்கள் 'பி' மேமோ கொடுத்து, 6-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்து காலி செய்யவேண்டும் என்று இருக்கிற அதிகாரத்தை டெப்யூடி தாசில்தாரிடம் கொடுப்பதின் மூலம் அதிக அளவிலே சிக்கல்கள் ஏற்படுவதற்கு இது வழி செய்வதாக இருக்குமே தவிர, இருக்கிற முறைகளை திருத்துவதாக இந்த மசோதா அமையவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். 1960-ம் ஆண்டு மே மாதம் அரசாங்கத்தில் ஒரு உத்தரவு போட்டார்கள். 1-4-1960-க்குப் பிறகு இருக்கிற எல்லா ஆக்கிரமிப்புகளையும் எவை ஆட்சேபகரமானதாக இருக்கின்றனவோ அவைகளை மட்டும் ஆர்.டி.ஓ. நன்றாகப் பரிசிலித்து, அவைகளை மட்டும் காலி செய்யவேண்டுமே தவிர, 1-4-1960-க்கு முன் ஆண்டு அனுபவித்துக்கொண்டு வரக்கூடிய ஆக்கிரமிப்புகளை காலி பண்ணக்கூடாது, அதை ரெகுலரைஸ் செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். இப்போழுது பஞ்சாயத்துகளில் இருக்கிற 'வெஸ்ட்' புறம்போக்குகள், 'ரெகுலெடட்' புறம்போக்குகள் ஆகியவைகளை காலி செய்கின்ற முறையில், ஏழைகள், அரிஜனங்களை புறம்போக்கு ஆக்கிரமிப்பிலிருந்து காலி செய்கின்ற அளவுக்கு இந்த மசோதா சட்டமானால் பயன்படுத்தப்படுமோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. சாலை ஓரங்களிலே இருக்கக்கூடிய புறம்பொக்குகளை காலி செய்வதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஏனென்றால் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதைவிட,

சமுதாயத்திற்கு அந்த நிலம் வேண்டும். சாலை ஓரங்கள் பாது காக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. கிராமப்புறத்தில் இருக்கிற புறம்போக்குகளை, தரிசு நிலங்களைக் காலி செய்ய வேண்டுமென்றால், அதையெல்லாம் ஆட்சேபித்து அங்கேயிருக்கிறவர்கள் காலி செய்யவேண்டு மென்றால், ஏற்கனவே 5, 10 ஆண்டுகளாக ஏழைக் குடிமகன் பயிரிட்டு வருகிறான் என்றால், அது அரசாங்கத்திற்குச் சொந்த மான நிலமாக இருந்தாலும், பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப் பட்ட புறம்போக்கு நிலமாக இருந்தாலும், ஏரி எருவாய் நிலமாக இருந்தாலும், 10 வருஷமாக ஒரு ஏழைக் குடிமகன் பயிரிட்டு வருகிறான் என்றால், அதற்கு 'பி' மெமோ கொடுத்து, ரெவின்யூ போர்டு வசூலிக்க அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களையெல்லாம் இந்த மசோதா வின் மூலம் காலி செய்யக்கூடிய நிர்ப்பந்தம் இருக்குமானால், அப்படிக் காலி செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதியை அரசாங்கம் தந்தால், இந்த மசோதாவை நான் வரவேற் கிறேன். இந்த மசோதா சட்டமாக நிறைவேறிய பிறகு, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அங்குள்ளவர்களை இதை வைத்து காலி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமோ என்று நான் ஐயமடைகிறேன். டெப்யூடி தாசில்தார் அல்லது ஆதரைஸ்டு ஆபிஸர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வேளை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நோட்டீஸ் கொடுக்கலாம், பரவலாக இருக்கவேண்டு மென்று சொல்லி கணக்குப் பிள்ளை கொடுக்கலாம் என்று கூட சொல்லலாம் ஆதரைஸ்டு ஆபீசர், கணக்குப் பிள்ளை என்று அரசாங்கம் போடுகின்ற ஆளில் விட்டுவிட்டால், அது சட்டபூர்வ மாகிவிடும். ஆகையினால், இதைப் பரவலாக ஆக்குவதன் மூலம் பல சிக்கல் உண்டாகுமே தவிர, வேறு ஒன்றுமில்லை. இப் பொழுது இருக்கிற முறை என்னவென்றால் ஆட்சேபனை இருக் கிறது என்று புகார் வந்தால், ஆர்.டி.ஓ. அவர்கள் ஆட்சேபனை நியாயம் தானு, 'மோடிவ்' ஏதாவது இருக்கிறதா என்று அலசிப் பார்த்து, அதற்குப் பிறகு பொது நன்மையை உத்தேசித்து அந்த இடம் தேவை என்று ஏற்பட்டால் அதைக் காலி செய்யவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதை மறுப்பதற்கில்லை. அதை விட்டு விட்டு, நோட்டீஸ் கொடுக்கின்ற உரிமையைப் பரவலாகக் கொடுத்துவிட்டு, ஒரு தடவை நோட்டீஸ் கொடுத்தால் பிறகு நோட்டீஸ் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது என்ற முறையை வகுத்துவிட்டால், ஏழைகள் அதிகமாக பாதிக்கப்படு வார்கள்; நிலம் இல்லாதவர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள்; அரிஜன மக்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். இந்த மசோதா சட்டமானுல் அவர்களுக்கு இன்னல் அதிகமாகத்தான் ஏற்படும். இப்பொழுது கிராமப் புறம்போக்கே அநேகமாகக் கிடையாது. 1950-ல் தியாகிகள் எங்கெல்லாம் நிலம் இருந்ததோ, ஏரி, குளம், எல்லாவற்றிலும் போய் ஒட்டிக்கொண்டு விட்டார்கள். புறம் போக்கே இல்லை. எங்கேயாவது ½ ஏக்கர், ¼ ஏக்கர், ¾ ஏக்கர் இருந்தால், அதை ஏழைகள் பயிரிட்டு வருகிறார்கள். இந்த மசோதாவைச் சட்டமாக்குவதன் மூலம் அவர்களை வெளியே கிளப்பி விடுவார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு இருப்பதினல்



தான் நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன். இதற்கெல்லாம் உத்திரவாதம் தரத்தக்க விதத்தில், கிராமப்புறத்திலுள்ள 'ஆவெண்டு வேஸ்டு' நிலத்திலிருந்து யாரையும் காலி செய்ய மாட்டோம், ரோடு ஓரங்களில் இருக்கிற என்க்ரோச்மெண்டை மட்டும் காலி செய்வதற்கு இந்த மசோதா சட்டமாக்கப்பட்டு பயன்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களே யானால், அதை நான் வரவேற்கிறேன் என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றுவதன் மூலம் வெளியேற்ற நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டும் என்று கருதி, ஆர்.டி.ஓ.-வுக்கும் கீழே, டெப்யூடி தாசில்தார், தாசில்தார் இவர் கள் எவிக்ஷனுக்கு வேண்டிய உத்தரவுகள் பிறப்பிப்பதற்கு அதி காரங்கள் வழங்கப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்திலே நகரத் தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். நகர்புறங் களிலும் இதுமாதிரி சில பிரச்னைகள் இருக்கின்றன. நகரத்தி லுள்ள புறம்போக்கு நிலங்களை ஏழைகள், 'ஸ்லம் ட்வெல்லர்ஸ்' மாதிரி ஆக்கிரமித்துக்கொண்டு குடிசைகள் போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். அந்த மாதிரி காட்சியை நாம் அநேகமாக எல்லா நகரங்களிலும் பார்க்கலாம். சென்னை நகரத்திலும், மதுரை போன்ற நகரங்களிலும் குறிப்பாகப் பார்க்கலாம். அந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்பது ஒரு முக்கியமான கேள்வி. இன்றைக்குள்ள சட்டத்தின் கீழே சீக்கிரமாக நட வடிக்கை எடுத்து அவர்களை காலி செய்து விட முடியும். அதே சமயத்தில் மனித உணர்ச்சியோடு கூட இந்தப் பிரச்னையை நாம் அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று நகர்புறங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் கட்டிக் கொண்டு வாழ்கின்றவர்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், அவர்கள் வாழ்க்கை நடத்தவேண்டும், என்ற 'போனஃபைடியாக' நல்ல எண்ணத்தோடு வந்தவர்கள்தான். எங்கேயாவது இருந்து ஒரு தொழிலில் ஈடுபட்டு நல்ல முறையில் தங்களுடைய வாழ்க் கையை நடத்தவேண்டும் என்ற கருத்தில் வந்தவர்களே தவிர, ஏதாவது தப்பு பண்ண வேண்டும், அக்கிரமம் பண்ணவேண்டும் என்ற கருத்து அவர்களுக்கு இருந்தது கிடையாது. ஏதோ ஒரு இடத்தில் இருந்துகொண்டு, ரூ. 30, 40 கிடைப்பதை வைத்துக் கொண்டு நல்லமுறையில் குடும்பத்தை நடத்தவேண்டும், நல்ல வாழ்க்கை நடத்தவேண்டும் என்று 'போனஃபைடி' எண்ணத்தில் குடியிருப்பு கட்டிக்கொண்டவர்களே தவிர, வேறு தவறான எண்ணம் கொண்டவர்கள் அல்ல. பொது நன்மையை உத்தேசித்து அவர்களை காலி செய்யவேண்டுமென்றால், அவர் களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்யவேண்டும். நகரங்களில் முக்கியமான இடங்களில், பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்திலோ அல்லது மார்கெட்டுக்குப் பக்கத்திலோ முக்கியமான இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந் தால், அங்கே குடிசை கட்டிக்கொண்டிருந்தால், அவர்களைக் காலி செய்துவிட்டு, அதைவிட முக்கியமான பொதுக்

காலியாக்கிவிட்டு அதை உபயோகிக்கவேண்டும் என்றால், கூடுமான வரையில் நாம் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும். அவர்கள் சாப்பாட்டிற்காக வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கருதி அந்த இடத்தில் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, மனதார ஆக்கிரமம் செய்ய வேண்டும், மற்றவர்களுக்குத் துன்பம் கொடுக்கவேண்டும், இடைஞ்சல் செய்யவேண்டும் என்ற முறையில் அவர்கள் அந்த நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்ளவில்லை. ஆகவே, அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கவேண்டும். டவுனுக்குள்ளேயே இல்லாவிட்டாலும், 2, 3, மைல்கள் தள்ளி இருந்தால்கூட அவர்களுக்குக் குடியிருப்பதற்கு மாற்று இடம் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. நாட்டில் ஒரு குடிமகனுக்கு எவ்வாறு உணவு உடை கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோமோ அதே மாதிரி அவன் உறைவதற்கும் இடம் கொடுக்கவேண்டும். அந்தப் பொறுப்பு சர்க்காருக்கும் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும். நகர்புறத்தில் இருப்பவர்களுக்குக் கூடுமானவரையில் மாற்று இடம் கொடுத்து, அவர்களை காலி செய்யவேண்டும். டெப்புடி தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 'ரெய்ட்' பண்ணலாம் என்று நிர்ணயித்திருக்கும் போதுபொழுது, சீக்கிரமாக நடக்கும் என்ற ஒரு 'அட்வாண்டேஜ்' இருந்தாலும், தவறுகள் இருப்பதற்கு ஏதுக்கள் இருக்கின்றன. வில்லேஜில் பார்த்தால் ஸ்காலர்ஷிப் சர்டிபிகேட் வாங்குவதற்குக் கூட மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியவரும். கீழ்க்களத்தில் போகும் பொழுது ஊழலுக்கு நஷ்டங்கள் ஏற்படுகின்றன. கூடுமான வரையில் கஷ்டம் இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

முப்பது நாட்கள் ரிவிஷன் அப்பீலுக்கு டைம் கொடுத்திருப்பது நல்ல அம்சம். நடவடிக்கை எடுப்பது கூடிய சீக்கிரம் எடுத்துக் கொண்டு, நகர் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு வீடுகளாக இருந்தால், கூடுமானவரையில் அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து காலி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், அவர்களுக்கு கஷ்டம் இல்லாத வகையில், 'ஹார்டுஷிப்' இல்லாத வகையில் செய்யவேண்டும் என்பதை மனதில் கொண்டு காலிசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் ஆக்கிரமிப்பை உடனடியாக நீக்குவதை துரிதப்படுத்தும் இந்த மசோதாவை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று கிராமப்புறங்களில் பார்த்தால் பொது நன்மைக்கு வேண்டியுள்ள மேய்ச்சல் காடுகள், கால்நடைகளுக்கு வேண்டிய மேய்ச்சல் காடுகள், சமுதாயத் தேவைக்கு வேண்டிய பூமிகள் இவைகளை ஆங்காங்குள்ள பணக்காரர்கள் பல வருஷங்களாக ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். பணக்காரர்கள்தான் பெருவாரியாக சர்க்கார் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துகொண்டி



ருக்கும் ஒரு நிலையை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். நல்ல பண்ணைத் தோ இடங்களில் ஏழைகள், ஹரிஜன மக்கள் சொல்கிறார்கள். ஏழைகள் ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கும் விவசாயிகள் இருக்கிறது. இந்த மசோதா சட்டமானால் அதை [illegible]கிறேன். கொண்டு எல்லோரையும் ஒரே மாதிரியாக நடத்தினால், பலமாக [illegible]ர்கள், நிலம் இல்லாத ஏழைகள், ஹரிஜனங்கள் ஆகியோர்கள் ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருப்பதை காலி செய்ய துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டால், ஏழை ஹரிஜனங்களுக்கு, நிலம் இல்லாத ஏழைகளுக்கு மிகவும் பாதகமாக முடியும் என்ற ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை நாம் அமுலுக்குக் கொண்டுவரும்போது, நிலமில்லாத ஏழை எளியவர்களையும் அரிசனங்களையும் நாம் கவனத்தில் கொண்டு, அவர்கள் 12 வருஷத்திற்கோ அல்லது ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ நிலத்தில் 4-00 p.m
ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு ரெகுலைஸ் செய்து பட்டா துரிதமாக வழங்கப்பட்டால் நலமாக இருக்கும். 'பி' மெமோ தயாரிப்பதிலே முன்பெல்லாம் ரெவின்யூ இலாகாவில் கணக்கப்பிள்ளை, மணியக்காரர் தயாரித்து, தாலுக்காவிலிருந்து 7-ம் நெம்பர் நோட்டீஸ் வந்து, பிறகு கலெக்டரிடம் சென்று எவிக்ஷன் நோட்டீஸ் வரும். முன்பு, கலெக்டரிடமிருந்து எவிக்ஷன் நோட்டீஸ் வந்து, கிராமாதிகாரிகள் அதை ஆக்கிரமிப்பாளரிடம் ஜாரி செய்வதற்குள் அவன் ஆக்கிரமிப்பை விட்டுப் போய்விடுகிறான். கிராம அதிகாரியும் 'காலி செய்யப்பட்டுவிட்டது' என்று மேலே ரிப்போர்ட் அனுப்பி விடுகிறார். அதே நபர் அதே நிலத்தை அடுத்த வருஷமும் ஆக்கிரமித்துக் கொள்ளுகிறார். அநேகமாக, தாலுக்கா அளவில் பார்த்தால் எந்த 'பி' மெமோ ஒரு வருஷத்தில் போடப்பட்டதோ அதுவே மீண்டும் வருஷா வருஷம் புதுப்பித்துக்கொண்டு வரும். இந்த ஒரு நிலை மாறுவதற்கு இந்தத் திருத்த மசோதா மிகவும் அவசியம். கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளிடம் நம்பிக்கை வைக்கவேண்டும். அவர்கள் இதைத் துரிதமாக நல்லமுறையில் அமுலுக்குக் கொண்டு வந்தால் கிராமத்தில் பொதுவாக உள்ள நிலங்கள், மக்களுக்குப் பொதுவாகத் தேவையுள்ள இடங்கள் எல்லாம் நல்லபடியாகக் கிடைக்கும் நிலை ஏற்பட சந்தர்ப்பம் இருக்கிறது.

இப்பொழுது பஞ்சாயத்தைக் கலந்துதான் 'பி' மெமோ தயாரிக்கவேண்டிய நிலை இருக்கிறது. புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டபிறகு, கிராம அதிகாரிகள் 'பி' மெமோ தயாரித்து, அதைப் பஞ்சாயத்துக்கு அனுப்பி, பிறகு பஞ்சாயத்து யூனியனுடைய அபிப்பிராயத்தையும் கேட்டுத்தான் மறுபடியும் 'பி' மெமோ தயாரிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த முறையை மாற்றி, முன்பு இருந்ததைப் போல, கிராம அதிகாரிகளிடமே பூரா விவகாரத்தையும் ஒப்படைத்துவிட்டால் நலமாக இருக்கும் என்று கூறி என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

[illegible] கிருஷ்ணன்: கனம் தலைவர் அவர்களே, [illegible] அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தச் [illegible] மசோதாவை [illegible] நான் [illegible]. புறம்போக்கு நிலங்களில் [illegible] விவசாயம் செய்துகொண்டிருப்பவர்களை அப்புறப்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். உண்மையிலேயே இது ஏழை விவசாயிகளை, அதிகமாக ஆதிதிராவிட மக்களைப் பாதிக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆறு, ஏழு வருடங்களுக்கு முன்பு, எல்லோரும் உணவு உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு ஒன்றைப் போட்டார்கள். [illegible] மலைப் புறம்போக்குகளிலும், ஓடை ஓரங்களிலும், இன்னும் சில காடு, மேடுகளில் எல்லாம்கூட, [illegible] பயனில்லாமல் கிடந்த, மாடு மேய்வதற்குக்கூட லாயக்கில்லாமலிருந்த இடத்தையெல்லாம், சர்க்கார் உத்தரவு செய்திருக்கிறார்களே, நமக்குக் கால் காணி பூமி கூடப் பணம் கொடுத்து வாங்க முடியவில்லையே, சர்க்காரப் புறம்போக்கு நிலத்தைச் செப்பனிட்டாவது நான்கு மாக்கால் மகசூலைச் செய்யலாமே என்று அந்த எண்ணத்தில், கஷ்டப்பட்டு, உழைத்து, இரவு பகலாகக் கொத்திப் பரித்துச் சீர்செய்ததன் காரணமாக இப்பொழுது ஓரளவுக்கு நஞ்சை மகசூல் செய்கிற அளவிற்குக்கூட அந்த நிலங்களையெல்லாம் பண்பாடு செய்து பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆனால், பஞ்சாயத்து யூனியன்கள் வந்தபிறகு, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் அபிப்பிராயப்பட்டால் அந்த நிலங்களை யார் உழுகிறார்களோ அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கலாம் என்று தீர்மானம் போட்டுக் கொடுத்தால் சர்க்காருக்குத் தேவையில்லாத இடங்களை அந்த ஏழை எளியவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கலாம் என்று இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர் நல்லவராக இருந்தால் அதைச் செய்வார். அவர் கொடியவராக இருந்தால், 'கால் குழி கூட அரிசனங்களுக்கு கொடுக்கக்கூடாது, நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடாது' என்று நினைத்தால், அந்தத் தீர்மானத்தைப் போட்டுக் கொடுக்கமாட்டார். அந்த சமயத்தில், அந்தப் பகுதியிலுள்ள பெரிய [illegible], நல்ல பொறுப்புள்ளவர்கள் 'இம்மாதிரி நிலைமை இருக்கிறது, தாங்கள் தயவு செய்து பரிசீலனை செய்து பட்டா செய்து கொடுக்கவேண்டும்' என்று கலெக்டரிடம் கேட்டுக்கொள்கிறார்கள். கலெக்டர் நல்லவராக இருந்தால், 'பாவம், ஏழைதான், அவதிப்படுகிறான்' என்று கருதி இதைப் பரிசீலனை செய்து பட்டா செய்து கொடுத்து விடுவார். இந்த நிலைமை இருக்கும்போது, இப்பொழுது சர்க்காரப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை வெளியேற்ற வேண்டும் என்பதற்காக மசோதா கொண்டுவருகிறபோது—பழமொழி ஒன்று சொல்வார்கள்; அதைச் சொன்னால் பொருந்தாது என்று நினைக்கிறேன்—நாம் ஒன்று செய்யப்போக வேறு ஒன்றாக



மாறி விடுமோ என்ற பயம் இருக்கிறது. சர்க்கார் நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதாகச் சொல்கிறார்கள். இது வேறு விதமாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விவசாயிகள் எல்லோருக்குமே பாதகமாகிவிடுமோ என்று நான் கருதுகிறேன்.

இதுவரைக்கும் குறைந்தது பத்துப் பதினைந்து வருஷ காலமாக புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்துகொண்டுவந்த விவசாயிகளை பாதிக்காமல் இருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. உண்மையிலேயே சர்க்காருக்குத் தேவை என்று கருதுகிற நிலங்களை எடுத்துக்கொள்ளட்டும். அதைப்பற்றி பாதகம் இல்லை. ஆனால், சர்க்காருக்கும் பயனில்லாமல் இருந்தால் அதில் இருப்பவர்களுக்கு அந்த நிலத்தை விட்டுவிடவேண்டும். ரோடு போட வேண்டிய நிலமாக இருந்தால், அல்லது வேறு தொழிற்சாலை கட்டவேண்டிய நிலமாக இருந்தால் அவற்றை எடுத்துக்கொள்ளட்டும். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் மாற்று யோசனை சொன்னார்களே அது மாதிரி, நகரப் பகுதியில் இடமில்லாத காரணத்தால் சிலர் ரோடு ஓரங்களில் குடிசை போட்டுக் கொண்டிருப்பார்கள். இந்தச் சட்டம் வந்தவுடனே அப்படிப் பட்டவர்களை வெளியேற்றிவிடக்கூடும். அம்மாதிரி வெளியேற்றப் படுகிறவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து, 'இந்த இடத்தில் குடிசை போட்டுக்கொள்' என்று சொல்லி அங்கே குடியமர்த்தி விட்டு, நகரப் புறங்களில் இம்மாதிரி ஏற்பாடு செய்தால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. கிராமப் பகுதிகளில் நிலமில்லாத விவசாயிகள் புறம்போக்கு நிலங்களில் பயிர்செய்துகொண்டிருந்தால், 'பழத் தோட்ட இடம்', 'பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய இடம்' என்றெல்லாம் சொல்லிவிடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனில்தான் இப்பொழுது என்ன என்னவோ திட்டங்கள் கொண்டுவருகிறார்கள். அம்மாதிரி எதையாவது மனத்திலே வைத்துக்கொண்டு செய்வார்களானால் வேறு விதமாக மாறிவிடக் கூடும். அந்த நிலை ஏற்படக்கூடாதே என்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் இங்கே சொல்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து பரிசீலனை செய்து பார்த்து, அரிசனங்களாக இருந்தாலும் சரி, நிலமில்லாத ஏழைகளாக இருந்தாலும் சரி, ஏற்கனவே பயிர் செய்துகொண்டிருந்த புறம்போக்கு நிலங்களை இதுவரைக்கும் அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கா விட்டாலும்கூட, இந்தச் சட்டத்தின் மூலமாகவாவது அவர்களுக்குப் பட்டா செய்துகொடுத்துவிட்டு, சர்க்காருக்குத் தேவை என்று கேட்டால் அதை எடுத்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

**திரு. நா. இராசாங்கம்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தப் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்பவர்களைத் தடுக்கவேண்டும் என்ற நினைவிலே கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். 1943 அல்லது 1944-ம் ஆண்டில்—ஆண்டிலே தவறு இருக்கலாம்—ஒரு உத்தரவு ரெவினியூ போர்டாரால் பிறப்பிக்கப்பட்டது. அப்பொழுதுதான், நிலத்திற்குச்

[திரு. நா. இராசாங்கம்] [10th August 1965

சர்க்காரே உரிமையாக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அது எதற்காகத் தோன்றியது என்றால், செங்கற்பட்டு ஜில்லாவில் இனாம்தாரர்கள் பெரிய பெரிய ஜமீன்தார்கள் தங்களுக்கு கனமான அக்ரி நிலத்தை வைத்துக்கொண்டு, பேரும் ஒரு ரூபாய், அனாதை மக்களைத் தங்களிடம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்கார் நிலங்களை எடுத்தபோது, இன்று பெருக்கும் தன்மை வந்து, அது வெளியே போய் வளைக்கும் வந்து, பிறகு சர்க்காருக்கும் வந்தது. செங்கற்பட்டு ஜில்லா மலைப்பாதை அப்பொழுது இருந்தவர் வெளியே போய்விட்டு ஒரு போராட்டம் செய்திருந்தார். அந்தப் போராட்டம் என்னவென்றால், நில ஆக்கிரமிப்பைத் தடுக்கவேண்டும் என்பது. ஆகவே, அப்படிப்பட்ட பெரிய செல்வந்தர்கள் தங்கள் நிலத்தோடு பேரும் சர்க்கார் புறம்போக்கு நிலத்தைச் சேர்த்துக்கொண்டு உரிமை கொண்டாடுகிறார்களே, அதைத் தடுக்கவேண்டும் ஒரு மசோதா கொண்டுவரவேண்டும் என்று போராடி போராட்டம் செய்ததின் பேரில், இந்தத் தடுப்பு மசோதா அப்பொழுது உருவாக்கப்பட்டது. ஆனால், அதே தடுப்பு மசோதா இப்பொழுது வருகிறது என்றால், அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுது அதிகமாக இல்லை. இப்பொழுது அப்படி இருக்குமானால், அரிசனங்களும், ஏழை எளிய மக்களும் தான் எங்கோ குடிசை போட்டுக் கொண்டிருப்பார்கள். சாலை ஓரங்களிலும், தெரு ஓரங்களிலும் இருக்கும் ஏழை எளியவர்களையும் அரிசன மக்களையும் இப்பொழுது அப்புறப்படுத்தவேண்டும் என்ற நிலைமை இந்தச் சட்டத்தின் மூலமாக ஏற்படக்கூடும். பதினைந்து, 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியிருக்கிறார்கள். பயிரிட்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தான் காலி செய்யச் சொல்லக்கூடிய நிலைமை இப்பொழுது ஏற்படக்கூடும். அப்படிப்பட்டவர்கள் நிலைமையைச் சர்க்கார் அனுதாபத்தோடு கவனித்து, அவர்களுக்கு மாற்று நிலத்தைக் கொடுத்துவிட்டு, பிறகு வெளியேற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டால், வேறொரு இடத்தில் அவன் விவசாயம் செய்து பிழைத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும். வீட்டு மனையிலிருந்து காலிசெய்யவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டாலும், மாற்று மனை கொடுத்துவிட்டு அப்புறப்படுத்தவேண்டும் என்ற நிலைமையை இதிலே திருத்தம் செய்தோ, அல்லது வேறு வழியிலோ பரிகாரம் கண்டால் இந்த மசோதா அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும்படி-யாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் வந்தபிறகு, ரொம்ப மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாமெல்லாம் பஞ்சாயத்தை நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பஞ்சாயத்தைப்பற்றிக் குறைசொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிந்தாலும், இப்பொழுது அங்குள்ள நிலைமை வேறு விதமாக இருக்கிறது. இப்பொழுது ஆங்காங்குள்ள தலைவர்களோ, மெம்பர்களோ, எதை இஷ்டப்படுகிறார்களோ, அந்த முறையில் அவர்களுடைய எண்ணத்திற்குத் தகுந்தாற்போல்,



10th August 1965] [திரு. நா. இராசாங்கம்]

சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல், தங்களுக்குக் கௌரவம் வேண்டுமென்று நினைப்பவர்களுக்குத் தகுந்தவர்கள் என்று தீர்மானம் போட்டு அனுப்பினால், சர்க்கார் அந்தத் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளும் நிலைமை தான் இருக்கும். அந்த நிலையில் தான் இப்போது பஞ்சாயத்திலுள்ள சட்டங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் இருந்து வெளியேற்றக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எப்படி இருந்தாலும் கடந்த பத்து இருபது வருஷங்களாக வீடு கட்டிக்கொண்டோ, சாகுபடி செய்து கொண்டோ எங்கெங்கே ஏழை ஹரிஜனங்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் மாற்று ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு இந்தச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டும். இப்போதே பல பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துக்குத் தேவை என்று தீர்மானம் போட்டு புறம்போக்கில் இருந்து வெளியேற்ற முயற்சிப்பதும் இதன் காரணமாகப் பல சிக்கல்கள் சர்க்காருக்கும், ஹைக் கோர்ட்டுக்கும் வந்திருக்கிறது. ஆகவே, எந்த நிலைமையிலும் ஆக்கிரமிப்பு என்று சர்க்கார் சட்டப்படி என்ன இடமிருந்தாலும் இருக்கக்கூடிய நிலைமையை உணர்ந்து இந்தத் திருத்தச் சட்டத்திலேயே பல வருஷங்களாக அந்த நிலங்களில் இருந்து வருகிறவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அரசாங்கப் புறம்போக்கு நிலங்களில் அனுவசியமாக ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருப்பவர்களை அகற்றுவதற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிற இந்த மசோதா ஆதரிக்கப்பட வேண்டியது தான். இருந்தாலும் கூட சில அம்சங்களில் பார்க்கிறபோது அநாவசியமான தொந்தரவு வருமோ என்று அஞ்ச வேண்டிய நிலைமையும் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். ரோடு புறம்போக்குகளில் வீடில்லாத பல ஏழைகள் குடிசைகள் போட்டுக் கொண்டு பலகாலமாக இருந்து வருகிறார்கள். அவர்களை "இப்படிப் புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கிறோமே, இதை விட்டுக் காலி பண்ணச் சொல்லக்கூடிய நிலைமை வருமோ" என்று அஞ்சிதான் ஏதாவது ஒரு கட்சியின் கொடியைக் கட்டிக் கொண்டு அந்தச் செல்வாக்கில் அங்கே இருக்கலாம் என்று எண்ணி வருகிறார்கள். எப்படியாவது அரசாங்கத்தினிடம் செல்வாக்கை உபயோகப்படுத்தி, அந்த இடத்தைவிட்டு காலிபண்ணக்கூடிய நிலைமை வருவதைத் தவிர்க்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். அத்தனை பேர்களுக்கும் சாதி சமய அடிப்படை பேதம் இன்றி—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வீடு இல்லாதவர்களுக்கு எல்லாம் வீடு கட்டித் தரும் திட்டத்தைக் கொண்டு வருகிற வரையில்—பலகாலமாக இப்படி ஆங்காங்கே புறம்போக்குகளில்

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [10th August 1965

குடிசைகள் போட்டுக் கொண்டிருப்பதை அகற்றாமல் இருக்க இதில் இடம் செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டு பார்த்தால் புறம்போக்கு நிலங்களில் அதிகமான பேர்கள் பல வருஷ காலங்களாகவே சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே அன்-ஆத்தரைஸ்டு கல்டிவேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் க்ரோ மோர் புட் காம்பைன் காலத்தில் இருந்தே அவர்கள் பயிரிட்டு வருகிறார்கள். இருபது ரூபாய், முப்பது ரூபாய் என்று தண்டத் தீர்வை கட்டி வந்த அவர்களுக்குக் கனம் அமைச்சர் அவர்கள் தான் மனது வைத்து இரண்டு, இரண்டரையாகக் குறைத்தார்கள். அவர்கள் எல்லாம் இந்தத் திருத்தச் சட்டத்தினால் நிலத்திலிருந்து காலி பண்ணக் கூடிய அவல நிலைமை வந்துவிடுமானால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். அத்தகையவர்களுக்கு ஒன்று பட்டா செய்து கொடுக்க வேண்டும். அல்லது இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படாதவாறு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். எந்த ஒரு கிராமமாக இருந்தாலும் கர்ணத்தினுடைய ஆதரவு இருந்தால் எந்தப் புறம்போக்கு நிலத்திலும் சாகுபடி செய்ய முடியும். குடிசைப்போட்டுக் கொண்டிருக்க முடியும் என்ற நிலை தான் இருக்கிறது. அதுவும் கொஞ்சம் எஜமானரைப் போல உள்ளவர்கள் பத்துப் பதினைந்து குடிசைகளைப் புறம்போக்கு நிலங்களில் போட்டு அவற்றில் இருந்து வாடகைகூட வசூல் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இத்தகைய தவறுகளை எல்லாம் தவிர்க்க இந்தச் சட்டம் அவசியம் என்றாலும்—இதனால் உண்மையிலேயே வீடு இல்லாது, நிலம் இல்லாது பலகாலமாகப் புறம்போக்கு நிலத்தில் சிறிய பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கப் போதுமான பாதுகாப்பைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். வி. காரிவேங்கடம் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே,

**கனம் சபாநாயகர் :** சுருக்கமாகப் பேசுங்கள். திருப்பித் திருப்பி ஒருவர் சொன்ன கருத்தையே இன்னொருவர் சொல்லக் கூடாது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் தலைவர் அவர்களே, முன்பு புறம்போக்கு நிலத்தில் தனிப்பட்டவர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால் பல முறை நோட்டீஸ் கொடுத்து அவரை அதில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது முதல் முறை நோட்டீஸ் கொடுத்தால் போதும். மீண்டும் ஆக்கிரமிப்புச் செய்தால் நோட்டீஸ் இல்லாமலேயே வெளியேற்ற எவிக்ஷன் ப்ரொசீடிங்ஸ் எடுத்தால் போதும் என்ற அளவுக்கு இந்தத் திருத்த மசோதாவின் வாசகம் அமைந்திருக்கிறது. பொதுவாக



10th August 1965] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

ரெவின்யூத் துறையில் எவிக்ஷன் ப்ரொசீடிங்ஸ் எடுத்து நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்றால் எத்தனை காலம் ஆகும் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இருந்தாலும் மற்றப் பிரிவுகளில் ஏதும் காட்டாத சர்க்கார் வெளியேற்றுகின்ற முறையில் இந்தத் துரிதத்தைக் காட்டுவதன் நோக்கம் தான் என்ன என்று புரியவில்லை. சர்க்கார் நிலங்களில் பலர் அக்கிரமமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அது பொதுவான காரியங்களுக்குப் பயன் படுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறபோது இந்தச் சட்டம் இல்லாமையினாலே பலவிடங்களில் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை நிலத்தை விட்டு வெளியேற்ற முடியவில்லை என்றெல்லாம் சொல்லலாம். சென்னையிலேயே அத்தகைய ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லலாம்.

ஆனால், கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால் ஏரிப் புறம்போக்கு என்று இருக்கும். அங்கே ஏரி என்ற பெயர் இருக்குமே தவிர தண்ணீர் இருக்காது. அந்த இடங்களில் பல வருஷங்களாகச் சாகுபடி செய்து கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப் பயிரிட்டுக் கொண்டிருக்கிற ஏழை எளிய குடியானவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றுகின்ற அதிகாரம் இன்றையதினம் இந்தத் திருத்த மசோதாவின் மூலம் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைக்கப்படுகிறது. முன்பெல்லாம் கலெக்டர் ஆர்டரில் தாசில்தார் தான் செய்யவேண்டியிருக்கும், எஸ்டேட்டாக இருந்தால் எஸ்டேட் மானேஜர் அதிகாரம் பெற்றுத்தான் செய்ய வேண்டியிருக்கும். இப்போது ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் செய்யலாம் என்று செய்வது சரிதானா என்பதைப் பார்க்க வேண்டும். எனக்குத் தெரியும். சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலுக்காவில் கருப்பூர் என்ற இடத்தில் பி. மெமோ ஒருவர் பேரில் போடப்பட்டு இருந்தது. ஆனால் அதைச் சாகுபடி செய்து கொண்டிருந்தவர் வேறு. அதைப் பார்த்து ஆர்.டி.ஓ. வே ஆச்சரியப்பட்டார்கள். இப்போதே கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் வேண்டிய பித்தலாட்டம் செய்கிறார்கள். ரெக்கார்டுகள் திருத்தப்படுகின்றன. ஆகவே என்னைப் பொறுத்த வரையில் அதிகாரம் மேல் உள்ள இடத்தில் இருந்தால் தான் அது அதிகமாகத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமில்லாமல் இருக்கும். புறம்போக்கு நிலத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரத்தை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அளவுக்கு இறக்குவது சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு ஏரியைத் தூர் வாரப் போகிறோம் என்பதாக வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே நில வெளியேற்ற வேலை ஆரம்பித்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். ஆகவே சரியான முறையில் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நடந்த விவாதத்தில் பொதுவாகக் குறிப்பிட்ட ஆலோசனைகளுக்கு எல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது நடைமுறையில் இது சம்பந்தமாக இருக்கக் கூடிய சட்டத்தில் இருக்கக் கூடிய குறைபாடுகளையும், அதை எவ்வாறு அமல் நடத்துவது என்பதற்கான ஆலோசனைகளையுமே அதிகமாகச் சொன்னார்கள். இந்தத் திருத்த மசோதாவை நான் கொண்டு வந்திருப்பதற்குக் காரணம் கனம் அங்கத்தினர்கள் திரு. செல்வராஜன் அவர்களும், திரு. சிந்தீவுதி நாயுடு அவர்களும் சொன்னதைப்போல இப்போது ஆக்கிரமிப்புகள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. அதற்கு என்னவென்று நிலங்கள் தேவைப்படுகின்றன, அதை எல்லாம் விட ஹரிஜன மக்களுக்குப் பல திட்டங்களைத் தீவிரமாக அமல் நடத்தும்போது அவற்றை வெற்றிகரமாக நடத்த இத்தகைய சட்டம் தேவைப்படுகிறது. ஆகவே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். இப்பொழுதிருக்கக்கூடிய சட்டப்படி ஒரு இடம் ஹரிஜன மக்களுடைய நன்மைக்காகத் தேவையென்று அரசாங்கம் முடிவு செய்தாலுங்கூட, அதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்கள் பலமாக இருக்கும் பட்சத்திலே அந்த எண்ணம் நீண்டகாலம் பூர்த்தியாகாமல் தேங்கிவிடுகிறது. குறிப்பாக, இதைத் தஞ்சை மாவட்டத்திலிருந்து வரக்கூடிய அங்கத்தினர்கள் உணர்வார்கள். மற்றவர்களும் உணர்வார்கள். ஹரிஜன மக்கள் வாழக்கூடிய பகுதியிலிருந்து மற்றப் பகுதிகளுக்குப் போக வேண்டுமென்றால் பாதை வசதியில்லாமல் இருக்கும். உண்மையிலேயே பாதை வசதி இல்லாமல் இருக்கிறதா என்று பார்த்தால், சர்வே ரிக்கார்டுகளைப் பார்த்தால், பாதை வசதி இருக்கும். ஆனால், பலமுள்ள விவசாயிகள் சிறுகச் சிறுக அந்தப் பாதையைக் குறுக்கி அவர்களே ஆக்கிரமித்துக்கொண்டு இருப்பார்கள். இதை அரசாங்கம் உணர்ந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில் காலதாமதம் ஏற்படுகிறது. அதைப் போலவே, இன்னும் கிராமங்களிலே விசேஷமாக ஏழை மக்களுக்குக் குடியிருப்பு இடங்கள் கொடுக்கவும், ஹரிஜன மக்களுக்குக் குடியிருப்பு இடங்கள் கொடுக்கவும் அரசாங்கம் முன் வரும்பொழுது, அந்த நிலங்களை யாராவது ஆக்கிரமித்து இருக்கும் பட்சத்தில் அதிலே அரசாங்கம் கவனம் செலுத்துவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இதை அரசாங்கம் தவிர்க்க வேண்டுமென்று விரும்புகிறது. அது மட்டுமல்லாமல் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் நான் நினைவில் வைத்துக்கொள்ளக்கூடிய ஒன்றைப் பற்றிச் சொன்னார்கள். சென்னையிலே இருந்து போகக் கூடிய தேசிய நெடுஞ்சாலைகளைப்பற்றிச் சொல்லும்பொழுது, அவைகள் எல்லாம் பிராட்வே போன்று ஆகிவிடக் கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்குக் காரணம் பிராட்வே எப்படிக் குறுகியதாக இருக்கிறதோ அதைப்போன்று இந்த தேசிய நெடுஞ்சாலைகளும் குறுகியதாக ஆகிவிடக் கூடாது என்ற அவரது நினைப்பு, விருப்பம். அதை அரசாங்கம் ஏற்றுக்



கொள்கிறது. காரணம், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தோமானால் ரோடு ஓரங்களிலே எல்லாம் குடியிருப்பு மனைகள் வைத்திருப்பவர்கள் எல்லோரும், மற்றும் நிலங்கள் வைத்திருப்பவர்கள் எல்லோரும், அங்கத்தினர் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் சொன்னதைப் போன்று, 5 மனைக்கட்டு, 10 மனைக்கட்டு என்ற அளவிலே ஆக்கிரமித்துக் கொண்டு மற்றவர்களிடமிருந்து வாடகை வாங்கக்கூடிய நிலைமையை நாம் பார்க்கிறோம். இவையெல்லாம் குற்றம் என்று தெரிந்தாலும்கூட துரிதமாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகையால்தான் இந்தத் திருத்தம் அவசியமாக வேண்டியிருக்கிறது. அவசரப்பட்டு இந்தத் திருத்தத்தைக் கொண்டுவரவில்லை. இதற்காக ஒரு குழுவை நியமித்து, இதற்கான அதிகாரங்களையெல்லாம் எந்த முறையிலே யார் யாருக்குக் கொடுக்கலாம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்துதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஏதோ புதிதாக அரசாங்கம் ஏழை ஆக்கிரமிப்பாளர்களையெல்லாம் அப்புறப்படுத்தி விடுவார்களோ என்று அச்சப்படுவதற்குக் காரணம் கிடையாது. அதற்கு இப்பொழுதே சட்டத்தில் இடம் இருக்கிறது. இந்தத் திருத்தம் கொண்டுவருவதற்குக் காரணம் அவசியம் ஏற்படும்பொழுது கொஞ்சம் அதிகமாகக் கவனம் காட்ட வேண்டுமென்ற முறையிலேதான் கலெக்டர்களிடம் மாத்திரம் இந்த அதிகாரம் இருந்தால் போதாது, ஹைவேஸ் டிபார்ட்மென்டிலும், மற்றும் தாசில்தார், டெபுடி தாசில்தார் போன்றவர்களிடமும் இந்த அதிகாரங்களைப் பரவலாகக் கொடுக்கிறோம். துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் அவர்களுக்கு எல்லாம் அதிகாரத்தைக் கொடுக்கிறோம்.

மேலும், பஞ்சாயத்துச் சட்டத்தையும் குறித்து சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அதற்கும் நான் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்த மசோதாவிற்கும் சம்பந்தமே கிடையாது. காரணம் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்திருக்கக் கூடிய நிலங்களை அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தின் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால் நான் கொண்டுவந்து இருக்கக்கூடியது என்னவென்றால் எந்த ஒரு ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்கிறதோ அதை அகற்றுவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்காகத்தான். ஒரு முறை ஒரு ஆக்கிரமிப்புக் குற்றம் என்று முடிவு செய்ததற்குப் பிறகு, அந்த இடத்திலிருந்து ஆக்கிரமிப்பாளரை அகற்றியதற்குப் பிறகு, மறுபடியும் ஆக்கிரமிப்பாளர் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டால் அவரை அகற்றுவதற்கு நோட்டீஸ் போன்றவற்றைக் கொடுக்காமல் உடனே அவர்களை அப்புறப்படுத்துவதற்கு இதிலே வசதி செய்யப்பட்டிருக்கிறது. நகரங்களிலே சில பகுதிகளிலே அப்படி ஆக்கிரமித்த குடிசையைக் காலி செய்துவிட்டு, மறுபடியும் ஆக்கிரமித்துக் கொண்டால் மீண்டும் அவர்களை அப்புறப்படுத்துவதற்கான சடங்குகளைச் செய்ய வேண்டும். அந்த நிலைமை ஏற்படாமல் இருப்

[திரு. வெ. ராமையா] [10th August 1965

படுத்துவதற்குத்தான் நாம் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். குறிப்பாக புலவர் கோவிந்தன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த அதிகாரத்தைப் பரவலாக டெபுடி தாசில்தார், தாசில்தார் போன்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய காரணத்தினால் ஏற்படும் தவறுகளை எப்படி நாம் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கூறினார்கள். இந்த விஷயத்தில் அரசாங்கம் போதிய கவனத்துடன் இருக்கும். குடியிருப்பு இடங்கள் இல்லாமல் ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் அவர்களை உடனே வெளியேற்றிவிட வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. குடியிருப்பதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அது போன்ற விஷயங்களில் அதிகாரிகள் அவர்களுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்பது என்னுடைய கருத்து. அது மட்டுமல்லாமல், 10, 15 வருஷங்களாக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து அதை விவசாயத்திற்குப் பயன்படுத்தியோ, அல்லது வேறு குடியிருப்புக்குப் பயன்படுத்தியோ உள்ளவர்களை உடனே அப்புறப்படுத்தினால் அவர்களுக்குப் பாதகம் ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு மற்ற இடங்களைக் கொடுக்கமுடியுமா என்றும் பரிசீலனை செய்து, கூடுமான வரையில் நகரப் பகுதிகளிலே, மற்ற இடங்களைக் கொடுத்ததற்குப் பிறகு காலி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நிலத்தை உழக்கூடியவர்களுக்கும், திரு. செல்வராஜன் அவர்கள் சொன்னதைப்போல், அவர்களுடைய நிலம் இண்டஸ்ட்ரியல்ஸ் எஸ்டாப்ளிஷ்மெண்டுக்காக வேண்டுமென்றால் அவர்களுக்கும் மற்ற இடங்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகையினால் இந்தத் திருத்த மசோதா மிகவும் முக்கியமாக ஆக்கிரமிப்புகளைத் துரிதமாக முறையாக அகற்றுவதற்கும், விசேஷமாக என்னைப் பொறுத்தவரையில், ஆக்க வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கும் ரோடு ஓரங்களைப் பாதுகாப்பதற்கும், அதோடு ஏழை மக்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும் அந்தந்த இலாகாக்கள் கொண்டுவரக்கூடிய நலத் திட்டங்களை விரைவிலே நிறைவேற்றுவதற்கும் உதவ முடியும் என்று நான் கருதக்கூடிய காரணத்தால் இம் மசோதாவை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Land Encroachment (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 12 of 1965) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 12 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

"That the Madras Land Encroachment (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 12 of 1965) be passed."

The motion was put and carried and the Bill was passed.



10th August 1965]

## VIII. ANNOUNCEMENTS—*cont.*

### (2) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1965.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965. 4-30 p.m.

## VII—GOVERNMENT BILLS—*cont.*

### (5) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965 and move—

"that the Bill [a] be taken into consideration".

Sir, in the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Act, 1958, which extended the provisions of the main Act to crops other than plantation crops, a special provision was included in section 34, to collect tax from agriculturists for the assessment year 1958–59, applying the composition formula, i.e., without detailed assessment of the income derived. This is because agriculturists do not generally maintain proper accounts. The above provision was subsequently extended for the assessment years upto 1965–66. Similarly in the Madras Agricultural Income-tax (Extension to Added Territory) Act, 1961, which extended the provisions of the main Act to the territories added to this State from the State of Andhra Pradesh, provision was included in section 14, to allow the agriculturists in those territories to compound the tax for the assessment year 1961–62. The above provision was subsequently extended up to the assessment year 1965–66.

It has been considered necessary to extend the benefit of section 34 of the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Act, 1958 and section 14 of the Madras Agricultural Income-tax (Extension to Added Territory) Act, 1964 in respect of the assessment years 1966–67, 1967–68 and 1968–69 by suitably amending the said sections. The Bill provides for this.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1965 be taken into consideration."

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, I would like to say a few words on this Bill.

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 22nd July 1965.

The revenue derived from agricultural income-tax is rather small and it cannot be considered to be remunerative when compared to the huge cost of establishment that is being maintained for the purpose. It is for consideration whether it would not be desirable to entrust this work of collection of agricultural income-tax to the regular Revenue staff. We are now collecting land revenue at the taluk level. Further, the Land Ceiling Act is going to be implemented in the near future and whether the collection of this tax could not be done by those officers may be considered. In that case, we may dispense with the Agricultural Income-tax Officers.

As regards the application of the Act to the territories added to this State, I would like to say a few words. Provision has been made for compounding the tax. Such a provision is good and is useful to the agriculturists. But it is said that if they fail to compound the tax within a particular period, they are asked to submit accounts to the Officers. The agriculturists find it difficult to write the accounts. I therefore request that a grace time of at least two months may be given for agreeing to the compounding.

I request that the above points may kindly be considered.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, even the one hon. Member, who participated in the discussion, has no objection to the present extension. He has actually welcomed the Bill and has also appreciated the provision for compounding. The other points which he raised with regard to the cost of collection and the future of this Act will all depend upon the implementation of the land Ceiling legislation. As I have just now stated, the full effect of the Land Ceiling Act will be known in the next one or two years. When a general review is made, then we may consider whether the compounding provision is necessary or not. Till then, the present Act and the compounding provision will continue. I do not think that the hon. Member will have any objection to this.

MR. SPEAKER: The question is—

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965 be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move.

"That the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1965 be passed."

The motion was put and carried and the Bill was passed.





(6) THE HOLDINGS (STAY OF EXECUTION PROCEEDINGS) (MADRAS AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I beg to introduce the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1965, and move—

"that the Bill [a] be taken into consideration".

The Holdings (Stay of Execution Proceedings) Act, 1950 (Travancore-Cochin Act VIII of 1950) was in force in the Kanyakumari district and Shencottah taluk at the time of their transferred to this State from the former Travancore-Cochin State in 1956. Consequent on the extension to the Shencottah taluk of the Cultivating Tenants Protection and Fair Rent Acts by Madras Act 28 of 1959 with effect from 2nd March 1960, the Holdings (Stay of Execution Proceedings) Act ceased to be in force in the taluk. It is now in force only in the Kanyakumari district.

The Act provides for the stay of proceedings in execution of a decree in a suit for the recovery of possession of a holding, so far as they relate to the delivery of possession of the holding.

The Act is due to expire on the 24th September 1965. We have recently passed certain Acts for the abolition of certain special tenures prevalent in the Kanyakumari district and for the introduction of Ryotwari settlement therein and the lines of the Ryotwari settlement prevalent in the rest of the State. Pending the implementation of these Acts and pending the abolition of the special tenure relating to Sreepadam lands in Kanyakumari district for which legislation has yet to be undertaken, it is considered necessary to extend the life of Travancore-Cochin Act VIII of 1950 by two years from the 25th September 1965. The Bill seeks to achieve the above object.

I request the House, Sir, to accept and pass the motion moved by me.

MR. SPEAKER: The question is—

"That the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1965, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

"That the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1965, be passed."

The motion was put and carried and the Bill was passed.

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 22nd July 1965.

VIII.—ANNOUNCEMENTS—*cont.*

(3) THE MADRAS MEDICAL PRACTITIONERS BILL, 1965.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration by the Madras Legislative Assembly of the Madras Medical Practitioners Bill, 1965.

VII.—GOVERNMENT BILLS—*cont.*

(7) THE MADRAS MEDICAL PRACTITIONERS BILL, 1965.
(L.A. BILL NO. 22 OF 1965.)

*THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madras Medical Practitioners Bill*, 1965 (L.A. Bill No. 22 of 1965), and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee:—

1. The Hon. Srimathi Jothi Vencatachellum.
2. Sri K. S. G. Haja Sheriff.
3. Sri P. Ramachandran.
4. Sri M. Alagiriswamy.
5. Sri P. R. Sreenivasa Padayachi.
6. Sri R. Ponnappa Nadar.
7. Sri K. P. Palaniswamy.
8. Sri R. Rangaswamy.
9. Sri Rama Arangannal.
10. Sri S. Murugaiyan.
11. Sri K. R. Nallasivam.
12. Sri P. K. Mookiah Thevar.

Sir, hon. Members are aware that at present, there are in force in the State of Madras two enactments providing for the registration of medical practitioners. They are—

(1) The Madras Medical Registration Act, 1914 (Madras Act IV of 1914), and

(2) The Madras Registration of Practitioners of Integrated Medicine Act, 1956 (Madras Act XXVII of 1956).

The former Act provides for the establishment of a Medical Council and for the registration of Medical Practitioners of Modern Medicine who possess recognised qualifications. The latter Act provides for the establishment of the Board of Integrated Medicine, Madras, and also for the registration of

*Published in the *Fort St. George Gazette Extraordinary*, dated 7th August 1965.

The motion was put



Practitioners of integrated medicine who hold recognised qualifications. A Central Board of Indigenous Medicine (a non-statutory Board) is also functioning in this State, which registers persons who hold certain qualifications in Indian or Indigenous medicine and persons who are hereditary practitioners. Besides the registered practitioners of Modern Medicine and integrated medicine, there are a large number of practitioners of Homoeopathic medicine in this State. The Government have decided to recognise the Homoeopathic system of medicine and to bring in legislation to regulate the practice of Homoeopathic medicine in the State.

In 1959, the Government of India forwarded to all State Governments a draft model Bill to regulate the practice of medicine, so that only persons duly qualified and trained in any system of medicine could practice as Physicians. The main object of that Bill is to prevent the practice of medicine by quacks. The Central Council of Health at its meeting held in January 1959, commended for adoption by all State Governments with such modifications as they may consider necessary, the draft model Bill prepared by the Government of India.

This Government have considered all the above points and have decided that instead of embarking on a separate legislation in regard to Homoeopathic medicine alone, a Consolidated Bill on the lines of the Model Bill sent by the Government of India may be introduced for the establishment of three Councils, one for modern medicine, another for Indian or Indigenous medicine and the third for Homoeopathic medicine, and that the existing enactments relating to Modern Medicine and integrated Medicine may be repealed.

There are a large number of persons who do not possess any recognised qualifications in modern medicine, Indian or indigenous medicine or Homoeopathic medicine but who are practising medicine for a long time without any control. A solution has to be found to see that such a practice is put an end to and at the same time those who without recognised qualifications are already practising medicine as the sole means of their livelihood are not deprived of their avocation. Government consider it desirable to permit such of those practitioners as have been in the profession for a period of ten years and more by registering them under the proposed Act. Persons who do not come within the above category will not be registered and consequently will not have the right to practice medicine. It has thus become necessary to have a consolidated piece of legislation providing for the registration of qualified persons as well as of persons who have been practising medicine for not less than ten years.

A draft Bill has accordingly been prepared. I may be permitted to refer to one or two salient features of the Bill.

[Srimathi Jothi Venecatachellum] [10th August 1965

(i) Separate Councils for modern medicine, Indian or indigenous medicine and Homoeopathic medicine will be established, the first two consisting of 15 members each and the Homoeopathic Council consisting of thirteen members. The Medical Council and the Board of Integrated Medicine now in existence will continue to function under the proposed Act as the Council of Modern Medicine and the Council of Indian and Indigenous Medicines. The first Council of Homoeopathic Medicine will however be constituted by the Government by nominating qualified practitioners of Homoeopathic medicine to that Council.

(ii) Provision has been made for the registration of persons who do not possess any of the recognised qualifications in modern medicine, Indian or Indigenous medicine or Homoeopathic medicine, but who, within a period of one year from the date of the commencement of the Act, prove to the satisfaction of the Council of Indian and Indigenous Medicines that they have been practising medicine for not less than ten years and such practice has been their sole means of livelihood.

(iii) Separate registers will be maintained by each Council. The registers will contain the names on registered practitioners of modern medicine, Indian or Indigenous medicine or Homoeopathic medicine who hold registerable qualifications included in Schedules I to III. Besides, a second register will also be maintained by the Council of Indian or Indigenous Medicine which will contain the names of other practitioners who are registered by virtue of their long practice in modern medicine, Indian or Indigenous medicine or Homoeopathic medicine.

(iv) The Government have power to amend the First Schedule, the Second Schedule or the Third Schedule by including therein or omitting therefrom any qualification on the report of the appropriate Council or under certain circumstances.

(v) On and after a date to be notified by the Government a person who is not a practitioner registered or deemed to be registered under the proposed Act cannot practice any medicine. Further, a person who is not a registered practitioner and who is not authorised by the Government in this behalf cannot sign or authenticate a birth or death certificate or a medical fitness or physical fitness certificate which is required by law to be signed or authenticated by a duly qualified medical practitioner. Only with the special sanction of the Government can a person not registered under the proposed Act hold any appointment as a Physician or Surgeon, etc., or as a Medical Officer of Health. Provisions in respect of these matters are proposed in sub-clause (1) of clause 29. Sub-clause (2) of that clause prescribes the penalty for the contravention of the provisions of sub-clause (1). Conferring of degrees, diplomas, etc., by unauthorised persons or institutions, falsely adding any title or description to the name of any person and falsely pretending to be a registered practitioner are made offences under the proposed Act.

The motion was put and …



10th August 1965] [Srimathi Jothi Venecatachellum]

Suitable penalties for contravening the above provisions have been proposed in clauses 30, 31 and 32 of the Bill.

I now beg to move that this House accord its concurrence for the setting up of a Joint Select Committee of the Legislative Assembly and the Legislative Council, to consider the Bill.

MR. SPEAKER: The motion is now before the House for discussion.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மெட்ராஸ் மெடிக்கல் பிராக்டீஷனர்ஸ் மசோதா மிகவும் நல்லதொரு மசோதா. பல நாட்களாக எதிர்பார்த்த ஒரு மசோதா. இப்பேர்ப்பட்ட ஒரு பில் வேண்டுமென்று இந்த மன்றத்தில் இதற்கு முன் எத்தனையோ தடவை சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் நகரப் புறங்களில் நாம் சாதாரணமாகப் பார்க்க முடியும், எந்தவிதமான டிகிரியும் இல்லாமல் சாதாரணமாக இருக்கின்ற கம்பௌண்டர்கள் தாங்களும் டாக்டர் போன்று தொழிலை நடத்திக் கொண்டு சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். முறையாக ஒன்றும் தெரியாமல் சகட்டுமேனிக்கு ஏதாவது கொடுத்துவிடுகிறார்கள். பொதுவாக இப்போது நாட்டில் மாடர்ன் மெடிஸனில் எல்லோருக்கும் நம்பிக்கை கூடுதல். இதன் காரணமாக சாதாரண ஏழை மக்கள் கூட ஏதோ ஒன்றிரண்டு ரூபாய்களைக் கொடுத்து ஏதாவது இன்ஜக்ஷனைப் போட்டாலும் போதும் என்று நினைக்கிறார்கள். இவர்களும் ஏதாவது இரண்டு மூன்று ரூபாய்களை வாங்கிக்கொண்டு, பென்ஸிலின் போன்றவைகளைப் போட்டுவிடுகிறார்கள். உண்மையிலேயே அவர்கள் நல்ல பென்ஸிலினைப் போடுகிறார்களா என்பதும் ஒருவருக்கும் தெரியாது. ஏதாவது இன்ஜக்ஷனைப் போட்டவுடன் வருகின்றவர்களுக்கும் திருப்தி ஏற்பட்டுவிடுகிறது. அதோடு மட்டுமல்ல, மருந்து என்று சொல்லி எதையாவது தண்ணீருடன் கலக்கி கொடுத்துவிடுகிறார்கள். இவ்விதம் எத்தனையோ பேர்கள் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் இருப்பது நம்முடைய ராஜ்யத்திற்கு மிகவும் கெடுதலானது. இதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். சில இன்ஜக்ஷன் போடும்போது, சிலருக்கு அலர்ஜி ஏற்பட்டு பல சங்கடங்களை ஏற்படுத்தும். பென்ஸிலினிலேயே பலருக்கு அலர்ஜி ஏற்பட்டு சில கேஸ்கள் ஃபேட்டலாகிவிடுவதுண்டு. ஆகவே இவ்விதம் எந்தவிதமான டிகிரியும் இல்லாமல் தொழிலை நடத்திக்கொண்டிருப்பவர்கள் ஏதாவது தவறுகளை செய்யும்போது, அரசாங்கத்தையும், அரசாங்க அமைப்பு முறையையும்தான் எல்லோரும் குறை சொல்வார்கள். ஆகவே இப்பேர்ப்பட்ட ஒரு மசோதா வரவேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்போது வந்திருக்கின்ற மசோதா இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றும் என்று நினைக்கிறேன். ஹோமியோபதி முறையைப் பொறுத்த மட்டில் இந்தத் தொழிலில் பத்து ஆண்டுகள் ஈடுபட்டிருந்தால் அவர்களை அங்கீகரிக்கலாம் என்று ஒரு ப்ரொவிஷன் இருக்கிறது. பத்து ஆண்டுகள் நாட்டுமுறைப்படி வைத்தியம் செய்கிற யாரிடமிருந்தாவது ஒரு சர்டிபிக்கேட் வாங்கி கொடுக்கவேண்டும் என்றிருக்கிறது. அப்போது பத்து வருடங்கள் இந்தத் தொழிலில் பழக வேண்டும் என்கின்ற

[திரு. வை. பங்கான்] [10th August 1965

ஒரு நிலைமை ஏற்படும். இதைச் சொல்லும்போது இன்று மூலிகையான விஷயங்களையும் கட்டுப்படுத்தும் கொண்டு வந்தால் நல்லது. இன்றைக்கு நகரப் புறங்களில் பல டிஸ்பென்சரிகள், க்ளினிக்குகள் நடைபெறுகின்றன. இவைகளைப் பார்க்கும்போது, அன்கிளீனாகவும், அன்ஹைஜினிக்காகவும் இருக்கின்றன. இவைகளையெல்லாம் செக் செய்வதற்கு ஒரு ப்ரொவிஷன் இருக்கவேண்டும். பேட்டண்ட் மருந்துகள் மிக அதிகக் குறைவாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் சுத்தமாக ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றதா என்பதைப்பற்றி செக் செய்ய வேண்டும். இதற்கும் இந்த மசோதாவில் இடம் இருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதே போன்று மத்திய சட்டத்திலும் ஒரு ப்ரொவிஷன் இருக்கிறது என்று நினைக்கிறேன். நாட்டு வைத்தியத்தில் சில மூலிகைகள் இருக்கும். அதையோ குறைந்தது 56 நோய்களுக்கும் கொடுக்கலாம் என்று அச்சடித்துக் கொடுத்துவிடுவார்கள். இப்படி கொடுக்கப்பட்ட மருந்தின் மூலமாக ஏதோ ஒன்றிரண்டு பேர்களுக்குக் குணமாகியிருக்கும். பழனிப் போன்ற இடங்களில் இப்படி ஏதாவது ஒரு பெயரை போட்டுவிட்டு என்னென்ன நோய்கள் உண்டோ அத்தனைக்கும் கொடுப்பார்கள். இதனுடைய குணத்தைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. பத்து பேர்களில் ஒருவருக்கு குணமாகியிருக்கும். இப்படிப்பட்ட மருந்துகளைச் சோதிப்பதற்கு மத்திய சட்டத்தில் இடமிருக்கிறது என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட மருந்துகளைத் தயார் செய்யும்போது, டோஸேஜ் போன்றவைகளைத் தெளிவாகப் போட வேண்டும். இப்படிப்பட்ட மருந்துக்களைச் செக் செய்வதற்கும், க்ளினிக் போன்றவைகளைச் செக் செய்வதற்கும் உரியவகையில் மசோதாவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இது நல்லதொரு மசோதா என்று கூறி, வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவானது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட இருக்கிறது. அந்தக் கமிட்டியினர் இந்தச் சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளைப் பரிசீலித்து, அதை அவர்கள் ஒழுங்குமுறைப் படுத்தி பூரணத்துவமாக இருக்கக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்துவார்கள் அல்லது மாற்றுவார்கள் என்கின்ற கருத்தில் சில யோசனைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஹோமியோபதி வைத்தியத்தை அரசாங்கம் இதுவரையில் அங்கீகரிக்காமல் இருந்தபோதிலும், இப்போதாகிலும் இதைக் கொண்டுவந்திருக்கிறார்களே என்பதைப் பார்த்து நாங்கள் சந்தோஷப்படுகிறோம். பல காலம் சிரமப்பட்டதற்குப் பின்னால்தான் அரசாங்கம் நாட்டு வைத்தியர்களையும், ஹோமியோபதி டாக்டர்களையும் டாக்டர்களாக கௌரவிக்கக்கூடிய நிலையில் இதுபோன்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இவர்கள் ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொள்வதில் சில முறைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். செக்ஷன் 16-ல் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாடர்ன் மெடிஸனில் டிகிரி வாங்கியிருக்கின்றவர்கள்,



10th August 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

இந்தியன் மெடிஸனில் டிகிரி வாங்கியிருக்கின்றவர்கள், மூன்றாவது ஷெட்யூல் பிரகாரம் சொல்லப்பட்டிருக்கின்ற டிப்ளமோ வாங்கியிருக்கின்றவர்கள், நான்காவதில் சொல்லப்பட்டிருக்கின்ற ஹோமியோபதி முறையில் பயிற்சி பெற்றவர்கள் இவர்கள் எல்லாம் பதிவு செய்துகொள்வதற்கான உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் பத்து வருடங்கள் ஹோமியோபதி சிகிச்சை செய்து வந்தால்தான் இந்தச் சட்டத்தின்படி ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொள்ள முடியும் என்றிருக்கிறது, அப்படியானால் மற்றவர்கள் ஏன் வரக்கூடாது என்பதை செலக்ட் கமிட்டியினர் நன்றாக பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆயிரம் பேர்களைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று சாதாரணமாக சொல்லுவார்கள். அப்படியானால் இரண்டாயிரம் பேர்களை கொன்றவர் தான் முழு வைத்தியனாக ஆக முடியுமோ என்னவோ தெரியவில்லை . . .

**திரு. சா. கணேசன் :** ஒரு சிறு திருத்தம், ஆயிரம் பேரை அல்ல, ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் என்று தான் சொல்லவேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் சித்த வைத்தியத்தில் பெரிய நிபுணர், அவர்களுக்கு இதைப்பற்றி நிறையத் தெரியும். ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்றுதான் சாதாரணமாகப் பேசிக்கொள்வார்கள், அதைத்தான் நான் சொன்னேன். அதாவது எக்ஸ்பீரியன்ஸை வைத்துக் கொண்டு சாதாரணமாக சொல்வது வழக்கம். ஒருவர் செத்துவிட்டார் என்றால் போஸ்ட்-மார்ட்டம் செய்து பார்க்கிறார்கள், எம்.பி.பி.எஸ். கோர்ஸ் முதல் வருஷத்தில் இதைப்பற்றி சொல்லிக்கொடுக்கிறார்கள். ஒருவர் செத்துவிட்டார் என்றால் என்ன காரணத்தால் இவர் இறந்து போனார்? பட்டினியால் இறந்து போனாரா அல்லது வேறு ஏதாவது மருந்தைச் சாப்பிட்டு இறந்து போனாரா என்பதைப் போஸ்ட்-மார்ட்டம் செய்து பரிசீலனை செய்து பார்க்கிறார்கள். இவ்விதம் நாட்டு வைத்தியத்தில் ஆயிரம் பேரைக் கொன்றவன்தான் அரை வைத்தியன் என்று சொல்வதை வைத்துக்கொண்டுப் பார்த்தால், இரண்டாயிரம் பேரைக் கொன்றால்தான் முழு வைத்தியனாக முடியுமோ என்னவோ தெரியவில்லை. இப்படிப்பட்டவர்கள், அதாவது ஹோமியோபதி சிகிச்சை செய்கின்றவர்கள் பத்து வருடங்கள் பிராக்டீஸ் செய்தால்தான் ரெஜிஸ்டர் செய்ய முடியும் என்றிருக்கிறது. (கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆயிரம் பேரைக் கொல்வதற்குப் பத்து வருடங்கள் ஆகுமே.) கனம் அமைச்சர் அவர்கள், 'ஆயிரம் பேரைக் கொல்வதற்குப் பத்து வருடங்கள் ஆகுமே' என்று சொல்கிறார்கள். எவ்வளவு நாட்கள் ஆகுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஹோமியோபதி முறையில் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்குப் பத்து வருடங்கள் கழித்துதான் பதிவு செய்துகொள்ள முடியும் என்று சொல்வது சரியல்ல. ஒரு சிலர் ஒன்றிரண்டு வருடங்களுக்குள்ளாகவே நல்ல எக்ஸ்பீரியன்ஸாகி விடுகிறார்கள். சிலர் எத்தனையோ வருடங்கள் ...

வருடமானாலே வாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். மார்டன் மெடிஸனில் கூட படித்து பட்டம் பெற்றவர்கள் எத்தனையோ பேர்கள் இப்படி இருக்கிறார்கள். ஹோமியோபதி யானாலும் சரி, அலோபதியானாலும் சரி இவர்களை சோதிப்பதற்கு கௌன்சில் இருக்கிறது. வேண்டுமென்றால் இந்த கௌன்சில் மூலமாக ஐந்து வருடங்கள் அல்லது மூன்று வருடங்கள் என்று நிர்ணயித்து அவர்களைச் சோதனை செய்த பின்னால் நோட்டிபை செய்து விட்டால் நல்லது. கௌன்சிலில் வேண்டுமென்றால் சில விஷயங்கள் மூலமாக பரீட்சை நடத்தலாம். நேரிடை பரீட்சையோ
5-00 p.m. அல்லது எழுத்து மூல பரீட்சையோ வைத்து டெஸ்ட் செய்து அப்ரூவ் பண்ணினால் நல்லது என்று நான் கருதுகிறேன். பத்து வருஷம் பிராக்டீஸ் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டால் போதுமா? எவ்வளவு பேரைச் சாகடித்தார்கள் என்று கேட்டு விட்டு அங்கீகரித்தால் நன்றாக இருக்கும். கிராமத்திலே சில பேரைப் பார்த்தால் அவர்களுக்கு பல்லே இருக்காது. ஏன் பல்லே இல்லை என்றால் 'நாட்டு வைத்தியரிடம் போனேன், ஒரு பச்சிலை கொடுத்தார், சாப்பிட்டவுடன் பல்லெல்லாம் போய்விட்டது' என்று சொல்லுவார்கள் . . .

MR. SPEAKER : The hon. Member should confine his speech to the provisions of the Bill.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** நான் 16-வது செக்ஷனைப் பற்றித் தான் பேசுகிறேன். பத்து வருஷம் பிராக்டீஸ் பண்ணியவர்களை மட்டும் டாக்டராகப் பதிவு செய்யவேண்டுமென்பதை செலக்ட் கமிட்டி பரிசீலித்து அதைத் திருத்தவேண்டும். ஒரு வருஷம் என்று இருந்தால் போதும். இன்றைக்கு என்னென்னமோ ஹோமியோபதி கல்லூரிகள் இருப்பதைப் பார்க்கிறோம். கும்ப கோணத்தில் ஹோமியோபதி கல்லூரி இருக்கிறது என்று பத்திரி கைகளில் பார்க்கிறோம், ஆனால் அதையெல்லாம் இந்த மசோதா விலே காணவில்லை. ஒரு வருஷம், ஒன்றரை வருஷம் போஸ்டல் ட்யூஷனில் படித்து விடுகிறார்கள். நன்றாகவும் இருக்கிறது. அம்மாதிரி நிலைமைகள் இருக்கின்றன.

காலரா வருகிற சமயத்தில் எபிடெமிக் வான் அனுப்புகிறார்கள். வான் அனுப்புவதற்குள் ஆளே போய்விடுகிறான். அதற்குள்ளாக 4 அணு, 8 அணு வாங்கிக் கொண்டு கிராமத்தில் உள்ளவர்கள் எவ்வளவோ சேவை செய்கிறார்கள். ஒரு வருஷம், இரண்டு வருஷம் மூன்று வருஷம் எக்ஸ்பீரியன்ஸ் இருந்து நோட்டிஃபைட் டேட்டில் ப்ராக்டீஸ் செய்கிறவர்களை எல்லோரையும் கூப்பிட்டு மெடிகல் கவுன்சில் டெஸ்ட் வைக்கலாம். திறமையுள்ளவர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். ப்ராக்டீஸ் செய்வதில் 10 வருஷம் என்று ஸீலிங் இருந்தால் நான் ஏற்கனவே சொன்ன உதாரணம் மாதிரி, டாக்டர்கள் வந்து சேர மாட்டார்கள், பல பேர்கள் வந்து சேருவார்கள். மக்களை நன்றாக வைக்கிறவர்களும் இருப்பார்கள், பாப்புலேஷன் கண்ட்ரோல் செய்கிறவர்களும் இருப்பார்கள். செலக்டர் கமிட்டி 16-வது செக்ஷனை நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். ஹோமியோபதி டாக்டராக இருந்தால் எத்தனை வருஷம் இருந்தா லும் பரவாயில்லை, நன்றாக அனுபவம் இருக்கிறதா, நாடி பிடித்துப் [illegible] கிறார்கள். மாடர்ன் மெடிஸனில் டிகிரி வாங்கிய [illegible]



பார்க்கும் நிலையில் இருந்தால், டயக்னோஸ் செய்யும் திறமை இருந் தால், ஊசி போடத் தெரிகிறது என்றால், இன்னின்ன வியாதிக்கு இன்னின்ன மாத்திரை கொடுக்கவேண்டும் என்று தெரிகிறது என்றால், அதற்கான முறையில் பரீட்சை செய்து பார்க்கும் முறையை வைத்து ரிஜிஸ்டர் செய்யும் நிலைமை இருக்க வேண்டுமே தவிர, 10 ஆண்டு பழகி விட்டார் என்று டாக்டராகப் பதிவு செய்து கொள்ளுவது என்று வைப்பதன் மூலமாக, 4-5 வருஷங்களுக்கு முன்னாலிருந்து, 2 வருஷத்துக்கு முன்னாலிருந்து ஹோமியோபதி டாக்டராக இருக்கிறவர்களை எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள். மீண்டும் செய்தால் பிராஸிக்யூட் செய்யும் அளவில் செக்ஷன் இருக் கிறது. எல்லா டாக்டர்களையும் டெஸ்ட் வைத்து பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும், இதை செலக்ட் கமிட்டியினர் நன்றாகப் பரிசீலிக்கவேண்டும் என்று கூறிக்கொள் கிறேன்.

விரிவாக மேற்கொண்டு சட்ட சபையிலே விவாதிக்கும் சமயத் தில் கொடுக்க வேண்டிய திருத்தங்களைக் கொடுக்க இருக்கிறோம், கூற வேண்டிய யோசனைகளைக் கூற இருக்கிறோம் என்று கூறிக் கொண்டு இந்த ஒரு யோசனையை மட்டும் செலக்ட் கமிட்டி பரிசீ லிக்கவேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் கூறியவைகளையெல் லாம் செலக்ட் கமிட்டி கூடும்போது டீடெயிலாக கவனிக்கும். அவர் களுடைய யோசனைகளோடு மற்றும் பல மெடிக்கல் கவுன்ஸில்கள் இருக்கின்றன, அவைகளுடைய ரெப்ரெஸன்டேடிவ்களும் வந்து அவர்களுடைய எவிடென்ஸையும் கேட்டு அதன் பிறகு என்னென்ன திருத்தங்கள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து சட்டமாகக் கொண்டுவர இருக்கிறோம்.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த ஹோமியோபதிஸ் பற்றி கவலைப்பட்டார்கள். இதிலே மூன்றாவது ஷெட்யூலில் பார்க்கும்போது அதிலே இருக்கும் இன்ஸ்டிட்யூஷன் களிலிருந்து க்வாலிஃபை செய்து தேர்ச்சி பெற்றவர்களை கவுன்ஸில் செலக்ட் செய்யும்போது 10 வருஷம் நிபந்தனை அங்கு இருக்காது. ஆகையால், இந்த கவுன்ஸிலில் இருக்கக் கூடிய மெம்பர்கள் இதை ஆலோசித்து செய்வார்கள். பத்து வருஷம்தான் அத்தியாவசியம் என்று கனம் அங்கத்தினர் கவலைப்படவேண்டாமென்று கூறிக் கொண்டு, இந்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madras Medical Practitioners Bill, 1965 (L.A. Bill

No. 22 of 1965) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Srimathi Jothi Vencatachellum.
2. Sri K. S. G. Haja Sheriff.
3. Sri P. Ramachandran.
4. Sri M. Alagiriswamy.
5. Sri P. R. Sreenivasa Padayachi.
6. Sri R. Ponnappa Nadar.
7. Sri K. P. Palaniswamy.
8. Sri R. Rangaswamy.
9. Sri Rama Arangannal.
10. Sri S. Murugaiyan.
11. Sri K. R. Nallasivam.
12. Sri P. K. Mookiah Thevar."

The motion was put and carried.

5-06 p.m. MR. SPEAKER: The rest of the items will be taken up to-morrow. The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 195. *Notification issued with G.O. Ps. No. 1497, Revenue, dated the 8th May 1965, amending the Madras General Sales Tax Act, 1959, published with Revenue Department Notification S.R.C. No. A-1941, dated the 28th March 1959, at pages 232-280 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

196. *Notification issued with G.O. Ms. No. 918, Education, dated the 1st June 1965, approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Tiruppattur Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*



197. *Notification issued with G.O.Ms. No. 1018, Education, dated the 14th June 1965 approving the list of all the Parks and Play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Padmanabhapuram Municipal Council, the same having been previously published as required by sub-section 2 of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act XXVI of 1959).]*

198. *Notification issued with G.O. Ms. No. 924, Education, dated the 1st June 1965 approving the list of all the Parks and Play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Aruppukkottai Municipal Council, the same having been previously published as required by sub-section 2 of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

### B. Reports, Notifications and other papers.

† 57. *The Madras Medical Practitioners Bill, 1965 (L.A. Bill No. 22 of 1965).*

† 58. *The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965 (L.A. Bill No. 23 of 1965).*

---

* Laid on the table of the House on 9th August 1965.
† Circulated to Members on 8th August 1965

[10th August 1965

## APPENDIX I.

[*Vide* Answer to starred question No. 163, on page 558.]

*Clause* (*a*)—The following are the suggestions and recommendations made at the meeting of the Central Advisory Board of Education held in Bangalore in October 1964:

(1) To step up the enrolment of girls in the 6—11 age group.

(2) To make Elementary Education universal, free and compulsory.

(3) To improve standard of education at the elementary stage.

(4) To improve quality in all secondary schools so as to—bring them to a reasonable norm of efficiency and the special development of 'Quality' schools.

(5) The nature, extent and mechanism of diversification of education at the secondary stage was discussed.

(6) To strengthen Science Education.

(7) To improve the quality in the different sections of Higher education and to bring about quantitative development.

(8) To aim at speedy liquidation of illiteracy.

(9) To implement the Integrated Programme of Physical Education.

5-0 p.m. (10) To consider the inclusion of Agricultural and Health Education at Primary and Secondary levels.

(11) To eradicate corrupt practices in educational institutions and to ban the use of notes, guides and short cuts in educational institutions.

(12) To improve the emoluments and social status of school teachers of Government as well as aided schools.

(13) To examine the question of setting up of an Educational Development Corporation.

(14) To insist on pledge being taken by all the students and the teachers at the beginning of each working day as a measure of emotional integration.

(15) To continue the scheme of Vigyan Mandirs.

### *Other recommendations.*

(1) Reservation of sites for educational institutions in the development plans.

(2) Development of sports and physical education.

(3) Emphasis on Moral and Religious Education.

(4) Assistance to the students securing top places.

(5) Not to curtail expenditure on Education.

(6) Abolition of special teacher constituencies for elections to legislature.



10th August 1965]

*Clause* (*b*)—Most of the recommendations pertaining to the policies and programmes of the development plans, particularly the Fourth Plan have been generally kept in view while formulating Educational Programmes in the Fourth Plan. The Government have issued orders that the following pledge recommended by the Central Advisory Board of Education should be taken by all students and teachers of all schools at the beginning of each working day with effect from the academic year 1965-66:—

"India is my country, all Indians are my brothers and sisters.

I love my country and I am proud of its rich and varied heritage. I shall always strive to be worthy of it.

I shall give my parents, teachers and all elders, respect, and treat everyone with courtesy. To my country and my people, I pledge my devotion. In their well being and prosperity alone lies my happiness."

The Government have also ordered that the pledge both in English and Tamil should be caused to be printed in the text books and calendars of the schools. Other recommendations are under consideration.

**பதில்.**—(அ) 1964, அக்டோபர் மாதத்தில் பெங்களூரில் கூடிய மத்தியக் கல்வி ஆலோசனை வாரியக் கூட்டத்தில் பின்வரும் கருத்துரைகளும், பரிவுரைகளும் தெரிவிக்கப்பட்டன:—

(1) 6—11 வயதுத் தொகுதியிலுள்ள பெண்களை அதிக அளவில் சேர்த்துக்கொள்ளுதல்.

(2) தொடக்கக் கல்வியை எல்லோருக்கும் இலவசமாகவும், கட்டாயமாகவும் அமுலாக்குதல்.

(3) தொடக்கக் கல்வி நிலையிலேயே கல்வியின் தரத்தை உயர்த்துதல்.

(4) எல்லா நடுத்தரப் பள்ளிகளின் தரத்தையும் உயர்த்துவதன் மூலம் அவைகளைத் தகுதியுடையனவாகச் செய்தல், தரமுள்ள பள்ளிகளை வளர்க்க தனிக் கவனம் செலுத்துதல்.

(5) நடுத்தரக் கல்வி நிலையில் கல்வியைப் பல கூறுகளில் திருப்பிவிடும் தன்மை, அளவு, முறை ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

(6) விஞ்ஞான கல்விக்கு வலுவூட்டுதல்.

(7) உயர்தரக் கல்வியின் வெவ்வேறு பிரிவுகளில் தரத்தை உயர்த்தப் பெருமளவில் முன்னேற்றம் ஏற்படச் செய்தல்.

(8) கல்வி அறிவின்மையை விரைவில் நீக்குவதற்கான நோக்கம்.

(9) ஒருங்கிணைக்கப்பட்ட உடற்பயிற்சிக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுதல்.

(10) தொடக்கக் கல்வி, நடுத்தரக் கல்வி நிலைகளில் வேளாண்மைக் கல்வி, சுகாதாரக் கல்வியைச் சேர்த்துக் கொள்வது பற்றி ஆலோசித்தல்.

(11) கல்வி நிலையங்களில் லஞ்சப்பழக்கத்தை ஒழித்தல், கல்வி நிலையங்களில் குறிப்புக்கள், உதவிப் புத்தகங்கள், குறுக்கு வழிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதலைத் தடை செய்தல்.

(12) அரசாங்கப் பள்ளிகள், அரசாங்கத்திடமிருந்து மானியம் பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் ஆசிரியர்களது ஊதியத்தையும், சமூக நிலையையும் உயர்த்துதல்.

[10th August 1965

(13) கல்வி வளர்ச்சிக் கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்கும் விஷயத்தைப் பரிசீலனை செய்தல்.

(14) ஒவ்வொரு பள்ளி வேலை நாள் தொடக்கத்திலும் எல்லா மாணவர்களும், ஆசிரியர்களும் மன ஒருமைப்பாட்டிற்கு வழிகோலியாக அமைவதற்கு வாக்குறுதி எடுத்துக்கொள்ளுதல்.

(15) விஞ்ஞான திட்டத்தைத் தொடர்ந்து வைத்திருத்தல்.

### பிற பரிந்துரைகள்.

(1) வளர்ச்சித் திட்டங்களில், கல்வி நிலையங்களுக்காக மனைக் கட்டுகள் ஒதுக்குதல்.

(2) விளையாட்டுப் பந்தயங்கள், உடற்பயிற்சிக் கல்வி இவற்றை வளர்த்தல்.

(3) ஒழுக்கத்துறைக் கல்வி, சமயக் கல்வி இவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல்.

(4) படிப்பில் முதல் இடம் வகிக்கும் மாணவர்களுக்கு உதவி அளித்தல்.

(5) கல்விக்காக ஆகும் செலவைக் குறைக்காமல் இருத்தல்.

(6) சட்ட மன்றத் தேர்தல்களுக்காக உள்ள ஆசிரியர் தனித் தேர்தல் தொகுதிகளை ரத்து செய்தல்.

5-0( p.m

(ஆ) வளர்ச்சித் திட்டங்களுடன், முக்கியமாக நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்துடன் தொடர்புள்ள கொள்கைகளுக்கும், வேலைகளுக்கும் சம்பந்தப்படுகிற இப்பரிவுரைகளில் பெரும்பாலானவற்றை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வித் துறை திட்ட வேலைகளை வகுக்கையில் பொதுவாகக் கருத்தில் கொண்டு அவை வகுக்கப்பட்டுள்ளன. மத்தியக் கல்வி ஆலோசனை வாரியம் பரிவுரை செய்த கீழ்க்கண்ட உறுதிமொழியை, பள்ளிகளில் மாணவர்கள் அனைவரும், ஆசிரியர்களும், 1965–66 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஒவ்வொரு பள்ளி வேலை நாள் தொடக்கத்திலும் எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆணை வெளியிட்டுள்ளது—

### உறுதிமொழி.

“என்னுடைய தாய்நாடு இந்தியா. இந்தியர்கள் அனைவரும் என் உடன்பிறந்தவர்கள்.

என் தாய்நாட்டை நான் உளமார நேசிக்கிறேன். வளமும், வேறுபாடும் நிறைந்த அதன் மரபினை எண்ணி இறும்பூதடைகின்றேன். அன்னதன் புகழுக்கேற்பத் தகுதியுடை நன்மகனாய் விளங்க நான் என்றும் முயல்வேன்.

அன்புடன் என்னை ஈன்ற அன்னை, ஆருயிர்த் தந்தை, ஆசிரியப் பெருந்தகை, ஆன்ற முதியோர் அனைவரையும் வணங்குவேன். மாண்புடை அன்னவர் அனைவரையும் நன்னயம் துலங்க நடத்துவேன்.

என் நாட்டிற்கும், என் மக்களுக்கும் என் வந்தனை என்றும் உரியது. என் நாட்டவர் வாழ்வின் நலமும் வளமுமே என் போற்றரும் இன்பம் என்று உளம் பூரிப்பேன்.”

பாடப் புத்தகங்களிலும், பள்ளிகளின் காலண்டர்களிலும் மேற் சொன்ன உறுதிமொழியை ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சிட ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

ஏனைய பரிவுரைகள் ஆலோசனையில் உள்ளன.



10th August 1965]

## APPENDIX II

[*Vide* answer to starred question No. 167 on page 562]

At the close of the Second World War, the Government of India set up a Directorate of Resettlement to provide employment for the demobilised Army Personnel and one of the modes of rehabilitation in this State was by organising co-operative societies exclusively for ex-servicemen. Three types of co-operatives were organised for this purpose, viz., Land Colonisation Co-operative Societies, Co-operative Motor Transport Societies and Co-operative Workshops. The Post-War Services Reconstruction Fund constituted by the Government of India was extending financial assistance to these societies to undertake schemes for rehabilitation. However, due to its dwindling resources, the Post-War Services Reconstruction Fund has, in recent times, curtailed its financial assistance to these co-operative societies and the requirements of these societies are now met by the Government and the Co-operative Central Banks.

The steps taken so far by these societies for the rehabilitation and resettlement of ex-servicemen are indicated below :—

### (i) Land Colonisation Co-operative Societies for ex-servicemen.

At present there are six land colonisation co-operative societies for ex-servicemen in the State, three in Thanjavur district, one in each of the districts of Chingleput, Tiruchirappalli and Kanyakumari. There are 735 members as against the ultimate strength of 738. Of these members, 595 are residing and are cultivating the lands. Government have assigned 3,640 acres of lands (3,054 acres for cultivation purposes and 586 acres for providing common amenities) to these six societies. Out of these 3,054 acres allotted for cultivation purposes, 2,714 acres have been reclaimed. An extent of 2,247 acres has been brought under cultivation, and the remaining extent will also be brought under effective cultivation as soon as irrigation facilities are provided.

The Government and the Post-War Services Reconstruction Fund have contributed a sum of Rs. 68,841 and Rs. 12,050 towards payment of share capital by the members of these societies. The Government have, so far provided financial assistance to the societies by way of subsidy to the tune of Rs. 61,075 and Rs. 3,70,671 as loan. The Post-War Services Reconstruction Fund has also provided to these societies loan to the tune of Rs. 1,84,746 and subsidy to the tune of Rs. 2,58,417. Common amenities such as Schools, Post-offices, Parks, Roads, drinking water-wells in addition to housing facilities have been provided in the colonies.

### (ii) Co-operative Motor Transport Societies for ex-servicemen.

At present six co-operative motor transport societies for ex-servicemen are functioning in the districts of North Arcot, South Arcot, Salem, Coimbatore, Tiruchirappalli and Tirunelveli. Another

co-operative society was started at Erode in 1964. This society has not yet commenced actual business as it has not secured the required route permits. The six co-operative societies functioning at present have provided employment to 392 ex-servicemen and 30 non-member ex-servicemen. As on 31st December 1964, there were 446 members on rolls with a paid up share capital of Rs. 2,76,897 in all the seven societies. The Government and the Post-War Services Reconstruction Fund have sanctioned financial assistance to these societies.

**(iii) Industrial Co-operative Societies for ex-servicemen.**

There are four industrial co-operative societies for ex-servicemen functioning, one in each of the districts of Chingleput, North Arcot, Thanjavur and Tirunelveli. The societies used to provide employment to ex-servicemen in these workshops where they are paid economic wages according to the nature of work done in each category. As on 30th June 1964, the total membership of these societies were 201 with a paid up share capital of Rs. 33,431. Liberal financial assistance was provided to these societies. The turnover for 1963–64 was Rs. 4·91 lakhs on production side and Rs. 9·49 lakhs on the sales side.

2. Out of the Madras State Ex-services Personnel Benevolent Fund, the following assistance is being granted to ex-servicemen :—

(1) monthly grant of relief towards maintenance ;

(2) immediate grant of relief in cases requiring spot assistance ;

(3) pocket money (monthly to ex-service T.B. and Leprous patients in approved sanatoria in Madras State) ;

(4) transport charges to ex-service T.B. and leprous patients in the approved sanatoria of this State to visit their homes once in a year ;

(5) lumpsum free grants in deserving cases, such as, cases of disabled ex-servicemen to do some small business, like running a betelnut shop or poultry farming ;

(6) short term loans, repayable in instalments, with interest fixed by the Soldiers', Sailors' and Airmen's Board from time to time ; and

(7) grants to the children of deceased personnel of the Armed Forces towards payment of examination and special fees.

3. Regarding provision of employment, preferential treatment is being accorded to the ex-servicemen in placing them in Government establishment, so as to provide relief to them and their families. At present 10 disabled ex-servicemen are sent every year to the Queen Mary's Technical School, Kirkee, for vocational/technical training in order to rehabilitate them in civil life. The cost of maintenance at the rate of Rs. 60 per trainee is met by the Madras State Ex-services Personnel Benevolent Fund.





4. The Government have accorded third priority to ex-servicemen in regard to assignment of lands. The ex-servicemen who do not possess any land can be assigned the maximum extent of 5 acres of dry or 2½ acres of wet land and those who possess extent of lands below 5 acres of dry or 2½ acres of wet land, can be assigned the extent of land necessary to make the total of 5 acres of dry or 2½ acres of wet as the case may be. One of the pre-requisites for assignment of land, viz., that one should be 'poor' is *not* insisted upon in respect of ex-servicemen.

## Further proposals for the rehabilitation and resettlement of Ex-servicemen in Madras State.

It is proposed to implement the following schemes :—

(i) Construction of an ex-service centre in the City of Madras to serve as a rest and recreation centre for the ex-servicemen of the Madras State and in particular those of the Madras City and Chingleput districts. A sum of Rs. 90,000 has been earmarked for this purpose from the War Fund of the last war. Efforts are being made to secure a suitable site in St. Thomas Mount so that the centre may be located near the Headquarters of the G.O.C. of the Madras, Mysore and Kerala area.

(ii) Opening of a Soldiers' Home at Yercaud, Salem district at a cost of Rs. 35,000 to shelter about ten seriously disabled and infirm Soldiors, Sailors and Airmen of the State so that they may be looked after.

(iii) Starting of an Industrial Co-operative Society at Chromepet for the widows and women dependants of the ex-servicemen for manufacturing measuring tapes. The membership fees for each entrant have already been paid through the Director of Women Welfare, Madras. She is making arrangements to open the society shortly.

(iv) In order to give a boost to the morale of the ex-servicemen, it has been decided, as an experimental measure, that the Madras State Soldiers', Sailors' and Airmen's Board can meet in one of the districts and the Ex-servicemen's Association could be asked to send a few observers from their districts or group of districts to these meetings. They could also organise a rally in the afternoon, on the day the Board meets.

(v) Training of young widows and women dependants of jawans in the Andhra Mahila Sabha, Madras in various vocational training courses. Six cases have already been recommended to the Andhra Mahila Sabha for admission. The cost of training at the rate of Rs. 50 per month per trainee will be met from the Madras State Ex-services Personnel Benevolent Fund.

[illegible] முன்னாள் ராணுவத் தினருக்கு [illegible] வசதிகள், குடியேற்றத் [illegible] முன்னாள் ராணுவத் தினருக்கு [illegible] கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதும் மறு வாழ்வு [illegible] இது விஷயமாக மூன்று வகை யான கூட்டுறவுச் சங்கங்கள் [illegible] : நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள், கூட்டுறவுத் தொழிற் பட்டறைகள் [illegible]. இத்தகைய மறு வாழ்வுத் திட்டங்கள் [illegible] இத்தகைய சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக [illegible] அரசாங்கம், போருக்குப் பிற்பட்ட காலத்து ராணுவச் சேவைப் புனர் நிதி (Postwar Services Reconstruction Fund) [illegible] அமைத்துள்ளது. மேற்படி நிதி நிலை [illegible] கார ணமாக, மேற்படி நிதியிலிருந்து இவ் வகைச் சங்கங்களுக்கு நிதி உதவி [illegible]. [illegible] இச் சங்கங்களுக்கு அர சாங்கமும், கூட்டுறவு [illegible] நிதி உதவி அளித்து வரு கின்றன.

முன்னாள் ராணுவத்தினர் மறுவாழ்வுக்காகவும், குடியேற்றத்திற்காக வும் இச் சங்கங்கள் எடுத்துக்கொண்டுள்ள ஏற்பாடுகள் பின்வருமாறு :—

### (i) முன்னாள் ராணுவத்தினருக்காக நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள்.

முன்னாள் ராணுவத்தினருக்காக இம் மாநிலத்தில் இப்போது ஆறு நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தஞ்சாவூர் மாவட்டத் தில் மூன்றும், செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்துக்கு ஒரு சங்கமும் உள்ளன. மொத்தம் 735 அங்கத்தினர்கள் உள்ளனர். முடிவான எண்ணிக்கை 738 ஆகும். இவர்களில் 595 அங்கத்தினர்களுக்கு குடியேற்றம் அளிக்கப்பட்டு இவர்கள் நிலத்தைச் சாகுபடி செய்து வருகின்றனர். இந்த ஆறு சங்கங்களுக்கும் (சாகுபடி காரியங்களுக்காக 3,054 எக்கர் நிலமும், பொது வசதிகளை முன்னிட்டு 586 எக்கர் நிலமும்) 3,640 எக்கர் நிலத்தை அரசாங்கம் ஒப்படைத்துள்ளது. சாகுபடிக் காரியங்களுக்காக ஒதுக்கிய 3,054 எக்கர் நிலத்தில் 2,714 எக்கர் நிலம் பண்படுத்தப்பட்டுள்ளது. 2,247 எக்கர் நிலம் சாகுபடியின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எஞ்சிய நிலம் போதிய பாசன வசதிகள் கிடைத்தவுடன் சாகுபடியின்கீழ்க் கொண்டுவரப்படும்.

இத்தகைய சங்கங்களின் பங்கு மூலதனத்திற்காக அரசாங்கமும், போருக்கு பிற்பட்ட காலத்து ராணுவ சேவைப் புனர் நிதியும் முறையே ரூ. 68,844, ரூ. 12,050 செலுத்தியுள்ளன. இச் சங்கங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 61,075-ம், கடனாக ரூ. 3,70,671 அரசாங்கம் நிதி உதவி அளித்திருக்கிறது. மேற்படி நிதி நிறுவனமும் இச் சங்கங்களுக்குக் கடனாக ரூ. 1,84,746, உதவித் தொகையாக ரூ. 2,58,417 நிதி உதவி அளித்திருக்கிறது. வீடு வசதியுடன், பள்ளிக்கூடங்கள், அஞ்சலகங்கள், பூங்காக்கள், சாலைகள், குடிநீர்க் கிணறுகள் போன்ற பொது மக்களுக் கான வசதிகளும் இந்தக் குடியேற்றக் காலனிகளில் செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றன.

### (ii) முன்னாள் ராணுவத்தினருக்காக கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள்.

இப்போது முன்னாள் ராணுவத்தினருக்காக கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்துக்கு ஒரு சங்கமாக இயங்கி வருகின்றன. 1964-ம் ஆண்டில்





[illegible] சங்கம் அமைக்கப்பட்டது. இந்தச் சங்கம் [illegible] மேற்படி சங்கம் [illegible] பஸ் மார்க்கங்களுக்கு அனுமதியும் [illegible] இப்போதுள்ள இந்த ஆறு சங்கங்களும், 392 முன்னாள் அங்கத்தினர் களுக்கும், 30 [illegible] வேலை வாய்ப்பு அளித் திருக்கின்றன. 31—12—1964-ல் 446 அங்கத்தினர்கள் [illegible] இருந்து வந்திருக்கின்றனர். மொத்தம் ஆறு சங்கங்களினும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2,76,?97 ஆகும். இந்த சங்கங்களுக்கு அரசாங்கமும், ராணுவச் சேவைப் புனர் நிதியும், நிதி உதவி வழங்கியிருக்கிறது.

### (iii) முன்னாள் ராணுவத்தினருக்கான தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்துக்கு ஒரு சங்கமாக நான்கு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த சங்கங்களில் உள்ள தொழிற் பட்டறைகளில் பழைய ராணுவத்தினருக்கு வேலை கொடுக்கப்படுகிறது. இவர்கள் செய்கின்ற வகையைச் சேர்ந்த வேலைக்கு ஏற்ற கூலி கொடுக்கப்படுகிறது. 30—6—1964-ல் இந்தச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்களின் மொத்தம் 201 ஆகும். இந்தச் சங்கங்களின் பங்கு மூலதனம் ரூ, 33,431. 1963-64-ம் ஆண்டில் இந்தச் சங்கங்களில் உற்பத்தி வகையில் ரூ. 4·91 லட்சமும், விற்பனை வகையில் ரூ. 9·49 லட்சமும் வியாபாரம் நடைபெற்றி ருக்கிறது.

2. தமிழ்நாடு ராணுவ அதிகாரிகள் சகாய நிதியிலிருந்து முன்னாள் ராணுவத்தினருக்கு அடியிற்கண்ட உதவி வழங்கப்பட்டு வருகிறது :—

(1) பாமரிப்பு குறித்து மாதந்தோறும் நிவாரணத் தொகை வழங்குதல் ;

(2) அவசரத்திலேயே உதவி அளிக்க வேண்டிய விஷயங்களில் உடனடி யாக நிவாரண உதவி வழங்குதல் ;

(3) கைப் பணம் வழங்குதல் (தமிழ் நாட்டிலுள்ள சிகிச்சை நிலை யங்களில் காச நோய், தொழுநோய் பிடித்த முன்னாள் ராணுவ நோயாளி களுக்கு மாதந்தோறும் கைப் பணம் கொடுத்தல்) ;

(4) சிகிச்சை நிலையங்களிலுள்ள நோயாளிகள் ஆண்டுக்கு ஒரு முறை குடும்பத்தினரைச் சென்று பார்க்க போக்குவரத்துச் செலவுகள் வழங்குதல் ;

(5) உதவி பெறத் தகுதி வாய்ந்தவர்களுக்கு மொத்தத் தொகை வழங்குதல். அதாவது ஊனமுற்றவர்கள், வெற்றிலைப் பாக்குக் கடை அல்லது கோழிப் பண்ணை போன்ற சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு மொத்தத் தொகை வழங்குதல் ;

(6) நகைகளைத் திருப்பிச் செலுத்தத்தக்க குறுகிய காலக் கடன்கள் வழங்குதல்—ராணுவ போர்டு அவ்வப்போது இந்தக் கடனுக்குரிய வட்டியை நிர்ணயிக்கும் ;

(7) தேர்வுச் சம்பளம், விசேஷ சம்பளம் கட்டுவதற்காக காலஞ் சென்ற ராணுவ அதிகாரிகளது பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் வழங்குதல்.

3. வேலை வாய்ப்பு அளிப்பதிலும், அரசாங்க அலுவலகங்களில் பழைய ராணுவத்தினருக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. சிவில் வாழ்க்கையில் மறுவாழ்வு பெறுவதற்காக வேலையிலிருந்துகொண்டே பயிற்சி பெறுவதற்கு கிர்கியில், ராணி மேரி தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிக்கு, ஊனமுற்ற பத்து மாஜி ராணுவத்தினர் வருடந்தோறும்

அனுப்பி வைக்கப்படுகின்றனர். பயிற்சி பெறும் ஒவ்வொரு நபருக்கும் ரூ. 60 ஆக ஏற்படும் பராமரிப்புச் செலவு தமிழ்நாடு படைவீரர் நல அதிகாரிகள் சகாய நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

4. நிலங்கள் வழங்கும் விஷயத்திலும் அரசாங்கம் பழைய ராணுவத்தினருக்கு முன்னுரிமை அளித்திருக்கிறது. நிலமில்லாத பழைய ராணுவத்தினருக்கு அதிக அளவு 5 ஏக்கர் புன்செயும், 2½ ஏக்கர் நன்செயும் வழங்கப்படுகிறது. 5 ஏக்கர் புன்செய் அல்லது 2½ ஏக்கர் நன்செய் இவற்றிற்குக் குறைவான நிலமுள்ளவர்களுக்கு அந்தந்த அளவுக்கேற்ப 5 ஏக்கர் புன்செய் அல்லது 2½ ஏக்கர் நன்செய் நிலமுள்ளவர்களாகச் செய்வதற்கு அவசியமான நிலமும் வழங்கப்படுகிறது. பழைய ராணுவத்தினரைப் பொறுத்தமட்டில், நிலம் பெறும் விஷயத்தில் ஒருவர் 'வாழும் கிராமத்தில்' இருக்க வேண்டிய அவசியமில்லை.

**தமிழ்நாட்டில் பழைய ராணுவத்தினரின் மறுவாழ்வுக்காகவும் குடியேற்றத்துக்காகவும் மேற்கொண்ட இன்னும் சில திட்டங்கள்.**

அடியிற்கண்ட திட்டங்களை நிறைவேற்றுவதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(i) தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னை மாநகரிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலுமுள்ள பழைய ராணுவத்தினருக்காக ஒரு பொழுதுபோக்கு நிலையம் ஒன்றை சென்னை மாநகரில் கட்டுதல். கடந்த போரில் ஏற்படுத்தப்பட்ட போர் நிதியிலிருந்து இது காரியமாக ரூ. 90,000 நிதி ஒதுக்கப்படும். பறங்கிமலையில் இதற்குத் தகுதியான மனை வாங்குவதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. எலெக்ட்ரிக்கல் நிறுவனம், சென்னை, ஓமசூர், கோலாப் பகுதியைச் சேர்ந்த ஓ. ஏ. பி. நிலையம் அது வகைத்தின் அருகில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(ii) அபாயகரமான நிலையில் உடல் ஊனமுற்ற ராணுவத்தினரில் பத்துப் பேருக்குப் புகலிடம் அளிக்கக்கூடிய ராணுவ விடுதி ஒன்றை சேலம் மாவட்டம், ஏர்க்காட்டில் ரூ. 35,000 செலவில் ஏற்படுத்துவது.

(iii) பழைய ராணுவத்தினரைச் சேர்ந்த கைம் பெண்களுக்கும், பெண்களுக்கும் குரோம்பேட்டையில் அளவை நாடா தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பித்தல், ஒவ்வொருவரும் இதில் சேருவதற்குரிய அங்கத்தினர் கட்டணம், சென்னை மகளிர் நலத் துறை நெறியாளர் மூலமாக ஏற்கெனவே செலுத்தியாகி விட்டது. இவர் இந்தச் சங்கத்தை விரைவிலேயே ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எடுத்து வருகிறார்.

(iv) முன்னாள் ராணுவத்தினரிடையே ஒப்புயர்வு ஒழுக்க நெறிகளை வளர்க்கும் நோக்கத்துடனே, முன்னோடி திட்டமாக ஏதாவதொரு மாவட்டத்தில் ராணுவ போர்டு கூட்டம் நடத்த வேண்டும். இந்தக் கூட்டத்திற்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள ராணுவச் சங்கம் பார்வையாளர்களை அனுப்பிவைக்கலாம். போர்டு கூட்டம் நடத்துகின்ற அன்றைய தினம் மாலையில் "அணி வகுப்பு" (Rally) ஒன்றையும் நடத்தலாம்.

(v) சென்னை, ஆந்திர மகிளா சபாவில் ஜவான்களின் இளம் கைம் பெண்களுக்கும், மகளிர்களுக்கும் பல்வேறு தொழில் முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி வகுப்புக்களுக்கு ஆறு பேரைச் சேர்ப்பதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. பயிற்சி பெறுவோர் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 50 வீதம் பயிற்சி செலவு ஏற்படும். இந்தச் செலவை தமிழ்நாடு ராணுவ அதிகாரிகள் சகாய நிதி ஏற்றுக் கொள்ளும்.

5-06 p.m.



## APPENDIX III.

[*Vide* answer to starred question No. 179, on page 568].

*Statement showing the particulars of ammonium sulphate distributed in North Arcot district from November 1964 to 31st March 1965.*

| *Serial number and name of taluk.* (1) | *Quantity in tonnes.* (2) |
|---|---|
| 1 Arkonam .. .. .. .. | 292 |
| 2 Wallajah .. .. .. .. | 283 |
| 3 Vellore .. .. .. .. | 353 |
| 4 Gudiyatham .. .. .. | 213 |
| 5 Tirupathur .. .. .. .. | 309 |
| 6 Tiruvannamalai .. .. .. | 242 |
| 7 Chengam .. .. .. .. | 12 |
| 8 Polur .. .. .. .. | 69 |
| 9 Arni .. .. .. .. | 211 |
| 10 Cheyyar .. .. .. .. | 151 |
| 11 Wandiwash .. .. .. .. | 126 |
| Total .. | 2,261 |

1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை, வட ஆற்காடு மாவட்டத்தில் வழங்கப்பட்ட அம்மோனியம் சல்பேட் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் தாலுகாவின் பெயரும். (1) | அளவு (டன்னில்.) (2) |
|---|---|
| 1 அரக்கோணம் .. .. .. .. .. | 292 |
| 2 வாலாஜா .. .. .. .. .. | 283 |
| 3 வேலூர் .. .. .. .. .. | 353 |
| 4 குடியாத்தம் .. .. .. .. .. | 213 |
| 5 திருப்பத்தூர் .. .. .. .. .. | 309 |
| 6 திருவண்ணாமலை .. .. .. .. | 242 |
| 7 செங்கம் .. .. .. .. .. | 12 |
| 8 போளூர் .. .. .. .. .. | 69 |
| 9 ஆரணி .. .. .. .. .. | 211 |
| 10 செய்யார் .. .. .. .. .. | 151 |
| 11 வந்தவாசி .. .. .. .. .. | 126 |
| மொத்தம் .. | 2,261 |

## இணைப்பு IV

[ [illegible] 188-வது [illegible] ]

1964-65 [illegible] (1-4-64 [illegible] 31-3-65 [illegible]) [illegible]

| மாவட்டத்தின் பெயர். | [illegible] | [illegible] |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சென்னை மாநகர் .. | 1,727 | 11,37,803 |
| 2 செங்கற்பட்டு .. .. | 792 | 3 74 925 |
| 3 தெற்கு ஆர்க்காடு .. .. | 413 | 15,77,712 |
| 4 திருச்சிராப்பள்ளி .. | 70 | 14,40,863 |
| 5 தஞ்சாவூர் .. | 344 | 27,58,968 |
| 6 சேலம் .. .. .. | 533 | 18,10,990 |
| 7 கோயம்புத்தூர் .. .. | 351 | 12,99,271 |
| 8 மதுரை .. | 7 | 11,54,283 |
| 9 இராமநாதபுரம் .. .. | .. | 13,86,196 |
| 10 திருநெல்வேலி .. .. | 13 | 12,08,770 |
| 11 வட ஆர்க்காடு .. .. | 381 | 5,11,348 |
| 12 கன்னியாகுமரி .. .. | .. | 87,322 |
| 13 நீலகிரி .. .. | 24 | 20,122 |
| மொத்தம் .. | 4,655 | 1,47,68,573 |

64920

Number of attacks due to smallpox and number of persons vaccinated in the districts during 1964-65 (from 1-4-1964 to 31-3-1965).

| Name of the district. | Number of attacks. | Number of persons vaccinated. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Madras City .. .. | 1,727 | 11,37,803 |
| 2 Chingleput .. .. | 792 | 3,74,925 |
| 3 South Arcot .. .. | 413 | 15,77,712 |
| 4 Tiruchirappalli .. | 70 | 14,40,863 |
| 5 Thanjavur .. .. | 344 | 27,58,968 |
| 6 Salem .. .. | 533 | 18,10,990 |
| 7 Coimbatore .. .. | 351 | 12,99,271 |
| 8 Madurai .. | 7 | 11,54,283 |
| 9 Ramanathapuram .. | .. | 13,86,196 |
| 10 Tirunelveli .. .. | 13 | 12,08,770 |
| 11 North Arcot .. .. | 381 | 5,11,348 |
| 12 Kanyakumari .. | .. | 87,322 |
| 13 The Nilgiris .. .. | 24 | 20,122 |
| Total .. | 4,655 | 1,47,68,573 |